யுவராஜ்
வாடகை நூல் நிலையம்
128, ஆரிய கௌடர் சாலை,
மேற்கு மாம்பலம், சென்னை-33.
10 நாட்கள் மட்டும்

# நீதான
# நீ மட்டும்தான்!



## 1

''வாங்க.. வாங்க! நல்ல நேரத்துக்குக் கரெக்டா.. ந்துட்டீங்க..'' என்று வரவேற்றார்கள் கிரகப்பிரவேசம் டைபெறும் வீட்டுக்குச் சொந்தக்காரர்கள்.

சிரித்துக் கொண்டே உள்ளே நுழைந்தார் ஜெயலட்சுமி. னாலும் உள்ளுக்குள்ளே கொஞ்சம் தயக்கம் இருந்தது.

ஊரில் இருந்து புறப்படும் போதே தயக்கத்துடன்தான் றப்பட்டார். நேற்றிரவே புறப்பட்டு விட்டார். நேற்று ரை வருகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்த மூத்த கன் மனோகரனின் மனைவி சுபத்ரா கடைசி நேரத்தில் ரவில்லை என்று சொல்லிவிட்டாள்.

''அம்மா.. ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள்தான் என
ரெஸ்ட். நான் வேண்ணா சனிக்கிழமை சாயங்கால
புறப்பட்டு உன்னைக் கொண்டு வந்து விட்டு
வர்றேன். நீங்க நம்ம சாரதா அத்தை வீட்டுல தங்கிக்கு
ஞாயிற்றுக் கிழமை அட்டெண்ட் பண்ணிட்டு ரெண்
மூணு நாள் இருந்துட்டு வாங்க'' என்றான் மனோகரன்

வேறு ஏதாவது ஊர் என்றால் தம்பி மாதவனைக் கொண்
போய் விட்டு விட்டு வரச் சொன்னால் வருவான். ஆன
கோயமுத்தூர் என்றால் யோசிப்பான். அப்படி ஒரு அ
பவம் அவனுக்கு நேர்ந்திருந்தது.

கோயமுத்தூர் என்ற பேரையே அவன் முன்ன
உச்சரிக்க யோசனையாக இருந்தது. ஆனால் யாரும் எ
பாராத விதமாக அவனே ''வாழ்க்கைன்னா எல்லாந்த
இருக்கும். சாரதா அத்தையோட சம்பந்தி வீட்டுக் கிர
பிரவேசத்துக்குப் போகலேன்னா.. சாரதா அத்தைக்
ரொம்ப சங்கடம் ஆகும். நீங்க போயிட்டு வாங்க'' என்றா

காருக்கு ஒரு டிரைவரும் போட்டு அனுப்பி வைத்தா
மனோகரனும் வந்திருந்தான். ஆனால், ஃபங்ஷன் முடிந்
அவன் எட்டு மணிக்கே புறப்படுவதற்கு திட்டம்.

''அம்மா! உனக்கு எப்படி வசதியோ அப்படிச் செய்ங்
நான் பஸ் பிடிச்சுக் கிளம்பறேன்'' என்று சொல்லி வி
டான் மனோகரன்.

அதிகாலையிலேயே ஹோமம் நடைபெறும்போ
வந்து விட்டதில் சாரதாவுக்கு மிகவும் சந்தோஷம். சார
வின் சகோதரர் மனைவிதான் ஜெயலட்சுமி அம்மாள்.

இரண்டாவது மூன்றாவது வரிசையில் அமர்ந்து கொ
டால் உறவினர்களின் முகம் பார்க்க வேண்டும். அ



ின் கேள்விக்குறியான பார்வைகளுக்குப் பதில் சொல்ல
ண்டும் என்ற கவலை அவருக்கு இருந்ததாலோ என்
வோ உரிமையாக அமர்ந்து கொள்வது போல் ஓம
ண்டத்துக்கு நேர் அருகில் அமர்ந்து கொண்டார்.

சாரதா பிஸியாக அலைந்து கொண்டிருந்தார்.

எட்டு மணி வாக்கில் டிபன் சாப்பிட்டு விட்டு ஒரு
றையில் அமர்ந்து கொண்டார் ஜெயலட்சுமி.

மனோகரன் எட்டு மணிக்கு வந்து ''அம்மா! டிரைவரை
ப்பிடச் சொல்லிட்டேன். பஸ் ஸ்டாப்பில் டிராப் பண்
ரச் சொல்லியிருக்கேன்.. நான் கிளம்பறேன்'' என்றான்.

''ஏம்ப்பா! எந்த டிராவல்ஸ்ல..!'' என்றாள்.

''அம்மா! டிராவல்ஸ் பஸ்ல புக் பண்றதுக்கெல்லாம்
ரம் இல்லே. நான் சர்வீஸ் பஸ்ல போயிடறேன். சேலம்
ரைக்கும் ஒரு பஸ் அங்கிருந்து பெங்களூர்ன்னு
த்திக்கறேன்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே
ங்கே வந்த சாரதா..

''அப்ப.. சரி! தம்பி.. இரு.. நான் டிபன் கட்டித் தரேன்''
ன்று அவசர அவசரமாகப் போய் டிபன் பார்சல் கட்டிக்
காடுத்தார்.

''இதை வேற தூக்கிக்கணுமா?'' என்று நினைத்த
னோகரன் அத்தையின் மனசு வாடி விடக் கூடாது
ன்பதற்காக வாங்கிக் கொண்டான்.

அவன் விடைபெற்றுப் போனதும் ஜெயலட்சுமி உள்ளே
ந்து மறுபடியும் ஒரு அறைக்குள் அடைந்து கொண்டார்.

உறவினர்களில் வயதான பெண்மணிகள் சிலர் ''என்ன
ஜயலட்சுமி.. வந்திருக்காளாம்..! நான் பார்க்கலையே''
ன்று தேடி வந்து பார்த்துப் பேசி விட்டுப் போனார்கள்.

"ஏன்.. இங்க உட்கார்ந்துருக்கே" என்ற கேள்விக்

"ஆமா! கொஞ்சம் உடம்புக்கு சுகமில்லே" எ சமாளித்தார் ஜெயலட்சுமி.

பொன்னம்மா அத்தை மட்டும் குரலை இறக் கொண்டு கேட்டார்.

"ஏன் ஜெயலட்சுமி? என்ன ஆச்சு.. நல்ல காரி முடியப் போகுங்கற அளவுக்குப் பேச்சு நடந்துகிட்டிருந் இப்ப என்ன இப்படி அந்தரத்துல நின்னாப்ல ஆயிடுச் என்று.

"அத்தை! நான் என்ன செய்யட்டும் சொல்லு பொண்ணு வீட்டுக்காரங்க.. திடீர்னு என்னமோ ஜே யர் இப்ப டைம் சரியில்லேன்னு சொல்லியிருக்கிறா அதுக்கு மேலே நாம என்ன செய்ய" என்றார்.

"அதுசரி.. போ! அந்த சுலோசனாவுக்கும், மல்லிகா கும் புத்தி கித்தி கெட்டுப் போச்சா.. என்ன? உன்ற பைய மாதவனை விட ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைக்கும் இதுக்குப் பேருதான் ஏழைக் குறும்புங்கறது" என் பொரிந்தார்.

ஜெயலட்சுமி உச்சுக் கொட்டினார்.

"விடுங்க.. பொன்னம்மா.. அத்தை.. யார் யாருக் எங்கே அமையுமோ.. அங்கதான் அமையும். கடவ சித்தம் எப்படியோ.. அப்படித்தான் நடக்கும். நாம பே என்னத்துக்கு ஆகுது?" என்றார். பொன்னம்மா பெருமூ விட்டார். பிறகு சொன்னார்.

"ஏண்டி.. ஜெயலட்சுமி? இப்ப டைம் சரியில்லேன்ன கொஞ்சம் கழிச்சு செய்யலாமோ?"



"யாருக்குத் தெரியும்? அதை அவங்கள்ல வந்து சால்லியிருக்கணும்..? நாம எதுக்குப் போய்த் தாங் னும்னு விட்டுட்டேன்" என்றார் ஜெயலட்சுமி.

"அது சரி! நீ மாப்பிள்ளை வீட்டுக்காரி. நீ எதுக்குப் பாய்க் கெஞ்சணும்?" என்றார் பொன்னம்மா.

"அப்படி மாப்பிள்ளை வீடு.. பொண்ணு வீடுன்னு நான் னைக்கலைங்க.. அத்தை! என்ன காரணமோ? அவங்க ரு அடி விலகினா நாம ரெண்டடி விலகிப் போயிட்டே ருக்க வேண்டியதுதானே?"

"அது அப்படித்தான்!" என்ற பொன்னம்மா நகர்ந்தார்.

"அப்பாடா!" என்றிருந்தது ஜெயலட்சுமி.

'இப்படி எத்தனை பேர் விசாரிப்பாங்களோ! எத்தனை பருக்கு பதில் சொல்ல வேண்டுமோ' என்று ஆயாசமாக ருந்தது.

ஒரு நேரம் கோபமாகவும் வந்தது. இதற்கெல்லாம் ாரணமான சுலோச்சனாவையும், மல்லிகாவையும் ண்டு இல்லை என்று செய்துவிட வேண்டும் என்ற கோபமும் எழுந்தது.

இன்னொரு மனது சொன்னது. அதெல்லாம் எதற்கு? பேச்சுக்குப் பேச்சு வளர்ந்து ஏதாவது ரசாபாசமாகிப் போனால் மகன்கள் வருத்தப் படுவார்கள் என்று எண்ணிக் கொண்டார். ஆனால், நினைத்ததற்கு நேர் மாறாகப் பேச வேண்டி வரும் என்பதும், திரும்பவும் ஊருக்குச் செல் லும் போது மனதில் டன் கணக்காகப் பாரம் ஏற்றிக் கொண்டு சொல்ல நேரிடும் என்பதையும் அப்போது அவர் அறிந்திருக்கவில்லை.

* * *

பிற்பகல் இரண்டு மணி வாக்கில் சுலோச்ச அறைக்குள் எட்டிப் பார்த்தார்.

''அம்மா! காலையிலேயே வந்துட்டீங்களாம். நா பார்க்கவே இல்லை..'' என்று சொன்னார்.

''கொஞ்சம் உடம்பு சரியில்லை. அதனால்தான் உ ளேயே உட்கார்ந்துகிட்டேன்'' என்றார் ஜெயலட்சுமி.

சுலோச்சனா தயங்கியபடி நிற்பதைப் பார்த் ''உட்காருங்க'' என்றார்.

அவரும் அமர்ந்தார்.

சற்று நேரம் தர்ம சங்கடமான அமைதி நிலவியது. சுலே சனா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னா

''உங்களுக்குமே எங்க மேல ரொம்பக் கோப இருக்கும். ஆனா, என்ன செய்யறது? சூழ்நிலை அப்ப யாகிப் போச்சு..'' என்றார்.

ஜெயலட்சுமியின் முகம் வாடியது..

''வேண்டாங்க.. சுலோச்சனாம்மா.. நான் இப்ப எதை பேசி என்னத்துக்கு ஆகுது? ஆனா, என் மகன் ரொம் மனசுடைந்து போயிட்டான். உங்க புள்ளை மல்லிகாவை ரொம்பப் புடிச்சுருச்சு. இருபத்தொன்பது வயசுலயாவது கல்யாணத்துக்கு சம்மதிச்சானேன்னு ரொம்ப சந்தோஷம இருந்தோம். இப்ப இருக்கிற மனநிலைக்கு இனிமே ஆயுசுக்கும் கல்யாணமே பண்ணிக்க மாட்டான் போல இருக்கு,'' என்றார் வருத்தத்துடன்.

சுலோச்சனாவின் கண்களில் கேள்விக்குறியான பார்வை எழுந்தது.

''என்ன சொல்றீங்க?''

''என்ன சொல்லி என்னத்துக்கு ஆகுது. இந்தப் பேச்சை இதோட விட்டுடுங்க'' என்றார் ஜெயலட்சுமி.



சுலோச்சனாவும் முகம் வாடி விடைபெற்றுக் கொண்டு பாய் விட்டார். ஆனால் போகும்முன் ஒரு வார்த்தை சான்னார்.

''அம்மா! பிரச்சினைகளை உங்க பக்கத்துல வச்சுகிட்டு ங்களை வருத்தப்பட்டு என்ன செய்ய?'' என்றார்.

போய்விட்டார்.

ஜெயலட்சுமி அதிர்ந்து போனார். உள்ளம் கொதித்துப் போனாற்போல் ஆகிவிட்டது.

'இந்த அம்மா, என்ன சொல்லி விட்டுப் போகிறார்? ம்ம பக்கத்துல என்ன பிரச்சினை? இந்த மாதிரி யார் பாரிடம் என்னென்ன சொல்லிகிட்டுத் திரியறாங்களோ' என்று கவலையாகிப் போனது.

அது மட்டுமில்லாமல் அன்றைக்கு வேறொரு நிகழ் வும் நடந்தது.

''அண்ணி, நீங்க இன்னைக்கெல்லாம் இருந்துட்டு நாளைக்குப் போலாங்க அண்ணி. எட்டு மணிக்குக் கிளம்பினீங்கன்னா மத்தியானத்துக்குள்ள போய்ச் சேர்ந் துக்கலாம்'' என்றார் சாரதா.

''வேண்டாம். எட்டு மணிக்குக் கிளம்பினா ஒரு நாளே போயிடும். ஒரு அஞ்சு மணிக்கு நேரத்துல கிளம்பிக் கறேன்.''

''அதுவும் சரிதான்! நான் ஏதாவது டிபன் குடுத்தனுப்ப லாம்னு பார்த்தேன்.''

ஜெயலட்சுமிக்கு சிரிப்பு வந்தது. ''சாரதா.. வழியில எத்தனை நல்ல ஓட்டல் இருக்கு.. நான் பாத்துக்கறேன்'' என்றார். பிறகு சாரதா தொடர்ந்து,

''ஏங்கண்ணி! இந்தக் கல்யாணம் நின்னதுக்கு ம படியும் ஏதாவது காரணம் சொன்னாங்களா.. மல்லி வுக்கு நம்ம தேவி எவ்வளவு க்ளோஸ் ஃப்ரண் அவகிட்டேயே சொல்ல மாட்டேங்கறாங்க'' என்றார்.

''அதுதான்.. சாரதா.. எனக்கும் புரியமாட்டேங்கு ஒரே மூடு மந்திரமாவே இருக்குது. அது சரி.. இந்த கேள்விக்கு பதில் சொல்லு. அந்த மல்லிகாவாவ கல்யாணம் நின்னு போனதுல சந்தோஷமா இருக்காளா

''அண்ணி! விசித்திரமான விஷயமே இதுதான். அந்த பொண்ணும் சந்தோஷமா இல்லே. எல்லார் முன்னாலயு சந்தோஷமா இருக்கற மாதிரி நடிக்குது. ஆனா, தனிய நேரம் கிடைக்கும்போது அழுகற மாதிரித் தெரியுது ஒண்ணும் புரிய மாட்டேங்குது'' என்றார்.

''என்னமோ... ஒண்ணும் புரிய மாட்டேங்குது'' என்று புலம்பிக் கொண்டார் ஜெயலட்சுமி. அதற்குள்ளா விருந்தாளிகள் வரவே கவனம் கலைந்தார்கள். அப்போது ஜெயலட்சுமி ஒரு முடிவு எடுத்துக் கொண்டார்.

மகன்கள் இருவரும் பேசிக் கொள்ளும்போது ''சம்திங் ஃபிஷி என்பார்களே, அது மாதிரி இதில் ஏதோ இருக்கிறது இதை நுணுகிப் பார்த்துவிட வேண்டும்'' என்று எண்ணிக் கொண்டார்.

* * *

''ஏன்.. சுபத்ரா தம்பிகிட்டே இருந்து ஏதாவது தகவல் வந்ததா?''

''ஆமா.. இன்னைக்கு வந்ததுக்கு லேட்டாகும்னு போன் பண்ணினாரு'' என்றாள்.

''நினைச்சேன். கோயம்புத்தூர் பத்திப் பேச்சு வந்தாலே, உடனே நத்தை மாதிரி சுருண்டுக்கறான். பாவம் மனசுல ராம்பக் காயப்பட்டுட்டான். இத்தனை நாள் என்னவோ .டி. ஃபீல்டுல பெரிய ஆர்க்கிடெக்ட் ஆகணும். கல் ணமே வேண்டாம்னு சொல்லிகிட்டிருந்தான். ஆனா ன்னவோ மல்லிகாவை ரொம்பவும் பிடிச்சுப் போச்சு. ப்படிக் கல்யாணம் நின்னு போகும்னு நினைக்கவே ல்லை. ரொம்ப உடைஞ்சுட்டான்'' என்றாள்.

''ஆமா!'' என்றாள் சுபத்ரா சுரத்தேயில்லாமல். ஆனா, ன்னோட மனசு சங்கடத்தையெல்லாம் மறைச்சுகிட்டு.. ாதாரணமா நடமாடிக்கிட்டு. பாருங்க.. நம்ம ராகுலுக்கும் த்திக்கும் தீபாவளிக்கு டிரஸ் எடுக்கறதுக்கு நாளைக்குப் போலாம்னு சொல்லியிருக்கு'' என்றாள்.

''அது சரி! நீ பாட்டுக்கு அவனை அத்தனையில டுத்துக் குடு.. இத்தனையில எடுத்துக் குடுன்னு கேட்காதே..''

''நான் எங்க கேட்டேன். போன மாசமே சென்னையில இருந்து.. எனக்கு ஏழாயிரம் ரூபாயில புடவை எடுத்துக் கொண்டு வந்து குடுத்தது'' என்றாள்.

மனோகரன் பெருமூச்சு விட்டான். ''சுபத்ரா நான் இந்த வாரத்துல இருந்து வெள்ளிக் கிழமை நாள்ல விரதம் இருக்கப் போறேன். அவனுக்குக் கல்யாணம் ஆகற வரையிலும்'' என்றான்.

சுபத்ரா ''செய்ங்க!'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

* * *

இரவு எட்டு மணி வரை ஒரு மாதிரி நேரம் ஓட்டிய ஜெயலட்சுமிக்கு அதற்கு மேல் இருப்புக் கொள்ளவில்லை.

அப்படி என்ன விஷயம் என்று நுணுகிப் பார்த்தே ஆக வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்.

ஸ்டோர் ரூமிலிருந்து எதையோ எடுத்துக் கொண ஹாலுக்கு வர மல்லிகா வாயிற்படிகளில் ஏறி வரு உருவம் பார்த்து சற்றே திகைத்துப் போனாள்.

முகத்தில் பீதி தெரிந்தது!

''வாங்க!'' என்று குரலே எழும்பாத குரலில் சொ விட்டு உள்ளே சமையல் அறையிலிருந்த அம்மாவி ஓடினாள்.

''அம்மா! அம்மா!'' என்று படபடப்பாக நின்றாள்.

''என்னடி!''

"அம்மா..! ஜெயலட்சுமி ஆன்ட்டி வந்திருக்காப்ல" என்ற

''ஓ!'' ஒரு நிமிடம் விழித்த சுலோச்சனாம்மா,

''சரி.. நீ எதுக்கு படபடப்பாகறே!'' என்று சத்தமா சொன்னவர்.. 'இந்தம்மா.. எதுக்கு வந்திருக்காங்க..' என தனக்குள் பேசிக் கொண்டே வெளியே வந்தார்.

''வாங்க!'' என்று வரவேற்றார். பிறகு தயவான குரல சொன்னார்.

''அம்மா! நீங்க.. எதைப் பத்திப் பேச வந்திருக்கீங்கன் தெரியலை. எதுவானாலும் சத்தம் போடாம அக் பக்கத்துக்குத் தெரியாமப் பேசலாம். வாங்க'' என் பக்கத்து ரூமுக்கு அழைத்துப் போனார்.

ஜெயலட்சுமியை அங்கே இருந்த கட்டிலின் மே அமர வைத்தார். கோபமாகவும், ஆங்காரமாகவும் பே போகிறார் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக ஜெயலட்ச பொங்கிப் பொங்கி அழுதார்.

சுலோச்சனா திகைத்துப் போனார்.

கண்களைத் துடைத்துக் கொண்ட ஜெயலட்ச சொன்னார்.



''என் மகன் என்ன தப்பு செய்தான்? உங்க பொண்ணு லிகாவைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு நெனச் ன். வேற என்ன தப்பு செய்தான்! அதுக்கா இப்படி ஒரு ண்டனை?'' என்று பொருமினார்.

அறை வாசலில் நின்ற மல்லிகாவும் எதிர்பாராத தமாகக் குலுங்கி அழுதாள். அப்போது இருவரையும் றி மாறிப் பார்த்த சுலோச்சனா.. கேட்டாள்.

''நிஜம்மா.. உங்களுக்கு விஷயமே தெரியாதா? ல்லே.. உங்க பையனை உத்தமனாக் காட்டணும்னு னைக்கறீங்களா?''

ஜெயலட்சுமி தன் அழுகையை நிறுத்தினார். ''என் ம்மா.. பேசறீங்க? என் பையன் உத்தமன் இல்லாம வறென்னவாம்? உங்களுக்கு பொண்ணு குடுக்க ஷ்டமில்லேன்னா அதை மட்டும் சொல்லிட்டுப் போங் துக்கு இல்லாததும் பொல்லாததும் பரப்பி விடறீங்க?''

அப்போதுதான் சுலோச்சனா அந்த பதிலைச் சொன் ர். அதைக் கேட்ட ஜெயலட்சுமிக்கு என்னமோ உலகமே ரண்டாக பிளக்கிற மாதிரி ஒரு தோற்றம் தெரிந்தது.

யாரோ மண்டையில் அடித்தாற்போல் அமர்ந்து ிட்டார்.



## 2

''டேய்! விமல்ராஜ் பாரு பொண்ணை நல்லாப் ாத்துக்க..'' என்றார்கள் மாதவனும், தினேஷும்.

''பொண்ணெல்லாம் பிடிச்சுது.. ஏற்பாடு பத்
பேசுங்க..'' என்றான் விமல்.

மாதவனும், தினேஷும் கலாட்டாவாகச் சிரித்தார்
விமல்ராஜ் சாரதா அத்தையின் மகன். சாரதா அத்தை
தேவி என்று ஒரு மகள். அவளும் வந்திருந்தாள். மாத
உடனே தேவியை அழைத்தான்.

''தேவி! உங்கண்ணனுக்குப் பொண்ணு ஓ.கே.வ
சாரதா அத்தைகிட்ட சொல்லி ஏற்பாடுகளை ஆரம்பி
சொல்றான். விட்டா.. ஐயா.. நேராப் போய் பொண்ணை
கூட்டிட்டுப் போயிடுவான் போல இருக்கு'' என்ற
தினேஷ்.

தேவி சிரித்தாள்!

''சரி! நான் போய் சொல்றேன்'' என்று போனா
அப்படி ஆரம்பித்ததுதான் இந்த விவகாரமெல்லாம்.

விமல்ராஜுக்குத் திருமணம் வெகு சிறப்பாக ஒ
மாதத்தில் நடந்தது. மணமகன் அத்தை மகன் என்பத
மாதவன் நெருக்கமான நண்பர்கள் சிலரையும் அழை
திருந்தான். அதில் சிவகுமாரும் ஒருவன்.

சிவகுமார் மாதவனுக்கும் தினேஷுக்கும் நெ
நெருக்கம். திருமணத்தில் தேவி வெகு சுறுசுறுப்
நடமாடிக் கொண்டிருந்தாள்.

தேவியின் நெருங்கிய தோழியும் ஒரே பகுதிய
குடியிருப்பவர்களுமான மல்லிகாவும் கூடமாட உத
செய்து கொண்டிருந்தாள்.

''அப்போது மாப்பிள்ளை விமல்ராஜும், மண
பெண்ணும் குடத்துக்குள்ளே கை விட்டு மோதிரம் தே



ாண்டிருந்தார்கள். அகஸ்மாத்தாக சிவகுமார் தேவியின்
கம் நின்று கொண்டிருந்தான்.

''அண்ணா! விடாதே!'' என்று தேவி கலாட்டா
ய்வதை ஆர்வமுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஆமா! விமல் அண்ணா! ஜெயிக்கறதெல்லாம் இப்ப
டும்தான். அப்புறம்.. எப்படியும் தோக்கத்தானே
ாறீங்க?'' என்று வாயடித்தாள் மல்லிகா.

அப்போதுதான் மாதவன் மல்லிகாவை முதன் முதலாகக்
னித்துப் பார்த்தான். தேவியும், அவளும் வரிசைப்
கள் தெரிய கலகலப்பாகச் சிரித்துக் கொண்டிருந்
ர்கள்.

சிவகுமாரும், மாதவனும் ஒருவரையொருவர் பார்த்துக்
காண்டார்கள். சிரித்துக் கொண்டார்கள். கடைசியில்
ணமகன் மகளுக்கு மோதிரத்தை விட்டுக் கொடுத்து
டவே தேவியும், மல்லிகாவும் சோகமாகி விட்டார்கள்.

''சே! என்னண்ணா! இப்படிக் கவுத்துட்டே!'' என்றாள்
தவி.

விமல்ராஜ் மனைவியை ஓரக்கண்ணால் பார்த்துக்
காண்டே சொன்னான்.

''சரி.. விடு.. போ..! இப்ப என்ன அவ ஜெயிச்சாலும்
ான் ஜெயிச்ச மாதிரிதான்!'' என்றான்.

மல்லிகா புர்ரென்று வாயால் சத்தம் செய்து கொண்டு
ரித்தாள். அவள் செய்த சேட்டையைப் பார்த்து எல்
ாரும் சிரித்தார்கள். ஆனால், உடனே தேவியும், மல்லிகா
ும் பரபரப்பாக வேறு வேலை பார்க்கப் போனார்கள்.

சிவகுமாரின் கண்கள் தேவியைத் தொடர்ந்து பார்த்துக்
காண்டிருப்பதை மாதவனின் கண்கள் மோப்பம் பிடித்து
விட்டன. லேசாகத் தோளில் இடித்தான்.

"என்னடா.. விஷயம்? எங்க வீட்டுப் பொண்ணு
அது..?!" என்றான்.

"ஆமா.. அதுதான் ரெண்டு விதமாகவும் யோ
றேன். உங்க வீட்டுப் பொண்ணுன்னா.. எல்லா வி
தில்யும் டீசன்ட்டா இருப்பாங்க.. இன்னொண்
சட்டுன்னு எப்படிக் கேக்கறதுன்னு யோசிக்கறேன்" என்

"பொண்ணு பேரு தேவி. படிப்பு பி.எஸ்ஸி.. ரெ
நல்ல பொண்ணு. எனக்கு சிஸ்டர் மாதிரி.. ஆனா, அ
வீட்ல ஜாதகம் பார்த்துத்தான் ஒத்துக்குவாங்க.. உ
இன்ட்ரஸ்ட்ன்னா சொல்லு.. நான் ப்ரொசீட் பண்றே
என்றான் மாதவன் ஆர்வமாக.

தனது நெருங்கிய நண்பனுக்கே.. தன் அத்தை ம
மணமகளாவது என்பது அவனுக்கு மிகவும் பிடித்திருந்

அந்த நேரம்!

தேவி ஏதோ ஒரு தட்டைக் கொடுத்தனுப்ப அ
எடுத்துக் கொண்டு வந்தாள் மல்லிகா. சிவகு
சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தான்.

"மேடம்! நில்லுங்க! அப்பவே.. ஒரு கமென்
சொன்னீங்களே.. அதுக்கு அர்த்தம் என்ன?" என்றான்

மல்லிகா நின்றாள். தைரியமாக எதிர்ப்பார்வை ப
தாள்.

"என்ன சொன்னேன்?" என்றாள்.

"இல்லே! ஜெயிக்கறது இப்ப மட்டும்தான். அப்புற
வாழ்க்கை பூராத் தோக்கப் போறீங்கன்னு."

அவள் முகத்தில் குறும்புப் புன்னகை மலர்ந்த
"உங்களுக்குக் கல்யாணமாகியிருக்கா?"



இல்லை!"

அப்ப.. உங்களுக்குப் புரியாது. யாராவது கல்யாணம்
வங்க கிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்குங்க" என்று நகர
பட்டாள்.

நில்லுங்க!" என்று மறுபடியும் தடுத்தான். "டேய்!
மாற்றா!" என்று மாதவன் தடுக்கத் தடுக்க மேலே
டான்.

"உங்களுக்குக் கல்யாணமாயிருக்கா?" என்றான்.

"இல்லே!"

"அப்ப.. எப்படி உங்களுக்குத் தெரியும்!" என்றான்.

"எனக்குக் கல்யாணம் ஆகலேன்னா.. என்ன?
கண்ணனுக்குக் கல்யாணம் ஆயிருக்கே.." என்றாள்.

"சரி.. வழியை விடுங்க!" என்று மேலே நகர்ந்தாள்.

"டேய்! சிவா.. எதுக்குடா.. இந்த வேலையெல்லாம்
ய்யறே?!"

"இல்ல.. எந்த விதத்துலயாவது மடக்கலாம்னு பாத்தேன்.
ங்க மாட்டேங்குது. சரிக்குச் சரியா வாயடிக்குது.."
று சிரித்தான். பிறகு கேட்டான்.

"ஆனா தேவி... கொஞ்சம் அமைதியாத் தெரியு
ல்ல..." என்றான்.

"அவளும்.. வாயடிப்பா.. ஆனா, வீட்டுல.." என்று
ித்தான் மாதவன்.

நண்பனின் மனம் புரிந்து கொண்டவன் அன்று
ற்பகலே தேவியிடம் பேசினான். சிவகுமாரையும்
ட்டினான்.

''தேவி! பாத்துக்க..! நல்ல பையன். என் க்
ஃபிரண்டு. எந்தவிதமான மோசமான பழக்க வழ
களும் கிடையாது. டீ டோட்டலர். அப்படீன்னாத்
மில்லே.. விஸ்கி, பிராந்தின்னு எந்தப் பழக்கமும்
யாது. ரெண்டு சிஸ்டர்ஸ். ரெண்டு பேருக்கும் மே
ஆயிடுச்சு. அப்பாவும் கவர்ன்மெண்ட் ஜாபில இ
ரிடையரானவர். பெங்களூர்ல கோரமங்களாவில
இருக்கு. எந்தப் பிக்கல் பிடுங்கலும் கிடையாது.
கம்மாவும் ரொம்ப நல்ல டைப்..'' என்றான்.

தேவி பார்த்து விட்டு ''மாப்பிள்ளை.. ஓ.கே.தான்.
அம்மா ஜாதகம் பார்க்கணும்பாங்களே'' என்றாள்.

''அதொண்ணும் பிரச்சினையில்லே! உனக்கு ஓ.கே.
நாளைக்கே ஜாதகம் நான் பாத்தர்றேன். என்
ஹேண்ட் பேக்ல அவன் ஜாதகம் ஒரு காப்பியிரு
அத்தைகிட்ட உன்னோடதை வாங்கிக்கறேன். மு
நான் பாத்துட்டு அப்புறம் அத்தை கிட்டே பேசறே
என்றான். சிவகுமார் அன்று பிற்பகல் கிளம்பி விட்
மாதவன் இரண்டு, மூன்று நாட்கள் இருந்தான். தன்
யும் மீறி மல்லிகா செய்கிற கலாட்டாக்களை ரசி
கொண்டிருந்தான்.

* * *

''நிஜம்மாவா தம்பி.. சொல்றே! அவ்வளவு வ
யானவங்கங்கறே. நம்ப தேவியைப் பிடிச்சுப் போச்
கறே?'' என்றாள் சாரதா ஆச்சரியமாக.

''ஆமாங்கத்தை! வசதியானவங்கங்கறது முக்கியமில்
அத்தனை வசதியிருந்தும் வேலைக்கு வர்றான் பாரு
மத்தவங்களை விட எளிமையாய் இருப்பான். ''பே



இருக்கிற சொத்தெல்லாம் எங்க அப்பன் பாட்டன்
திச்சது. அதை வச்சுகிட்டு பொழைக்கறதுல எனக்கு
பெருமையிருக்கு. என் குழந்தைங்களுக்கு நான்
திச்சு வக்கிறதுலதான் எனக்கு பெருமை அப்படீம்
.'''' என்றான்.

பரவால்லையே.. ரொம்ப நல்ல பிள்ளையாத்
யறான். அது சரி.. நல்ல பையனா இருக்கக் கொண்டு
உங்கிட்டப் பழகறான். சம்பளம் எவ்வளவு
க்கும்?''

இப்பத்திக்கு மாசம்.. அறுபதினாயிரம் இருக்கும்''
றான்.

ாரதா அத்தைக்கு.. நெஞ்சே அடைத்துக் கொள்ளும்
ல் வந்தது.

அவ்வளவா?'' என்றார்.

ஆமா! எனக்கு அதை விட சந்தோஷம் என்னன்னா..
தக் கல்யாணம் நடந்தா தேவியும் எங்க ஊருக்கே
துடுவா.. இல்லே!'' என்றான் மாதவன்.

நீ சொன்னாச் சரிப்பா.. நான் மாமாகிட்டே பேசறேன்..''
றாள் சாரதா உற்சாகமாய். இரண்டாவது கேள்வியைக்
டார்.

'ஏன் மாதவா? பொண்ணை மாப்பிள்ளை பாத்தாச்சுங்
! மாப்பிள்ளையை பொண்ணு பாக்க வேண்டாமா?''
றாள்.

'அதெல்லாம்.. விமலோட கல்யாணத்தன்னைக்கே
சு... தேவிக்கு பையனைக் காமிச்சேன். பையனோட
ாற்றம்.. உனக்கு ஓ.கேன்னாத்தான் ஜாதகம் பாக்க

றேன்னு சொன்னேன். தேவி பெரியவங்களுக்குப் பி
சரின்னு சொல்லிட்டாப்ல."

"ஓ! இதெல்லாம் நடந்துடுச்சா?" என்று சிரி
கொண்டார் சாரதா.

"அத்தை!" என்று அழுத்தமாக அழைத்தான் மாத

"ம்..!"

"அத்தை! எதுக்கும் ஜாதகம் நல்லாப் பாருங்க!
என் ஃபிரண்டுங்கறதுக்காகச் சொல்லிட்டேன்னு
நினைக்கக் கூடாது இல்லே!" என்றான் மாதவன்.

"போடா! உன்னைப் பத்தி எனக்குத் தெரிய
உன்னை அப்படியெல்லாம் நினைப்பேனா?"
சிரித்துக் கொண்டே போனார்.

"ஏங்க! மாசம் அரை லட்சத்துக்கும் மேலே சம்
கிறானாம். பாருங்க.. நம்ம மாதவன் எவ்வளவு நல்ல
கொண்டு வந்திருக்கிறான்" என்று சாரதா உற்சாக
பேசுவது காதில் விழுந்தது.

சிரித்துக் கொண்டாள்.

தேவி வெட்கத்துடன் சிரித்துக் கொண்டே எ
வந்தாள்.

"அத்தான்! என்னப் பத்தி ரொம்ப பில்டப் பண்
சொன்னீங்களா என்ன?"

"அதுதான்.. கிடையாது! நான் எதுவுமே சொல்ல
இங்க இரண்டு மூணு நாளுமே உங்க ரெண்டு பே
வாட்ச் பண்ணிகிட்டே இருந்தான். நான் கூட அந்த ம
காவைத்தான் ரவுண்டு கட்டறானோன்னு நினைச்
பாத்தா.. உன்னைப் பொண்ணு கேக்கலாமாங்கறான்



தேவி "அதுதானே! எங்கே அந்த மல்லிகாவைப்
ண்ணு கேட்டுடுவாங்களோன்னு உனக்கு பயம்."

மாதவன் சற்றே திடுக்கிட்டுப் போனான். "ஹேய்! நீயா
வது கற்பனை பண்ணாதே!" என்றார்.

"கற்பனை எல்லாம் ஒண்ணும் இல்லே! கண்ணு
வும் அந்தப் பக்கமேதானே அலைபாய்ஞ்சுகிட்டு
ந்தது." கலகலவெனச் சிரித்தாள்.

அவன் முகத்தில் லேசாக வெட்கம் படர்ந்தது. "ஆமா!
ன அந்த வாயடிக்குது?" என்றான். அம்மா மேலயும்
யம்தான். ஆனா, வீட்டுக்கு வந்த மருமகளால எப்பப்
ரு டார்ச்சர்.

அண்ணா! இப்படி ஒண்ணாயிருந்தா.. உனக்கும்
மதியிருக்காது. நாங்களும் நிம்மதியாயிருக்க முடியாது.
டை ரெண்டுப் பிரிவாப் பிரிச்சு.. நீ அந்தப் பக்கம்
ந... நாங்க இந்தப் பக்கம் இருக்கோம்னு சொல்லிட்டா."

மாதவன் மனம் லயித்துக் கேட்பதைப் பார்த்து
விக்கு உள்ளூர சிரிப்பு. ஆனாலும் விஷயங்களைச்
ால்லி விட வேண்டுமென்ற முடிவில் இருந்தாள்.

"பி.எஸ்ஸி.. கம்ப்யூட்டர் சயின்ஸ் படிச்சிருந்ததாலே
ல வேலை கிடைச்சது. பத்தாயிரம் சம்பளம். அஞ்சாறு
ருஷமாப் போனா.. அம்மாவுக்கு அப்பாவோட பென்ஷன்
ருது. ஓரளவுக்கு சேமிச்சு வச்சிருக்கிறா.. ஆனா ரொம்ப
வல்லாம் எதிர்பார்க்க முடியாது.

"எதுக்கும்மா.. எதிர்பார்க்கணும்? என்னைப் பொறுத்த
ரை பெண்களே சொத்து மாதிரிதான். அவங்க நம்ம
ட்டுக்கு வர்றதே விளக்கேத்தறதுக்கு. இதுல எதுக்கு
வங்க சீர் கொண்டு வரணும்? நம்ம வீட்டுக்கு வந்த

வங்களை நாமதான் சந்தோஷமா வச்சுக்கணும். இப்ப வீட்லயே பாரு.. சுபத்ரா அண்ணி எது கேட்டாலும் நான் கிக் குடுத்துடுவேன். அவங்க சந்தோஷமா நடமாடிக் டிருந்தாத்தான்.. வீடு கலகலப்பா.. இருக்கும்..'' என்

''அதானே.. அத்தான்! உனக்கே எழுபதாயிரம் எ தாயிரம்னு சம்பளம் வருது. அப்பறம் எதுக்கு.. வா கொண்டு வர்றது? அத்தான்... இந்த ரகசியம் சொல் இருபத்தொன்பது வயசு வரைக்கும் கல்யாணத்த பத்தியே நினைக்காத ஆளு நீ.. என்ன திடீர்னு ம காவைப் பிடிச்சுப் போச்சு..?''

''உண்மையைச் சொல்லட்டா? அந்தப் பொண் கிட்டே ஒரு காலிபர் இருக்கு. என்னமோ விளைய டாய்ப் பேசினாலும் உள்ளே ஒரு மெச்சூரிட்டி இருக் என்றான்.

''அத்தான்! பயங்கரமான ஆளு நீ! இத்தனை நாள் பு நான் கண்டு பிடிச்ச விஷயத்தை எப்படி இவ்வ ஈஸியாக் கண்டு பிடிச்சே!''

''ஏம்மா! ஆபீஸ்ல வெளியில எத்தனை பேண பார்த்திருக்கேன். எவ்வளவு கதைகள் கேட்டிருக்கே என்றான்.

''அதானே!'' என்று கிண்டல் செய்தாள் தேவி.

''அது மட்டுமில்லே! இப்ப நீ சொன்னதுல இரு ரொம்ப ரோஷமான பொண்ணுன்னு வேற தெரியுது என்றான்.

''ஆமா! அப்ப சரி! அவ சைட்ல பேசிப் பாக்கட்டுமா ஆனா அவளைப் பொறுத்தவரை அவங்க அம்மா ஓ. சொன்னாப் போதும்'' என்றாள் தேவி.



''பொறு! தேவி அவசரப்படாதே! எப்படியும் உன் யாணம் மூணு மாசத்துக்குள்ளே நடக்கும். அதுக்கப் ம் சொல்லிக்கலாம். சொல்லிட்டதுக்கப்புறம் கல்யாணம் ர மாசத்துல.. அதுவரைக்கும் பெரியவங்க கிட்ட ல்ல மெல்ல விஷயம் சொல்லி.. எல்லாத்தையும் த்திக்கலாம்.''

''ஐயோ! அத்தான்! நீ ரொம்ப சாமியார்ன்னு நினைச்சு டிருந்தேன். ஆனா, ரொம்ப ரொமான்ட்டிக்கா இருக் யா!'' என்ற தேவி சிரித்தாள்.

''அது சரி! நீ எப்படி..? உன்னோட நேச்சர். எப்படின்னு ான்னா, சிவகுமார்கிட்டே சொல்லிடறேன். இப்பவே தகம் சேர்ந்ததிலே ரொம்பக் குளிர்ந்து போயிருக்கான். டுத்த வாரம் அவங்க அம்மா, அப்பாகிட்டே பேசிட்டு.. ன்னோட போன் நம்பரைக் குடுத்தர்றேன். அப்புறம் மாய் ராஜா ஜமாய்தான்'' என்றான்.

''போ.. அத்தான்! நீ!'' என்றாள்.

தேவியைக் காட்டிலும் ஏழு வயது பெரியவன் என் லும் சிறு வயதில் இருந்தே ஒருமையில் பேசிப் பழகி ட்டாள் தேவி.

தேவியின் மனதில் சிவகுமாரைப் பற்றிய கனவுகள் ருவாயின என்றால் மாதவன் மனதில் மல்லிகாவின் ருவம் அவ்வப்போது வந்து மின்னலாய்த் தாக்கியது.

லேசான ஒரு கிறக்கத்தில் நடமாடிக் கொண்டிருந்தான். வனுக்கு உதவி செய்வதற்காகவோ என்னவோ தங்கள் ட்டு விசேஷத்தில் மல்லிகா லீவு போட்டு விட்டுக் லந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினாள் தவி.

மல்லிகாவுக்கும் திருமணமாகி பெங்களூர் வ
விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று கண
போட்டது அவள் மனது.



# 3

''தேவி! நான் எதுக்கு?'' என்றாள் மல்லிகா.

''ஏய்! கல்யாணம் ஆகி நான் போயிட்டேனா.. இப்
ஒண்ணா இருக்க முடியுமா? அதுவுமில்லாம நீ பெங்க
பார்த்த மாதிரியும் இருக்கும்'' என்றாள் தேவி.

மல்லிகா ஒத்துக் கொண்டாள். அவளுக்கும் தே
சொன்னது சரியென்று பட்டது. பயணத்தை முழுமை
அனுபவிப்பதற்குத் தயாரானாள்.

தேவி மற்றும் சிவகுமாரின் திருமணம் மிகச் சிறப்
நடந்து முடிந்திருந்தது. திருமணம் முடிந்தவுடனே தே
மல்லிகாவின் சகோதரனிடமும், தாயாரிடமும் விஷ
சொல்லியிருந்தாள்.

ஜாதகம் பார்க்கும் படலம் எல்லாம் முடிந்திருந்த
மல்லிகாவின் சகோதரன் முகுந்தன் இந்த சம்பந்
குறித்து மகிழ்ச்சியடைந்தான்.

''முகுந்தண்ணா! என்னோட கல்யாணம் முடியு
வரைக்கும் இதைக் கிளப்ப வேண்டாம்னு மாதவன் அ
தான் சொல்லிட்டாரு. இனிமேத்தான் இதைப் பத்தி அவா



ரியவங்ககிட்டே பேசப் போறோம். அது மட்டுமில்ல.
ட்டத்துக்கு நடுவிலே மல்லிகாவும், மாதவன் அத்தானும்
காஞ்சம் பேசிப் பழகிக்க வாய்ப்பிருக்கும்'' என்றான்.

''ஆமா! அதுவும் சரிதான்! ரெண்டு பேருக்கும் பிடிச்
ருந்தா மேற்கொண்டு பேசலாம். இல்லேன்னா..''

''இல்லேங்கற பேச்சுக்கே இடமில்லை'' என்றாள்
தவி உறுதியாக.

அதே சமயம்!

மாதவன் மனத்துக்குள் தேவியின் திருமண நிகழ்வுகள்
டிக் கொண்டிருந்தன.

சுபத்ரா அண்ணிக்கு இந்தக் கல்யாணத்தில் அணிந்து
காள்வதற்காகவே பத்துப் பவுனில் காசு மாலை வாங்கிக்
காடுத்திருந்தான் மாதவன்.

''எங்க கொழுந்தன்... பிரசன்ட் பண்ணினது'' என்று
பருமையாக எல்லாரிடமும் காட்டிக் கொள்ளவும், இது
ரை அணியாமல் வைத்திருந்த எட்டாயிரம் ரூபாய்
பறுமான பட்டுப் புடவையை வேறு கட்டிக்கொண்டு
ல்லாருக்கும் காட்ட வேண்டியிருந்தது அதற்காகவும்
அவள் விரைவிலேயே தயாராகி மண்டபத்தில் அலம்பல்
ண்ண ஆரம்பித்து விட்டாள்.

மனோகரன் கடுப்பாகிப் போயிருந்தான்.

''ஏண்டா.. மாதவா! எதுக்குடா.. அவளுக்குப் போயி
இதையெல்லாம் வாங்கிக் குடுத்திருக்கிறே. அங்கே
பாரு.. அலம்பல் பண்ணிக்கிட்டிருக்கறதை'' என்றான்.

''விடுண்ணா! இதெல்லாம்தான் பெண்களுக்கு ரொம்ப
சந்தோஷம். பாரு.. எவ்வளவு சந்தோஷமா நடமாடிக்
கிட்டிருக்காங்க.''

"நீ ஒரு இவன்டா...!" என்று கடிந்து கொண்டவ "இங்க பாரு! இது ரெண்டையும் கவனிக்கா போயிட்டா!" என்றான்.

ராகுலும், ரத்தியும் பாவமாக விழித்துக் கொண்டு நி திருந்தார்கள்.

"சித்தப்பா! நான் இன்னும் குளிக்கவே இல்லை என்றது ரத்தி.

மாதவன் அண்ணனைப் பார்த்து சிரித்தான். "அ ணிக்கு ஒரே த்ரில்..!" என்றான்.

சுற்று முற்றும் பார்த்தான். அதே சமயம் மல்லிகா த சகோதரன் முகுந்தனின் இரண்டு வயது மகனைக் குளி வைத்துக் கொண்டு வந்து நிறுத்தினாள்.

சற்றும் எதிர்பாராத விதமாக "மல்லிகா.. ஆன்ட் எங்களையும் குளிக்க வைக்கறீங்களா?" என்று கேட்டா ராகுல்.

ஒரு நிமிடம் விழித்த மல்லிகா ஆண்கள் இருவரு ஒரு விதமாக விழித்துக் கொண்டு நிற்பதைப் பார்த் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"நீங்க சுபத்ரா அக்கா.. குழந்தைங்கதானே! அவங் எங்கே?" என்றாள் இயல்பாக.

"ஆன்ட்டி! அம்மா புதுப் பட்டுப் புடவை கட்டிக்கிட் காசு மாலையெல்லாம் போட்டுகிட்டு எங்க பாட்டிகிட்டே குளிக்க வைக்கச் சொல்லுன்னுட்டுப் போயிட்டாங்க என்று அழகாக ஒப்பித்தது ரத்தி. அதற்குள் மாதவ குறுக்கிட்டு "மல்லிகா.. நான் குளிப்பாட்டிக்கறேன் என்றான். அவள் வியப்பாகப் பார்த்தாள். பிறகு சுறுசுறு பாகச் சொன்னாள்.



"இத்தனை லேடீஸ் இருக்கோம்.. நீங்க எதுக்குக் ளிக்க வைக்கிறது? நான் பாத்துக்கறேன்" என்றாள்.

"முகுந்தண்ணா! இவனை அண்ணிகிட்டே கூட்டிட்டுப் பா.. டிரஸ் பண்ணி விடட்டும். நான் இந்தக் குழந்தை ளைக் குளிக்க வச்சர்றேன்" என்றாள்.

முகுந்தன் மாதவனைப் பார்த்து ஒரு விதமாகச் சிரித்து ட்டுத் தன் குழந்தையை அறைக்குள் கொண்டு பானான்.

பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குள்ளாக குழந்தை ள் இருவரையும் குளிக்க வைத்து ஒப்படைத்ததோடு ல்லாமல் ரத்திக்கு.. அழகாகத் தலை வாரி விட்டாள்.

மாதவன் சூட்கேஸில் துணிமணிகளை எடுத்துக் காடுக்க உடுத்தி விட்டாள். அதே சமயம் அங்கே வந்த னேஷ்,

"என்னடா! இப்பவே ட்ரெயினிங்கா..?" என்று தருகில் முணுமுணுத்துச் சிரிக்க மாதவன் முறைத்த றைப்பில் அடங்கி விட்டான்.

திருமணத்தில் மாதவன் மாப்பிள்ளைத் தோழனாகவும், ல்லிகா மணமகளுக்குத் தோழியாகவும் நிற்க மற்றவர் ளுக்குக் கலாட்டா செய்ய மிகவும் வசதியாக இருந்தது.

"என்னடா! மாதவா அடுத்தது உனக்குத்தான்" என்று லாட்டா செய்தால். எப்போதும் கடுப்பாகிற மாதவன் இப்போது விசித்திரமாக சிரித்துக் கொண்டான்.

திருமணம் முடிந்ததற்குப் பிறகு மெதுவாக தேவி ல்லிகாவிடம் சொன்னாள்.

"ஏய்..! மல்லிகா! எங்க சின்னத்தான் மாதவனைப் பத்தி என்ன சொல்ற?"

"ஏன் அவரைப் பத்தி என்ன நினைக்கணும்!"

"இல்லே! உன்னைப் பொண்ணு கேட்பாரு.. பே இருக்கு.." என்றான்.

"என்னையா?" என்று ஆச்சரியமானாள் மல்லிகா.

"ஏன்டி!" வியந்து கேட்டாள் தேவி!

"இல்லே! நிறைய சம்பளம் வாங்கறார்ன்னு பே கறாங்க.. கம்ப்யூட்டர் என்ஜீனியர்ங்கறாங்க... அவருக் போய் என்னைப் பிடிச்சிருக்குதே!" என்றாள்.

"ஏன்..! உனக்கு என்ன குறை? நல்ல அழகு இரு உன்னோட துறுதுறுப்பு ரொம்பப் பிடிச்சிருக்கு.. போ இருக்கு.." என்றாள்.

"ஓ!..." சற்றே அமைதியாகி விட்டாள்.

'ரொம்ப டீசன்ட்டாத்தான் தெரியறாரு' என்ற தனக்குள் சொல்லிக் கொள்வது போல்.

"ஏய்... மல்லிகா! ஒரு ரகசியம் சொல்லட்டா! இரண் பக்கம் பெரியவங்களுக்கும் பிடிச்சிருச்சு. ஜாதகம் ஒத் போயிருச்சு.. அதிலயும் உங்க அண்ணன் முகுந்தனு ரொம்ப சந்தோஷம்" என்றாள்.

"ஓ!."

"என்னடி... சும்மா.. 'ஓ' போடறே!"

"இதுவரைக்கும் யோசிக்காத விஷயத்தையெல்ல திடீர்ன்னு சொன்னா.. வேற என்ன செய்யணும்."

"சரி.. யோசிச்சுப் பாரு.. பிடிக்குதான்னு பாரு!"

மல்லிகா ஒன்றும் சொல்லவில்லை. மௌனம் சாதி தாள்.



"என்னடி... பேச மாட்டேங்கறே?" என்றாள் தேவி.

"இல்லே! எங்க தகுதிக்கு மீறின இடம் போல இருக்கு.." றாள்.

"ஏய்! சும்மா.. அலட்டிக்காதடி.. இப்ப நாலு வீட்டுக்கு பையன் கம்ப்யூட்டர் என்ஜீனியர். நல்லா சம்பாதிக் ாங்க.. அவங்களுக்கெல்லாம்.. நல்ல பொண்ணா.. டச்சாப் போதும்னு நினைக்கறாங்க; இதுல என்ன க்கு" என்றாள்.

மல்லிகா ஒன்றும் பேசவில்லை. மௌனம் சாதித்தாள்.

"ஏன் மல்லி! நீயும் பெங்களூர் வந்துட்டா.. எவ்வளவு லா இருக்கும். உங்க வீட்ல.. அவரும்.. எங்க வீட் காரரும்.. பெஸ்ட் ஃபிரண்ட்ஸ். ஐயோ எவ்வளவு நல்லா க்கும்.. இல்லே!" என்றாள் மகிழ்வாக.

"ஆமா! அதை யோசிச்சாக் கொஞ்சம் த்ரில்லாத்தான் க்கு.." என்றாள் சொல்லும் போதே முகம் சிவந்தது.

"ஹைய்யா! அப்ப அம்மிணிக்குப் பிடிச்சுருச்சு" என்று த்தாள் தேவி.

தேவி சட்டென்று குதிப்பதை நிறுத்தினாள். "அப்ப.. ! ரெண்டு பேரும் பழகிப் பாருங்க.. பிடிச்சுதுன்னா.. புறம் மேற்கொண்டு.. என்ன?" என்றாள் தேவி.

தேவி சொன்னதோடு மட்டுமல்லாமல் அவர்கள் இரு ும் தனியாகப் பேசுவதற்கும், நெருங்கிப் பழகுவதற்கும் ய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தாள்.

* * *

ஒரு தட்டு நிறைய வெற்றிலை பாக்கு எடுத்துக் ாண்டு மண்டபத்தில் ஒரு ஓரத்தில் இருந்த நாற்காலி ல் வைப்பதற்காக நடந்து கொண்டிருந்தாள் மல்லிகா.

அதே நேரம்,

மாதவன் எதிரில் வரவும் அவள் முகம் சிவ
மல்லிகாவுக்கு விஷயம் தெரிந்து விட்டது என்று
போனது மாதவனுக்கு.

சுற்று முற்றும் பார்த்தான்! அருகில் யாரும் இ
வில்லை. மெல்லிய குரலில் கேட்டான்.

''விஷயம் தெரிஞ்சுருச்சு.. போல இருக்கு!'' என்

அவள் வேறெங்கோ பார்த்துக் கொண்டு ''
சொன்னா..!'' என்றாள்.

''ஓ!.. அப்ப பதில் என்ன?'' என்றான்.

அவள் அவனைக் குறும்பாகப் பார்த்தாள்.

''நீங்க ஃபிரண்ட்ஸ் எல்லாமே ஒரே மாதிரித்தா

''புரியலே!''

''கல்யாணத்துக்கு வரும்போதே கையில வலை
வருவீங்களா?''

''புரியலே!''

''எந்தப் பொண்ணு கிடைப்பா.. வலை வீசல
வருவீங்களா'' என்றாள். அவன் மகிழ்ச்சியாகச் சிரித்

''ஹலோ! தேர் இஸ் எ கரெக்ஷன் எந்தப் பொ
கிடைப்பான்னு.. இல்லே.. மனசுக்கும் பிடிச்ச அழ
துறுதுறுப்பான.. அப்புறம்.. பொறுப்பான பொண்
இருந்தாத்தான் வீசுவோம்...''

''போதும்!''

''என்ன போதும்.''



அளவுக்கு மீறி இப்பவே.. புகழ்ந்துட்டா அப்புறம்..
யம் கிடைக்காமப் போயிடும்.'' அவன் முகத்தை
ஸாக வைத்துக் கொண்டு சொன்னான்.

இல்லையே! என் ஃபிரண்ட்ஸ் சொல்றாங்க தினம்
வதுக்கு நிறைய இருக்கும்னு.. புதுசு புதுசா..''

வள் கனகாரியமாக நகர்ந்தாள்.

ரிப்புடன் கூடிய அவன் பார்வை அவளைத்
ர்ந்தது.

வள் தேவியிடம் சொன்னாள். ''ஏய்... அந்த மாதவன்
கரமான ஆளா இருப்பாரு போல இருக்கு..''

அதுக்குள்ளே.. இந்த அளவுக்குக் கண்டு பிடிச்
யா?'' என்றாள்.

வழி மறிச்சு.. வம்பு பேசறாரு..'' என்றாள்.

நடந்ததை அப்படியே சொல்லு!'' என்றாள் தேவி.

ல்லிகா வரி மாறாமல் ஒப்பித்தாள்.

பாத்தியா! நீ தானே வலை போடவே வருவீங்
ன்னு கேட்டிருக்கிறே.. அதான் பதில் சொல்லியிருக்
. அதானே பார்த்தேன், மாதவன் அத்தான்.. அழுத்தக்
ராச்சே.. அப்படியெல்லாம் பேச மாட்டாரேன்னு''
றாள்.

பிறகு முகபாவத்தை மாற்றிக் கொண்டு அவளே
ன்னாள்.

''அதானே! இந்த விஷயத்துல யாரையும் சொல்ல
யாதுடி. இப்ப எங்க வீட்டுக்காரரே என்கிட்ட என்ன
பு பேசறாருன்னு எனக்குத்தானே தெரியும்?'' என்றாள்.

குபுக்கென்று சிரித்துக் கொண்டாள். மல்லிகா செய்வதென்று தெரியாமல் விழிக்க..

"பேய் முழி முழிக்காதடி! இந்தக் காலகட்டம் ஜாலியா இருக்கும். மத்தவங்களுக்கெல்லாம் குடுத்துட்டு.. நம்மளையே சுத்தி சுத்தி வருவ வழிவாங்க.. தனியா கவனிப்பாங்க.. இதெ ரொம்பத் த்ரில்லிங்கா.. இருக்கும்" என்றாள்.

மலரும் நினைவுகளாக்கும்!

"போடி! நான் என்ன கிழவியா? இப்பத்தான் ரொம ஆரம்பிச்சிருக்கு.. பாக்கலாம் மாதவன் அத்தான் அசத்தறாருன்னு.."

"போடி!" என்றாள் மல்லிகா.

இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

* * *

"ஐயோ! என்ன அழகா இருக்குது. ஏரியாவே!" பாராட்டிக் கொண்டாள் மல்லிகா.

பெரியவர்களும் சிறியவர்களுமாக ஒரு வேன் நி அமர்ந்திருந்தார்கள்.

பென்னார கட்டா என்னும் காட்டுப் பகுதி.

"தேவி! கடைசிச் சீட்டில் உட்கார்ந்தாள். சுத் மூணு ப்க்கமும் பார்க்கலாம்" என்று சிவகுமார் தேவி கடைசிச் சீட்டுக்குத் தள்ளிக் கொண்டு போய் விட்

தேவி ஜன்னலோரமாக அந்தப்புறம் சிவகுமார் அ அமர்ந்து கொண்டாள். அதற்கு எதிராக முந்தைய சீ மல்லிகா அமர்ந்திருந்தாள்.



றையக் குழந்தைகளை நடுவில் அமர்த்திக் கொண்டு த ஓரமாக மாதவன் அமர்ந்து கொண்டிருந்தான்.

யங்கர மிருகங்களை சுதந்திரமாக நடமாட விட்டு தர்களை வேனுக்குள் அமர்த்தி அழைத்துப் போகும் டுப் பயணம் மல்லிகாவுக்குத் த்ரில்லிங்காக ந்தது. அதே நேரம் வலது புற ஓரத்தில் அவள் அமர்ந் ந்த சீட்டுக்கு நேர் பின்னால் அமர்ந்திருந்த மாதவனும் ள் காதுக்கு மட்டும் கேட்கும்படியாக அதையே ன்னான்.

"மல்லிகா! விசித்திரத்தைப் பார்த்தியா, நாம கூண்டுக் ள உட்கார்ந்திருக்கோம். புலி சிங்கமெல்லாம் ளியில சுதந்திரமா உலாவுது இல்லே!" என்றான்.

அதே சமயம்!

வேன் நிறுத்தப்பட்டது!

பெரியதொரு புலி சாவகாசமாக பாறையின் மேல் ர்ந்து உடம்பு முழுவதையும் தன் நாக்கால் நக்கிக் டுத்தது. பிறகு நிமிர்ந்து அழகாக ஒரு போஸ் கொடுத்தது. அத்தனையையும் தனது ஹேண்டி காமிராவில் உள் ங்கிக் கொண்டான் மாதவன்.

மெதுவாகத் திரும்பி மல்லிகா அதை ஆவலாகக் னிப்பதையும் பதிந்து கொண்டவன் திரும்பினான். மிராவில் பதிந்து கொள்கிறேன் என்று சொல்லிக் ண்டு மல்லிகாவை உரசிக் கொண்டு வேறு நின்றான்.

அதே நேரத்தில் பின்னாலே ஒரு புலி ராஜ நடை ட்டுக் கொண்டு வந்தது.

"மல்லி, இதைப் பாரு!" எனவும் அவளும் எழுந்து றாள்.

வேனுக்கு இருபுறமாகவும் இரண்டு புலிகள் ந
வருவதைப் படம் பிடித்துக் கொண்டார்கள்.

"பியூட்டிஃபுல் இல்லே! மல்லி!" என்று திரும்பி
சிவகுமாரும், தேவியும் தங்களை குறுகுறுவெ
பார்ப்பதைக் கண்டு முகம் சிவந்தான்.

"ம்.. நடத்து..! நடத்து!" என்று சத்தம் வ
உதட்டளவிலேயே கேலி செய்தான் சிவகுமார்.

"நீ உன் வேலையைக் கவனிடா!" என்று இ
திரும்பி முணுமுணுத்தான்.

தேவி இருவரையும் மாறி மாறி வியப்புடன் ப
அவன் சிரித்தான்.

"தேவி! இது நாங்க மட்டும் ட்ரெயினிங் எ
வச்சிருக்கிற விஷயம். இது வாய் விட்டுப் பேசாம
ரீடிங்'ன்னு சொல்வோம் இல்லே! அது மாதிரி ந
பேசிக்குவோம்" என்றான்.

"ஓ!" என்று தேவி ஆச்சரியமாக "உனக்கும் வேண்
சொல்லித் தரட்டுமா?"

"ம்..!"

"அது சரி! இன்னும் உங்களுக்கு என்னெ
தெரியும்னு கேட்க மாட்டியா?" என்றான் சிவகுமார்.

"அதை வேற எதுக்குக் கேட்டு வம்பை வாங்கிகிட்
என்று முணுமுணுத்தாள் தேவி.

"சரி.. விடு நீ கேட்காட்டியும் நான் சொல்றேன்.. என்
லிப் ரீடிங் மட்டுமில்ல.. மைண்ட் ரீடிங்கும் தெரியும்

"அப்ப சரி! நான் இப்ப என்ன நினைச்சேன்னு செ
லுங்க.."

"சொல்லட்டுமா? இந்தாளு எதுக்கு இப்படி இடிச்சு
டு உட்கார்றாருன்னுதானே நினைச்சே."

தேவி வியப்பாய் விழித்து "ஐயோ! அதேதான்
னைச்சேன்!" என்றாள்.

"அப்ப சரி! வேற மாதிரி உட்கார்றேன்" என்று இன்னும்
ருங்கி அமர்ந்தான்.

"தலையெழுத்து!" என்று அவள் சிரித்தாலும் முகம்
ந்தாள்.

நிகழ்வதையெல்லாம் ஜாடை மாடையாகப் பார்த்து
டுத் திரும்பிய மாதவன் மல்லிகாவும் அதே போல
டையாகப் பார்ப்பதைக் கண்டு சிரித்தான்.

அவள் முகம் சிவந்து போய் தவிப்பதைப் பார்த்தவன்
வளை இயல்பாக்குவது போல்.

"ஐய்யோ! இங்க எல்லாரும் பாருங்க..! ஒரு மனுஷன்!"
று அவன் காட்டிய திசையில் பழுது பார்க்கும் பணி
ல் ஒருவன் ஒரு மரத்தில் மேல் நின்று கொண்டிருந்தான்.

வேனுக்குள் இருந்த அனைவரும் சிரித்தார்கள்.

"எப்படி என் ஜோக்!" என்று சட்டைக் காலரைத்
க்கிக் கொள்ள

"ஐயே! சகிக்கலை!" என்று அவள் பழித்துக் காட்டி
ாள்.

இதையெல்லாம் பின்னொரு நாள் ஏக்கத்துடன்
னைத்துக் கொள்ள வேண்டி வரும் என்று அப்போது
வர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.



# 4

"அத்தை! நான் நிறைய நாள் ஆபீசுக்கு லீவு முடியாது. அதுதான் பெரியவங்க எல்லாரும் இரு களே. மறு வீட்டு அழைப்புக்கெல்லாம் நான் வரணு என்றான் மாதவன்.

"தம்பி! லீவென்ன லீவு! இன்னைக்கு சனிக்கிழ மறுபடியும் திங்கட்கிழமை நைட் புறப்படறோம். ஒரு நாள் லீவு போட்டாப் போதும்டா.. சாமி!" என் சாரதா அத்தை. அவன் மறுமொழியாக ஏதோ செ முற்பட்ட போது.

"அது மட்டுமில்ல.. தம்பி! நீ கூட இருந்தா.. பிள்ளைக்குக் கொஞ்சம் நல்லாயிருக்கு.. எதுவான உன் மூலமா சொல்லிடறாரு" என்றாள் சாரதா அத்

"மாப்பிள்ளைக்கு இனிமே நான் எதுக்கு? அது தான் உங்க மக இருக்காளே! இனிமே எது சொல்ல னாலும் அவள் மூலமாக சொல்லிக்குவாரு" என் மாதவன் விடாப்பிடியாக.

"இருக்கட்டுமே! நீ எனக்காக வாயேன்!"

"என்ன அத்தை நீ! புரிஞ்சுக்க மாட்டேங்கறே" எ முணுமுணுத்துக் கொண்டு அமர்ந்தான். சிறிது ே கழித்து சிவகுமார் அவனிடம் கேட்டான்.



ன்னடா! ரொம்பத்தான் முறுக்கினியாம். பாவம்! மாமியாருக்குத் தெரியலே! மல்லிகா வர்றான்னு னாலே போதும். பய பறந்தடிச்சுட்டு வருவான்னு" கேலி செய்தான்.

இல்லடா! நான் நிஜமாத்தான் சொன்னேன்."

சரி.. சரி.. போதும்.. விடு!" என்று விட்டு விட்டான் மார்.

* * *

ங்கு பார்த்தாலும் ஒரு குறிப்பிட்ட நிறத்தில் துண்டு ந்த கூட்டம் பரவலாக மெஜஸ்டிக் ரயில்வே ஷனில் நின்று கொண்டிருந்தது. அவர்கள் யாரும் யதாக எடுத்துக் கொள்ளவில்லை.

யில் புறப்பட்டு விட்டது!

ல்லிகாவும், தேவியும் இருக்கைகளில் அமர்ந்து குசு வென்று பேசிச் சிரித்துக் கொண்டு வந்தார்கள்.

வகுமாரும், மாதவனும் சற்று நேரம் நின்று பேசிக் ண்டு வந்தார்கள்.

ழ் பெர்த் இரண்டையும் பெண்களுக்குக் கொடுத்து டு, மிடில் பெர்த் இரண்டிலும் சிவகுமாரும், மாத ம் படுத்துக் கொண்டார்கள்.

போர்வையை இழுத்துத் தலையோடு போர்த்திக் ள்வதற்கு முன்பாக மல்லிகாவின் கண் தன்னையும் மாதவனை நோக்கிப் பாய அவன் லேசாகக் கண்ணைச் டிக் கொண்டு "குட் நைட்" என்று முணுமுணுத்தான்.

மல்லிகாவும் முகம் சிவந்தபடி 'குட்நைட்' சொல்லி டுத் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

இருவருக்குமே.. மற்றவர்களின் அருகாமை தெ செய்வதாகத்தான் இருந்தது. லேசான புன்சிரிப்பு மு இழையோட உறங்குவதற்கு முயற்சி செய்து டிருந்தார்கள். ஆனால் சிவகுமாரும் தேவியும் விட்டிருந்தார்கள்.

உறக்கமும் விழிப்புமாக, லேசான வெட்க இருவருமே அல்லாடிக் கொண்டிருக்கையில் ரயில் ஸ்டேஷனுக்குச் சென்றது.

ரயில் புறப்பட்டு ஒரு மணி நேரம் போயிரு திடீரென்று நின்றது. 'சரி.. இது ஏதோ அடுத்த ஸ்டே என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கையி திபு திபுவென்று அந்தப் பெட்டிக்குள் ஒரு க ஏறினார்கள்.

உள்ளே இருந்த பயணிகள் "இது ரிசர்வேஷன் க மென்ட்" என்று தடுக்கத் தடுக்க தங்களை இ இடுக்குகளில் திறைத்துக் கொண்டார்கள்.

ஆண்களும், பெண்களும் குழந்தைகளுமாக நின இருந்தார்கள்.

ரயில் நின்று விட்டது!

டி.டி.ஆரைக் கேட்டால் "நாங்க என்ன செய்யறது? கட்சி மாநாடாம். இத்தனை பேரும் டிக்கெட் இல்லாம ஏறி இருக்காங்க.. அனுமதிக்கலேன்னா.. மறியல்ங்கற ஆபீசர்ஸ் மேலே பேசிகிட்டிருக்காங்க.. யாருக்கும் செய்யறதுன்னே புரியலே!" என்று புலம்பினார்.

"ஏன்.. சார்! டிஸ்டர்பன்ஸ் இல்லாம வரணுங்க காகத்தான்.. ரிசர்வ்ட் கம்பார்ட்மென்ட்லயே வர் ஆனா,"



சார்! இதெல்லாம்.. நம்ம கைமீறின விஷயங்கள். ங்ககிட்டே தகராறு பண்ண முடியாது. நீங்கதான் ஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்" என்றார்.

தோளைக் குலுக்கி விட்டு அந்தப்புறம் போய்விட்டார்.

"இப்ப.. என்னடா பண்றது?" சிவகுமார்.

"என்னத்தை பண்றது? மிடில் பெர்த்தைக் கழட்டிட்டு கார்ந்துகிட்டே - டிராவல் பண்ண வேண்டியதுதான்."

"சரி.. ஒண்ணு செய்! மல்லிகாவை அந்த ஜன்ன ாரத்துல விடு. பக்கத்துல நீ உட்காரு. இந்த ஜன்ன ாரம் தேவியை உட்கார வச்சுக்கறேன்.." எனவும் தவன் தயங்கினான்.

"டேய்! இதெல்லாம்.. பார்க்காதே! வேலையாகாது! ல்லாட்டி இந்தத் தடியனுங்கல்லாம் ரெண்டு பேரையும் டிச்சுத் தள்ளிடுவாங்க!" என்று முணுமுணுத்தான்.

மாதவன் அந்தக் கூட்டத்திலிருக்கும் ஆண்களைப் ர்த்தான்.

எல்லாரும் கிராமத்து மனிதர்களாய்த் தெரிந்தார்கள். தலுங்கு மாதிரி ஒரு பாஷையில் பேசினார்கள். ஒரே ந்தைக்கடை இரைச்சலாக இருந்தது.

தோளைக் குலுக்கியபடி ஒத்துக் கொண்டான்.

மடமடவென்று ஏற்பாடுகள் செய்தார்கள்.

எதிர் எதிராக உள்ள ஓரங்களில் மல்லிகாவும், தேவியும் மர்ந்துகொள்ள அருகில் இவர்கள் அமர்ந்து கொண் ார்கள்.

மீதி இருக்கிற இடம் முழுவதையும் அந்தக் கூட்டம் ஆக்கிரமித்துக் கொண்டது.

''மல்லி! இன்னைக்கு சிவராத்திரிதான்!''
அவளுக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தான்
னுடைய அருகாமையிலும், நெருக்கத்திலும் தி
போயிருந்த மல்லிகா தலையை மட்டும் ஆட்டினா

மறுபடியும் வண்டி கிளம்பியது!

தரையிலும் கூட அந்த கூட்டம் அமர்ந்து கெ
டிருந்தது.

மூாதவன் மல்லிகாவிடம் நெருங்கி அமர வே
டிருந்தது. அவளது அவஸ்தை புரிந்து பின் அதைப்
எதுவும் பேசாமல் பொதுப்படையாகப் பேசினான்.

அவள் திடீரென்று ''இப்படி உட்கார்ந்தா என
கஷ்டமா இருக்கு'' என்று முணுமுணுத்தாள்.

அவன் தாடையை வலக்கையால் நீவிக் கொண்
ஆதரவாகப் புன்னகைத்தான்.

''ஐம் சாரிடா! பாரு!'' என்று சற்றே விலகிக் காண்
தான்.

''பாரு! எங்கயாவது இடமிருக்கா! நான் வேணு
இப்படி இடிச்சுகிட்டு உட்காரலை. மூணு பேர் உட்
வேண்டிய சீட்டில் ஆறு பேர் உட்கார்ந்திருக்கா
எழுந்திருச்சு அந்தப் பக்கம் போகக்கூட வழியில்
அடைச்சுகிட்டு இருக்காங்க'' என்றான் முணுமுணுப்

''ஆமா!'' என்றாள் அவளும் மெல்லிய குரலில்.

''ஆனா ஒண்ணு ஒத்துக்கணும். ரொம்ப பிடிச்சிரு
இது மாதிரி சான்ஸ் கிடைக்கும்னு நான் நினைக்க
இல்லை!'' என்று மெல்லிய குரலில் அவளுக்கு மட்
கேட்கும்படியாகப் பேசிக் கொண்டிருக்கையில் எதி

கத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த தேவி சரேலென்று
ந்து கணவனின் மடியில் தலை வைத்துக் கொண்டாள்.

வகுமார் திடுக்கிட்டு விழித்தவன். மீண்டும் தேவி
தலையைத் தடவிக் கொடுத்தபடி உறக்கத்தில்
ந்தான்.

ாதவன் திரும்பி மல்லிகாவைப் பார்த்தான். அவள்
டேன்!' என்பது போல் குறுக்காகத் தலையாட்டினாள்.

ஓ.கே.! கண்ணை மூடி அப்படியே தூங்கு'' என்றான்.

அவனும் கண்ணை மூடிக் கொண்டான். அரை மணி
த்துக்குள்ளாக அவள் தூங்கி விழித்து அவன்
ள்களில் சாய. அவன் புன்னகைத்துக் கொண்டு
யில் சாய்த்துக் கொண்டான். நள்ளிரவில் விழித்துப்
த்த மல்லிகா வெட்கத்துடன் கண்களை மூடிக்
ண்டாள்.

* * *

'மனோ அத்தான்.. வேற வழியில்லே! கல்யாணத்தை
ரம் முடிச்சு வைங்க. நேத்தெல்லாம் ட்ரெயின்ல ஒரே
மான்ஸ்தான்'' என்று சிரித்தாள் தேவி.

'முடிச்சர்லாம்மா! நானும் எப்படா கல்யாணத்துக்கு
ன்னு சொல்லுவான்னு எதிர்பார்த்துகிட்டிருந்தேன்.
யாணம் பண்ணிக்கடான்னா 'போண்ணா' ஏதாவது
னை செஞ்சுட்டுத்தான் கல்யாணம் பண்ணணும்னு
ால்லிகிட்டிருந்தான். இப்ப அவனுக்கு மனசுக்குப்
ச்ச பொண்ணு கிடைச்சாச்சு.. எதுக்கு டிலே பண்ண
? சீக்கிரமே கல்யாணம் பண்ணிட வேண்டியதுதான்''
றான் மனோகரன்.

அன்றைக்கே மல்லிகாவின் வீட்டுக்குப் போய் விட்டுக்கூட வந்தான்.

எல்லாம் சிறப்பாகப் போய்க் கொண்டிருக்கிறது மணம் முடிவாகி விடும் என்றுதான் எல்லாரும் நினை கொண்டிருந்தார்கள். நிலைமை தலைகீழாக மாறும்

* * *

''வரலாமா?'' என்று உள்ளே வந்தாள் சுபத்ரா.

''வாங்க! வாங்க!'' என்று உற்சாகமாக வரவே சுலோச்சனா.

''எல்லாரும் நாளைக்குப் புறப்படலாம்னு இருக் அதுக்கு முன்னே நான் உங்கிட்டே பேசிடல வந்தேன்'' என்றாள் சுபத்ரா.

''ரொம்ப சந்தோஷம்!'' என்று மகிழ்ந்து கொ சுலோச்சனா.

''மல்லிகா.. இல்லையோ!'' என்று சுற்று மு பார்த்தாள்.

''இல்லே! அங்கே தேவியோடு இருக்காப்ல'' சொன்னார் சுலோச்சனா.

''அம்மா! நான் உங்ககிட்டே தனியாப் பேசற வந்திருக்கேன். நான் இப்பப் பேசறதை உங்க நெ குள்ள வச்சுக்கணும். இதை நேரடியா மல்லிகாகி சொல்லாதீங்க. ஆனா எங்க வீட்டுக்கு வரும் எச்சரிக்கை பண்ணி அனுப்பணும்'' என்றாள்.

சுலோச்சனாவுக்கு கலக்கமாக இருந்தது.

'இந்தப் பெண் பேசுகிற தொனியே நல்லாயில்லை என்று எண்ணிக் கொண்டு உள்ளறைக்கு அழை போனார்.



அம்மா! நான் சொல்றதை நல்லாப் புரிஞ்சுக்குங்க.. வனுக்கு இப்ப வயசு இருபத்தொன்பது. இதுவரைக் ஏன் கல்யாணம் பண்ணிக்கலேன்னு கொஞ்சம் சிச்சுப் பாருங்க.''

அதான் என்னமோ சாதனை பண்ணிட்டுத்தான் ாணம் பண்ணிக்கறேன்னு இருப்பதாச் சொல்லிக் ங்களே.''

அப்ப.. இப்ப என்ன சாதனை பண்ணிட்டாரா? லிகாவைப் பார்த்தவுடனே மனசு மாறிருச்சா? அதெல் .. இல்லே! உங்க குடும்பம் சாதாரண குடும்பம். ாரண குடும்பத்துல இருந்து பொண்ணை எடுத்தா ளக்கு பெருசா எதுவும் எதிர்ப்பு இருக்காது. எப்படியும் த்துக்கலாம் இல்லே?''

லோச்சனா திகைத்துப் போனார்.

'என்னம்மா.. சொல்றீங்க?''

'அம்மா..! எனக்கே பேசறதுக்கு சொல்றதுக்கு கூச்சமா க்கு ஆனா.. சொல்லித்தான் ஆகணும். நீங்க யாணத்துல பார்த்தீங்க இல்லே. நான் போட்டிருந்த மாலை.. பத்துப் பவுனு. அது மாதிரி கிட்டத்தட்ட க்கு ஐம்பது பவுனுக்கு மேலே கொழுந்தன் வாங்கித் திருக்காரு. என்னோட சம வயசு. ஆனா, என்னோட ட்கக் கேட்டை நானே சொல்ல வேண்டியிருக்கு. வன் கொஞ்சம்.. பெண்கள் விஷயத்துல.. ஒரு மாதிரி..! றய பெண்களிடம் பழக்கம் இருக்கு. அவ்வளவு ஏன்? னையே அவரோட வழிக்குக் கொண்டு வரணும்னுதான் தனை நாள் கல்யாணமே பண்ணிக்காம இருந்தாரு. னா, நான் வசதியில்லாத வீட்டுப் பொண்ணு. ஆனா,

அதை நான் புரிஞ்சுக்காத மாதிரி நடிச்சு என் காப்பாத்திகிட்டிருக்கேன். ஆனா, மல்லிகா மாதிரி யில்லாத வீட்டுப் பொண்ணைக் கொண்டு வ படிப்படியாக என்னையும் படிய வைக்கலாம்னு நி கறாரு'' என்றாள்.

உதடுகள் பிதுங்கி அழுது விட்டாள்.

சுலோச்சனாவின் கண்களும் லேசாகக் கலங் ''அம்மா! அவசரப்பட்டு சொல்லிடாதேம்மா! ஆ பார்த்தா ரொம்ப யதார்த்தமாத் தெரியுதே?'' சுலோ வுக்கு இவ்வளவு அருமையான ஒரு வரனை வ விடுவதற்கு விருப்பமேயில்லை என்பதே அவரது பத தில் இருந்து தெரிந்தது. ஆனால் சுபத்ரா தான் செ விரும்புவதை சொல்லி விட்டுத்தான் போவதாக இருந்

''அம்மா! யதார்த்தம்னா.. எங்க வீட்டுக்காரரை லுங்க.. அவரு யதார்த்தம். ஆனா, மாதவன் அ யில்லே.. மாசம் லட்ச ரூபாய் சம்பாதிக்கிறே எண்ணம். பாத்தா.. ரொம்ப அழுத்தமாத் தெரியும். அ அத்தனையும் ஆணவம். எங்க வீட்ல அவரு சொ தான் சட்டம். எத்தனையோ லேடீஸ்.. வீட்டுக் கஷ்ட வெளிய சொல்லாம முழுங்கிட்டு நடமாடற இல்லையா? அது மாதிரித்தான் நானும். ஆனா, இப் நான் ஒண்ணு சொல்றேன். ஒருவேளை மல்லிகா வசதிதான் முக்கியம்.. இதுக்கெல்லாம் அட்ஜ பண்ணிட்டுப் போகலாம்கற மாதிரி எண்ணம் இரு ரொம்ப சரி... அதுக்கு இதை விட நல்ல சம்ம கிடைக்காது'' என்றாள்.

மூக்கை உறிஞ்சிக் கொண்டாள். கண்கள் துடைத்துக் கொண்டாள்.



சுலோச்சனா சற்றே கலங்கிப் போனார். ''சரிம்மா! காபி பிடுங்க!'' என்று சமையலறைக்குப் போனார்.

அப்போதுதான் கவனித்தார்!

பக்கத்து அறையில் இருந்து மல்லிகா நின்று அத் னையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

நான் இருப்பதை சொல்லாதே என்று ஜாடை காட்டி ள். முகத்தில் பீதி தெரிந்தது.

* * *

கலைந்தது!

எல்லாக் கனவுகளும் கலைந்து போனது!

மல்லிகாவுக்கு ஆறவே இல்லை!

சுலோச்சனா விதவிதமாகச் சொல்லிப் பார்த்தார்.

''அம்மா! குடும்பத்தில் இத்தனை நாள் இருந்தவங்க. ால்றாங்கன்னா அதுல உண்மை இருக்கும்மா..! ட்லீஸ்ட்.. முழுசா உண்மை இல்லேன்னாலும் ாஞ்சம் உண்மையாவது இருக்கும்மா.. நாம செய்றது பும்மா..! இவ்வளவு வசதியான இடத்திலிருந்து ாண்ணு கேட்கறாங்கவுடனே நாம மயங்கிட்டோம்.. ாஞ்சம் கூட யோசிக்காம.. சரின்னுட்டோம்'' என்று ரிந்தாள்.

சற்று முன்னர் வரை அவனைப் பற்றி நினைக்கும் ாதெல்லாம் இனிப்பாக இருந்த விஷயங்கள் இப்போது தேகத்திற்குரியவையாக இருந்தன.

''அதான்! ட்ரெயினில் வரும்போதே அவ்வளவு ழைஞ்சிருக்காரு. நல்லவேளை! தப்பிச்சோம்'' என்று ண்ணிக் கொண்டாள்.

''ம்மா! இந்தக் கல்யாணத்தை நிறுத்திடு'' எ ஒரே பிடியாக.

''ஏய்.. பைத்தியமாட்ட.. பேசாதே! முன்ன இருந்தாலும் நீ போய்ச் சரி பண்ணு!''

''என்னத்தை.. முன்ன.. பின்ன! அம்மா சூழ்நிலையிலயும் ஒரு பொண்ணு தன்னைக் கே படுத்திச் சொல்லிக்க மாட்டா. ஆனா, சுபத்ராக்கா வளவு தூரம் இறங்கி வந்து சொல்றாங்கன்னா.. கொஞ்சமாவது உண்மையிருக்காமயா இருக்கும்?''

''ஒருவேளை, இப்படியிருக்கலாமில்ல.. லட்ச சம்பாதிக்கறவரோட பணம், வசதி இதெல்லாம் விட்டுப் போயிடுமோன்னு.. அவங்களுக்கு ஒரு லாய்ப்பு இருக்கலாமில்ல.''

''இருக்கலாம்மா! அதுக்காக. அவரு சரியில்லே! னெல்லாம் வேண்ணா.. சொல்வாங்க.. ஆனா, தங்கி தப்பா நடக்க முயற்சித்தான்னு சொல்ற அளவு போவாங்க?'' என்று வாதாடினாள்.

சுலோச்சனாவுக்கே குழப்பமாகிப் போனது.

''இப்பப் போயி எப்படி காரணம் சொல்லுவது?''

'தேவிகிட்ட விசாரிப்பமா?'

''வேண்டாம்மா! இப்படியெல்லாம் விசாரிக் நாகரீகமில்லே. அப்புறம், அந்த சுபத்ராக்காவுக்கு சனையாயிரும்.. விட்ரு.. வேற ஜோசியர்கிட்டே தோம். அவரு எதிர்காலத்துல பிரச்னை வரு சொன்னாருன்னு சொல்லு. எதையோ சொல்லு.. கல்யாணத்தை நிறுத்திரு'' என்றாள்.

னது அறைக்குப் போக யத்தனித்தவள் திரும்பி

ம்மா! அது மட்டுமில்ல.. இன்னும் ஒரு வரு க்காவது மறுபடியும் கல்யாணப் பேச்சே எடுக்காதே'' சொல்லிவிட்டு உள்ளே போனாள்.



## 5

வெளிறிப் போய்க் கிடந்த மகனின் முகத்தை வேதனை ன் பார்த்துக் கொண்டிருந்தார் ஜெயலட்சுமி.

த்து முத்தாக முகம் வேர்த்திருக்க திகைத்துப் போய் ந்து கொண்டிருந்தான் மாதவன். சொல்ல வொண் த வேதனை அவன் முகத்தில் மண்டிக் கிடந்தது.

அம்மா! மல்லிகாவே சொன்னாளாம்மா?'' என்றான் லிய ஆனால் கலங்கிய குரலில்.

மல்லிகா எங்கப்பா.. பேசினா.. மல்லிகா.. கரைஞ்சு ஞ்சு அழுதா. அவங்கம்மாதான் மனசு பொறுக்காம யத்தைப் போட்டு உடைச்சாங்க'' என்றார் ஜெய சுமி.

ரிலிருந்து வந்ததிலிருந்தே ஜெயலட்சுமி முக டமாகவே இருந்தார். யோசனையிலேயே இருந்தார்.

ஏம்மா, ஒரு மாதிரியிருக்கே!'' என்று மாற்றி மாற்றி ரித்த மகன்களிடம் ''ஒண்ணுமில்லப்பா! அலைஞ்

சுட்டு வந்தேன் இல்ல அதான்'' என்று ெ விட்டார்.

மகன்கள் இருவரும் புறப்படும்வரை அங்கு நடமாடிக் கொண்டிருந்தவர் பிறகு தனது அ போய்ப் படுத்துக் கொண்டார்.

மனதில் வேதனை மண்டியிருந்தது. சொ முடியாமல், மெல்லவும் முடியாமல் நடமாடிக் டிருந்தார்.

சுபத்ராவை ஜாடையாகப் பார்த்துக் கொண்டி அவளுக்குத் தான் செய்த காரியத்தின் வீரியம் வில்லையா, அல்லது அழுத்தமாக இருக்கிறாளா புரியவில்லை அவருக்கு.

''தம்பி! உங்களுக்கு டிபன் எடுத்து வச்சிருக்கே என்று இயல்பாக மாதவனிடம் உரையாடிக் கொண தாள்.

''அண்ணி என்ன டிபன்?'' என்றான் அவன் ஷ மாட்டிக் கொண்டே.

''என்ன தம்பி! வீட்டுக்குள்ளே ஷூ போடாதீங் எத்தனை தரம் சொல்றேன்..'' என்று அவள் முணுமு அவன் ஷூவைக் கழட்டி விட்டு விட்டு சிரித் வந்தான்.

''சரிங்கண்ணி. எனக்கு ஞாபகம் இல்லே!'' என்ற

''கையைக் கழுவிட்டு வாங்க'' என்றாள் சுபத்ரா மறுப

''அடுத்த ஆர்டரா?'' என்று முணுமுணுத்தான். அ மறுபடியும் போய் வாஷ்பேசினில் கையைக் கழு கொண்டு வந்தான்.



த்தி ரெடியாகலையா? ஏன், ரத்தி சீக்கிரம்.. வா லன்னா.. சித்தப்பா.. போயிடுவேன்'' என்று குரல் த்தபடி சாப்பிட அமர்ந்தான்.

சித்தப்பா.. எனக்கு லீவு! எங்க ஸ்கூல் ஸ்போர்ட்ஸ்ல ஸ்ட் வந்ததுக்காக.. லீவு..'' என்று படுக்கையில் து குரல் கொடுத்தாள் ரத்தி.

ஓஹோ! அதுதான் மஹாராணி அனந்த சயனமா?'' ான் மாதவன்.

றக்கக் கலக்கத்தில் எழுந்து வந்த குழந்தை டைனிங் ளில் அவன் அருகில் அமர்ந்து கொண்டாள்.

சரி.. போ, முகம் கழுவிட்டு வா.. அப்புறம்.. வந்து ல்லு..'' என்ற சுபத்ரா அந்தக் குழந்தையை ப்புறம் அழைத்துக் கொண்டு போனாள்.

கம் திருத்திக் கொண்டு வரவும் அவன் சாப்பிட்டு டு எழுந்திருக்கவும் சரியாக இருந்தது. டைனிங் ளுக்கருகில் இருந்த சேரில் ஏறிக் கொண்ட ரத்தி ப்பாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

சித்தப்பா! தீபாவளிக்கு எனக்கு வெறும் டிரஸ் ம்தானா..'' என்றது.

ாதவன் களங்கமில்லாமல் அண்ணியைப் பார்த்துச் ்தான்.

அண்ணி! ஐஸ் வக்கறதைப் பாத்தீங்களா!'' என்றான்.

பத்ரா மையமாகப் புன்னகைத்தாள்.

வேற என்ன வேணும்!'' என்றான் குழந்தையைப் பார்த்து.

மோதிரம் வாங்கிக் குடு.. சித்தப்பா.. வேண்ணா.. நான் ரப் பரிட்சையில் ஃபர்ஸ்ட் ராங்க் வாங்கிக் காட்ட ன்'' என்றாள்.

அவன் குழந்தையின் கன்னத்தில் முத்தமி
"சரி.. வாங்கித் தரேன்! முடிஞ்சா.. சித்தப்பா.. இன்
சீக்கிரம் வர்றேன்" என்றான்.

விடைபெற்றுக் கொண்டான்.

வழக்கம்போல் அம்மாவிடம் சொல்லிக்
அம்மாவின் அறைக்குள் நுழைந்தான்.

ஜெயலட்சுமி அவசர அவசரமாக கன்ன
துடைத்துக் கொண்டார்.

"என்னமோ.. தெரியலை.. கண்ல தண்ணியா
தூசு கீசு.. விழுந்திருச்சோ.. என்னமோ தெரிய
என்று சமாளித்தார்.

மாதவன் பைக்கில்தான் ஆபீஸ் போவது.
மிகுந்த பெங்களூரில் காரில் செல்வதை விட
செல்வது வசதியென்று எண்ணினான். பைக்கெ
ஏதாவது ஒரு குறுக்கு வழியில் புகுந்து கூட ஆ
சென்று விடலாம் என்பது அவன் எண்ணம்.

அவனது அலுவலகத்தில் ஃப்ளெக்ஸி
என்பார்களே அது போல் நேரம் கட்டுப்பாடு கிை
எப்போது வேண்டுமானாலும் போகலாம். எ
வேண்டுமானாலும் வரலாம். ஆனால், கடுை
உழைக்கும் அளவுக்குத்தான் அவனுக்கு ப்ர
கொடுப்பார்கள்.

மாதவன் வேலை செய்வது ப்ராடக்ட் கம்பெ
கம்ப்யூட்டர் துறையில் சர்வீஸ் டெஸ்டிங் என்று வ
இருந்தாலும் அவன் ப்ராடக்ட் கம்பெனியில் இருப்ப
விரும்பினான்.



தவன் முதலில் இரண்டு பெரிய கம்பெனிகளில்
செய்திருந்தான். அதிலும் கல்லூரியில் இருந்து
யாகத் தேர்வாகி வேலைக்குப் போன கம்பெனியில்
னுக்கு 'கேமிங் டெக்னாலஜி' என்ற பிரிவின் கீழ்
டம் தொடர்பான ப்ரொகிராம்கள் செய்ய வேண்டி
ந்தது.

தவனுக்கு சற்றே அது பிடிக்கவில்லை. இயற்கை
வே அவன் சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது
றில் எல்லாம் நாட்டம் இல்லாதவனாக இருந்தான்.

டேய்! சிகரெட் ஸ்டைலா ஊதிகிட்டுப் போனாத்தான்
ண்ணுங்களுக்குப் பிடிக்கும்" என்று சக மாணவர்கள்
ய்த்தால் அலட்டிக் கொள்ளாமல் சொல்வான்.

த்தை எடுத்து அந்தப்புறம் வீசினாள்.

கும் அவன் அலட்டிக் கொள்ளவில்லை. ''எதுக்குக் டறே! உன்னைப் பொறுத்தவரை நான் இந்த துல அனுபவசாலி. அப்படி இல்லேன்னு ா நம்பவா.. போறே? நீ நம்புவதும் நம்பாததும் எனக்குக் கவலையில்லே.. உனக்கு என்ன று சொல்லு..!'' என்றான்.

வன்.. நீங்களா.. இப்படி?'' என்றாள் கலங்கியு

ளா? என்னைப் பத்தி உனக்கு என்ன தெரியும்! ப பத்தி யார் என்ன சொன்னாலும் நீ நம்பிக்கறவ டத்திக்க!'' என்று அவன் தனது சட்டையைக் முற்பட்டபோது ''ஐயோ! வேண்டாம்.. ப்ளீஸ். டு திஸ் டு மீ..'' என்று கதறினாள். பயத்தில் கொண்டாள்.

ன் எழுந்தான்!

ளில் புலியின் சீற்றம் தெரிந்தது. நெருங்கி வரப் ான என்று நினைத்ததற்கு மாறாக அவன் யைச் சீர்படுத்தினான்.

ந்த பக்கம் படுத்துத் தொலை!'' என்று கட்டிலின் பக்கத்தைக் காட்டினான்.

அவள் கோழிக் குஞ்சு போல் நடுங்கிக் படுத்துக் கொள்ளவும். சற்று நேரம் தேம்பிக் உறங்குவதையும் மேலும் கீழும் நடந்த பார்த்துக் கொண்டிருந்தான். சற்று கழித்து அணைத்து விட்டுக் கட்டிலின் இந்தப் புறம் காட்டிக் கொண்டு படுத்துக் கொண்டான்.

•



# 10

எங்கேயோ காட்டுக்குள் மாட்டிக் கொ தெரியாமல் விழிக்கிறாற்போல் கனவு கண்டு தி விழித்துக் கொண்டாள் மல்லிகா.

மணி பார்த்தாள் நான்கு மணி!

எழுந்து நடமாடவும் பயந்து கொண்டு கொண்டாள்.

இரண்டாம் முறையாகப் பேச்சு வார்த்தை நட மாதவன் தன்னைத் தொடர்பு கொள்ள முயற்சிக் என்ற போதே ஏதோ கோளாறு என்று தான் புரிந் டிருக்க வேண்டும். அவனிடம் பேசி இருக்க வே

சமரசமோ சண்டையோ ஏதோ ஒரு முடிவாகி ஆனால், இப்போது இப்படிக் கோபத்தைக் காட் என்று பயமாக இருந்தது.



ஒரு மனது சொன்னது. தப்போ ரைட்டோ குள் தலையைக் கொடுத்தாகி விட்டது. ஒன்று ப் போக வேண்டும். இல்லாவிட்டால் லாவக தலையை இழுத்துக் கொள்ள வேண்டும்.

போதும் மல்லிகா ரோஷக்காரி. அவர்களது வீட்டில் அண்ணனுக்குத் திருமணத்திற்குப் பிறகு அண்ணன் னுடைய மனைவி ஏதாவதொரு விதத்தில் ல் கொடுத்தபோது சொன்னாள்.

ண்ணா! என்னைக்கிருந்தாலும் நீ எங்களுக்கும், உனக்கும் இல்லேன்னு ஆயிடப் போறதில்லே. பக்கத்துலயே தனிக்குடித்தனம் போயிடு. ஒருத் ருத்தர் உதவியா இருந்துக்கலாம்'' என்றாள்.

ந்தனும் அப்படியே செய்தான். இப்போதுதான் அண்ணன் தங்கையைப் புரிந்து கொண்ட பின் ம் திருமணம் முடிவானதற்குப் பிறகு மீண்டும் வை அண்ணன் வீட்டோடு சேர்த்து வைத்து அந்தப் பகுதியை வாடகைக்கு விட்டு அம்மா ஒரு வருவாய்க்கு வழி செய்து விட்டு வந்தாள்.

அம்மா வீட்டுக்கும் போக முடியாது. அதுதானே! எதற்குப் போக வேண்டும்! வந்தது வந்தாகி விட் லி கட்டிக் கொண்டாகி விட்டது. நடத்து வாழ்க்கை.. விட்டால்! விடக்கூடாது! ஒரு கை பார்த்து விட டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

தியாக உறங்கினாள்.

மணிக்கு எழுந்தாள்..

ம்பிப் பார்த்தாள். ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந் மாதவன்.

ஒரு விதமாகப் புன்னகைத்துக் கொண்டாள். திறந்து கொண்டு வெளியில் போனாள்.

"இல்லே! ரெண்டு விதமான டைம் இருக்கும் னீங்களே! நீங்க டெஸ்டிங் டைமா? இல்லே டெ டைமா?"

"ஏய்! அப்படிக் கண்ணை அகல விரிச்சுட் தீன்னா.. எனக்கு என்னென்னமோ பண்ண தோணுது" என்று சிரித்தான் மாதவன்.

"ஐயோ! இப்படி பப்ளிக் ப்ளேஸ்லயா?" மல்லிகா சற்றே சிவந்த முகத்துடன்.

"இது பப்ளிக் ப்ளேஸா? அங்க பாரு அம்ம லால் பாக்.. அந்தப் பொண்ணு பாரு அவன் படுத்துகிட்டு அசத்தறா.." என்று சற்று தொ உலகம் மறந்திருந்த ஜோடியைக் காட்டினான்.

"வழிப்பாடுதான்! கொஞ்ச நேரத்துக்கு மு தானே கல்ச்சரே காணாமப் போயிட்டிருக்கும்னு ப பட்டீங்க.. காதலிக்கறது தப்பா.. என்ன!" மல்லிகா.

"மல்லி! நான் சொல்றதைக் கரெக்டாப் புரி காதலிக்கறது தப்பேயில்லை. ஆனா, அது இன்ஃபாச்சுவேஷனா.. டைப்பான லவ்வான்னு புரிஞ்சுக்கணும். எடுத்தவுடனே கணத்துல எ முடிவுகள் பெரும்பாலும் ஜெயிக்கறதில்லே.. அ ரெண்டு பக்கமும் முடிவெடுத்தாலும் கூட இப் விழுந்து பிறாண்டிக்க வேண்டிய அவசியம் யான காதலுக்கு இருக்காது..." என்றான்.



எதிரில் இருப்பதை மறந்து அவன் தனக்குத் பேசிக் கொள்வது புரிந்து அவள் ஆழ்ந்து கேட்டாள்.

னுக்கு வயிற்றுப் பசிக்கு சாப்பாடு வேணும். றதுக்குத் துணி வேணும். இளமைப் பசிக்குத் வேணும். ஆதி காலத்துல மனிதன் இலை கட்டிகிட்டான். இன்னைக்கும் அப்படியேவா றான். ஆரம்ப காலத்துல மனிதன் கிடைப்பதை தவே சாப்பிட்டான். இன்னைக்கும் அப்படியேவா றோம். நாகரீகம் வளர வளர மனிதன் எல்லா யும் அழகு படுத்திகிட்டான். இப்ப சாப்பிடற செஞ்சாக் கூட டெக்கரேட் பண்ணி வைக்கற அளவுக்கு விஷயங்கள் வளர்ந்துருச்சு. அது மாதிரி றியில ஒரு சினிமாவுல பாக்கறதைக் காட்டிலும், தகத்துல படிக்கறதைக் காட்டிலும் எவ்வளவோ ங்கள் நடக்குது. அதுக்காக என்ன ஒரு ரோட்டு க்கணுமா.. என்ன? நாட் நெசஸரி" என்றான்.

ள் முகம் சிவந்தாலும் அவன் கருத்தை ஏற்றுக் டாள்.

து மட்டுமில்ல.. எங்க ஐ.டி. ஃபீல்ட் வொர்க் மேல் நாடுகள் மாதிரி இருக்கு. நானே பாரு எப்ப ணாப் போவேன். எப்ப வேணா வருவேன். ஆனா, யை முடிச்சுக் குடுத்தரணும். ரொம்ப டைம் ஓ.பி. முடியாத மாதிரித்தான் வேலை குடுப்பாங்க.. ன வழக்கமா என் ஃபிரண்ட்ஸ்கிட்டே சொல்வேன் ரஸ் போடறதிலயும், கேர்ள் ஃப்ரண்ட்ஸ் வச்சுக் யும் வெஸ்டர்ன் கல்ச்சரை ஃபாலோ பண்றமே, மாதிரி வொர்க்ல சின்சியாரிடி, வெளிப்படையான க இதெல்லாம் ஃபாலோ பண்ணுங்களேன்னு வேன்" என்றான்.

அவள் களுக்கென்று சிரித்தாள்.

"என்ன?" என்றான் குறுகுறுப் பார்வையுட

"இதனாலதான்.. உங்க ஃபிரண்ட்செல்லாம் பி உங்களுக்குப் பேரு வச்சிருக்காங்க" என்றாள்.

"ஓ! எனக்கும் தெரியும் நான் கண்டுக்கற என்றான் புன்னகைத்தான்.

"பி.எம்.பி.ன்னா போதி மரத்து, புத்தர்ன் மாம்" என்றாள்.

"அவனுங்க என்னவோ சொல்லிட்டுப் நான் ஆனா போதி மரத்து புத்தர் மாதிரி முற் தவன் இல்லேப்பா. அதை உனக்கு எப்படிப் கிறதுன்னு எனக்குத் தெரியும். டைம் வரட்டு கலாம்" என்று கிறக்கமாகப் பார்த்தான்.

அவள் சட்டென்று வேறு புறம் பார்த்தாள் கிறக்கமாகச் சிரித்தான்.

"உடனே பார்வையை அந்தப் புறம் தி வீங்களே?" என்றான்.

அவள் "நான் கேட்ட கேள்விக்கு நீங்க பதி லலே!" என்றாள்.

"நான் டெவலப்பிங் டீம்ல இருக்கேன். டீம்னா வேற யாராவது டெவலப் பண்றதை நா செய்யறது. ஆனா, எனக்கு நாமளே உருவா கறதுலதான் இன்ட்ரஸ்ட்" என்றான்.

"அதென்ன? உங்க ஆபீஸ்ல பக் போட்டா பண்றதுல மாதவன் ரொம்ப கெட்டிக்காரன் ஃபிரண்ட்ஸ் சொன்னாங்க."



மா! பக்ஸ்னா ப்ரொகிராம்ல ஏதாவது பிராப்ளம்னா சொல்லுவாங்க.. அதுலயும் நிறைய லெவல்ஸ் கு...ஹை பிரையாரிட்டி பக் இல்லேன்னா கிரிட்டி க, மேஜர் பக், நார்மல் பக், மைனர் பக்ன்னு நிறைய கு."

!"

மா.. எங்க ஆபீஸ்ல இப்ப நூறு பேர் இருக்கோம்.. இப்ப பிராஜக்ட் மேனேஜரா இருக்கேன்.. எனக்கும் பிராஜக்ட் லீட் ஒருத்தர். சாப்ட்வேர் என்ஜீனியர்ஸ் டு மூன்று பேர் இருக்காங்க. சீஃப் டெக்னீஷியன் ர், சீஃப் எக்ஸிகியூட்டிவ் ஆபீஸர்ன்னு இருக்

வள் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டாள்.

ன்னைப் பத்திச் சொல்லு."

னைப் பத்தி என்ன? பி.எஸ்ஸி கம்ப்யூட்டர் ஸ் பண்ணினேன். சும்மா ஒரு ஸ்கூல்ல வேலைக் றேன். அம்மாவைக் கவனிச்சுக்கறேன்."

மல படிக்கணும்னு ஆசையிருக்கா?"

டிக்கலாம்.. ஆனா எதுவும் வீட்டை பாதிக்காத லே இருக்கணும். இப்ப நமக்கு பணம் ஒரு பிரச் யில்லை. நீங்களே அவுட் ஆஃப் அவர்ஸ்ல ங்க. நானும் வேலைன்னு உட்கார்ந்துகிட்டிருந்தா கை என்னத்துக்கு ஆகும்?"

ம்! ஆனா, உனக்குன்னு தனிப்பட்ட ஆசைகள். ற்றங்கள்ன்னு எண்ணம் இல்லையா?"

னக்குன்னு தனிப்பட்ட ஆசை! முட்டாள் மாதிரி மே.. உலகம் போற போக்கைத் தெரிஞ்சுக்கணும்.

வேண்ணா இப்படி செய்யறனே! ஏதாவது
மாதிரிக் கத்துக்கிட்டு வீட்ல இருந்துகிட்டே எ
நேரத்துக்கு என்ன முடியுமோ அதைச் செய்யறே
மட்டுமில்லாம..'' என்று நிறுத்தினாள்.

முகம் சிவந்து போனது.

அவன் ஆர்வத்துடன் உற்றுப் பார்த்தான்.

''குழந்தை கிழந்தைன்னு ஆனா, அவர்களு
கவனமும் குடுத்து.. உங்களை மாதிரி.. வளர்க்க

அவன் கலகலவென்று சிரித்தான் ''அவ்
யோசிச்சிருக்கே.''

''இல்லங்க! அப்படியெல்லாம் யோசிக்கலே
பேசும்போது தோணுச்சு.. சொன்னேன்'' என்றாள்
அவன் தோளில் முகம் பதித்துக் கொண்டாள்.

அவன் இடக்கையால் அணைத்துக் கொ
''அப்புறம்.. என்னைப் பத்தி வேற என்னென்ன
சிருக்கே!''

அவள் கலீரென்று சிரித்தாள். ''ஒண்ணு தெ

''என்ன?''

''எல்லாரும் நினைக்கிற மாதிரி நீங்க ஒண்ணு
இல்லே!''

அவன் முகத்தில் ஒரு விதமான சிரிப்பு பரவி

''எப்படி கண்டு பிடிச்சே?''

''யாரும் பார்க்கலேன்னா.. குறும்புத் தன
பார்வையை எடுத்து வீசறீங்களே! அதுல..
இன்னும் சற்று நெருக்கமாக அணைத்துக் கொ
லேசாக இதழ் பதித்து நிமிர்ந்தான்.



லி! ஐ ஃபீல் வெரி ஹாப்பி! எனக்கு எப்படி ஒரு
வேணும்னு நினைச்சனோ.. அப்படி வந்திருக்கே!
ரூபாய்க்கு மேல சம்பளம் வருது. பணத்துக்கு
எக்கும் குறையிருக்கப் போறதில்லே. அது மட்டு
நாப்பது நாப்பத்தைஞ்சு வயசுக்குள்ள நமக்குன்னு
ஒரு தொகை வேலையில இருந்தாலும் இல்
லும் கிடைக்கிற மாதிரி நான் பிளான் பண்
வேன்'' என்றான்.

லையே படாதீங்க! நீங்க வெறும் இரண்டாயிரம்
ம் கொண்டு வந்து குடுத்தாலும் அதுக்குள்ளே நான்
ம் நடத்துவேன்.''

புறம்.. இன்னொன்று?''

ரியும்!''

ரியுமா?''

ம்! எங்கண்ணன் என்னை தன்னோட மூத்த
நினைச்சு வளர்த்தாரு. வீட்டை வித்துப் படிக்க
ரு. அவருக்கும் ஏதாவது செய்யணும் அதானே''
ள்.

றய்! பயங்கரமான ஆள்றி நீ!'' என்று சிரித்தான்.
அணைத்துக் கொண்டான்.

டுங்க..!'' என்று விலக முயற்சித்தாள்.. ஆனால்
விடவில்லை. அவன் தொடர்ந்தான்.

து மட்டுமில்ல.. உனக்கும் பாக்கெட் மணின்னு
குப் பணம் கொடுப்பேன். அதுக்கு நான் எந்தக்
கும் கேட்க மாட்டேன். தாராளமா நீ உன் அம்மா
செய்யலாம்.. அது மட்டுமில்ல.. உன்னோட அம்மா
இனிமே நம்ம ஃபாமிலி மெம்பர்தான். அண்ணன்

உங்கண்ணி சரியா கவனிக்கலைன்னா நாம் கூட்டிட்டு வந்தர்லாம்.. சரியா!'' அவள் அவன் புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

''ஹேய்! வெறும் பார்வைதானா!''

''வேறென்ன வேணும்?''

''மல்லி! சேரிட்டி பிகின்ஸ் அட் ஹோம். ரத்தியும் நம்ம குழந்தைங்க மாதிரிதான்'' என்ற

''சரி.. கல்யாணத்துக்கு முன்னாலயே இத் பேசித் தீக்கணுமா?''

''அப்புறம்.. பேசறதுக்கு.. இல்லல்லே.. செய துக்கு நிறைய விஷயம் இருக்கே?'' அவன் கை ளது இடுப்பை நோக்கி வரவும் அவள் தட்டி வி

''போதும்! இப்ப தேவியும், அவரும் இங்கே இருக்காங்க.. எங்களுக்கு ஒரு ப்ரொகிராம் என்றாள்.

''என்ன புரொகிராம்?''

''சிட்டி மார்க்கெட்ல போய் பர்ச்சேஸ் போறோம்?''

''அப்ப நானும் குமாரும் என்ன பண்றது!''

''எங்க கூட வந்து நின்னு வேடிக்கை ப என்றாள்.

அவென்யூ ரோட்டையே ஒரு அலசு அலச பெண்கள் இருவரும்.

''ஐயோ! மாதவன்.. இங்கே கிடைக்காத வ இல்லை போல இருக்கு..'' என்று அவனிடம் அதிசயிக்க..



பொய் சொல்லாதே! இங்க கிடைக்காதது ன்கிட்டே நிறைய கிடைக்கும்'' என்று அவன் லில் சொல்லிச் சிரிக்க,

உங்ககிட்டே போய் சொன்னேன் பாருங்க'' வெட்கத்துடன் முணுமுணுத்தபடி நகர்ந்தாள்.

கள் இருவரும் பேரம் பேசுவதையும், பொருட் ங்குவதையும் இருவரும் சிரிப்புடன் பார்த்துக் ருந்தார்கள்.

ம் ரூபாய்க்கு ஐம்பது பிளவுஸ் பிட்'' என்று தூகலமாக வந்தாள்.

வுக்கும், தேவிக்கும் மாதவன் புடவை எடுத்துக் ான்.

ததுப் போய் ஆனால் சந்தோஷமாக வீடு வந்

போட்டுக் கொடுப்பதற்குள்ளாக இத்தனை களும் மல்லிகாவின் மனதில் ஒடி விட்டது. நேற்றிரவு பார்த்த மாதவன் வேறாக இருந்தான்.

காவுக்குத் தன் தவறு புரிந்தது. திருமணத்தை சொன்னது அவன் மனதை வெகுவாகக் டுத்தி விட்டதை உணர்ந்தாள்.

செய்வது என்று தெரியவில்லை! ஆனால் போராட்டத்தை விட்டு விடப் போவதில்லை டிவு செய்து கொண்டாள்.

வளவு கோபம் இருக்கிறவன் ஏன் திருமணம் கொண்டான். சில கதைகளில் வருகிற மாதிரி படுத்துவதற்காகவா - பழி வாங்குவதற்காகவா?

நேற்று அவன் கேட்ட கேள்வி எவ்வளவு
கேள்வி? பேசாமல் திருமணம் செய்து கெ
இருந்திருக்கலாமோ? இருந்திருக்கலாம்.
திருமணப் பேச்சு ஆரம்பித்த முதல் மாதத்தி
தட்ட எல்லாவற்றையும் பேசியாகி விட்டது.

அந்த இரயில் பயணம் அத்தனை கூ
நடுவே இழைந்து கொண்டது. இதையெ
மனதில் இருந்து அழித்தெடுக்க முடியுமா என்

நிச்சயமாக வேறொரு கல்யாணம் என்ப
கவே முடியாது. ஏனென்றால் எதிர்கால
பற்றிய கற்பனைகள் எல்லாவற்றிலும் அவ
இணைத்துக் கொண்டிருந்தாள். நீண்டதொரு
விட்டாள்.

காபி கப்பை எடுத்துக் கொண்டு உள்ளே ந

சுகமாகக் குப்புறப்படுத்துக் கொண்டிருந்த
தான். ''குட்மார்னிங்'' என்றான் எதுவுமே ந
போல்.

அவளும் அவன் முகம் பார்க்காமல் ''குட்
என்றாள்.

அவன் எழுந்து வாஷ்பேசினில் பல் துலக்கி
காபியைக் கையில் கொடுத்தாள்.

ரசித்துக் குடித்தான்!

''அப்புறம்..?'' என்றான் கிண்டல்போல்.

''அப்புறம் என்ன? விழுப்புரம்'' என்றாள் எ

''ஹேய்! என் மேல கோபப்படாதே! நா
ஆப்ஷன் குடுத்தேன்! நீ தான் ஒத்துக்கலை!''



டர் மாதவன். இது ஒண்ணும் ஓட்டல் கடை
மசால் தோசை, பரோட்டா ஆர்டர் செய்ய!
க'' என்றாள்.

அப்படியா?'' என்றான் அதே கிண்டலுடன்.
ய வந்து புது மணமக்கள் நடந்து கொள்ளும் அதே
ல தோழர்களின் கிண்டலுக்கு அவன் முக பாவம்
தில் அவள் அசந்தே போனாள்.

ளும் அதே நடிப்பைச் செய்ய ஆரம்பித்தாள்.



## 11

ரவால்லே! நல்லாவே நடிக்கறீங்க!'' என்றாள்
அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக. மாதவன்
தமாகச் சிரித்துக் கொண்டானே தவிர எதுவும்
லை.

னைக்கு சாயங்காலம் லால்பாக் போலாமா?''

க்கு?'' என்றான்.

ங்ககிட்டே பேசணும்.''

.. இங்க பேசக் கூடாதா?''

க பேச முடியாது..''

கே! என்றான் அலட்சியமாக தோளைக் குலுக்கிக்
டான். ''நாலு மணிக்கு ஷார்ப்பா வர்றேன். இரண்டு

மணி நேரந்தான். ஆறரை மணிக்கெல்லா
இருந்தாகணும்'' என்றான்.

''சரி!'' என்றாள்.

* * *

''இங்க பார்! எல்லாத்துக்கும் காரண
என்றான். கோபத்தின் அழுத்தம் குரலில்
ஆனால், குரலை உயர்த்தவில்லை.

மல்லிகாவும் அவனும் லால் பாக்கில் அமர்
டிருந்தார்கள் அவனைக் கோபமாக உறுத்து
விட்டுச் சொன்னாள்.

"எல்லாத்துக்கும் காரணம்.. நான் இல்லே! உங்
அவங்க தானே வந்து எங்க வீட்டுல நுழைஞ்
இதையும் சொல்லிக் குட்டையைக் குழப்பி வி

''அவங்க என்ன சொன்னாலும் நீ நம்
கூடாது.''

''பிராக்டிகலாப் பேசுங்க அத்தான். நான் உ
ஒரு மாசம்தான் பழகியிருக்கேன். ஆனா
உங்களோட பத்துப் பனிரெண்டு வருஷம்
யிருக்காங்க.. சொந்த வீட்ல இருக்கற ஒருத்த
வந்து சொல்றாங்கன்னா.. குழப்பம் வராதா?''

''வந்திருக்கக் கூடாது.''

''அதெல்லாம் சினிமாவில் வேண்ணா
மனசுல புகுந்து ஒருத்தர் பார்க்க முடியும். நிஜ
யில அப்படியெல்லாம் பார்க்க முடியாது.''

அவன் சற்று நேரம் மௌனமாக இருந்தா
சொன்னான்.



ல என்கிட்ட கேட்டிருக்கலாம். சிவகுமார்
விசாரிச்சிருக்கலாம். அதை விட்டுட்டு பேசி
கல்யாணத்தை நிறுத்தச் சொல்றது எவ்வளவு
தெரியுமா?''

''இப்ப நான்தான் குற்றவாளியாயிட்டேன்.
கும் காரணமான அண்ணி நல்லவங்க ஆயிட்

கதான் தப்பை உணர்ந்து தற்கொலை
அளவுக்குப் போயிட்டாங்களே?''

ன! அந்தத் தற்கொலை முயற்சியினாலே
ணி புனிதரா மாறிட்டாங்க.. நான் குற்றவாளியா
ன்..'' என்றாள்.

ளில் கண்ணீர் மல்கியது.

பெருமூச்சு விட்டான். ''மல்லி! அவங்க செஞ்ச
எனக்குப் பிடிக்கலேங்கறது மட்டுமில்லே
யாயும் இருந்துச்சு. முதல் வேலையா அவங்க
ருந்து விலகிட்டேன். அதுக்காக கண்ணுக்குக்
வளர்த்த என் அண்ணனைப் பிரிஞ்சு

டன்னா.. எதுக்கு மறுபடியும் கல்யாணத்துக்கு
டீங்க..!''

ா? நீயும் வேற கல்யாணம் செஞ்சுக்கப் போற
னு சொன்னியாம். எனக்கும் இனிமே வேற
மான்னு இருந்தது. நம்மளைச் சுத்தி இருந்த
லாரும் இந்தக் கல்யாணம் நின்னு போனதுல
வருத்தத்தில் இருந்தாங்க. அதிலயும் அண்ணன்
வருத்தப்பட்டாரு. மறுபடியும் கல்யாணப் பேச்சு

எடுத்தப்ப நீயும் சந்தோஷமாய் சம்மதிச்சு
னாங்க.. நாம தனித்தனியா இருந்து பல வே
தப்பட வைக்கறதை விட நாம ஒண்ணா இ
எல்லாருக்கும் மனசு ரிலீஃப் ஆகும்ன்னு
ஒத்துகிட்டேன்..'' அவள் வெறித்துப் பார்த்தா

''ஆனா. அந்தக் காதல் செத்துப் போச்சு.. அ
ஆறாது மல்லி.. இனிமேல் பழைய மாதவ
பார்க்காதே. ஒரு கணவனா நான் உன்னுடைய
எல்லாத்தையும் நிறைவேத்துவேன்.. எந்த
வக்க மாட்டேன். நீ வேண்டாம்ங்கற.. மு
னோடதுதான்'' என்றான்.

அவளுக்குப் புரிந்தது. அவளைப் பழி வா
மிகவும் சாமர்த்தியமாக. ''எந்தக் குற்றச்சா
அவனைப் பற்றி வைக்கவே முடியாது. ஆனா
கௌரவத்தைக் குலைப்பான்'' அவன் ஒரு
சொன்னான்.

''இப்ப பாரு! நீ நாலு மணிக்கு வரச்
எத்தனையோ.. வேலைகளுக்கு நடுவே வந்த
துணிமணி, நகைகள், பணம், இல்லற சுகம்
கிடைக்கும். மல்லி..'' என்றான்.

''ஆனா.. அந்தப் பழைய மாதவன் கிடைக்க
என்று கசப்புடன் எண்ணிக் கொண்டாள்.

அவள் பெருமூச்சுடன் கேட்டான். ''போல
ஏதாவது பேச வேண்டியிருக்கா?'' நொந்து போ
துடன் எழுந்தாள் மல்லிகா.

''இப்படித்தான்.. இந்த வாழ்க்கை இருக்கு
ஆனா, இன்னொன்றும் சொல்றேன். எதையும் ம



க்கு உரிமை இருக்கு. நேத்து பாரு! நீ வேண்டாம்னே!
னைத் தொல்லைப் படுத்தலையே!'' என்றான்.

கண்களில் கண்ணீர் வழிந்தது.

.. ஏன் அழறே?'' என்று அவன் பதறினான்.

நிமிடம் தலை குனிந்து அமர்ந்திருந்தாள். பிறகு
போது அதில் ஒரு உறுதி தெரிந்தது.

மாதவன் நடத்துங்க! என்னுடைய தப்புக்கான
னையை நான் ஏத்துக்கறேன்'' என்றாள்.

ந்து நடந்தாள்.

ன் தோளைக் குலுக்கிக் கொண்டு எதுவுமே
து போல் பின் தொடர்ந்தான். வீட்டில் கொண்டு
ட்டான்.

மே நடவாதது போல் ''மல்லி! ஒரு காபி போட்டுக்
'' என்றான்.

போட்டுக் கொடுத்தாள். குடித்துவிட்டு அலுவல
க் கிளம்பினான்.

பார் கவனிப்பதைத் தொடர்ந்து அவள் வாசல்
ந்து வழியனுப்பி விட்டு வந்தாள். இரண்டு
போயிருக்கும்!

டா இவ வேலைக்காரியை நிறுத்தச் சொல்றா?''
ஜெயலட்சுமி.

ன கேள்விக்குறியாக நிமிர்ந்து பார்க்க அவள்
யாகப் புன்னகைத்தாள்.

ணு பேருக்கு எதுக்குங்க.. வேலைக்கு ஆளு..
த்துக்குவேன். அதுவும் நம்ம வீட்டுக்கு செய்யற

துக்கு என்ன? செய்யறதுக்கு எனக்கு ஆசையா... என்றாள்.

இரண்டு பேருடைய பார்வைகளும் மோதிக் ... அம்மா சாப்பிடுகிற மும்முரத்தில் இருந்தார்.

வழக்கம்போல் மாதவன் கிளம்பும்போது வ... பைக் வரை போனாள்.

"இது என்ன புது விதமான ஆயுதமா?" என்...

"ஆமா! வைஃபா இருக்கத்தான் தகுதியி... சொல்லிட்டிங்க. அட்லீஸ்ட் வேலைக்காரி... இருக்கேனே! சும்மா எப்படி ஒரு வீட்ல தண்... சாப்பிடறது?" என்றாள்.

"மல்லி! வேண்டாம்! வருத்தப்படுத்தி... என்றான். குரலில் சற்றே கவலை தொனித்தது...

"ப்ளீஸ்! போதும். மற்றவங்களுக்காக ந... கடமைக் கல்யாணத்துல அட்லீஸ்ட் மத்த க... யாவது ஒழுங்காக நடத்திக்கலாம்" என்றாள்.

மற்றவர்கள் பார்த்தால் ஏதோ சிரித்துக் ... பேசுகிற பாவனையில் பேசி விட்டு வந்தாலு... உள்ளம் அழுதது.

எவ்வளவு அழகாக வாழ்ந்திருக்க வேண்டிய... சீண்டப் படாத ஒரு கவிதையைப் போல் கல... கறதே என்று வருத்தத்துடன் எண்ணிக் கொ...

* * *

"அத்தை புடலங்காய்க் கூட்டும், புளிக்... வச்சிட்டுமா?" என்று நின்றாள் மல்லிகா.

"ஓ.. செய்யம்மா!" என்றார் ஜெயலட்சுமி உ...

...எழுந்தவுடன் காலைச் சமையல் முடித்து ... சுத்தம் செய்து, வாஷிங் மெஷினில் துணி ...வைத்து எல்லா வேலைகளையும் பத்து மணிக் ...த்து விடுகிற அவளுடைய லாவகம் ஜெயலட்சு ...ஆச்சரியப்படுத்தியது.

...து வீட்டில் சிக்கனம் கருதி தானே வேலைகள் ...பழகியவள் என்பதால் மல்லிகாவுக்கு எதுவும் ...கத் தெரியவில்லை. இன்னமும் சொல்லப் ... மல்லிகாவுக்கு அவர்களது வீட்டில் இப்படி ... இடத்தில் தண்ணீர் குழாய்கள், வேலையை ... படுத்திக் கொள்வதற்கான மின் சாதனங்கள் ...இல்லை. எளிமையாக வாழ்ந்தவள் என்பதால் ... கடினமாக இருக்கவில்லை. ஆனால், தன் ...க மட்டும் செம்மையாக இருந்திருந்தால் இந்த ...களையெல்லாம் மகிழ்ச்சியாகச் செய்திருப்பாள்.

...பாதும் வேலை செய்வதில் சலித்துக் கொள்ள ...ள். உழைப்பதில் ஆர்வம் காட்டுவாள் என்பதால் ...து பிடித்துத்தான் இருந்தது.

...லட்சுமிக்கு ஒரே பெருமை!

...வாயில்லை. இளைய மருமகள் குடும்பப் ...பெல்லாம் இழுத்துப் போட்டுட்டு செஞ்சுக்கறா!" ...ல்லாரிடமும் பெருமையாகச் சொல்லிக் கொண் ...நேரம் மல்லிகாவிற்கு அவர் சந்தோஷம் பார்த்துப் ... இருக்கும்.

...வாரம் அவள் சமையலைச் சாப்பிட்ட மாதவன் ...ராட்டத்தான் செய்தான்.

...நாள் திடீரென்று "மல்லி! நான் இனிமே பகல்ல ...டுக்குச் சாப்பிட வரேன்" என்றான். மல்லிகாவின் ...ர்வதை ஆழ்ந்து பார்த்துக் கொண்டான்.

"சரிங்க..! சூடா சமைச்சு வக்கறேன்" என்ற

"பட்.. ஆன் ஒன் கண்டிஷன். அம்மா, எல்லாரும் ஒண்ணா சாப்பிடணும்" என்றான்.

ஜெயலட்சுமிக்கு மேலும் மகிழ்ச்சி. மல்லி மறுக்கவே வழியிருக்கவில்லை.

"ஏன்.. மல்லி! நீயென்ன கீரை சாப்பிடவே எடுத்துக்க.." என்று அவனே பரிமாறுவான்.

அம்மாவுக்கும் சம அளவு கவனம் காட்டி அவருக்கும் குறை சொல்வதற்கு ஒன்றும் இருக்க மகனும், மருமகளும் குடும்பம் நடத்துவதை ந ரசித்தார்.

அன்று மாலை!

"அம்மா!" என்று ஆசையாக வந்தான் மனோ

"வாடா!" என்று வரவேற்றார் ஜெயலட்சுமி.

"என்னம்மா..! மல்லிகா சமையல் சூப்பரா இ எவ்வளவு முக்கியமான வேலை இருக்கு. சாப் கியமான்னு கேக்கற தம்பியே வீட்டுக்கு வந்து றானாம்" என்றான் மனோகரன்.

"யார் சொன்னா?"

"குழந்தைங்ககிட்டே தம்பியே சொல்லியிரு ராகுல் அவங்க அம்மாகிட்டே சொல்லிகிட்டிரு

அதைக் கேட்டதற்குப் பிறகு மல்லிகாவிற் வழியிருக்கவில்லை. உள்ளறைக்குப் போய் கணவனிடம் பேசினாள்.

"ஏங்க! பெரியத்தான் வந்திருக்காங்க. என் ச நல்லாருக்குன்னு குழந்தைங்க அங்க போய்ச



னு புகழ்றாங்க.. நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை ளை சாப்பிடக் கூப்பிடலாமா" என்று கேட்டாள்.

பிடேன்!" என்றான்.

லே! சுபத்ராக்காவை..!"

வங்களை விட்டுட்டு மத்தவங்களை எப்படிக் முடியும்? அவங்களையும் அழைச்சுரு" என்றான்.

ங்க!" என்றாள்.

டா! நம்ம காதல் மனைவி இந்த நேரத்துல கூப் கன்னு பார்த்தேன்" என்று கிண்டல் வேறு செய்

ள் அதைக் கண்டு கொள்ளாதவள் போல் வைத்

நாள் முழுமையும் மனோகரன் குடும்பம் இருந்

லும், ரத்தியும் மல்லிகாவிடம் மிகவும் ஒட்டிக் டார்கள். அவளும் அவர்களிடம் அன்பாகவே கொண்டாள்.

தி..! இங்கே ஃபோரம்ன்னு ஒரு மல்டி காம்ப்ளெக்ஸ் ருக்கீங்களா? அங்கே கிடைக்காத பொருளே .. தெரியுமா!" என்றான் ராகுல்.

க்கென்னவோ.. சிட்டி மார்க்கெட்டே அதை விட ன்னு தோணுது" என்றாள் மல்லிகா.

மா.. சித்தப்பா கூட சொல்லுவாரு. காய்கறிக்காரி ஒரு ரூபாய்க்கு பேரம் பேசுவோம். ஆனா, ஃபைவ் ஹோட்டல்ல பத்து ரூபாயை டிப்ஸா வச்சுட்டு ாம்னு."

அதே நேரம் சுபத்ரா உள்ளே வந்தாள். "டேய்... வேலை செய்யற நேரத்துல அவளுக்கு இ... செய்யறீங்க" என்றாள்.

"அப்படியெல்லாம்.. ஒண்ணும்.. இல்லே... குழந்தைங்க.. நல்லா துறுதுறுன்னு இருக்... என்றாள் மல்லிகா.

"எல்லாம் அவங்க சித்தப்பா.. வளர்ப்பு"... சுபத்ரா.

மல்லிகாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. இ... அபாண்டமாகத் தன் மைத்துனரைப் பற்றி ஒ... சாட்டு வைத்தோம் என்ற நினைவே இல்லாம... சுபத்ரா அக்காவால் எப்படி இப்படி இயல்பாக... முடிகிறது. ஆனால் இவர்கள் வைத்த வேட்டு இ... தனது குடும்ப வாழ்க்கையின் இனிமையை... செய்து விட்டது என்பது எப்படி இவர்களுக்கு... போகிறது. ஆமாம்! புரிந்துதான் என்ன ஆகப் போ... என்று கசப்புடன் எண்ணிக் கொண்டாள்.

அதே நேரம்!

மனோகரனும், மாதவனும் உள்ளே வந்... "ஏம்மா.. மல்லிகா! இன்னைக்குக் காலையிலே ... பொங்கல்ன்னு ஒண்ணு செஞ்சயே! அதைக் ... எப்படி செய்யறதுன்னு எங்க தேவியாருக்குச் சொ... என்றான் மனோகரன்.

மல்லிகா தன் கணவன் நிற்கிற திசையை... காமல் சுபத்ராவிடம் புன்னகையுடன் சொன்னாள்.

"ரொம்ப ஈஸிதான்க்கா. வெண் பொங்கல் செ... மில்ல அதுல அரிசி பயன்படுத்துவோம். அ... வெள்ளை ரவையைப் பயன்படுத்துவோம் அவ்... ...ன.." என்றாள்.

...இன்னும் ரெண்டு நாள்ல டிரை பண்ணிடறேன்" ...

...பா! ஜீரண மாத்திரை. அதென்ன டைஜினா..? ... பட்டை ரெடியா வச்சுக்கணும்" என்று ராகுல் ...ய்ய எல்லாரும் சிரித்தார்கள்.

...ச்சு.. ராகுல்.. அம்மாவுக்குக் கோபம் வந்துடுச்சு.. ...ண்டு மூன்று நாளைக்கு உனக்கு தயிர் சாதம் ...ன்றாள் ரத்தி.

...வே பெட்டர்டி" என்று காதில் முணுமுணுத்தான் ...த்தப்பாவைப் பார்த்து கண் சிமிட்டினான். அவ ...லுக்குக் கண் சிமிட்டிச் சிரித்தபடி மல்லிகாவைப் ...ன். மகிழ்ச்சியாக நேரம் கழித்து விட்டு எல்லாரும் ...டார்கள். அவர்களது அபார்ட்மெண்ட் கீழ்த்தளத்தி... இருந்தது.

...யே கிளம்பியவர்களில் மனோகரன் மட்டும்,

...ப்! நீங்களெல்லாம் நடங்க.. நான் கண்ணாடி ...ச்சுட்டேன்.. எடுத்துட்டு வரேன்" என்று உள்ளே ...

...பாதுதான் சமையலறை நோக்கித் திரும்பிய ...வை அழைத்தான்.

...லிகா.. ரொம்பத் தேங்க்ஸ்ம்மா.. நான் சுபத்ராவை ...ட்டு வரப்போ.. ரொம்பத் தயக்கமாத்தான் வந் ... ஆனா, நீ ரொம்பப் பெருந்தன்மையா நடந்து ... ரொம்பத் தாங்க்ஸ்" என்றான்.

மல்லிகா பதறிப் போனாள். "ஐயய்யோ! என
யத்தான் நீங்க, நீங்க மட்டும் அந்தக் காலத்து
தன்மையா இருந்திருக்கலேன்னா, இவரு இ
பெரிய படிப்புப் படிச்சிருக்க முடியாது. இதெல்லா
போட்ட பிச்சை... பெரியத்தான் என்ன?
முகத்தைப் பார்த்து ஒருத்தருக்கு தரும சங்கடம்
பயந்துத்தான் தனியா வந்தாராம். இப்பவும் உ
பத்தித்தான் அடிக்கடி பேசுவாரு. இது உங்க வீடு.
தான்" என்றாள். உண்மையான நேசம் நிறைந்த

மாதவன் கூட வியப்பாகப் பார்த்தான்.

"ரொம்பத் தாங்க்ஸ்ம்மா!" என்றான் மனோ
நெகிழ்ந்து போய்.

"ஒரு நிமிஷம்" என்று தங்கள் படுக்கையறை
போய் ஒரு சின்ன வாழ்த்து அட்டை ஒன்று
வந்தாள். அதில்.

**"நேற்று என்பது கவிழ்ந்த பானை**
**நாளை என்பது மதில்மேல் பூனை**
**இன்று என்பது மடிமேல் வீணை**
**மீட்டத் தெரிந்தவனுக்கே வாழ்க்கை."**

என்றிருந்தது.

அழகான கையெழுத்தில் இருந்தது. கடையில்
வாழ்த்து அட்டைகளை வாங்கி இது போல் அச்சு
எழுத்தில் எழுதுவதும், வாழ்த்துக்கள் தயாரி
அவளுக்குப் பொழுது போக்கு.

"ஸ்ப்ளெண்டிட்!" என்று தம்பியிடம் காட்டி
அம்மாவிடம் காட்டினான். இருவரும் பாராட்டின
மனோகரன் அதை எடுத்துக் கொண்டு நகர்ந்தான்



இரவு!

படுக்கையறைக்குள் அவள் நுழைந்ததும் கணவன்
கேட்டான்.

"அந்த வாழ்த்தட்டையில யாருக்கு புத்தி சொன்னே?"

"யாரு யாருக்குத் தேவையோ? அவங்களுக்கு. ஏன் அது
உங்களுக்குச் சொன்ன மாதிரிப் பட்டுதா?" என்றாள்
மல்லிகா.

"நாங்கதான் மீட்டத் தயாராத்தானே இருக்கோம்"
என்றான்.

அவள் திரும்பி அவனை நேராகப் பார்த்தாள்.

"இந்தா.. பிச்சை.. என்று வீசி எறிஞ்சு விழுந்த சாப்
பாட்டை விடப் பட்டினியே மேல்" என்றாள்.

"அப்ப.. எனக்கொண்ணுமில்ல.. பட்டினி கிட!"
என்றான்.

அவன் முகத்தில் தெரிந்த குறுஞ்சிரிப்பைப் பார்த்துக்
கொலையே செய்யலாம் போல வந்தது மல்லிகாவுக்கு.

பல்லைக் கடித்துக் கொண்டு முகத்தில் எதுவும்
காட்டாமல் காட்டிக் கொண்டு படுத்தாள். நள்ளிரவில்
விழித்தபோது மாதவன் பால்கனியில் சேரைப் போட்டுக்
கொண்டு அமர்ந்தபடி வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்
தான். முகம் இறுக்கமாக இருந்தது.

அவள் அசதியில் உறங்கி விட்டாள்.



# 12

"மல்லிகா! என்னன்னு தெரியல்ல! தேவி கா இருந்து வாமிட் பண்றா.. நீ கொஞ்சம் வர்றியா" எ சிவகுமார்.

"வரேன்.. அண்ணா!" என்று மாதவனை எழுப் அப்போது காலை எட்டு மணி இருக்கும்.

"அத்தை! சமையலை முடிச்சுட்டேன் துவை வேண்ணா, நாளைக்குப் பார்த்துக்கலாம்" என்று சொல்லக் கேட்ட ஜெயலட்சுமி சிரித்தார்.

"அதெல்லாம்.. பாத்துக்கலாம்.. போம்மா! அ மசக்கையா இருக்கும். நீ முன்னாடி போ. நான் ஆபீஸ் கிளம்பினப்பறம் வர்றேன்" என்றார்.

இரண்டு காலனிகள் தள்ளி இருந்த சிவகு வீட்டுக்குக் காரில் கொண்டு வந்து விட்டான் மாத

பரபரப்பாக அவனும் கூட வந்தான்.

தேவி மல்லிகாவிடம் முகம் சிவந்தாள்.

"ரெண்டு மாசம்டி.. மல்லிகா.. இவரு ஆர்ப்ப பண்றாரு.." என்றாள்.

சிவகுமாரின் முகம் மகிழ்ந்து கிடந்தது. வி சரிம்மா.. ஆனா, வாய்க்குப் பிடிக்கலங்கறா.. எதுவு பிட மாட்டேங்கறா.. என்று புகார் சொன்னான் சிவ



சிரித்தாள். கணவனிடம் திரும்பி "ஏங்க.. கும் அத்தையை அழைச்சுட்டு வாங்க.. கரெக்டா.. பக்குவம் சொல்வாங்க" என்றாள்.

டா! எல்லா வேலையையும் பண்ணிட்டு இப்ப பதை பதைக்கறே" என்று சிவகுமாரை கேலி மாதவன்.

கலாம்டா! அடுத்த சான்ஸ் எங்களுக்கு வரு அப்ப நாங்க இதே கேள்வியைக் கேப்பமில்லே.." சிவகுமார்.

ம்பாய் போச்சுடா..! கேலி செய்யறதுக்குக் கூட நாட்ல உரிமையில்லயா?" என்று முணுமுணுத்துக் டே நகர்ந்தான் மாதவன்.

அப்படித்தான்.. இருக்கும். ஒண்ணும் கவலைப்பட டாம்" என்று வந்தார் ஜெயலட்சுமி. கூடவே கரன்.

துக்கும்.. லேடி டாக்டரைப் பார்த்து கன்ஃபர்ம் ணிட்டு ஊருக்குச் சொல்லலாம்" என்றாள் தேவி.

அதுவும் நல்லதுதான்" என்றான் மாதவன்.

சரிடா! நான் இன்னைக்கு ஆபீஸ் லீவு!" என்றான் குமார்.

நான் கூட லீவு போடறேன்" என்றான் மாதவன்.

நீங்க யாரும் லீவு போட வேண்டாம்.. ஆபீஸ் போங்க.. புறம் செக்கப்ன்னு போகும்போது லீவு தேவைப்படும். ம் தேவியும் பாத்துக்கறோம். நாங்களே பத்து மணிக்கு ல லேடி டாக்டரைப் பாத்துட்டு வந்துடறோம்" என்றார் யலட்சுமி.

சூழ்நிலையில் மகிழ்ச்சி கலந்திருந்தது. தேவியின் த்தில் பூத்திருந்த மகிழ்ச்சியைப் பார்த்தபோது

மல்லிகாவுக்குத் தான் இழப்பது என்னவென்று புரி ஒரு பக்கம் வருத்தமாக இருந்தது. ஆனால் இன்னொ பக்கம் மகிழ்ச்சியாக இருந்தது. தனது தோழிக்குக் குழ பிறக்கப் போகிறது என்பது மட்டுமல்ல.. இனி எல் "உங்களுக்கு.. எப்ப?" என்று மாதவனைக் கேட்கும் அவன் படுகிற அவஸ்தையைப் பார்த்துச் சிரிக்க என்ற அற்ப ஆசையில் எழுந்த மகிழ்ச்சிதான் அது.

மாதவன் காரை அலுவலகத்துக்கு ஓட்டிக் கொ டிருக்கும்போது யோசனையில் ஆழ்ந்தான். வெட்கத் சிவந்து கிடந்த தேவியின் முகம், ஆனந்தத்திலும், ப பிலும் விகசித்துக் கிடந்த சிவகுமாரின் முகம் இ யிரண்டும் அவன் நினைவை ஆக்கிரமித்துக் கொ டிருந்தன.

தங்கள் நேசத்தின் வெற்றி என்று பெருமைய சொல்லிக் கொண்டான் சிவகுமார்.

'ஒருவேளை. தான் மல்லிகாவுக்கு நியாயம் செ வில்லையோ! தனது நடத்தை நாகரீகமானது இல்லையோ அப்படிப் பார்த்தால் இந்த உறவில் எதுதான் நியாய என்று கேள்வியும் பதிலும் ஒரே சமயத்தில் சொல் கொண்டது மனது.

உடனே இன்னொரு மனது கேட்டது 'ஏன்? அவ மட்டும் செய்தது நியாயமா? அவள் மட்டும் இறங்கி வ கூடாதா?' என்று.

எது எப்படியிருந்தாலும் ஒரு குழந்தையின் வருவ ஒரு வீட்டில் இவ்வளவு மகிழ்ச்சியை உருவாக் மென்றால் அந்த மகிழ்ச்சி தன் வீட்டில் எப்போ கிடைக்கும் என்ற ஏக்கம் மட்டும் மிஞ்சியிருந்தது.



அலுவலகத்தில் செய்தி பரவவும் உடன் பணியாற்று ார்கள் எல்லாரும் சிவகுமாருக்கு வாழ்த்து சொல்ல குமார் மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனான்.

உடனே அடுத்தபடியாக எல்லாரும் மாதவனிடம் ரும்பி,

"என்னய்யா.. மாதவன்! அடுத்தது உங்க ரிலீஸா?"

"வென் இஸ் யுவர் ஹேப்பி அனவுன்ஸ்மென்ட்" ன்று எல்லா மொழியிலும் கேட்டார்கள். "சீக்கிரமே.. அறிவிப்பு வரும்.." அன்று அவன் சமாளித்தாலும் அவனது நிராசை அவன் கண்ணில் பிரதிபலித்ததை ஒரு ருவம் கண்டு கொண்டது. மிஸ் ஷைலஜா.

"ஹாய்! மேடி!" என்று அருகில் வந்தாள்.

ஷைலஜா அவர்கள் அலுவலகத்தின் அழகுப் பொக் ஷங்களில் ஒன்று.

ஹை ஹீல்ஸ் ஷூவும், போனி டெய்லும் சுடிதார் ட்ஸ் என்று விதவிதமான உடைகளில் வருவாள்.

எல்லாரிடமும் கலகலப்பாகப் பழகுவாள். சுதந்திரமான பேர்வழி.

எந்த சமயத்தில் யாரோடு சுற்றுவாள் என்று சொல்ல முடியாது. அவளுக்கு மட்டும் ஒருவரைப் பிடித்து விட் டால் எந்த எல்லைக்கும் அனுமதிப்பாள் என்று ஒரு கிசு கிசு உண்டு.

"நான் மாசம் அறுபதினாயிரம் சம்பாதிக்கிறேன். கல்யாணம் பண்ணிகிட்டா வேலை முடிஞ்சு உள்ளே போவோம். அவன் காலாட்டிகிட்டு காபி கொண்டு வரச் சொல்லுவான். நான் உடனே காபி போட்டுத் தரணுமா? நாட் அட் ஆல்.." என்பாள்.

ஆண்கள் எல்லாரும் அவளைக் கேலி பேசுவ... மாதவன் மட்டும்.

''அது ஷைலஜாவோட பாலிஸி. அவங்க ... கையை வாழறதுக்கு அவங்களுக்கு உரிமை இருக்... யார் கருத்து சொல்ல?'' என்பான்.

அதனால் ஷைலஜாவுக்கு அவனை ரொம்... பிடிக்கும். மிகவும் நட்போடு பழகுவாள்.

''மேடி! நான் ஒண்ணு கேட்பேன். உண்மையான... சொல்லணும்'' என்றாள்.

''கேளு! ஷைலு!'' என்றான் மாதவன்.

''எனக்கென்னவோ நீ உன் மேரேஜ் லை... சந்தோஷமா இல்லைன்னு தோணுது. ஆம் ஐ கரெ... என்றாள்.

மாதவன் ஒரு நிமிடம் தடுமாறிப் போனான். பி... சொன்னான்.

''ஹேய்! ஷைலு.. நீ வர வர ரொம்பக் கற்ப... பண்ண ஆரம்பிச்சுட்டே!'' என்று.

''ஹல்லோ! மிஸ்டர் மாதவன்.. மத்தவங்க ம... உனக்கு நடிக்கத் தெரியாது. இங்க பாரு... சுத்தியும் ப... இதுல பாதிப் பேரு என் கூடப் பேசும் போது வேற... மான பார்வைதான் பார்க்கறானுங்க. ஆனா, நீ மட்டும்... என் கண்ணை மட்டும் பாத்துப் பேசுவே. எப்ப... கண்ணை நேராப் பாத்துப் பேசறவங்களை என... பிடிக்கும்'' என்றாள். அவன் புன்னகைத்தான்.

''கமிங் டு தி பாயிண்ட்.. நீ நான் கேட்ட கேள்விக்கு ப... சொல்லலே'' என்றாள். மாதவன் மௌனம் சாதித்தா...



...மேடி! நான் ஒரு ஃபிரண்டாத்தான் கேட்கறேன். ...க்குத் தெரியும். நான் காஸிப் பண்றதில்லே. ...டைய பிரச்சினையையும் யாருகிட்டயும் சொல்ல ...டேன். எனக்கென்னவோ முதல்ல கல்யாணப் பேச்சு ...ப்ப இருந்த சந்தோஷம் இப்ப இல்லன்னு தோணுது'' ...றாள் மறுபடியும்.

மாதவனுக்கு சற்றே ஆச்சரியமாகிப் போனது. சிவ ...ரோ, தன் சகோதரன் மனோகரனோ கூடக் கண்டு ...க்காத விஷயத்தை இந்தப் பெண் கண்டு பிடித்து ...ட்டாளே என்று.

''சரி! ஷைலு.. அப்புறமா சொல்றேன். இப்போதைக்கு ...வகுமாரைக் கன்கிராஜுலேட் பண்ணிரு'' என்று ...ித்தான்.

''மேடி! எஸ்கேப் பண்றே! விட மாட்டேன் மேன்'' ...று சொல்லிவிட்டுப் போனாள். மாதவன் யோசனை ...ல் ஆழ்ந்தான்.

* * *

''தேவி!'' என்று உருகினான் சிவகுமார்.

''ம்..!'' என்றாள் தேவி.

''ரொம்ப படுத்துதா?'' என்றான்.

''ம்.. கொஞ்சம் கஷ்டமா இருக்கு. ஆனா ரொம்ப ...ந்தோஷமா இருக்கு.. உடம்பை என்னென்னவோ செஞ் ...லும்.. இது அத்தனையும் வரப்போற வாரிசுக்குன்னு ...னைக்கும்போது ரொம்ப சந்தோஷமா இருக்கு'' என்றாள்.

அவன் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான். இப் ...ோதே அவர்கள் இருவருக்குள்ளும் அழகாகச் சிரிக்கிற ...ழலையின் தோற்றம் வந்து போனது.

''ஆண் குழந்தை வேணுமா? பெண் குழந்தை வேணுமா?''

''எனக்கு ரெட்டைக் குழந்தையா, அதுவும் ஆண் ஒண்ணு பெண்ணாப் பொறந்தா ரொம்ப நல்லாருக்கும்'' என்றாள் தேவி.

''அப்படிப் போடு'' என்று ரசித்துச் சிரித்தான் சிவகு...

அதே சமயம்!

ஷைலஜாவிடம் ஒரு ஹோட்டலின் ஃபேமிலி ரூமில் அமர்ந்தபடி நடந்த எல்லாவற்றையும் சொல்லி முடித்தான் மாதவன்.

ஷைலஜா சாலட்டை ஸ்பூனால் எடுத்துத் தட்டில் பரிமாறிக் கொண்டே சொன்னாள்.

''மாதவன்! ரொம்பப் பெரிய தப்பு பண்ணிட்டீங்க'' என்றாள்.

மாதவன் ஒரு பெருமூச்சு விட்டான்.

''தெரியலே!'' என்றான்.

ஷைலஜா குபீரென்று சிரித்தாள்.

''மேடி! ஐ லைக் யுவர் வைஃப். நானும் சில கதைகள் படிச்சிருக்கேன். இப்படித்தான் ஹீரோ பழி வாங்கறதா நினைச்சிட்டு ஹீரோயினை ரொம்ப அவமானப் படுத்து வான். எல்லா டார்ச்சரும் குடுப்பான். அவளும் பொறுத் துக்குவா.. கடைசியில உணர்ந்து ஒரே வார்த்தையில "சாரி" சொல்லிடுவான். அவளும் உருகிப் போய் ஒட்டிக் குவா.. என்னய்யா நினைச்சுகிட்டிருக்கீங்க? லேடீஸ்னா கிள்ளுக்கீரைங்களா'' என்று பொரிந்தாள்.



மாதவன் ஒன்றும் பேசவில்லை.

''ஷைலு! நான் செஞ்சது தப்போ.. என்னமோ.. என் கோபம் நியாயமானது.''

''சரிப்பா! உன் கோபம் நியாயமானதுன்னே வச்சுக்க.. எத்தனை நாளைக்கு ரெண்டு பேரும் இப்படி முகத்தைத் தூக்கி வச்சுகிட்டே இருப்பீங்க.. எனக்கென்னவோ.. உன் வைஃப் இறங்கி வர்ற மாதிரிப் பொண்ணாத் தெரியலை!'' என்றாள்.

''அதான் எனக்குப் புரியலே!''

''இத பாரு.. நான் ஒண்ணு சொல்றேன் புரிஞ்சுக்க.. இந்தப் பொண்கள் இருக்காங்களே! ஒண்ணு வந்தா.. உயிரையே குடுப்பாங்க.. இல்லையா.. எந்த லெவலுக்கும் போவாங்க..'' என்றாள்.

''உன் கிட்ட போய் சொன்னேன் பாரு'' என்று முணு முணுத்தான் மாதவன்.

ஷைலஜா சிரித்தாள்.

''சரி! இதுக்கு ஒரே வழிதான்..!'' என்றாள்.

''என்ன?'' என்றான் ஆவலாக.

''நீ உன் சந்தோஷங்களை வெளியில தேடிக்க வேண்டியதுதான்'' என்றாள் ஷைலஜா.

மாதவன் திடுக்கிட்டுப் போனான்.

''ஆமா! மேடி! நான் சொல்றதுதான் வழி..'' என்று மேலும் சற்று நேரம் விளக்கினாள். மாதவனின் முகத்தில் குழப்பம் ஏறியது.

* * *

''போடா! வீடே வெறிச்சோடிப் போய்க் கிடக்கு
என்று புலம்பினான் சிவகுமார்.

''ஏண்டா!'' என்று சிரித்தான் மாதவன்.

''தேவியை அத்தை வந்து கூட்டிட்டுப் போய் டாங்க.. அவ இல்லாமே வீட்டுக்கே போகப் பிடிக்கல அம்மா வந்து கூட இருக்கேன்னு சொல்லியிருக்காங் என்றான்.

''பாத்தியா! கல்யாணம் ஆனவுடனே அம்மா முக்கிய இல்லாதவங்க ஆயிட்டாங்க'' என்றான் மாதவன்.

''அப்படி இல்லடா மாதவா! வயித்துல குழந் இருக்கறப்ப ஒரு அழகு இருக்குடா! அது மாதிரி முகத்து ஒரு பிரகாசம். ஒரு தளதளப்பு. உள்ளுக்குள்ளே ஒ சந்தோஷத்தோட நடமாடறது இதெல்லாமே.. பாக் துக்கு ரொம்ப நல்லாயிருக்குடா. இந்த சமயத்துல அம் கூட இருக்கறதுக்கு ஆசை வருமாம். அதான் அனுப் வச்சேன்'' என்றான்.

''அனுப்பியும் வச்சுட்டு.. போரடிக்குதுன்னா.. எப்படி என்றான் மாதவன். பிறகு அவனைக் குஷிப்படுத்துவதற்கா

''அது சரி! எங்களுக்கெல்லாம் ஒரு ட்ரீட் தர்றதா சொன்னேயே.. அது எப்ப?'' என்றான்.

''இன்னைக்கே தந்தாப் போச்சு!'' என்றான் சிவகுமா

அன்று மாலையே அனுமதி வாங்கிக் கொண் மனோகரன் குடும்பத்துக்கும், மாதவன் குடும்பத்துக்கு பெரியதொரு விருந்து கொடுத்தான்.

''ஐஸ்கிரீம்டா! காலிஃப்ளவர் சூப்புடா'' என்று குழந்தை கள் குதூகலமானார்கள். மாதவன் சிவகுமாரைச் செய்



ண்டலில் எழுந்த சிரிப்பில் அக்கம் பக்கத்து மேஜைக் காரர்கள் கூட திரும்பிப் பார்த்தார்கள்.

மல்லிகா கூட கலகலப்பாகக் கலாட்டா செய்து கொண் டிருந்தாள்.

''அத்தான்! குமாரத்தான் காபி கப்பைக் குனிஞ்சு அவ்வளவு நேரம் எதுக்குப் பாக்கறாரு.. தெரியுமா? அதுல தேவியோட முகம் தெரியுதாம்'' என்றாள்.

சிவகுமார் உடனே முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்டான்.

''பாரு..! மாதவா. நானே நினைக்காம இருக்கணும்னு பாக்கறேன். மறுபடியும் மறுபடியும் ஞாபகப்படுத் துறதை'' என்றான்.

எல்லாரும் சிரித்தார்கள்.

மல்லிகாவின் இயல்பான கலகலப்பை மலர்ந்த சிரிப்பை பார்த்துக் கொண்டிருந்த மாதவனுக்கு உள்ளுக் குள் எதுவோ உயிர்த்தெழுந்தாற்போல் இருந்தது.

மகிழ்ச்சியும் கலகலப்புமாக வீடு வந்து சேர்ந்தார்கள்.

மாதவனின் முகமும் கூட மலர்ச்சியாகவே இருந்தது. குறும்பாக மனைவியின் முகத்தைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான்.

அன்றிரவு!

மல்லிகா அறைக்குள் எப்போது வருவாள் என்று காத்துக் கொண்டிருந்தான். உள்ளே வந்தாள்.

''மல்லி!'' என்றான்.

''ம்..!'' என்றாள்.

''என்னோட ஆஃபருக்கு மதிப்பே இல்லை'' என்றான்.

என்ன முயன்றும் அவனுக்கு இறுக்கமான பாவத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லை. மெ அருகில் போய் தொட்டான்.

அவள் திரும்பி அவனைப் பார்த்தாள்.

எல்லையற்ற வேதனை அவள் முகத்தில் தெரிந்த

''ப்ளீஸ்! அத்தான்.. கையை எடுங்க'' என்றாள்.

''மல்லி!'' என்றான்.

அந்த நிமிடத்தில் ''என் தவறை நான் உண விட்டேன்'' என்று அவன் சொல்லியிருந்தால் பல பி சினைகள் தீர்ந்து போயிருக்கும். ஆனால், இறுக்கமாக முகத்தை வைத்துக் கொண்டு பழகியவனுக்கு.. டென்று இணக்கம் காட்ட முடியவில்லை. மல்லிகா முகத்தில் தெரிந்த வேதனை அவன் மனத்தை பிசைந்தது. ஆனால், மனித மனங்களுக்கேயுரிய ஈ அவன் பிடரியைப் பிடித்து முன்னால் தள்ளியது.

''என்ன இருந்தாலும், ஏற்பாடு செய்த திருமணத் நிறுத்தச் சொன்னவள்தானே..'' என்ற சீற்றமும் உள் கனன்று எழுந்தது.

பொங்கி எழுந்த காதலும், அன்பும் பால் பொங் கையில் தண்ணீரைத் தெளித்தால் குப்பென்று அட விடுமே அதுபோல் அடங்கி விட்டது.

அதே நேரம்!

மல்லிகாவின் முகத்தில் ஏதோ மாறுதல்கள் ஏற் டன. முகம் கோணலாகியது. வயிற்றைப் பிடித்து



கொண்டாள். வேகமாக வாஷ் பேசினை நோக்கி ஓடினாள். ஓங்கரித்துக் கொண்டு வாந்தியெடுத்தாள்.

மாதவன் திகைத்துப் போனவன் சுதாரித்துக் கொண்டு வெளியில் போய் அம்மாவை அழைத்தான்.

''என்னடா!'' என்று ஓடி வந்தார். மருமகள் வாந்தியெடுத்ததைப் பார்த்து அருகில் போய் கைத்தாங்கலாகப் பிடித்தார்.

அவள் நிமிர்ந்தும் கட்டிலில் அமர வைத்தார். மகனை மகிழ்ச்சியுடன் பார்த்தார்.

''டேய்! மாதவா.. உன் வைஃப்க்கு ஒண்ணும் காணோமேன்னு ரொம்பக் கவலையாயிருந்தேன்.. பரவாயில்லைடா'' என்று பரபரக்க மாதவனும், மல்லிகாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு பேந்தப் பேந்த விழித்தார்கள்.

அதற்குள் மறுபடியும் வாந்தி எடுக்க அம்மா ''டேய்! காரை எடுடா.. நம்ம மனோன்மணியோட ஹாஸ்பிடல் போயிடலாம்'' என்றார்.

புதிதாக எழுந்த நிலைமையை எப்படி சமாளிப்பது என்ற கவலையோடே காரை ஓட்டினான் மாதவன்.



## 13

ஜெயலட்சுமி சிந்தனையில் ஆழ்ந்தார்.

மனோன்மணி சொன்ன தகவல் அப்படி.

தொடர்ந்து வாந்தி எடுத்த மல்லிகாவை நான நாட்கள் ஆஸ்பத்திரியில் வைக்க வேண்டிய அவசி ஏற்பட்டது.

''ஃபுட் பாய்ஸனிங்'' என்றார் டாக்டர்.

''அவ்வளவுதானா! சரி.. பொண்ணு உடம்ப தேத்தி விடுங்க'' என்றார் டாக்டரிடம். இந்த ஊரு வந்ததில் இருந்தே அவர்களின் குடும்ப டாக் மனோன்மணி.

ஒரே நாளில் வாந்தி நின்றவுடன் சுறுசுறுப்பாகி விட் டாள் மல்லிகா.

''நல்லவேளை! டீ ஹைட் ரேஷன் அளவுக்கு போகலே'' என்றார் டாக்டர்.

இரண்டாம் நாள் டிஸ்சார்ஜ் செய்வதற்கு முன்பா டாக்டர் மனோன்மணி சற்று ஓய்வாகக் கிடைக்கவே போய்ப் பேசிக் கொண்டிருந்தார் ஜெயலட்சுமி.

அப்போதுதான் அந்த விஷயத்தைச் சொன்னார் டாக் மனோன்மணி.

''ஜெயலட்சுமிம்மா.. உங்க மகனுக்கும், மருமகளு கும் உறவு நல்லாத்தானே இருக்கு.''

''நல்லாத்தான் இருக்காங்க..!'' என்றார் ஜெயலட்சுமி பிறகு அந்தக் கேள்விக்கு வேறு ஏதோ அர்த்தம் இருக் கிறாற்போல் தோன்றவே,

''ஏன் அப்படிக் கேட்கறீங்க?'' என்றார்.

''இல்லே! ஹஸ்பெண்ட் வைஃப் ரிலேஷன்ஷிப் பத்திக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தடுமாற்றமா பதில



வருது. எனக்கென்னமோ..!'' என்று தன் சந்தேகத்தையும் சொன்னார்.

ஜெயலட்சுமி சற்றே குழம்பிப் போனார். ஆனால், மனோன்மணி மேலும் சொன்னார்.

''ஜெயலட்சுமிம்மா.. உடனே போய் இதைப் பத்தி எதுவும் கேட்காதீங்க.. ஏன்னா.. ஒவ்வொரு ஜோடி ஒவ் வொரு மாதிரி.. எனக்குத் தெரிஞ்சு ஒரு ஜோடி தயக்கத்து லயே ஒரு வருஷம் கடந்துட்டாங்க.. இதைப் பத்தி ஒரு வெறுப்பு.. குழப்பம்.. தேவையாங்கற மாதிரி.. அப்புறம் நான் கவுன்சலிங் குடுத்தேன். ஆனா, உங்க பையன் படிச்சவன்.. அவங்களுக்குள்ளே ஏதாவது முடிவுகள் இருக்கலாம்.. பொறுத்துப் பார்க்கலாம்'' என்றார்.

ஜெயலட்சுமி யோசித்தபடி வந்தார். ''வெறும் தயக்கம் மட்டுந்தானா வேறு ஏதாவது பிரச்சினையோ.. என்னவோ!''

அப்போதுதான் அவருக்குப் பட்டது. இரண்டாவது முறை திருமண ஏற்பாடுகள் நடந்த போது தனது இளைய மகன் அழுத்தமாகவே இருந்தது.

முதல் தடவை ஏற்பாடுகள் நடந்தபோது கண்ணில் மின்னல்கள் இருந்த மாதிரி இருக்கவில்லை என்பது.. ஆனால், யாரும் அப்போதெல்லாம் எதையும் ஆராய்ந்து கொண்டிருக்கவில்லை. எல்லாருக்கும் திருமணம் தங்கு தடையில்லாமல் நடக்க வேண்டும் என்ற ஒரு எண் ணமே இருந்தது. ஆனால், மல்லிகா உற்சாகமாகத்தானே இருந்தாள். இப்போதும் வீட்டிலும் உற்சாகமாகத்தானே இருக்கிறாள்.

நன்றாகத்தான் பேசிக் கொள்கிறார்கள்.

அடிக்கடி வெளியே கூட அழைத்துப் போகிறான். எல்லாமே நடிப்புத்தானோ?

தன்னுடைய மனம் வருந்தும் என்பதற்காக அப நடித்துக் கொள்கிறார்களோ?

உள்ளுக்குள் அவருக்குக் கவலையாகிப் போன ஆனால் அனுபவம் சொன்னது.

'இப்ப.. என்ன ஆயிப் போச்சு? கல்யாணம் ஆ ரெண்டு, மூன்று மாசம்தானே ஆகுது? அப்படியே ஏ வது பிரச்சினைகள் இருந்தாலும் சரியாகிவிடும். ஒ வேளை கோபம் இருந்தால் தன் மகனுக்குத்தான் இரு வேண்டும். ஆனால், தன் மகன் நாலும் தெரிந்தவ அப்படி இந்தத் திருமணம் வேண்டாம் என்று எண்ண யிருந்தால் இரண்டாம் முறையும் தடுத்திருப்பான். ஏதே கோப தாபம் இருக்கலாம். அதை அவங்களேதான் தீர்த்து கொள்ள வேண்டும்' என்று எண்ணிக் கொண்டார்.

ஆஸ்பத்திரியில் இருந்து வந்ததற்குப் பிறகு கொஞ்ச கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார்.

* * *

''மல்லி! நீ அம்மாகிட்டே ஏதாவது சொன்னயா என்றான் மாதவன்.

''எதைப் பத்தி?''

''இல்லே! நமக்குள்ளே.. எதுவும்.. நடக்கலேன்னு திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள்.

''இல்லையே!'' என்றாள்.

''அதுதானே.. பார்த்தேன்.. என்னமோ அம்மா ரொம உத்து உத்து பாக்கற மாதிரித் தோணிச்சு'' என்றான்.

''ஓ!''

''இத.. பாரு.. மல்லி! என்னால எந்தப் பிரச்சினையும இல்லே.. எல்லாம்.. உன்னாலதான்..''



மல்லிகா பதில் பேசவில்லை.

அவனுக்குள் கோபம் எழுந்தது.

''முதலில் இருந்த மாதிரி நேசமும் பாசமும்.. இருக்க வேண்டும் என்று நீ எப்படி எதிர்பார்க்க முடியும்? திருமணத்தை நிறுத்தச் சொல்லி நீ என்னை அவமானம் செய்திருக்கிறாய். நான் காயப்பட்டிருக்கேன். அதற்குப் பிறகும் நீ எப்படி நான் உன்னை மென்மையாக நடத்த முடியும் என்று எதிர்பார்க்கிறாய்'' என்று கத்த வேண்டும் என்று கோபம் எழுந்தது.

அடக்கிக் கொண்டான்.

அம்மாவுக்குத் தெரிந்தால் அம்மா ரொம்பவும் வருத் தப்படுவார்கள். அதனால் குரலை இறக்கிக் கொண்டான்.

''சரி.. மல்லி! விஷயம் எதுவானாலும் அம்மாவுக்குத் தெரிய வேண்டாம். சுபத்ரா அண்ணி செஞ்ச விஷமத் துலயே ரொம்ப நொந்து போயிட்டாங்க. இப்பத்தான் கொஞ்சம் தெளிஞ்சிருக்காங்க.. அவங்க முன்னாடி கொஞ்சம் இயல்பா நடந்துக்கலாம்'' என்றான் கெஞ்சும் குரலில்.

அவள் தரையைப் பார்த்துக் கொண்டே தலையை ஆட்டினாள்.

அவனுக்குள் சற்றே நிம்மதி தோன்றியது. ஆனால், மறுபடியும் கோபம் கிளம்பியது.

''அது சரி! நீயென்ன? இத்தனை பிரச்சினைக்கப் புறமும் நான் உன்னைக் கெஞ்சுவேன்னு எதிர்பார்க்கறியா'' அது மட்டும் நடக்காது'' என்றான்.

''அதுக்காக மளிகைக் கடையில பொருள் வாங்கற மாதிரி உறவை வாங்க முடியுமா?''

"இத பார்றா? யார் தத்துவம் பேசறதுன்னே இல்லாம போச்சு" என்றான் கிண்டலாக. ஆனால், மேற்கொண் அவள் பதில் சொல்லுமுன் அவன் நகர்ந்து விட்டான்.

மல்லிகாவும் சமையலறையில் புகுந்து கொண்டா

பத்து நிமிடம் போயிருக்கும்!

"ஏன் மல்லி! இந்த ஜோக் கேட்டியா..." என சமையலறைக்கே வந்தான்.

எஸ்.எம்.எஸ். ஜோக். "நாங்க எல்லாரும் சேர்ந்து ஜூ ஆரம்பிக்கப் போறோம். நீயும் வர்றியா? அங்க எல் மிருகங்களும் இருக்கு. குரங்கு மட்டும்தான் இல்லே

உண்மையாகவே அந்த ஜோக்குக்கு மல்லிகாவு சிரிப்பு வந்து விட்டது. கலகலவென்று சிரித்தாள்.

"என்னம்மா..?" என்று ஜெயலட்சுமி வரவும் "அ உங்க மகனைப் பாருங்க.. வேலை செய்ய வி மாட்டேங்கறாரு" என்று செல்லமாகப் புகார் செய்தா

மாதவன் சொன்ன ஜோக்கை மாமியாரிடம் பகி கொண்டாள். அவரும் சிரித்தார்.

"இப்படித்தாம்மா.. வீட்ல சமையல் வேலையில மும்முரமா இருக்கும்போது இவன் வந்து இப்படி ஜோ கடிப்பான்." என்று அவரும் சிரித்தார். மேலும் சொன்ன

"அது மட்டுமில்லம்மா.. வித்தியாசம் இல்லா பழகுவான். சுபத்ராகிட்டயும் இப்படித்தான் வந்து என யாவது சொல்வான்" என்றார்.

மல்லிகாவும், மாதவனும் ஒருவரையொருவர் பார்த் கொண்டார்கள். அம்மா எதற்காக இப்படி ஒரு வி கத்தைச் சொல்ல வேண்டும்.



மாதவன் யோசனையில் ஆழ்ந்தான். அலுவலகத் திலும் அதே யோசனையில் இருந்தான்.

அந்த நேரம்!

தினேஷ் வந்தான். "என்னடா! இப்பல்லாம் எப்பவும் ஒரு மாதிரி யோசனையிலயே இருக்கே" என்றான்.

மாதவன் தினேஷிடம் தனது பிரச்சினையை கோடி காட்டினான்.

தினேஷ் திடுக்கிட்டான். "ஏண்டா சிவாகிட்டே சொன்னயா?"

"இல்ல.. தினேஷ்..! சிவாகிட்டே சொன்னா.. உடனே தேவிகிட்ட விஷயம் போகும்.. சாரதா அத்தைக்கு விஷயம் போகும்.. அப்படியே.. பரவிடும்.. என்ன இருந் தாலும் புருஷன் பொண்டாட்டி விவகாரம்.. தீத்துக்க ணும்னு.. ஒரு நம்பிக்கை.."

தினேஷ் கண்களை சுருக்கிக் கொண்டு கேட்டான்.

"ஏண்டா.. மாதவா.. மல்லிகா.. கல்யாணத்தப்ப.. ரொம்ப சந்தோஷமாத்தானே இருந்துச்சு.. உன்கிட்ட ஏதோ.. கோளாறோ.." என்றான்.

மாதவன் தினேஷின் முகத்தைப் பார்க்கவில்லை. ஆனால், வேறு பக்கம் பார்த்துக் கொண்டு சொன்னான்.

"இல்லடா! நானும் எல்லாத்தையும் மறந்தரணும்னு நான் நினைக்கறேன். ஆனா, மல்லியை தனியாக பார்க்கும்போது.. என்ன இருந்தாலும் இவ என்னை நம்பாதவ தானே? கல்யாணத்தை நிறுத்தச் சொன்னவ தானேன்னு கோபம்தான் வருது. என்ன செய்றதுன்னே எனக்குப் புரியலே.." என்றான்.

''மல்லிகா.. என்ன சொல்லுது?''

மாதவனின் முகம் சிவந்தது.

''மல்லிகா.. மேல.. தப்பில்லடா... நான் என்னை கட்டுப்படுத்த முயற்சி பண்ணினாலும் என்னையறி சுருக் சுருக்குன்னு பேசிடறேன். அவளுக்குக் கோ வருது.. சுருங்கிப் போயிடறா.''

தினேஷ் பெருமூச்செறிந்தான்.

''அப்புறம்.. இதுக்கு என்னதான் தீர்வு?'' என்றான்.

தினேஷ் சில அறிவுரைகள் சொன்னான். மாதவ கேட்டுக் கொண்டான்.

''முயற்சி பண்றேன்டா?'' என்றான். மெல்லிய லில், நடக்க வேண்டும் என்று ஆசைதான். அவனுக் தன் மீதே நம்பிக்கையில்லை.

யோசிக்க, யோசிக்க எல்லாக் கோபமும் சுப அண்ணியின் மேல் திரும்பியது.

* * *

''ஷைலு!'' எப்பப் பாரு மாதவன் கிட்டே ஏ டவுட் கேட்கறே? அவன் இப்பத்தான் புதுசாக் கல்யா மாகி இருக்கான்'' வுட்டுரு தாயி'' என்ற சக ஊழியர்கள் கமெண்ட்டைக் கண்டு கொள்ளவேயில்லை ஷைலஜ

அதே கேள்வியை தினேஷ் கேட்டபோது மட் நின்று பார்த்தாள்.

''தினேஷ்.. என்ன நீ? ஃபிரண்டுன்னு சொல்லிக்க ஆனா, எ ஃபிரண்டு இன் நீட் இஸ்.. எ ஃபிரண் இண்டீட் என்று தெரியாதா?'' என்றாள்..



''அடடா! என்னடா.. பொன்மொழியெல்லாம் கிளம்புது ஷைலஜா'' என்று சிரித்தான். அப்போதுதான் ஷைலஜா வனிடம் சில விஷயங்கள் சொன்னாள் கடைசியில்.

''மாதவனை சந்தோஷமா வைக்கறதுக்குக் கண்டிப்பா.. னாலான முயற்சிகளைச் செய்வேன்'' என்றாள் ஷைலஜா.

தினேஷ் கவலையுடன் பார்த்தான்.

''ஷைலஜா பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிக் தே'' என்றான் தினேஷ்.

''போ! தினேஷ்! இப்படியே கவலைப்பட்டுகிட்டே ருந்தா..! வாழ்க்கையில ரிஸ்க் எடுத்துத்தான் ஆகணும்'' றாள்.

''ஷைலஜா. மாதவனைப் பத்தித் தெரியும். ஆனா, லிகாவைப் பத்தி நமக்கு என்ன தெரியும்?''

''ஹல்லோ! ஃபிரம் வாட் ஐ அண்டர்ஸ்டேன்ட் லிகா இஸ் எ பார்ன் ஃபைட்டர்.''

''அதான் நானும் பயப்படறேன். கடைசியில ஏடா மா ஏதாவது ஆகிப் போச்சுன்னா..''

''அப்படி மட்டும் ஆகற மாதிரி இருந்தா இந்த லைஃபில ர்த்தமே இல்லைன்னு புரிஞ்சுக்க.''

''ஷைலஜா..! நீ செய்யறது சரியில்லே..''

''ஹல்லோ! என் சான்ஸை நான் எப்பவும் விடற லே..'' என்றாள் ஷைலஜா. அந்த நேரம்!

''என்னடா.. சீரியஸ் டிஸ்கஷன்..'' என்று வந்தார்கள் வகுமாரும் மாதவனும்.

''ஆமடா! பக் பிராப்ளம்தான். கொஞ்சம் சி கல்தான்'' என்றான் தினேஷ்.

''சரி.. நான் காபி சாப்பிடப் போறேன். நீயும் வா என்றான் சிவகுமார்.

மாதவன் நின்றான். ஷைலஜாவிடம் கேட் ''என்ன ஷைலஜா? பிராப்ளம்!'' என்றான்.

''போ.. மேன்! இனி பிராஜக்டோட மல்லுக்க துக்குள்ளே போதும் போதும்னு இருக்கு.. எனக்கு ெ சம் ஹெல்ப் பண்ணக் கூடாது. நம்ம சி.யி.ஓ. சொல் என்ன பிராப்ளம்னாலும் மாதவன்கிட்டே கே கன்னு...'' என்று சிரித்தாள்.

''சரி.. சரி.. கூடை கூடையாக ஐஸ் வைக்காதே'' எ சிரித்தான்.

''சரி.. நாளைக்கு.. நான் ஃப்ரீ.. என் டேபிளுக்கு.. வ என்றான்.

''நான் உன் டேபிளுக்கு.. வர்லே..! உன் வீட்டு வர்றேன். இப்பவே.. என்னமோ.. உன்னை சுத்திச் சு வர்றேன்னு.. இங்க எல்லாரும் பேசிக்கறானுங்க..'' எ சிரித்தாள். மாதவன் ஒரு நிமிடம் திடுக்கிட்டான். ஆ உடனே சமாளித்துக் கொண்டான். உள்ளுக்குள் மின்னல் போலே ஒரு எண்ணம் ஓடியது.

அவனை ஆழப் பார்த்து கொண்டு நின்று கொ டிருந்தாள் ஷைலஜா.

''சரி.. வா! இந்த சனிக்கிழமை.. வா!'' என்றான்.

அன்றிரவு!

வீட்டுக்குப் போனவுடன் அம்மா ஜெயலட்சுமி அ னிடம் பேச வேண்டுமென்றார்.



''என்னம்மா!'' என்று அவரது அறையில் போய் வாருகில் வாஞ்சையாக அமர்ந்தான்.

''தம்பி.. டேய்! நான் ஒரு மாசம் எங்கயாவது லாம்னு பாக்கறேன்'' என்றார்.

''மல்லி! இங்க.. வா..!'' என்று அவசரமாக அழைத் ன். அவளும் வந்தாள்.

''பாரு..!, அம்மா.. என்ன சொல்றாங்கன்னு.. பாரு..!'' ன்றான் பதட்டமாக.

''இதுல பதட்டத்துக்கு.. என்ன இருக்கு..? சாரதா.. நான் ல்லிகாவோட அம்மா.. எல்லாம் ஒரு பத்து நாள் டிரிப்ல சி.. போறோம்.. அதுக்கப்புறம் சாரதா வீட்ல ஒரு பத்து ள் இருந்துட்டு போக வேண்டிய சொந்தக்காரங்க ட்டுக்கெல்லாம் போயிட்டு.. வர்றேன். அப்புறம், ல்லிகாவுக்குக் குழந்தை கிழந்தை உண்டானா.. ரெண்டு னு வருஷத்துக்கு வெளிய போக முடியாதில்லை'' ன்றார்.

''அம்மா அவ்வளவு தூரம் தனியா..!''

''ஏண்டா..! அதான் சாரதா வீட்டுக்காரர் வர்றார்.. நல்ல ராவல்ஸ்ல ஏற்பாடு செஞ்சிருக்காரு'' என்றார் பிடி தமாக.

மாதவன் மல்லிகாவைப் பார்க்க அவளும் என்ன சால்வதென்று தெரியாமல் நின்று கொண்டிருந்தாள்.

''சொன்னாப் புரிஞ்சுக்கப்பா.. குழந்தை உண்டான துக்கப்புறம்.. நான் எங்கயும் போக முடியாது'' என்றார் றுபடியும்.

மாதவன் ஒரு பெருமூச்சு விட்டான். ''விரைவில் குழந்தை வேண்டும்'' என்ற கட்டளையும் அதில் தொனித்தது கண்டு கவலையாகிப் போனது.

''சரி.. எப்பப் புறப்படறீங்க?'' என்றான்.

''இன்னைக்கு.. நைட்டே! நாளைக்கு நைட் ட்ரெ
என்றார்.

''நான்!'' என்று அவன் ஏதோ சொல்ல ஆரம்பிச்

''நீ வரவேண்டாம்.. மல்லிகா வரட்டும். எங்
ரயிலேத்தி விட்டுட்டு அவ, சுபத்ரா, மனோகரன் தி
வந்துடட்டும். நீ லீவெடுக்க வேண்டாம். இங்கிரு
கார்ல போறோம். அங்கிருந்து ட்ரெயின்'' என்றார்.

''சரிம்மா!'' என்றான்.

அம்மாவும் மல்லிகாவும் கிளம்பிய பின்தான் ம
னுக்கு நாளை மறுநாள் ஷைலஜா வருகிறேன்
சொல்லியிருந்தது உறுத்தியது.

ஷைலஜாவுக்கு போன் செய்து சொல்ல அதற்கு அ
சொன்ன பதில் அதிர்ச்சியளிப்பதாக இருந்தது.



## 14

''மாதவன்.. நம்ம சி.யி.ஓ. இருக்காரே..
மூளை.. தெரியுமா? நான் தலை கீழா நின்று சா
பண்ண முயற்சித்த..'' என்று ஷைலஜா முடிக்கு முன்
மாதவன் குபீரென்று சிரித்தான்.

ஷைலஜா முறைத்தாள்!



''தெரியும்.. மேடி! எதுக்கு சிரிக்கறேன்னு தெரியும்?
ன் தலை கீழா நின்னா.. எவ்வளவு கோரக் காட்சியா
இருக்கும்னுதானே..'' என்றாள் ஷைலஜா.

மாதவன் அழுத்தமாகப் புன்னகைத்தான்.

''விஷயத்தைச் சொல்லு.. ஷைலு!'' என்றான்.

''வந்தாரு..! ஒரு பத்து நிமிஷம்.. எதை எதையோ..
டினாரு.. பட்டுன்னு சரியாயிடுச்சு..'' என்றாள்.

மாதவன் மறுபடியும் புன்னகைத்தான். பிறகு சொன்
வன் ''ஃப்ளுக்ல சரியாயிருக்கும்'' என்றான்.

''ஏன்.. அப்படிச் சொல்றே?''

''நீ வேற அந்த ஆளு மஸ்கா போட்டே இடத்தை
ம்யின்டெயின் பண்றாருன்னு எனக்குத் தோணுது.
இர்விங் வாலசோ, சிட்னி ஷெல்டனோ.. எனக்கு ஞாபகம்
இல்லை.. அதுல.. ஒரு லேடி கப்பல்ல போயிகிட்டிருக்
கும்போது ரெண்டு பெரிய சைஸ் பிளேயர்ஸ் கூட ஆடுவா
எப்படி தெரியுமா? இரண்டு பேரையுமே வேற ரூம்ல உட்
கார வச்சுக்குவா.. இவன் செய்யற மூவ்வை அவன்கிட்டயும்,
அவனோட மூவ்வை இவன்கிட்டயும்.. ஆடுவா...''

''கடைசியிலா ஜெயித்தாளா? தோத்தாளா?''

''அது ஞாபகமில்லை.. அது மாதிரி நம்மாளு நான்
கேட்கற கேள்விக்கு உன் கிட்ட பதில் வாங்கிட்டு வந்து
குடுத்துடுவாரு'' என்று சிரித்தான்.

''நீ இப்படிச் சொல்றேன்னு நான் போய் அவர்கிட்டே
சொல்லவா?''

''வேண்டாம்ப்பா! நம்ம கம்பெனியில அவருக்கும்
ஒரு பார்ட்னர்ஷிப் இருக்கு. அதனாலதான் டாலரேட்
பண்ணிக்கறாங்கன்னு.. பேச்சு இருக்கு..'' என்றான்.

ஷைலஜாவுடன் கலகலப்பாகப் பேசிக் கொண் தாலும் உள்ளே ஒரு கலவரம் இருந்து கொ இருந்தது.

நேற்றே வர வேண்டிய மல்லிகா வரவில் நேற்றிரவு போன் செய்தவள்.

"அத்தான்! நான் முடிஞ்சா.. நாளைக்கு வர்றே இல்லைன்னா.. நாளன்னைக்கு வர்றேன்" என்றாள்.

"மல்லி.. எதுக்கும்.. நீ நாளைக்கு வந்துடேன்" என சொல்லலாமா என்று நினைத்தவன் ஏனோ சொல்ல விட்டு விட்டான். பாழாய்ப் போன கௌரவம்.

வீட்டில் யாரும் இல்லாதபோது ஷைலஜா வருகையைத் தவிர்த்து விடலாமென்று நினைத்த அதனால் அவளிடம்,

"ஷைலஜா.. நான் வீட்ல தனியாத்தான் இருக்கே ஞாயிற்றுக் கிழமை வாயேன்.. மல்லிகாவும் இருப்பா என்றான்.

"ஏன்.. நீ தனியா.. இருந்தா.. நான் என்ன உன்னை கடிச்சு முழுங்கிடவா போறேன். நாம வொர்க் பண்ண போறோம். ஹேய்..! மேடி.. ஏன் இப்படி பயந்து சாகறே என்று கேலியில் வேறு இறங்கினாள்.

காலை பத்து மணி வாக்கில் வந்தவள் அவனுக்கு சேர்த்து பகலுணவு கொண்டு வந்து விட்டாள். ஷைல எழுதிய ப்ரொகிராமில் அவர்களுக்குத் தேவையா ரிசல்ட் கிடைக்கவில்லை.

"நான் யோசித்தேன்னா.. பீட்டன் ட்ராக்லயே போவேன். நீ கொஞ்சம் யோசிச்சா.. வேற மாதிரி.. யோசிப்பியே" என்றான்.



"பேசாம.. டெஸ்டிங்.. போயிருக்கலாம்" என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

"நான் அப்படி நினைக்கலே. டெஸ்டிங் வேற மாதிரி.. இதுல நாம ஒண்ணை உருவாக்கறப்ப வர்ற சந்தோஷம் தனிதான்" என்றான் மாதவன்.

"ஆமா! சரியா வர்லேன்னா... மொத்து வாங்கறப்ப..?" என்றாள்.

"இங்க பாரு" தாமஸ் ஆல்வா எடிஸன் எத்தனையோ முறை தோத்துப் போனதுக்கப்புறம்தான் ஜெயிச்சிருக்காரு" என்றான் மாதவன்.

"மேடி! இதுதான் உன்கிட்ட எனக்குப் பிடிச்சதே எப்பவுமே பாஸிடிவ்வாவே யோசிக்கறே" என்று தலையைக் கலைத்து விட்ட போது கதவு திறந்தது.

மல்லிகா நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். மாதவன் சற்றே திடுக்கிட்டுப் போனான். ஆனால் ஷைலஜா அலட்டிக் கொள்ளாமல்.

"ஹலோ! மல்லிகா.. வாங்க.. வாங்க..! மேடி.. இப்பத்தான் அற்புதமான தத்துவமெல்லாம் சொல்லி கிட்டு இருந்தாப்ல.." என்றாள்.

"ஓ!" என்று மையமாகப் புன்னகைத்து வைத்தாள்.

நடு ஹாலில் டைனிங் டேபிளை இழுத்துப் போட்டுக் கொண்டு அதன் மேல் லேப்டாப்பை வைத்துக் கொண்டு வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஒரு பி.சி.யும் அமர்ந்து கொண்டிருந்தது. மல்லிகா உள்ளே நுழைந்தாள்.

"உட்காருங்க.. மல்லிகா!" என்று தன்னருகில் இடத்தைக் காட்டினாள் ஷைலஜா வழக்கம் போல தனது கலகலச் சிரிப்புடன்.

மல்லிகா உட்கார்ந்தாள்.

“எப்ப வந்தீங்க.. ஷைலஜா மேடம்!” என்றாள்.

“நான் பத்து மணிக்கே வந்துட்டேன். இந்தப் பிராட சரியாகவே மாட்டேங்குது.. அதான்.. மேடிகிட் சல்யூஷன் கேட்கலாம்னு.. நான் கூட நாளைக்கு வர்றே னேன். மேடிதான்.. இன்னைக்கே வான்னு சொல்லுச் என்றாள்.

மாதவன் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தா “ஹேய்! ஷைலு.. கதையை மாத்தாதே! நான் நாளை வரச் சொன்னேன்” என்று ஆரம்பிக்க மல்லிகா கல்லை போல் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னாள்.

“அதனால.. என்ன? எப்படியோ முடிக்க வேண்ட வேலை முடிச்சா.. சரி.. இல்லையா?” என்றாள்.

“சரி.. நான் வேண்ணா.. உங்களுக்குக் கா போடட்டுமா?” என்று எழுந்தாள். மாதவன் எழுந்து அவ பின்னோடு போனான்.

“மல்லி.. அவ வேணுன்னே சொல்றா..?” என்றா கெஞ்சுதல் போல.

மல்லிகா அவனைப் பார்த்து அழகாகப் புன்னகை தாள். “அதனால என்னங்க” என்றாள்.

“அப்புறம்.. மல்லி நீ இப்ப எதுவும் சமைக்க வேண டாம்.. ஷைலுவே.. சாப்பிடறதுக்குக் கொண்டு வ துட்டா..”

“ஓ! அப்ப.. நான் சாயங்காலம்தான் வருவேன்னு நினைச்சுட்டிருக்கீங்க..!” என்றாள்.



அது கேள்வி வாக்கியமா, செய்தி வாக்கியமா என்பது மாதவனுக்குப் புரியாதது மட்டுமல்ல. தான் எதற்காக அவளிடம் இவ்வளவு விளக்கம் சொல்கிறோம் என்ற எண்ணம் தோன்றவும் முகபாவம் மாறியது.

“ஆமா!” என்றவன் மீண்டும் முகத்தை இறுக்கமாக்கிக் கொண்டு சமையலறையை விட்டு வெளியே வந்தான்.

வெளியே வரும்போது தன் மீதே அவனுக்குக் கோபம் வந்தது. நேற்றே மல்லிகாவிடம் பேசும்போது சொல்லி யிருக்கலாம்.

“‘மல்லி! ஷைலஜா வொர்க் பண்ண வர்றேன்னு.. சொல்லியிருக்காப்ல..’ என்று சொல்லியிருந்தால் இப் போது போல் ஏதோ குற்றவாளியைப் போல பதில் சொல்லியிருக்க வேண்டியதில்லை. எரியற தீயில எண்ணெயை விடற மாதிரி ஷைலஜா வேற விளை யாட்டுக் காட்டறா..” என்று எண்ணிக் கொண்டான்.

மல்லிகா காபி போட்டுக் கொண்டு வந்து கொடுத் தாள்.

“நான் என்ன ஹெல்ப் பண்ண?” என்று அவள் ஆச் சரியமாகக் கேட்க.

“பிரிண்ட் அவுட் எடுக்க வேண்டியிருக்கு.. சின்ன சின்ன ஹெல்ப் தேவையிருக்கு” என்றான். மல்லிகாவும் உட்கார்ந்தாள்.

ஷைலஜா மல்லிகா உடன் அமர்ந்திருந்த போதும்கூட இயல்பாகவே இருந்தாள்.

மாதவனைத் தொட்டுப் பேசினாள். அவன் நினைக்கிற மாதிரி விடை கிடைத்தால்,

"மேடி! இட் வொர்க்ஸ் அவுட்... ஹைய்யோ!" என சந்தோஷமாக அவன் தோளைப் பிடித்துக் குலுக்கின

அப்போதுதான் மாதவனின் இன்னொரு ப புரிந்தது மல்லிகாவுக்கு.

இயற்கையான நகைச்சுவை உணர்வு அவனிட இருந்தது.

''ஹாஹ்ஹா'' வென்று குரலெடுத்துச் சிரித்தா ஆனால், வேலையில் ஆழ்ந்தால் சுற்றுப்புறம் ம மூழ்கிப் போனான்.

அந்த சமயங்களில் ஷைலஜா கூட ''உஷ்'' எ மல்லிகாவை நோக்கி சைகை காட்டிவிட்டு அமைதி அமர்ந்து கொண்டாள்.

பிற்பகல் இரண்டு மணி வரையிலும் கூட எழுந்த காமல் வேலை செய்தான். பிறகு உற்சாகமாக நிமி பார்த்தான்.

"ஷைலு! பிராப்ளம் சால்வ்ட் இதுதானே.. நீ எதிர்பார் ரிசல்ட்!" என்றான். மாதவன் எழுந்து கொள்ள ஷைல லேப்டாப்பின் முன் அமர்ந்து வேலை செய்தாள். பார்த்தாள் போலும்.

ஓரிரு நிமிடங்களில் முகம் மலர நிமிர்ந்தாள். "இ வொர்க்.. மேடி! இப்பதான் புரியுது.. ஏன்.. உன்னை பி.எல். எப்பவும் புகழ்றாருன்னு.." என்றாள்.

ஷைலஜா சரி பார்த்துக் கொண்டிருக்கும்போ மல்லிகா ஜாடையாகத் தன் கணவன் முகத்தைக் கவனி தாள்.

ஆழ்ந்த கவனத்துடன் அவன் லேப்டாப்பைபே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.



அந்தக் கணத்தில்..!

உள்ளே பதுக்கி வைத்திருந்த காதல் கொண்டு வெடித்துக் கொண்டு வெளிப்படுவது போல் தோன்றியது.

லேசாக நடுங்கிப் போனாள்!

அதே சமயம்!

இறுக்கமான ஒரு முக பாவத்துடன் தங்கள் தனிமை யின் போது அவன் வார்த்தைகளை வீசும்போது ஏற்படு கிற அவமான உணர்வும் உள்ளே தோன்றியது.

ஏதோ நாய்க்கு வீசுகிற எலும்புத் துண்டைப் போல் வாழ்க்கையை தனக்கு வீசுகிற பாவனையில் நிற்பது அவள் உள்ளத்தில் தோன்றியது.

"கூடாது! கூடவே கூடாது! தனது சுய கௌரவத்தை எக்காரணம் கொண்டும் இழந்து விடக் கூடாது'' என்று மீண்டும் உறுதிப் படுத்திக் கொண்டாள்.

ஷைலஜா எழுந்திருப்பது கண்டு மீண்டும் நிலவுல திற்கு வந்தான்.

''அப்பாடா! என்று மகிழ்ச்சிப் பெருமூச்சு விட்டான். திரும்பி மல்லிகாவைப் பார்த்தான். மலர்ச்சியாகச் சிரித்தான்.

''மல்லி! என்னடா.. இந்தம்மா.. புருஷன்கிட்ட வேலை மட்டும் வாங்கிட்டுப் பேர் தட்டிட்டுப் போயிருமோன்னு நினைக்காதீங்க.. நான் இன்னைக்கே போய் எங்க ஹையர் ஆபீசர்கிட்டே சொல்லிடுவேன்.. சார்.. பிராப்ளம் சால்வ் பண்ணிக் குடுத்தது மேடிதான்.. அப்படீன்னு..'' என்றாள்.

மல்லிகா மையமாகப் புன்னகைத்து வைத்தாள்.

"இப்போதுதான் மாதவனுக்குப் பசி உணர்வே எழுந்தது போலும்.

''அப்ப.. சரி..! சாப்பிடலாமா'' என்று எழுந்தா ஷைலஜாவிடம் திரும்பி,

''என்ன ஐட்டம்.. கொண்டு வந்திருக்கே ஷைலு என்று கேட்டான்.

''பிஸிபேளாபாத்'' என்றாள் ஷைலு.

மல்லிகாவும் எழுந்தாள். ''சரி.. நான் சூடா அப்பள போட்டுக் கொண்டு வர்றேன்'' என்று கொண்டு வந்தா

சாப்பிடும் போது ஷைலஜா சொன்னாள். ''மல்லி மேடி.. வேலை செய்யும்போது.. எடுத்துகிட்ட வேலை ஒரு ஸ்டேஜாவது முடிச்சுட்டுத்தான் எழுந்திருக்கு ஃபுட் இஸ் நாட் அட் ஆல் இம்ப்பார்ட்டண்ட் ஃபார் ஹி ஆனா கல்யாணம் ஆனதுக்கப்புறம் கரெக்டா.. ஒ மணிக்குக் கிளம்பிடும். கேட்டா சும்மாயிரு. ஷைலு மல்லி சமையல் சூடா சாப்பிட்டா.. நல்லாயிருக்கு அதுவும் இல்லாம.. எனக்காகக் காத்துக்கிட்டிருப்பான் சொல்லும்'' என்றாள்.

மல்லிகா கணவன் முகத்தைப் பார்த்தாள். முதன் முதலா அவன் அன்பாகப் புன்னகைக்கவும் பார்த்து சற்றே திகைத்து விட்டாள்.

''மல்லி! ஷைலு.. ஷைலு எப்பவுமே கொஞ்சம் கூ சேர்த்து சொல்லுவா..!'' என்றான். பேச்சை மாற்றி விட்டான்

* * *

''நான் இன்னைக்கு வர்றதுக்குக் கொஞ்சம் லேட்டாகு தாள் போட்டுக்கோ.. சேஃபா இரு'' என்றான் மாதவன்.

மல்லிகா கதவுத் தாழ்ப்பாளைப் போட்டு விட்டு பொழுது போகவில்லையே என்பதற்காக டி.வி.யை



போட்டுக் கொண்டு அமர்ந்தாள். எப்போதும் டி.வி. பார்க்கும்போது ஏதாவது வேலை வைத்துக் கொள்வாள் மல்லிகா.

சமையலறை டப்பாக்களைத் துடைப்பது, புத்தகங் களைத் துடைப்பது என்று ஏதோ ஒன்று நடக்கும்.

சில வேளைகளில் பூ கட்டவும் செய்வாள்.

சீரியல்கள் பார்ப்பதில்லை என்று ஒரு விரதம் வைத்துக் கொண்டிருந்தாள். அடுத்த நாள் அந்த நேரத்துக்கு ஏற்படுகிற பரபரப்பும் டென்ஷனும் எதுக்கு? என்பாள்.

ஏதோ ஒரு சினிமாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள் டெலிபோன் மணி ஒலித்தது. ஷைலஜா!

''ஹலோ! மல்லி! எப்படியிருக்கீங்க?'' என்றாள்.

''ஏன் அப்படிக் கேக்கறீங்க'' நல்லாத்தானே இருக்கேன்...'' என்றாள் மல்லிகா.

''இல்லையே! மூட் அவுட் மாதிரித் தெரியுது...'' என்றாள்.

''அப்படியெல்லாம்.. இல்லையே!''

''மல்லி! நான் ஒரு ஃபிரண்டாத்தான் உங்ககிட்டே பேசறேன். மேடி எல்லாத்தையும் என்கிட்டே சொல்லுச்சு'' என்றாள்.

மல்லிகா துணுக்குற்றாள்.

''எல்லாத்தையும்னா..!''

''எ..ல்..லா..த்..தையும்தான்'' உங்களுக்கும் மேடிக்கும் இப்ப ரிலேஷன்ஷிப் எப்படியிருக்குங்கற வரைக்கும்.''

''ஓ!..''

''மல்லி! மாதவன் ரொம்ப நல்ல கேரக்டர் உள்ள மேரேஜ்க்கு முன்னாடி வரைக்கும்.. பெண்கள்கிட்ட ரொம்ப டீசன்டாத்தான் பழகும்.. ஆனா.. அது கேரக் சரியில்லேன்னு.. யாரோ உங்ககிட்டே சொல்லிட்டி களாம். அதனாலதான் கல்யாணம் இடையில நின் அப்புறம். நடந்துச்சாம்.. ஆனா.. இப்பவும் ரிலேஷன் சரியில்லேன்னு சொல்லுது..'' என்று நிறுத்தினாள்.

மல்லிகா நெஞ்சு ''திக் திக்'' என்று அடித்துக் கொள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஷைலஜாவே தொடர்ந்தாள்.

''மல்லி! இப்ப என்ன சொல்லுது தெரியுமா? மல் காவே என்ன பத்தி அப்படி நினைச்சதுக்கப்புறம்.. நா ஏன் என் இஷ்டப்படி இருக்கக் கூடாது.. அப்படீன்னு

..............!

''மல்லி! ஆபீஸ்ல என்னைப் பத்திக் கேட்டுப்பா நான் ரொம்ப சுதந்திரமான ஆளு.. ஆனா.. மேடி.. ஜா மாடையாக., என்னை அப்ரோச் பண்ணுது பி.கேர்ஃபு மல்லி! கை நழுவ விட்டுடாதே!'' என்றாள்.

மல்லிகா தன்னையும் மீறி விசும்ப ஆரம்பித்தாள்.

''என்ன.. பிராப்ளம்.. மல்லி?'' என்றாள்.

மல்லிகா ஒரு கணம் யோசித்தாள். 'அவரே தங்கள் அ தரங்கம் பற்றி இவ்வளவு தூரம் சொல்லியிருக்கையி எனக்கென்ன கௌரவம் இருக்கறது' என்று சொல்லி கொண்டவள் வாய் விட்டு ஷைலஜாவிடம் சொன்னா

''ஷைலஜா! நீங்களும் ஒரு பொண்ணுதானே! உற அன்பு இதெல்லாம்.. மென்மையாக கையாளப்



வண்டிய விஷயங்கள் இதோ.. தட்டில இருக்கு.. வண்ணா எடுத்துக்க..'' என்று வீசி எறிஞ்சா..'' என்றாள்.

கேவிக் கேவி அழுதாள்.

அந்தப் பக்கம்.. ஷைலஜாவின் குரல் மென்மையாக றியது.

''ஓ..கே! ஓ.கே! ஏதாவது செஞ்சுக்கோ.. அப்புறம்.. என்னைக் குறை சொல்லாதே.. ஏன்னா.. எனக்கும் மடியை ரொம்பப் பிடிக்கும்.. புரியுதா.. நான் சொல்றது'' ன்றாள் ஷைலஜா.

மல்லிகா ''டொக்''கென்று போனை வைத்தாள்.

முகம் இருண்டு போய் தனிமையும் அச்சமும் சூழ மர்ந்து கொண்டிருந்தாள்.



## 15

களைத்துப் போன முகத்துடன் உள்ளே நுழைந்தான் னோகரன்.

தனது ப்ஃரீப் கேஸைக் கொண்டு உள்ளே வைக்கலாம் ன்று திரும்புகையில் சுபத்ரா உள்ளே புகுந்து வந்தவள் ந்த சூட்கேஸை வாங்கிக் கொண்டாள்.

''என்னங்க.. ஒரு மாதிரியாய் இருக்கீங்க?'' என்றாள்.

''மனசு சரியில்லை!'' என்றான்.

சுபத்ரா மேற்கொண்டு ஒன்றும் பேசாமல் உ
வந்தாள்.

''சூடா.. நல்ல ஒரு காபி போட்டுட்டு.. வா..'' என்றா

போட்டுக் கொண்டு வருகையில் கட்டிலில் அம
படி முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டு மே
ஓடுகிற மின் விசிறியை வெறித்துப் பார்த்துக் கொ
அமர்ந்திருந்தான்.

''என்னங்க!'' என்றாள் சுபத்ரா கவலையுடன். அ
வேதனையுடன் அவளைப் பார்த்தான்.

''சுபத்ரா.. தெரிஞ்சோ.. தெரியாமலோ.. நீ வைச
இப்ப வீட்டுக்குள்ளேயே புகுந்துகிச்சு தெரியும
என்றான்.

சுபத்ராவின் முகத்திலும் வேதனை படர்ந்தது. அ
நாள்!

தன் நாக்கில் சனி புகுந்து கொண்ட நாள் அவளு
நினைவுக்கு வந்தது.

அவளது கல்லூரித் தோழி.. கல்யாணி அந்தத்
மணத்துக்கு வந்திருந்தாள். மிகவும் கெட்டிக்காரி.

கல்லூரியில் படிக்கும்போதே ஒருவரைப் ப
மற்றவரிடம் விமர்சனம் செய்து கொண்டே இருப்ப
ஆனால், எல்லாரிடத்திலும் ''நான் சொன்னே
சொல்லி, அவகிட்டே கேட்டறாதடி.. அப்புறம் என்கி
எதுவுமே சொல்ல மாட்டா.. அப்புறம் அவ எ
பேசறான்னு நமக்குத் தெரியாமப் போயிடும்'' எ
சொல்லி விடுவாள்.



எல்லாரைப் பற்றி எல்லாரிடமும் பேசுவாள். ஆனால்,
ருமே.. அவளைத் தவிர்த்து விட முடியாதபடி நடந்து
ள்வாள்.

பொதுவாக மனிதர்களுக்கே இருக்கும் குறுகுறுப்பு..
ரைப் பற்றி அறிந்து கொண்டு கொள்ள வேண்டும்
ற அந்த விதமான அரிப்பை அவள் பயன்படுத்திக்
ள்வாள். இதில் விசித்திரம் என்னவென்றால்,

''ஐயோ! அவகிட்டே சிரிச்சுப் பேசிக்கலாம்டி.. எதுக்கு
ம்பு'' என்று எல்லாரையுமே நினைக்க வைத்து
டுவாள்.

இன்னொரு விசித்திரம் என்னவென்றால், சின்னச்
ன உதவிகளைச் செய்வாள்.

''சரிடி.. நாலு பேர் நாலு விதமாத்தான் இருப்பாங்க..
ளும் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்..'' என்று
லாருமே அவளைப் பொறுத்துக் கொள்வார்கள். சில
ங்களில் சொல்கிற விஷயங்கள் உண்மையாகி
டவும் கூடும் என்பதால்,

''அவளைக் கேட்டால் தெரியும்டி'' என்று யாரும்
ளிடம் விஷயங்கள் கேட்டுத் தெரிந்து கொள்வதால்
ஜ.பி. மாதிரி நடமாடுவாள்.

ல நாட்களுக்குப் பிறகு தேவியின் திருமணத்தில்
யாணியைப் பார்த்தவுடன் சுபத்ரா உற்சாகமாகிப்
னாள்.

கல்யாணியை நடுத்தரக் குடும்பத்தில் கொடுத்திருந்
கள். கல்யாணி நல்ல அழகு. அவளோடு ஒப்பிட்டுப்
க்கும்போது சுபத்ரா சற்று மட்டுதான். கல்யாணி
டில் சிக்கனமாக இருப்பார்கள். அதில் நகை, காரில்

போய் வருவது இதையெல்லாம் பெரிதாக ஆத மாட்டார்கள். அதனால் கல்யாணிக்கு உள்ளூரக் க

விமல்ராஜின் திருமணத்திலேயே சுபத்ரா அ வந்திருந்த நகைகளைப் பார்த்து அவளுக்கு உ பொறாமை. அதனாலேயே என்னவோ அந்தத் மணத்தில் சுபத்ராவைப் பார்த்துப் பேசவும் இல் பார்த்த மாதிரியே காட்டிக் கொள்ளாமல் கிளம்பிப் விட்டாள்.

வீட்டிற்குப் போனதற்குப் பிறகும் சுபத்ரா நேர கொரு பட்டுப் புடவை கட்டிக் கொண்டு காசுமாலை அட்டிகை என்று அணிந்து கொண்டு நட கொண்டிருந்த காட்சியே அவள் கண்ணுக்குள்ளே கொண்டிருந்தது.

பெண்களுக்கேயுரிய அந்த பாமரத்தனமான பொற அவளுள்ளும் குடி கொண்டது.

எவ்வளவு அதிகமாகப் படித்த பெண்ணாக இ தாலும் சரி.. தன்னைக் காட்டிலும் இன்னொரு உயர்வு என்பதை ஏற்றுக் கொள்ள அவ்வளவு சீக் விரும்புவதில்லை யல்லவா? அதே போல இப் அவள் மனமும் சண்டித்தனம் செய்தது.

என்னதான் நெருக்கமான ஃபேமிலியென்ற கொழுந்தன் அண்ணிக்குப் போய் இவ்வளவு நகை பட்டுப் புடவை என்று வாங்கித் தருவானா? இருக்க வேண்டும் என்று தப்புக் கணக்குப் போட்

தேவியின் திருமணத்தின் போதும் கவனித் அப்போது மல்லிகாவுக்கும், மாதவனுக்கும் திரு ஏற்பாடு நடக்கக் கூடும் என செய்தியைத் தேவி இருந்து கறந்து கொண்டாள்.



மெதுவாக சுபத்ராவின் மனதில் விஷம் கக்கினாள். இது பார்றி! உன் கொழுந்தனுக்குக் கல்யாணமாகிட்டா.. ந்த வசதியெல்லாம் கிடைக்குமா? இன்னும் ஒரு ண்டு மூணு வருஷம் தள்ளிப் போடற மாதிரிப் பார்த் க்க. அதுக்குள்ள உன் பொண்ணுக்கும் கல்யாணம் ண்ற வரைக்கும் வாங்கிச் சேத்துக்கோ..'' என்று வப்பிலை அடித்தாள்.

முதலில் அவள் பேச்சைக் கேட்டுத் திகைத்துப் பானாள் சுபத்ரா.

''ஏன்! அப்படியெல்லாம் அபத்தமாப் பேசறே? என் காழுந்தனை பத்துப் பதினைந்து வயசுல இருந்து னக்குத் தெரியும் நல்லவர்டி'' என்றாள்.

''போடி.. பைத்தியம்! ஆண் பிள்ளைங்க மட்டும் ாரணமில்லாம செலவு செய்ய மாட்டாங்கடி. காசு லையும், கல் அட்டிகையும் கை நிறைய வளையலும் துக்கு வாங்கி வாங்கிக் குடுக்கணும். கண்டிப்பா.. உன் மல இன்ட்ரஸ்ட் இருக்கணும்..''

''ஐயோ..!''

''சும்மா.. ஐயோ.. போடாதடி!''

''ஏன்! என்ன நீ ரெண்டு விதமாகவும் பேசறே. காழுந்தனுக்கு ரெண்டு மூணு வருஷத்துக்குக் கல் ணம் ஆகாத மாதிரியும் பாத்துக்கச் சொல்லற! ப்படியும் சொல்றே!''

''அதாண்டி பாயிண்டே! அவரைப் புரிஞ்சுக்காத ாதிரியே நடிச்சுகிட்டு.. ரெண்டு மூணு வருஷம் கடத் டு. அப்புறம் கல்யாணம் பண்ணிக்கட்டும். அந்த மல்லி வைப் பாரு! அங்க ஒண்ணும் வசதியைக் காணோம்.

அவ உள்ளே வந்தா முதல்ல தனக்குப் பாதுகா
பண்ணிக்கறதைப் பாத்துக்குவாளா. இல்லே.. உ
வாங்கிக் குடுக்க விடுவாளா.. பாத்து நடந்து
பொண்ணே!'' என்றாள்.

சுபத்ராவின் மனம் சுத்தமாகக் குழம்பிப் போனது

''அப்ப.. என்னடி செய்யறது?'' என்றாள்.

''கல்யாணத்தை நிறுத்துடி. அந்தப் பொ
கிட்டயே பேசாதே. அந்தப் பொண்ணோட அம்மாகி
போய் அழு. நான் சொல்லிக் குடுக்கறது மாதிரி சொ
கடைசியில என்னைக் காட்டிக் குடுத்துராதீங்க... அப்
நான் சாகத்தான் வேணும்னு சொல்லிப் பயமுறுத்
வந்துடு. விஷயம் வெளியே வராது...'' என்றாள்.

சுபத்ரா படித்த பாடத்தை வரிக்கு வரி ஒப்பி
குழந்தையைப் போல் அப்படியே நடந்தாள். ஆ
விஷயம் வேறு விதமாகத் திரும்பவும் சற்று ப
போனாள். கொழுந்தனும், மாமியாரும் தனிக் குடித்
போவார்கள் என்பது அவள் சற்றும் எதிர்பாராதது. அ
காட்டிலும் அதிர்ச்சி மனோகரன் நடத்திய நா
கல்யாணி கூறியதை அவள் சொன்னபோது,

''சுபத்ரா! உன்னை நீயே எவ்வளவு கேவலப்படுத்
கிட்டிருக்கிறே தெரியுமா? உன்னைத் தாயா.. நினை
என் தம்பி.. அவனைப் போய்.. அவனைப் போய்..'' எ
வேதனையுடன் மேலே பேசாமல் அவன் பட்ட வரு
அவளை ஊசிகளாய்க் குத்தியது.

தனது செயலின் விபரீதமும் அதன் அசிங்க
கணவன் தன்னை டெஸ்ட் செய்த இரவில் புரிந்த
கூனிக் குறுகிப் போனாள்.

''அதுக்கு.. அதுக்கு.. இப்படியா.. வந்து நடிச்சு. என்
பயமுறுத்தறது?'' என்று குமுறினாள்.



''வேற என்ன செய்றது! என் தம்பி எனக்குத் தெரிந்த
ரை நல்லவன்தான். நீயும் புடவை, நகைன்னு ஆசைப்
டுவியே.. தவிர.. மத்தபடி நல்லவள்தான். எப்படி
நேரடியாக் கேட்க முடியும்? இப்ப என்னை மாதவன்னு
னைச்சுகிட்டு கதறினியே! அப்பத் தெரிஞ்சுருக்குமே..
செய்தது எவ்வளவு மோசமான காரியம்னு..'' என்றான்.

சுபத்ரா தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருந்தாள்.

உடம்பெல்லாம் கூசுகிறாற்போல் உணர்ந்தாள். தன்
தே ஆத்திரம் வந்தது.

இத்தனை நாள் பழகிய குடும்பத்தைப் புரிந்து கொள்
மல் அந்தக் கல்யாணி பழிகாரி, போட்டுக் கொடுத்
தை நம்பினோமே என்ற ஆத்திரம் அவளுக்கு அடக்
வே இல்லை.

சுய பச்சாதாபம்தான் அந்த தற்கொலை முடிவில்
காண்டு போய் விட்டது.

தவறோ.. சரியோ.. அவள் செய்த காரியத்தால் குடும்
த்தில் எல்லோரையும்,

''சரி.. போ! அவதான் உணர்ந்துட்டாளே'' என்று எண்ண
ச் செய்தது. அதற்குப் பிறகு வாழ்க்கை இலகுவாகப்
ாய் விடும் என்று எண்ணிக் கொண்டாள். ஆனால்,
றைக்கென்ன கணவன் மீண்டும் இப்படிப் பேசுகிறார்
று கவலையானாள்.

''என்னங்க.. சொல்றீங்க!'' என்றாள்.

''என்னத்தை சொல்லச் சொல்றே! ரெண்டாம் தடவை
யாணப் பேச்சுப் பேசினப்ப.. மாதவன் பட்டும் படா
லே இருந்தான். ஞாபகம்.. இருக்கா..''

''ஆமா..!''

"பாத்தா.. பொண்ணு மல்லிகா மேல உள்ளு கோபமா இருக்கானோ.. என்ன எழவோ.. தெரிய ஆனா, அவர்களுக்குள்ளே எதுவும் சரியில்லை."

"எப்படித் தெரியும்!"

"அம்மா.. சொன்னாங்க..! லேடி டாக்டர் ஏதோ சந்தே கிளப்பி.. அதுல அப்செட்டாகித்தான் அம்மா.. டூர் கிளம் டாங்க.. இது எங்கே போய் முடியும்னு தெரியலே!" ராவின் முகத்தில் வேதனை மண்டியது. கண்கள் கலங்கி

"ஏங்க.. நான் அந்தக் கல்யாணியைப் பாத்திருக்க வேண்டாம்.. இல்லே! எடுப்பார் கைப்பிள்ள மாதிரி விஷம்னு புரிஞ்சுக்காம அவ சொன்னதை அப்படி சொல்லி... அதோட அர்த்தம் புரிஞ்சுக்காம.. சே!" என் நொறுங்கி அழுதாள்.

மனோகரனும் வேதனையோடு அமர்ந்து கொ மீண்டும் சுபத்ரா தொடர்ந்தாள்.

"பரவாயில்லே! மல்லிகாவுக்கும், மாதவனுக் கல்யாணம் ஆயிடுச்சேன்னு.. சந்தோஷமா.. இருந்தே இப்ப இப்படி வந்து தலையில கல்லைப் போடறீங்களே என்று புலம்பினாள்.

மனோகரன் சற்றே சலித்துப் போன குரலில் "நடந் நடந்து போச்சு ரொம்ப டெலிகேட்டான விஷயம். இன போய் எப்படி.. மாதவன்கிட்ட பேசறது" என்று வ தப்பட்டான்.

வேறொரு யோசனை சொன்னாள் சுபத்ரா "ம வால்லை.. இந்த ஐடியா.. கொஞ்சம்.. தேவலை" என முணுமுணுத்துக் கொண்டான் மனோகரன்.

* * *



அந்தக் காட்சியே திரும்பத் திரும்ப ஓடியது மல்லி காவின் மனத்துக்குள்.

கதவு தாழ்ப்பாள் போடப் பட்டிருக்கவில்லையென் றாலும் உள்ளே என்னென்ன நடந்ததோ, மாதவன் சொந்த வீட்டில் வைத்து அத்து மீறக் கூடியவன் இல்லைதான். ஆனால் அந்த ஷைலஜா தலையைக் கலைத்து விளை யாடிய விதத்திலே ஒரு உரிமை தெரிந்ததே.

ஷைலஜாவின் துணை இருக்கிற தைரியத்தில்தான் இரண்டாம் முறை திருமணப் பேச்சு நடந்து கொண் டிருந்தபோது மிதப்பாக இருந்தாரோ? ஒருவேளை சுத்ராக்கா தற்கொலை முயற்சி வரைக்கும் போனதனால் வேறு வழியின்றி திருமணத்துக்கு ஒத்துக் கொண்டாரோ?

இருக்கும். அப்படித்தான் இருக்கும்.

இப்போது நினைக்கையில் அம்மாவின் மேல் கோபம் வந்தது. அம்மாதான் பேசிப் பேசி அவளைக் கரைத்தது.

"சொன்னாக் கேளுடி.. மல்லி! ஆம்பளைங்கன்னா.. முன்ன பின்ன இருப்பாங்க.. நீ போய் நடக்கற விதத்துல அவரை மாத்திடலாம்டி.. இனிமே கல்யாணமே வேண்டாங் கறாராம். நீயும் அதேதான சொல்லறே. பிடிக்குதோ.. பிடிக் கலையோ இந்த வாழ்க்கையை ஏத்துக்கிட்டேன்னா.. சுத்தி யிருக்கிறவங்க மனசாவது அமைதியாகும்டி" என்று கெஞ்சி னார் சுலோச்சனா. மல்லிகா கோபமாக உறுத்துப் பார்த்தாள்.

"மல்லி! கோபப் பட்டுப் பிரயோஜனம் இல்லைடி. ஏன்.. கல்யாணம் நின்னு போச்சுன்னு ஒவ்வொருத்தரும் கேட்கற கேள்விக்கு என்னால பதில் சொல்ல முடியாதுடி. தூக்குப் போட்டு செத்துப் போலாம் போல இருக்கு.." என்று புலம்பினார்.

அப்போதும் மல்லிகா உருகவில்லை.

மறுநாள்!

தேவி பெங்களூரிலிருந்து வந்தாள். வந்த சிவகுமார் சொல்லி அனுப்பிய செய்தியைச் சொன்ன

"பார்றி! மல்லி! எங்கத்தானை உங்க மாதவனை ந வருஷமாத் தெரியுமாம். ரொம்ப நல்லவராம். அ கிட்டே பெண்கள் ஃப்ரீயாத்தான் பழகுவாங்கள ஆனா.. அதுக்குக் காரணம் நீ நினைக்கிற மாதிரி இல்ல மாதவன் ரொம்ப கண்ணியமானவரு. ஓரக்கண்ண பொண்ணுங்களை ரசிக்கறது.. வக்கிரமான கமென் அடிக்கறது இதெல்லாம் அவருக்குத் தெரியாது. எவ்வ தூரம் வேண்ணாலும் எந்த நேரத்துல வேண்ணாலு எங்க வேண்ணாலும் அவரோட போகலாம் அப்ப பாங்களாம். ரொம்ப வேதனையில இருக்காராம். ஒத்த கடி.. மல்லி! எல்லாருக்கும் சங்கடம் தீரும்" என்று வற்பு தினாள்.

அதற்குப் பிறகு மல்லிகாவின் மனம் தெளிந்த "பாவம்! சுபத்ராக்கா.. நகைக்கும், பணத்துக்கும் ஆன பட்டுத் தன்னைத் தானே கேவலப்படுத்தற மாதி பேசிட்டாங்க.." என்று பெருந்தன்மையாக யோசி ஆரம்பித்தாள்.

உற்சாகமாகத்தான் சம்மதம் சொன்னாள். மாதவன் மனதுக்குள்ளே கனன்று கொண்டிருந்த கோபத்தை அவ உணரவேயில்லை. ஏனென்றால் அவன் அதைக் காட் கொள்ளவில்லை. திருமணம் நிச்சயதார்த்தம் நட நாட்களில் நண்பர்களிடம் கலகலப்பாகத்தான் இருந்த கிண்டல், கேலி எல்லாவற்றையும் ரசித்துக் கொண்டிரு தான். தானும் பங்கெடுத்துக் கொண்டான். ஆனா தங்கள் தனிமையின் போதுதான் முகத்தை இறுக்கமா



வைத்துக் கொள்கிறான். கோபம், வருத்தம், எரிச்சல், என்று ஏதாவது ஒரு உணர்வைக் காட்டினால்கூட எதிர்வழக்காடலாம். ஆனால், இரும்புக் குரலில் உணர்ச்சி யற்ற விதமாக அவர் பேசும்போது.. அவள் முதுகுத் தண்டு சில்லிட்டாற் போல் ஆகிவிடுகிறது.

இப்போது.. என்ன?

புது மிரட்டலா? நீ இல்லா விட்டாலும் எனக்குத் தோழிகள் இருக்கிறார்கள் என்று செய்தி விடுக்கிறாரா.. செய்யட்டுமே!

இதுவும்தான் எத்தனை தூரம் போகிறதென்று பார்க்க லாம் என்று முடிவு செய்து கொண்டாள்.

கதவு திறந்தது!

மாதவன்தான்! உள்ளே நுழைந்தான். டையைக் கழற்றி கட்டிலின் மேல் வீசினான்.

"நாளைக்கு.. மனோகர் அண்ணன் ஃபாமிலி ஃபுல்லா.. இங்க.. இருக்கப் போறாங்களாம்.." என்றான் வறண்ட குரலில்.

பாத்ரூமில் போய் முகம் கழுவிக் கொண்டு வந்தான்.

"நாளைக்கு உனக்கு வேலையிருக்கும். ரெஸ்ட் எடு. நான் அந்த ரூம்ல வொர்க் பண்றேன்." போய் விட்டான்.

எல்லாமே கட்டளைதான்! எதற்கும் அவள் ஒப்புதல் தேவையிருக்கவில்லை! மாதவன் வந்தவுடன் அந்த ஷைலஜாவைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்று நினைத்தாள். அதற்கு அவன் இடம் கொடுக்கவே யில்லை.

வேறொரு இடத்தில் விசாரித்தாள்.

கேட்கக் கேட்க அவளுக்கு அதிர்ச்சி கூடிக் கொண் போனது.



# 16

''ஹாய்! சித்தப்பா!'' என்று ஓடி வந்து கட்டி கொண்டாள் ரத்தி.

''ஹாய்! சாக்லேட்!'' என்று சுற்றிக் கொண்டா மாதவன். குழந்தையின் கன்னத்தில் அழுந்த முத்தமிட் மகிழ்ந்தான்.

''சித்தி!'' என்று ஓடி வந்து மல்லிகாவைக் கட்டி கொண்டான் ராகுல். ராகுலுக்கு ஒரு ஏழு வயது இருக்கு ரத்திக்கு ஐந்து வயதிருக்கும்.

"என்ன சித்தப்பா! நீ வீட்டுக்கு வரவே மாட்டேங்க என்று புகார் செய்தாள் ரத்தி.

"என்ன பண்றது? வேலை அதிகமா இருக்கு!"

''போ..! சித்தப்பா..! நீயில்லாம எனக்குப் பிடிக்கவே இல்லை. நாம எல்லாரும் மறுபடியும் ஒண்ணாவே இருக்கலாமா?'' என்றான் ராகுல்.

மனோகரனும், சுபத்ராவும் ஒருவரையொருவர் பார்த்து கொண்டார்கள். மாதவன் என்ன சொல்லப் போகிறானோ என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



''இருக்கலாம்பா! ஆனா, அந்த வீட்லயும் ரூம்ஸ் பத்தாது, இங்கயும் ரூம்ஸ் பத்தாது. நீ எதுக்குக் கவலைப் படறே! நீ எப்ப வேண்ணா இங்க வர்லாம். இருக்கலாம்.''

''அப்ப ரூம்?''

"பாட்டியோட ரூம் இருக்கில்ல?'' என்றான் மாதவன்.

அலட்டிக் கொள்ளாமல் குழந்தைகளின் எக்குத் தப்பான கேள்விகளுக்கெல்லாம் மாதவன் பதில் சொல்லிச் சமாளிப்பது மனோகரனுக்கு எப்போதும் ஒரு ஆச்சரியம்தான். மல்லிகா கூட அந்தக் குழந்தைகளின் இயல்பான அன்பில் கரைந்து போனாள்.

''சித்தி! இன்னைக்கெல்லாம் நாங்க இங்கதான் இருக்கப் போறோம்'' என்றார்கள்.

"தாராளமா! நீங்க இங்கயே இருந்தாலும் எங்களுக்கு சந்தோஷம்தான். பல நாட்களுக்குப் பிறகு ஒன்றாக இருப்பதாலே என்னவோ மனோகரனும், மாதவனும் பல விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். உற்சாகமான பேச்சில் நேரம் போனதே தெரியவில்லை. சுபத்ராவும், மல்லிகாவும் கூட கலகலப்பாகப் பழகினார்கள்.

என்னதான் கலகலப்பாகப் பேசிக் கொண்டாலும் மல்லிகாவுக்குள்ளே ஒரு கேள்வி ஓடிக் கொண்டேயிருந்தது. இவ்வளவு இயல்பாகவும் அழகாகவும் பழகிக் கொள்கிற குடும்பத்துக்குள்ளே யாரோ குழப்பித்தான் பிரச்சினை ஏற்பட்டிருக்க வேண்டும்.

சுபத்ராவைப் பார்த்தால் யார் என்ன சொன்னாலும் நம்பிக் கொள்கிற வெகுளியாகத் தெரிந்தது. தான் என்ன சொல்கிறோம் என்பதன் ஆழம் புரியாமலே சில விஷயங்களைப் பேசினாள்.

பிற்பகல் உணவு நேரம் கலகலப்பாகக் கழிந் குழந்தைகள் சற்று நேரம் உறங்கட்டும் என்று உற வைத்தார்கள்.

அவர்களும் சற்றே ஓய்வெடுக்கட்டும் என்று வி விட்டு தங்கள் சமையலறையில் சாமான்களை ஒழித் போட்டார்கள்.

''மல்லி! இப்ப எல்லாரும் தூங்கறாங்க.. இப்பப் போ பாத்திரத்தைக் கழுவேறேன்னு உருட்ட வேண்ட சிங்க்கில் கிடக்கட்டும். மேடையும், ஸ்டவ்வை மட்டும் துடைச்சர்லாம் சரியா?'' என்றாள் சுபத்ரா.

''சரிக்கா!'' என்றாள் மல்லிகா அப்போதுதான் அந் கேள்வியைக் கேட்டாள் அதுவும் மெல்லிய குரலில்.

''அக்கா! நான் கேட்கறேன்னு தப்பா நினைச்சுக் தீங்க.. திடீர்னு ஏன் அப்படி எங்க வீட்ல வந்து சொ னீங்க?'' என்று.

சுபத்ரா யதார்த்தமாகத் திரும்பி மல்லிகாவை பார்த்தாள்.

''அந்த வெட்கக் கேட்டை ஏன் கேக்கறே? கல்யாணின் எனக்கு காலேஜ் மேட்! அவதான் அந்த நேரத்துக் அப்படி என் மனசைக் குழப்பி விட்டுட்டா. லுக்கிங் க கலர்ட் கிளாஸ்ம்பாங்களே.. அது மாதிரி.. அவ போட் சாம்பிராணியில வேற விதமா யோசிச்சுப் பார்த்தா எல்லாமே தப்பாத் தெரிஞ்சுது. அந்த வேகத்துலயே உங் வீட்ல வந்து உளறிட்டேன்'' என்றவள் தன் கணவ தனக்கு நடத்திய பரீட்சையைப் பற்றியும் சொன்னாள்.

மல்லிகா சுபத்ராவை அதிர்ந்து போய்ப் பார்த்தா ''அக்கா! பெரியத்தான். மட்டும் அப்படி எதையாவத



ய்து கிளியர் பண்ணியிருக்கலேன்னா.. எங்க வாழ்க்கை ழானது பத்தாதுன்னு உங்க வாழ்க்கையும் இல்ல. ழாகியிருக்கும்'' என்றாள் கலவரமான குரலில்.

"நல்லவேளை! எல்லாம் சரியாச்சு!'' என்றாள் சுபத்ரா ம்மதியான குரலில்.

''அப்படியில்லக்கா! இன்னும். ஒண்ணும் சரியா டலை. நீங்க செஞ்ச வேலைக்கு இப்ப என்னோட ாழ்க்கைதான் பலியாயிருச்சு.. கேள்விக்குறியாப் போச்சு'' ன்று மல்லிகாவின் மனது ஓலமிட்டது.

அன்றைக்கெல்லாம் வெளிப்படையாக எல்லாமே லகலப்பாகப் போய்க் கொண்டிருந்தது.

மாலையில் ஃபோரம் மாலில் ஒரு சினிமாவுக்குக் டப் போய் விட்டு வந்தார்கள்.

இரவு வந்ததற்குப் பிறகு சுபத்ரா சூடாகப் பூரியைப் போட்டுக் கொடுக்கக் கொடுக்க மல்லிகா பரிமாறினாள்.

''அப்பா! இன்னைக்கு நைட்டும் இங்கயே இருக்க லாம்ப்பா..'' என்று குழந்தைகள் இருவரும் கெஞ்சவே ாதவனுக்கு வேறு வழியில்லாமல் போனது.

"ஆமண்ணா! இருங்க!'' என்றான்.

தங்களது மாஸ்டர் பெட்ரூமை அண்ணன் குடும்பத் க்குக் கொடுத்து விடுவதற்காகத் தயார் செய்து கொண் ருக்கையில் மனோகரன் சொன்னான்.

"டேய்! மாதவா! உனக்கும் மல்லிகாவுக்கும் சீக்கிரம் குழந்தை பிறக்கணும்னு நானும் சுபத்ராவும் வேண்டியிருக் கோம். அதுக்காக மீன் குளத்து பகவதியம்மன் கோவி லுக்கு மூணு வாரம் வர்றோம்னு வேண்டியிருக்கோம்.

வாரா வாரம் சனிக்கிழமை விரதம் இருக்கப் போறே என்று அறிவித்தான்.

மாதவனும் மல்லிகாவும் ஒருவரையொருவர் பார்த் கொண்டார்கள்.

''அது மட்டுமில்லடா.. மாதவா! அம்மாவுக்கு னவோ.. உங்களுக்குள்ளே ஏதோ பிரச்சினைன்னு மன படுதாம். அதனாலதான் காசி யாத்திரை போயிருக் களாம்.'' என்றான்.

மாதவனும், மல்லிகாவும் திடுக்கிட்டுப் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். மாதவ தான் முதலில் சுதாரித்துக் கொண்டான்.

''ஐயோ! அண்ணா! எதுக்கு.. இப்படி வீணாக் கற்ப யெல்லாம்.. வச்சுக்கறீங்க.. மல்லி..''

''இவங்களைப் பாரு.. எல்லாம்.. இந்த சினிமாக்க பார்த்துப் பண்ணிக்கற கற்பனை'' என்று அவள் தோ மேல் கை போட்டுக் கொண்டான்.

நெருங்கி நின்றான்.

மல்லிகாவும் அவன் முகத்தை வாஞ்சையாய்ப் பா பவள் போல் பார்த்துப் புன்னகைத்து அந்த நடிப் சேர்த்துக் கொண்டாள்.

விஷயம் அத்தோடு முடித்து விடவில்லை.

இரண்டு குழந்தைகளையும் அருகில் அமர்த் கொண்டு மல்லிகா கதைகள் சொன்னாள்.

குழந்தைப் பாடல்கள் சொன்னாள்.

குழந்தைகள் மனதைக் கொள்ளையிட்டு விட்டா மாதக் கணக்கில் இறுகிக் கிடந்த மனத்துக்கு அந்



ழந்தைகளின் கலகலச் சிரிப்பும். வியப்பும், கோபமும் காலாய் அமைந்தது. அதனாலோ என்னவோ ழந்தைகள் அன்றிரவு அங்கேயே தங்கலாம் என்று ம் பிடித்தார்கள்.

மாதவனுக்கும் ஒத்துக் கொள்வதைத் தவிர வேறு ழியிருக்கவில்லை.

தங்களது பெரிய இரட்டைக் கட்டிலை அவர்கள் ல்வருக்குமாகக் கொடுத்து விட்டு அம்மாவின் றையைத் தாங்கள் உபயோகித்துக் கொள்ளலாம் என்று டிவெடுத்தார்கள்.

* * *

இரவு நேரம் அதிகமாக ஆக மல்லிகாவுக்கு ஒரு ப்பம் மேலிட்டது.

வழக்கம் இல்லாத வழக்கமாக இன்றைக்கு மாதவன் ாட்டு தொட்டு வேறு பேசியிருக்கிறார். இப்போது ழைந்து கொண்டுதான் இருந்தான்.

இதுவரையிலும் கூட அவர்கள் தனியறையில்தான் ங்கினார்கள் என்றாலும் அவள் அவன் வருவதற்குள் ாகக் கட்டில்ின் இந்தக் கோடியில் உடலைக் குறுக்கிக் காண்டு படுத்துக் கொண்டு உறங்கி விடுவாள்.

சுபத்ராவும், மனோகரனும் வேறு குழந்தை குழந்தை ன்று அதையே பேசிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளுக் ள்ளே பயம் ஏற்பட்டது.

பயந்தாற் போலவேதான் ஆயிற்று!

உறவுக்காரப் பெண் ஒருத்தி அடிக்கடி சொல்லி ருத்தப்படுவது நினைவுக்கு வந்தது.

''இந்த ஆம்பளைங்க... நம்மை ஒரு மனுஷிய நினைக்கறது இல்லை. அதிலயும் படிச்சு வேலை போகாத பெண்கள்ன்னா ரொம்ப இளப்பம். உங்களுக்கு.... என்ன தெரியும். சோறாக்கத்தான் தெ என்று கெத்தான பேச்சு வேறு'' என்று புலம்புவாள்.

அப்போதெல்லாம் மல்லிகா அதை முக்கியத் கொடுத்து மனதில் வைத்துக் கொள்ள மாட்டாள்.

''ஆமா! நாமளும் நாலு விஷயம் தெரிஞ்சுக்க இல்லே. நாம இதெல்லாம் தெரிஞ்சு என்ன பண் போறோம்னு இருக்கக் கூடாதில்லே? நீ தினம் பே படிப்பியா சொல்லு'' என்று கேட்பாள்.

''ஆமா! நான் நியூஸ் பேப்பர் படிக்கலேன்னா... வே விக்க மாட்டேங்குதாக்கும்.. போடி... போக்கத்தவ என்பாள்.

''அதான்.. அதான்... நாமளும் நம்மளோட அறி வளர்த்துக்கணும். அப்பதான் ஜென்ட்ஸ் நம்ம மதிப்பாங்க...'' என்பாள் மல்லிகா.

அப்போது உறவுக்காரப் பெண் ''களுக்'' கெ சிரித்தாள்.

''பார்க்கலாம்! பார்க்கலாம்...! நீ உன்னோட புருஷ உன்னை மதிப்பா நடந்துக்கற மாதிரி இருக்கப் போ யான்னு பார்த்துக்கலாம்.'' என்றாள்.

இப்போது என்ன நடக்கிறது?

''ஏன்.. மல்லி! நீ அப்படி முடிவெடுத்தே?'' என கணவன் தன்னிடம் சண்டை போட்டிருந்தால் கூட தேவலாம். ஆனால், முகத்தை இறுக்கமாக வைத்து கொண்டு பொருள் வாங்குகிற வியாபாரியைப் போல



னிடம் அணுகுவதைத்தான் அவளால் ஜீரணிக்கவே டியவில்லை.

யோசித்தபடியே அறைக்குள் நுழைந்தால் அவன் ழித்துக் கொண்டு பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

"ராகுலும், ரத்தியும் தூங்கிட்டாங்களா?'' என்றான்.

"ம்..." என்றாள்.

எந்த வித விளக்கமும் இல்லாமல் அவர்கள் அந்த ற்றைக் கட்டிலைப் பகிர்ந்து கொள்ள வேண்டி வந்தது.

முதலில் கொஞ்சம் அச்சத்தில் இருந்த மல்லிகா ணவன் சீராக மூச்சு விட்டபடி உறங்குவதைப் பார்த்து ிம்மதியாக உறங்கினாள். ஆனால், இரவு முடிவதற்குள் ரகவே எப்போது என்று புரிந்து கொள்ள முடியாத லையில், உறக்கக் கலக்கத்திலேயே அவன் கைகளுக் குள் தான் சிக்கிக் கொண்டது அதிகாலையில் அவள் ழிக்கும்போது கனவு போல் இருந்தது.

அடித்துப் பிடித்துக் கொண்டு அவள் விழித்த போது பொழுது விடிந்தும், விடியாததுமாக இருந்தது.

அருகில் படுக்கையில் காணவில்லை.

இழக்கவொண்ணாத ஒன்றை இழந்தாற்போல் அழுகை அவளுக்குள் பொங்கியது.

ஓசை வராமல் அழுது தீர்த்தாள்.

***

**எ**ன்ன நினைப்போடு நடமாடிக் கொண்டிருந்தாள் என்றே அவளுக்குப் புரியவில்லை. எல்லாம் சரியாக நடந்து கொண்டிருந்தது.

கேள்விகளுக்கு சரியாக பதில் சொன்னாள். வே... களை இயல்பாக செய்தாள். சிரித்தாள். ஆனா... உள்ளுக்குள்ளே மனது ஓலமிட்டுக் கொண்டே இருந்...

இரவு நெருங்க... இன்னும் பயம் ஏற்பட்டது. புரிந்... புரியாமலும் ஒரு விதமான கனமான அமைதி... நடமாடிக் கொண்டிருந்தாள். ஆனால் குழந்தைகளே... கலகலப்பாகச் சிரித்துக் கொண்டிருக்கும் போது உல... மறந்தாள். அண்ணன் வீட்டில் எல்லாரும் புறப்பட்டு விட்டார்கள்.

பால்கனியில் நின்றபடி எல்லாருக்கும் விடை கொடுத்து விட்டுத் திரும்பினாள்.

வீடு வெறுமையாக இருந்தது.

மாதவன் இன்றைக்கு வேலைக்குப் போய்விட்டா... மனோகரன் எப்போதும் ஆறு மணிக்குள்ளாக வந்து விடுவான்.

நேராகத் தம்பியின் வீட்டுக்கே வந்து விட்டா... கிட்டத்தட்ட ஒன்பது மணிவரை இருந்து விட்டு அவர்... கிளம்பும்போதுதான் அவள் வழியனுப்பி விட்டு உள்ளே வந்தது.

இனி பூரணமான தனிமை!

கணவனுக்கும், அவளுக்கும் இடையில் நிலவும் எ... எப்படி வெடிக்குமோ என்ற கலக்கம் எழுந்தது. லேசாக தலை வலிக்கிறாற் போல் உணர்ந்தாள்.

இரண்டு நாட்களுக்கு தொடர்ந்த வேலையும், ஓயா... உழைப்பும் ஆக இருந்ததோடு நேற்றைய அனுபவமு... ஆக எல்லாமும் இந்தத் தனிமையின் போதுதா... அவளை நன்றாகத் தாக்கியது.



சக்தியெல்லாம் இழந்தாற் போல் உணர்ந்தாள்.

சோர்வாகப் படுத்துக் கொண்டாள்.

உறக்கமா, விழிப்பா காலையா, பகலா என்றே தெரியாத ஒரு நிலையில் படுத்திருந்தாள்.

மாதவன் உள்ளே நுழைந்து, நடமாடுவது எங்கோ ஒரு இடத்தில் நடக்கிறாற் போல் இருந்தது. உடம்பெல்லாம் அடித்துப் போட்டாற் போல் இருந்தது.

"மல்லி! என்ன இப்படித் தூங்கறே!" என்று மாதவன் வந்து உலுக்கவும்தான் எழுந்தாள். பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு அமர்ந்தாள்.

"மல்லி! சாப்பிட்டியா?" என்றான்.

அவள் மறுபடியும் மழுங்க மழுங்க விழித்தாள். "இட்லி! இட்லி!" என்று முனங்கினாள்.

"ம்... பாத்தேன்! ஹாட் பாக்கில இருந்தது. நீ சாப்பிட்டியா?" எனவும் மல்லிகா எழுந்தாள். அமைதியாக அவன் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தவளாக அமைதியாக உண்டு முடித்தாள்.

அவன் அதை வெட்கம் என்று எடுத்துக் கொண்டானோ, அல்லது வேறென்ன நினைத்துக் கொண்டானோ தெரியவில்லை. புரிந்து கொண்டாற் போல் அளவாகவே பேசினான்.

மல்லிகா சற்றே சமாளித்துக் கொண்டு அடுக்களையில் ஓரளவுக்கு ஒதுங்க வைத்து விட்டு ஹாலின் வலப்புறம் இருந்த படுக்கையறைக்குள் நுழைந்தாள்.

படுக்கையின் மேல் சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

கண்கள் சிவந்து எரிச்சலாக இருந்தது.

''ஏன்.. மல்லி! ராகுலும், ரத்தியும் இருந்தது... கலகலன்னு இருந்தது இல்லே!'' என்று சொல்... கொண்டே உள்ளே நுழைந்த மாதவன் இயல்... அவளுக்கு எதிரே வந்து நின்றான்.

''அதுவும் அண்ணனும், அண்ணியும் குழந்... குழந்தைன்னே பேசிகிட்டிருந்தாங்க இல்லே!'' என்... முன்னோக்கி ஒரு அடி எடுத்து வைக்கவும் மல்லி... சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தாள்.

இரண்டு உள்ளங்கைகளையும் பின்னால் ஊன்றி... கொண்டு குத்துக் காலிட்டு அமர்ந்து பின்பக்கம்... நகர்ந்தாள்.

''வேண்டாம்! பக்கத்துல வராதீங்க...! நான் மலடின்... பேரெடுத்தாலும் பரவாயில்லை. கிட்டக்க வராதீங்க...'' என்று குழறினாள்.

இரண்டு கண்களிலும் கண்ணீர் வழிந்தோடிய... ''மல்லி!'' என்று திடுக்கிட்டுப் போன மாதவன் ஒ... நிமிடம் கூர்ந்து பார்த்தான். அவள் நெற்றியைத் தொட்டு... பார்ப்பதற்காகக் கையை நீட்டினான். மல்லிகா அவ... கையைத் தட்டி விட முயன்றாள்.

''ஏய்! சும்மாயிரு...!'' என்று உறுமினான். நெற்றியில்... கை வைத்துப் பார்த்தான்.

நெற்றி அனலாய்க் கொதித்தது.



# 17

''ஹல்லோ! சொல்லுங்க...'' என்றார் முத்துராமன்.

''ஹலோ! சார்... உங்க வீட்டுக்காரம்மா கல்யாணி தினம் ...ரண்டு மணி நேரம் எங்க போயிட்டு வர்றாங்கன்னு ...தரியுமா?'' என்று குரல்.

''நீங்க யார் மேடம்... பேசறது.''

''நாங்க யாரா இருந்தா என்ன? கேக்கறதுக்குப் பதில் ...சால்லுங்க.''

''மேடம் யாரோ அனாமத்தான ஆளுங்க எல்லாம் போன் ...ண்ணிக் கேள்வி கேட்டா... பதில் சொல்றதுக்கு.. நாங்க ...ன்ன டெலிபோன் எக்சேஞ்ஜா நடத்தறோம்.''

''சரி... விடுங்க! ஏதோ உங்க நல்லதுக்கு போன் ...ண்ணி விஷயம் சொன்னா வேண்டாம்னா விட்டு ...ங்க... அப்புறம்... ஒரு மாசம் கழிச்சு... ஐயோ... சொத்து ...றிபோயிருச்சேன்னு.. நீங்க அலறக் கூடாதில்லே!''

''வாட் டு யூ மீன்?''

''ஐ மீன் வாட் ஐ சே!''

''இங்க பாருங்க.. மேடம்! அவ கொஞ்சம் வம்பு ...பசுவா... அதோட... சரி! அதுக்காக அவ மேல ஏதாவது ...பாண்டமாப் பழி போடறதெல்லாம் வேண்டாம்.''

''ரொம்ப... சரி! நீ பூட்ட கேஸ்யா.. நீ தேற மாட்டே. நான் ...சொல்றதைச் சொல்ல விடாமயே வாசக் கதவை இழுத்து ...மூடிட்டா நான் என்ன பண்ண முடியும்? மேற்கொண்டு

எதுனாத் தெரியணும்னா.. இதே நம்பருக்கு கூட்... அப்புறம் இன்னொண்ணு சொன்னயே அது... வைஃப் கொஞ்ச நஞ்சம் வம்பு பேசுவான்னு... அ... கரெக்ஷன் பண்ணிக்கோ... கொஞ்ச நஞ்சம் ... இல்லய்யா... ஊர்ப்பட்ட வம்பு... அடுத்தவங்க வா... கையையே புரட்டிப்... போடற வம்பு.. அடுத்து வ... பாரு... வெடிகுண்டு... அது..." என்று ஆஃப் செய்தா...

முத்துராமன் குழம்பிப் போனான்.

"ஊர் வம்பு பேசாதன்னு எத்தனையோ மு... கல்யாணியைத் திட்டிப் பார்த்தாயிற்று. அவள் புரி... கொள்ளவில்லை.

முத்துராமனும் அதைப் பெரிதாக எடுத்துக் கொ... வில்லை. ஏதோ நாலு பெண்கள் சேர்ந்தால் ஊர் வ... பேசுவது இயற்கைதான். கொஞ்சம் காது, மூக்கு, ச... ஒட்ட வைத்துப் பேசுவார்கள் இருக்கிறதுதான் என்... விட்டு விட்டான்.

முத்துராமனின் அம்மா அடிக்கடி சொல்வதுண்டு.

"டேய்! உன் பொண்டாட்டி ஈரைப் பேனாக்கி பேனை... பெருமாளாக்கறாடா! இது எங்கயாவது வம்புல ... முடியும்... பாரு" என்று.

வழக்கமான "மாமியார் விமர்சனம்" என்று அவ... அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதது போல் நடிப்பா... ஆனால், தனியாக மனைவியைக் கண்டிப்பான்.

"ஆமா! என்னத்தைப் பேசிட்டேன்... கொஞ்ச... சுவாரசியமாக் கதை அடிப்போம்... பின்னே, எனக்கு வே... என்ன சந்தோஷம் இருக்கு? இந்த மாசம் இந்தப் பட்டு... புடவை வாங்கினேன். போன மாசம் அந்த ந...



...வாங்கினேன்னு பீத்திக்கவா முடியும்?" என்று அவள் திருப்பித் தாக்குதல் தொடுப்பாள்.

"அதுக்கு நீ டாட்டா, பிர்லா வீட்டு மாப்பிள்ளையாப் ...ரத்திருக்கணும்" என்று அவனும் பதில் தாக்குதல் தொடுத்தால் கொஞ்சம் அடங்கி விடுவாள். அல்லது "என் கண்ணில்ல... பொன்னில்ல..." என்று கொஞ்சிக் கெஞ்சி சமாளிப்பான் முத்துராமன்.

ஆனால், இன்றைக்கு அந்த போன் அவனை இயல்பாக இருக்க விடாமல் செய்தது.

'ஏதோ பிரச்சனை' என்று மனக்குறளி சொன்னது. கொஞ்சம் கலக்கத்தோடுதான் வீடு வந்தான். அம்மா விடம் மனைவி அறியாத வண்ணம் கேட்டான்.

"ஏம்மா! கல்யாணி மணிக்கணக்கில் எங்கயாவது வெளிய போயிட்டு வர்றாளா?"

"கல்யாணமான இந்த அஞ்சாவது வருஷத்துல வாய் விட்டு இப்பத்தான் இதையெல்லாம் கேக்கணும்னு தோணிச்சா? எப்ப உன் மக ஸ்கூலுக்குப் போக ஆரம்பிச் சாளோ அப்ப இருந்தே உன்னோட பட்டத்தரசிக்கு ஊர் சுத்தற வேலைதான். எப்பவாவது வீட்ல இருப்பாளான்னு வேண்ணா... கேளு" என்று பொரிந்தார்.

முத்துராமனுக்கு இதை மேற்கொண்டு கிளறினால் தனது மனநிம்மதி போய்விடும் என்று தோன்றியது. அது மட்டுமல்லாமல் அது ஆழ்மனதில் மனைவியின் மேல் ஆழ்ந்த நம்பிக்கையும் இருந்தது.

"என்னமோ... லொட லொடன்னு.. பேசுவா... ஆனா... ...ப்பு வழிக்கெல்லாம் போக மாட்டா. வம்பு பேசறது கூட ஒருவிதமான தாழ்வு மனப்பான்மையாலதான்" என்று

தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டா எல்லாமும், அடுத்த போன் கால் வரும்வரைதான்.

இந்த முறை ஆண்குரல்!

"ய்யோவ்! நீயெல்லாம் எதுக்குய்யா மீசை வச்சி கிறே? வைஃப் எங்க சுத்தினா எனக்கு என்ன நினைக்கறே?"

"மிஸ்டர் என் வைஃப் பத்தி எனக்குத் தெரியும்."

"இப்படித்தான்யா நாட்டுல பாதிப் பேரு நம்பிக்கி உட்கார்ந்துக்கறாங்க. உன் தலையெழுத்து... அதுன் விட்டா... போகும். பொறு... அடுத்தடுத்து உனக் செய்தி வருது... பாரு... அதுக்கு மேல நீ என்ன செய்வியோ அது உன் பாடு" என்றது குரல்.

இந்த முறை முத்துராமன் சற்றே குழம்பிப் போனா அடுத்த முறை அவர்கள் அழைப்பதற்காகக் காத்திரு தான்.

அழைத்தார்கள்!

***

"ப்ளீஸ்! என்னைத் தொடாதீங்க!" என்று புரண்டு புரண்டு படுத்துக் கொள்கிற மல்லியை உதட்டை கடித்துக் கொண்டு ஒரு விதமான அவமான உணர்வுடன் நின்று பார்த்து கொண்டிருந்தான் மாதவன்.

தேவியை உதவிக்கு அழைக்கலாமா என்று நினை தான். ஆனால், உடனே இப்படி உளறுகிற மனைவியின் நிலையில் அவள் வந்தால் குடைந்து குடைந்து கேள்வி கள் கேட்பாள் என்பதோடு அது மேலும் பிரச்சினை களுக்கு வழி வகுக்கும் என்பதால் லேடி டாக்டருக்கு மட்டும் போன் செய்தான்.



அவரும் இரவு நேரம் என்று கூடப் பார்க்காமல் அந்தப் திணோரு மணிக்கு வந்தார். அவள் உளறுவதைப் பார்த்து விட்டு அவனைக் கேள்விக் குறியாகப் பார்த்தார்.

"மேடம்! சம் மிஸ் அன்டர்ஸ்டான்டிங்... எதையோ தப்பா நினைச்சுகிட்டு ரொம்பக் கோபம் காட்டறா..."

"மாதவன்! மனசு விட்டுப் பேசுங்க... புரிய வைங்க... மனசுக்குள்ளேயே அழுந்திக் கிடக்கிற எண்ணங்கள்தான் நோயாவும், டிப்ரஷனாவும் மாறுது" என்றவர் மேலும் சற்று நேரம் பேசினார். மாதவன் பொறுமையாகக் கேட்டுக் கொண்டான் இன்ஜக்ஷன் போட்டார்.

"காய்ச்சல் ரெண்டு மூணு நாளைக்கு விட்டு விட்டு வரும். லிக்விடா ஹார்லிக்ஸ் மாதிரிக் குடுங்க... நாளைக்கு வேண்ணா இட்லி குடுக்கலாம். கொஞ்சம் ஆழ்ந்து தூங்கினா இந்த உளறல் சரியாகிவிடும்" என்று சொல்லி விட்டுப் போனார்.

மாதவன் மல்லிகாவைக் கட்டிலின் மேல் படுக்க வைத்து விட்டுத் தான் அந்த சோபாவை விரித்துப் போட்டுக் கொண்டு படுத்தான்.

ஷைலஜா சொன்னது நினைவிற்கு வந்தது. "மாதவன்! ரொம்ப அன்பிருக்கறவங்களுக்கு இடையிலதான் கோபதாபமும் அதிகமா இருக்கும். உங்க ரெண்டு பேருக்கும் பிரச்சினையே ஈகோ. இவளுக்கு நான் எதுக்கு விளக்கம் சொல்லணும்னு நினைக்கறே. அப்படி விளக்கம் சொல்லாதவருக்கு எதுக்கு வளைஞ்சு குடுக்கணும்னு அது நினைக்குது. தட்ஸ் தி பிராப்ளம்" என்றாள்.

ஷைலஜா வந்து விட்டுப் போன சமயம் அது நிகழ்ந்தது. அநேகமாக அதற்கு அடுத்த நாளாக இருக்கும்.

எதேச்சையாக மாதவனின் கை தட்டி மல்லிகா... டைரி கீழே விழுந்தது. அதில் ஷைலஜாவைப் பற்றி... லிகா எழுதி வைத்திருந்ததுதான் அவரை ஆச்சரியப்ப... தியது.

''ஷைலஜா என்னதான் மாடர்ன் பெண்ணா... தன்னைக் காட்டிக் கொண்டாலும் அவள் கண்களி... நேர்மை இருக்கிறது. தினேஷ் அண்ணாவோ மற்ற... களோ நினைப்பது போல் ஷைலஜா கண்டிப்பாக ... வளவு மோசமானவளா இருக்க நியாயமில்லை. கொஞ்... துணிவாக நடமாடுகிற பெண்கள் என்றால் நமது ... தாயத்துக்குத் தெரிந்த ஒரே தாக்குதல் ''கேரக்... அஸாஸினேஷன்தான்'' என்று எழுதி வைத்திருந்தாள்.

உண்மையாகவே மாதவன் மலைத்துத்தான் போனா... மற்றவர்களைப் பற்றிச் சரியான கோணத்தில் புரிந்... கொண்டவள் ஏன் தன்னைப் பற்றிப் புரிந்து கொள்ள... வில்லை.

இப்போது கூடக் கோபம்தான் வருகிறது.

மல்லிகாவிடத்தில் அசைவு தெரிந்தது.

மாதவன் உடனே பரபரப்பாக எழுந்து அவளருகில் போ...

''என்னடா.. வேணும்?'' என்றான்.

''தண்ணி!''

டாக்டர் தண்ணீர் நிறையக் கொடுக்கச் சொல்லியிருந்... தாலோ என்னவோ அவனும் தண்ணீர் எடுத்துக் கொடுத்... தான்.

ஹார்லிக்ஸ் கலக்கிக் கொண்டு வந்து குடிக்கச் செய்... தான். களைப்பால் அவன் கைகளில் துவண்டு கொண்ட... வளைத் தட்டிக் கொடுத்து உறங்கச் செய்தான்.

...இரவு முழுவதும் உறக்கமும், விழிப்புமாக இருந்த... லோ என்னவோ அதிகாலை நேரத்தில் மாதவன் ...றங்கி விட்டான்.

அதிகாலை பால்காரன் சத்தம் கேட்டு விழித்த ...ல்லிகா கணவன் சோபாவில் படுத்து உறங்கிக் கொண் ...ருப்பதைக் கண்டு முதலில் புரிந்து கொள்ளாமல் ...ழித்தாள்.

பிறகுதான் ஒவ்வொன்றாக நினைவு வந்தது. அவள் ...ழுந்து போய்க் கதவு திறந்து பால் பாக்கெட்டை வாங்கி ...ருவதற்குள்ளாக அவன் விழித்துக் கொண்டான்.

''நீ போய்ப் படு... மல்லி!'' என்று அணைத்துப் ...போனான். அவள் மறுபடியும் சற்று நேரம் உறங்கு ...கையில் அவன் இட்லி வார்த்தான்.

சட்டினி வகைகள் எப்போதும் ஃப்ரிட்ஜில் இருக்கும்.

மல்லிகா மெல்ல எழுந்து இரண்டு இட்லிகளை ...சாப்பிடவும் சற்று தெம்பானாள்.

''மல்லி!'' என்றான் தயக்கத்துடன் ''நைட்டே ...தேவியை வரச் சொல்லலாமான்னு நினைச்சேன். ஆனா, ...நீ ஏதேதோ உளறிக்கிட்டு இருந்தே'' என்றான் தயங்கினான்.

அவள் தரையைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந் ...தாள்.

''ஐ... ம்.. சாரி மல்லி. உன்னை நான் இப்படி இன்சல்ட் ...பண்ணியிருக்கக் கூடாது. ஆனா, உனக்கும் பெரிய ...மறுப்பெதுவும்.. இருக்கலே. இருந்தாலும் இது ஒரு வகை ...ரக்ஸ்பிளாயிடேஷன்தான்'' என்று மெல்லிய குரலில் ...சொன்னவன் மேலும் வேதனையோடு சொன்னான்.

''இருந்தாலும் இந்தக் கல்யாணத்துக்கு என்ன தம்னே தெரியலை'' என்றான்.

மல்லிகா எதுவும் பேசவில்லை.

மாதவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். ''... விடு..!'' மல்லி இனிமேல என்னால உனக்குத் தொல்லை யிருக்காது என்றான்.

முகம் இறுகியிருந்தது.

அந்தக் கணத்தில் இருவரும் சற்றே இளகியிரு தாலோ வெளிப்படையாகப் பேசியிருந்தாலோ ... நிலைமை சரியாகியிருக்குமோ... என்னவோ.. பேசி கொள்ளவில்லை.

மாதவன் தேவியை வரவழைத்தான்.

தேவி பகல் நேரம் முழுதும் அவளுடன் இருந்தா இரவு நேரங்களில் மாதவன் அவளை நன்றாகவே கவனித்துக் கொண்டான். ஆனால் தேவையில்லாம அருகில் வருவதை தவிர்த்தான்.

''என்னடா... பையா! பேஸ்து அடிச்ச மாதிரி நடமா றேன்னு கேட்டதுக்கப்புறம்தான் சொல்றான் வைஃபுக்கு காய்ச்சல்ன்னு'' என்று ஆச்சரியமாக தினேஷ் வந்தான்.

மாற்றி மாற்றி சிவகுமார், தேவி, தினேஷ், ஷைலஜா என்று வந்து அவளை நன்றாக கவனித்துக் கொண் டார்கள்.

தனிமையின் போது ஷைலஜா கேட்டாள் ''மல்லி என்ன ஆச்சு? இரண்டு மூணு நாளா மாதவன் ரொம்ப வேதனையில இருக்கற மாதிரித் தெரியுது. முன்ன மாதிரி எதுவும் சொல்ல மாட்டேங்கறாரு'' என்றாள்.

''தெரியலே!'' என்றாள் மல்லிகா வேறு பக்கம் பார்த்துக் கொண்டு.



''மல்லி! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே! மனுஷங்க கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் நினைச்சுகிட்டே நிகழ்கால சந்தோஷங்களை இழந்தர்றாங்களோன்னு எனக்குத் தோணுது. கேவலம், உங்க வாழ்க்கைக்கு சம்பந்தமே இல்லாத ஒரு லேடி சுபத்ராக்காவைக் குழப்பி விட்டுட்டா. ஆனா நீ யோசிச்சிருக்க வேண்டாமா?'' என்றாள் காட்டமாக.

மல்லிகா பொலபொலவென்று கண்ணீர் விட்டாள்.

''ஷைலு! நமக்கே நமக்குன்னு நம்பிகிட்டிருக்கிற ஒரு சொத்து.. நாம உயிரையே வச்சுகிட்டிருக்கற ஒருத்தர் நம்பிக்கை துரோகம் செய்றாருன்னு கேள்விப்பட்டா... எப்படி இருக்கும்? அந்த நேரத்தில அறிவு வேலை செய்யலை... உணர்ச்சிதான் வேலை செஞ்சது. ஆனா, அறிவு வேலை செய்ய ஆரம்பிச்சதுக்கபுறம்தான் மறுபடியும் கல்யாணத்துக்கு ஒத்துகிட்டேனே. இப்ப.. அவருதானே.. அவருதான்...!'' என்று நிறுத்தினாள்.

''போச்சுரா!'' என்று பெருமூச்சு விட்டாள் ஷைலஜா. ''மாதவனும் இதையேதான் வேற மாதிரி சொல்றாப்ல... எனக்கும்... எல்லாம்.. புரியுது. அவ மனசு வேதனையும் தெரியுது. ஆனா பக்கத்திலே நெருங்கும் போதெல்லாம்.. வேற யார் வேண்ணா என்னை சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனா.. என் மல்லிகா எப்படி என்னை சந்தேகப் படலாம்கற கோபம்தான் வருது... அப்படீங்கறாரு..'' என்றாள்.

மல்லிகா கட்டிலைப் பார்த்துக் கொண்டு அமர்ந்து கொண்டிருந்தாள்.

''அப்புறம்.. இதுக்கு... என்னதான் விடிவு?'' என்றாள் ஷைலஜா மறுபடியும்.

''தெரியலே!'' என்று உதட்டைப் பிதுக்கி மல்லிகா. நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

''ஆனது ஆகட்டும்... ஆனா, இனி செத்தாலு பொழச்சாலும்.. என் வாழ்க்கை இங்கேதான்'' என்றா

''ஆமா! ஆ... ஊன்னா இதையொண்ணு சொல் வீங்க... நீங்களே வாழ்க்கையை சிக்கலாக்கிக்குவீ அப்புறம்.. முழிச்சிகிட்டிருப்பீங்க...'' என்றாள் ஷைல

''சரி.. இரு...!'' உனக்கு நான் ஹார்லிக்ஸ் கொ வரேன்'' என்று எழுந்து போனாள்.

மல்லிகாவுக்கு ஷைலஜாவின் வாதத்தில் இருக் நியாயம் புரிந்தது.

சம்பந்தமில்லாத மூன்றாவது ஒருத்தர் சொ கருத்துக்காக தங்களுடைய வாழ்க்கையை ஏன் சிக்க கிக் கொள்ள வேண்டும். அதுசரி! தான்தான் இற வந்து... மறுபடியும் திருமணத்துக்கு சம்மதம் சொ கல்யாணமும் செய்து கொண்டு வந்தாச்சே! யார் என சொன்னாலும் சரி. அப்படி இறுக்கமான முகத்தை வைத் கொண்டு அவன் அணுகுவதை மட்டும் அவள் அனுமதிக்கவே முடியாது. ஜீரணிக்கவும் முடியாது.

ஷைலஜா அந்தக் கல்யாணியின் மேல் கடும் கோ தில் இருந்தாள். இந்த மாதிரி வம்பு பேசுகிற பெண் எத்தனை பேருடைய வாழ்க்கையை கெடுத்து வி கிறார்கள். அவள் மட்டும் கையில் கிடைத்தால்... உ இல்லை என்று பண்ணி விடுவேன் என்று எண்ணி கொண்டாள்.

தினேஷிடமும் பகிர்ந்து கொண்டாள். தினே யோசனையில் ஆழ்ந்தான்.



''பாரு.. ஷைலு! என்ன இருந்தாலும் இது அவங்க ந்தரங்கம்.. அதுல ஓரளவுக்குத்தான் தலையிட முடியும். ச்சினை என்னன்னா நாம யார் மேல ரொம்ப அன்பு வக்கிறோமோ அவங்ககிட்டே நாம ரொம்ப எதிர்பார்க் றோம். அதுல ஏமாற்றம் வரும்போதுதான் இந்த மாதிரி கல்களே உண்டாகுது. எதிர்பார்ப்புகள் வச்சுக்காத ரதான் நீடிக்கும்'' என்றான்.

ஷைலஜா ''எனக்கென்னமோ.. எதிர்பார்ப்பு இது வேற திரி இருக்கும்னு தோணுது. இரண்டு பேருக்குமே ணம்காசு எதிர்பார்ப்பு இல்லே. தூய்மையான அன்பைத் ன் சந்தேகமில்லாத அன்பைத்தான் எதிர்பார்க்கிறாங்க... னா, மனுஷங்களைக் குற்றம் குறைகளோட ஏத்து ட்டாத்தான் நிம்மதி கிடைக்கும்கறது புரியலே'' ன்றாள்.

''இப்ப ரெண்டு பேருமே உணர்ச்சி வசப்பட்டிருக்காங்க... ரியும்... கொஞ்சம் கழிச்சாவது... புரியும்...'' என்றான்.

''ஷைலஜாவும் சரி, தினேஷும் சரி அடுத்து வந்த இரண்டு மூன்று நாட்களுக்கு இதே சிந்தனையிலேயே இருந்தார்கள்.



## 18

''ஹல்லோ! இப்ப இந்த நேரத்துக்கு உன் வைஃப் ங்க இருக்கான்னு தெரியுமாங்க? இதெல்லாம் தெரிஞ் க்காம ஒரு பொழப்பு...'' என்றது குரல்.

முத்துராமனின் முகம் இறுகியது.

"அதான்... போன் பண்ணித் திட்டறீங்களே! நீ சொல்லிற வேண்டியதுதானே?''

''வேண்டாம்! அவ்வளவு சீக்கிரம் சொல்லி சுவாரசியம் இருக்காது. தினம் ரெண்டு மணி வெளிய போயிர்றாப்ல... அதுலயும் ஒரே நேரத்து போனா வீட்டில தெரிஞ்சுடும்னு.. ஒரு நாள் காலையில பத்து மணிக்கே போவாப்ல. இன்னொ நாளைக்கு பிற்பகலில் போவார்கள். நீயே கண்டு பார்க்கலாம்'' என்றார்கள். வைத்து விட்டார்கள்.

முத்துராமன் அன்றைக்கு வீட்டிற்கு திடீரென சாப்பாட்டுக்கு வந்தான். பெரும்பாலும் வருவதில் போக வர பத்து கிலோ மீட்டருக்கு மேல் ஆகிறது. எ சாப்பாடு எடுத்துக் கொண்டு போய் விடுவான். இன்றை அந்த போன் வந்ததில் இருந்து மனதில் கலக்கம் விட்டது. யாரோ தன் மனைவியின் நடவடிக்கைக கண்காணிக்கிறார்கள். அதனால் அவளுக்கு ஏதும் ஆபத் வந்து விடக் கூடாதே என்று கவலையும் ஏற்பட்டது.

"என்னது? இன்னைக்கு சாப்பாட்டுக்கு வந்துட்டீங் ஒரு போன் பண்ணியிருந்தா... சூடா ஏதாவது சமை சிருப்பேனே?'' என்றாள்.

மளமளவென்று அப்பளம் பொரித்து கொடுத்தாள் முகத்தில் எந்த விதமான கல்மிஷமும் இருக்கவில்லை.

"ஏண்டி! அப்பவே போன் அடிச்சேன் எங்க போயிருந்தே?" என்று அசுவாரசியமாகக் கேட்டது போல் கேட்டான்.

''கறிகா வாங்கப் போனேன்'' என்றாள் அலட்டிக் கொள்ளாமல்.



முத்துராமன் மேற்கொண்டு பேச்சை வளர்க்காமல் ருமபி விட்டான்.

தன் மனைவி பல காரியங்களை அதன் விபரீதம் ரியாமல் செய்கிறாளோ என்று தோன்றியது. விளை ட்டுப் போல் பேசித் திரி பற்ற வைத்து விடுவாள். றகு கேட்டால்,

"ஐயோ! நான் அப்படியெல்லாம் சொல்லவே ல்லையே?'' என்பாள்.

பெரும்பாலான வயதான பெண்மணிகளுக்கு அவள் சுவதில் முழு உண்மை இருப்பதில்லை என தெரியும். றவுக்காரர்கள் அவளுக்கு வைத்திருந்த பெயரே ''நியூஸ் ப்பர்'' என்பதுதான்.

வீட்டுக்கு வீடு தேவையில்லாமல் போய் எதையாவது ஷயம் கறந்து கொண்டு வருவாள். பேசுகிற சுவாரசியத் ல் கிடைத்த விஷயத்துக்குக் கண், காது, மூக்கு, கை, ல் எல்லாம் வைத்து உருவம் தேத்தி விடுவாள்.

அடிக்கடி பார்க்கிற உறவுக்காரர்களுக்கு அவளைப் பற்றி தெரிந்திருந்தது. ஆனால் எப்போதோ பார்க்கிற னிதர்களுக்கு அவள் ரொம்ப இனிமையானவள். ஆனால் வீட்டுக் காரியங்களையெல்லாம் நன்றாகவே செய்வாள்.

மாங்கு மாங்கென்று உழைப்பாள். முத்துராமனுக்கு உள்ளூர தன் மனைவியின் சுபாவம் எங்காவது ஆபத்தில் கொண்டு போய் சேர்க்கும் என்ற பயம் இருந்து கொண்டே இருந்தது. இப்போது அப்படித்தான் ஏதோ நடக்கிறது என்று தோன்றியது. கூடவே சுவாரசியமாக வம்பு பேசுவதில் ஆரம்பித்து இப்போது வேறு விதமான தவறுகளும்

நிகழ ஆரம்பித்து விட்டனவோ? எந்த விதமான வி[illegible] தில் மாட்டிக் கொள்ளப் போகிறாளோ தெரியவில்[illegible] என்று கவலையாக இருந்தது!

அலுவலகத்தில் நுழைந்தவுடனே மானேஜர் அ[illegible] தாகச் சொன்னார்கள்.

"என்னப்பா "முத்து! எங்க போயிட்டே! முக்கிய[illegible] வேலை பெண்டிங்கா... இருக்கு பாரு" என்று [illegible] விரட்டவும் வேலையில் ஆழ்ந்தான்.

***

"அம்மா.. நல்லாயிருக்கீங்களா?" என்று ஆவ[illegible] விசாரித்தான் மாதவன் போனில்.

"நல்லாயிருக்கோம்ப்பா... அப்படியே ராமேசுவ[illegible] போயிட்டு வரலாமான்னு பார்க்கறோம்" என்றார்.

"சரிம்மா! உடம்பைப் பாத்துக்குங்க... பணத்[illegible] பற்றிக் கவலைப்படாம அங்கங்கே கார் வச்சுக்கு[illegible] என்றான்.

"சரிப்பா.. மாதவா! காசிக்குப் போனா ஏதையா[illegible] விடணும்னு சொல்லுவாங்களே! நான் பாயசம் சாப்[illegible] றதை விடறேன்னு வேண்டியிருக்கேன். அது மட்டு[illegible] லடா! என் சின்ன மகனுக்கு நிம்மதியான வாழ்க்[illegible] குடுன்னு ரொம்ப தூரம் வேண்டியிருக்கேன்."

"ஏம்மா! அப்படிச் சொல்றீங்க?" இப்ப என் நிம்மதிக்[illegible] என்ன குறைச்சல்!"

"இல்லடா! அந்த லேடி டாக்டர் சொன்னதைக் கேட்[illegible] நான் கவலையாயிட்டேன்" என்றார் தயக்கத்துடன்.

"ஓ..! அதுதான் விஷயமா? இப்ப ஊர்ல இருந்[illegible] வந்ததும் அதே லேடி டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போ[illegible] வேற மாதிரி சொல்லுவாங்க!"



[illegible]அப்படியாடா சொல்றே!" அம்மா அந்தப்புறம் [illegible]ழ்ச்சியாவது இங்கே அவன் மனக்கண்ணில் தோன் [illegible]து.

மனதுக்குள் கண்ணீர் வடித்தாலும் அம்மாவிடம் [illegible]கலப்பாகப் பேசினான். கலகலவென்று சிரித்தான் [illegible]னை வைத்து விட்டுத் திரும்பியபோது மல்லிகா [illegible]றித்துப் பார்த்தபடி நிற்பதைக் கண்டான்.

"என்னது.. லேடி டாக்டர்னு என்னமோ சொன் [illegible]ங்க?" என்றாள்.

"லேடி டாக்டர்கிட்டே... நீ என்னத்தை சொன்னே? [illegible]துதான் இங்கே பூகம்பமா வெடிச்சு. அம்மா காசிக்குப் [illegible]போறேன்னு கிளம்பிட்டாங்க."

"லேடி டாக்டர்கிட்டே நான் ஒண்ணும் சொல்லலையே! [illegible]வங்க கேட்ட கேள்விக்கு பதில் சொன்னேன்" [illegible]றவள் அவன் அருகில் நெருங்கினாள்.

அவன் சட்டைக் காலரைப் பிடித்துக் கொண்டாள்.

"அப்ப! உங்கம்மா... சுத்தியிருக்கிறவங்க... எல்லாரை [illegible]ம்.. சமாதானப்படுத்தத்தான்... என் விருப்பத்தையும்... [illegible]றி..." என்று நிறுத்தினாள்.

இப்படி ஒரு திருப்பத்தை எதிர்பாராத மாதவனுக்கு [illegible]கோபம் எழும்பியது.

"இல்லேன்னு.. சொன்னா.. நீ நம்பவா... போறே? [illegible]அப்படி என்ன மல்லி.. நான் தப்பு செஞ்சேன்? யாரோ ஒரு [illegible]தர்ட் பர்ஸன் கிளப்பி விட்ட வதந்தியை வச்சு.. நீ [illegible]ல்யாணத்தை நிறுத்தினியே அதைவிடவா... இது [illegible]ப்பு...!

''அப்ப... ஏன் மறுபடியும் கல்யாணத்துக்கு ... கிட்டீங்க?''

''ஏன்.. தெரியுமா? இந்தக் கல்யாணம் உனக்கும் ... தண்டனை. எனக்கும் ஒரு தண்டனை...''

மல்லிகா திகைத்துப் போய் நின்றாள். ''எத்தனை உறவுக்காரங்களுக்கு நடுவிலே... என்னைக் கேவல படுத்திட்டே.... அதே கல்யாணம் நடந்து ஆனா... அ கல்யாணத்துக்கு.. எந்த வித அர்த்தமும் இல்லா போறது... உனக்கு தண்டனை. உன்னை மாதிரி பொண்ணை நேசிச்சேனே... அதுக்கு.. எனக்கு த டனை!''

மல்லிகா ஒன்றும் பேசவில்லை... ரோபோட் பொம் போல் திரும்பிப் படுக்கைக்குப் போனாள்.

''நீங்க.. நினைக்கற மாதிரி இல்லே! நான் இப்ப மா டேன் என்று சொன்னால் சரியாகுமா? நிச்சயமாக இல்லை

அவன் குரல் அவளைத் தொடர்ந்து.

''நீ எங்கிட்டே பேசியிருக்கலாம். விளக்கம் கேட்டி கலாம். சண்டை போட்டிருக்கலாம்... ஆனா.. இ எதுவுமே செய்யாம... சட்டுன்னு கல்யாணத்தை நிறுத் சொல்லீட்டே.... அப்ப அதுவரைக்கும்.. என்கிட்டே சிரி சிரிப்புக்கு என்ன அர்த்தம்...! அதைக் காட்டிலும் இப காட்டற வெறுப்பே... மேலானது...'' என்றான். அ குரலில் தெரிந்த வெறுமை அவளை உலுக்கியது.

''அப்ப... இந்த வீட்ல... எனக்கு என்ன இடம்?''

''நீதான் முடிவு செய்யணும்... என்னைப் பொறு வரை வீட்ல நீ முதலாளிதான். ஆனா... என் மனை பொறுத்த வரை...''



''இடமில்லையோ?''

''இடம் இருக்கு.. ஆனா.. அது உரிமையுள்ள இடம் இல்லே.''

''இதுதான்.. முடிவா?''

''பின்னே? ஐயோ... கிட்ட வராதீங்கன்னு அலர்ற வைஃப்க்கு நான் என்ன இடம் குடுக்கறது?'' என்றான்.

வெளியே போய் விட்டான்.

மல்லிகாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ன் மட்டும் பிரிந்து மீண்டுமொரு முறை வீட்டுக்குச் என்றால் அம்மா ஏதாவது செய்து கொள்வார்.

''இருக்கட்டும்.. உறவோ.. நட்போ.. இங்கேயே இருந்துதான் சாதிக்க வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை உறுதி மொழி எடுத்துக் கொண்டாள்.

ஆழ்ந்த அமைதியுடன் அவள் அமர்ந்திருப்பதை அவன் உள்ளூர ஒரு வியப்புடன் பார்த்து விட்டு அவனும் படுக்கையில் அந்தப் புறம் படுத்துக் கொண்டான்.

* * *

''என்னப்பா... ஆச்சு.. உனக்கு? எப்பவும் கால் லேஷன்ல.. இந்த மாதிரியெல்லாம் தப்பே செய்ய மாட்டே.. ரெண்டு மூணு நாளாவே நீ சரியில்லப்பா...'' என்றார் மேனேஜர்.

முத்துராமன் பல்லைக் கடித்துக் கொண்டு நின்று கொண்டான்.

எல்லாம் இந்தக் கல்யாணியால் வந்தது. என்னவோ டக்கிறது என்ற கவலையும், என்ன நடக்கப்போகிறதோ என்ற திகிலும் சேர்ந்து அவனை குழப்பமடையச் செய்து விட்டது.

மனம் வேலையில் பதிய மறுத்தது. இப்போது அவனுக்குத் தோன்றியது.

ஒவ்வொரு வீட்டைப் பற்றியும் தன் மனைவி அவதூறுகள் எப்படி அந்தக் குடும்பத்தைப் பாதிக்கும் என்ற எண்ணம் தோன்றியது. அவன் சில களில் பெண்கள் பேசுவதைக் கவனித்திருக்கிறான்.

விளையாட்டுப் போல் ஆரம்பிப்பார்கள்.

''ஏண்டி, அந்தப் பெரிய வீட்டுக் கமலா இப்ப ஆடம்பரமா நடமாடறதைப் பாத்தியா'' என்பாள் ஒ

''அதானே! புதுப் பணக்காரி!'' என்பாள் இன்னொ

''அது சரி, திடீர்ன்னு எப்படி புதுப் பணக்காரியா

''உனக்குத் தெரியாதா? அவ வூட்டுக்காரன் ரெவன்யூ டிபார்ட்மென்ட்ல இல்ல இருக்கான்.''

''இல்லடி... அவங்க ஊர்ல நிலத்தை வித்தி காங்கடி'' என்பாள் மனசாட்சியுள்ள இன்னொருத்தி.

''ஆமா...! ஊர்ல அந்த நிலம் எவ்வளவுக்குப் ருக்கும். ஏதோ பத்தாயிரம் இருபதாயிரத்துக்குப் ருக்கும். அதுல இவ்வளவு கிடைச்சிருக்குமா என்ன! போட்டுட்டு வர்ற ஆரமே முப்பதாயிரம் நாப்பதா இருக்கும்.''

''அது மட்டுமல்லடி... வீடு வேற வாங்கி இ காங்க...''

''ஓ! அது வேற அப்படியா.''

''ஆமாடி! வீட்டு வாடகையே இருபதாயிரம் வருது

முத்துராமனுக்கு சிரிப்பாக வரும். இவர்கள் பேச பெண்ணைப் பற்றி அவனும் அறிவான். கணவனு



மனைவியும் இருபது வருடங்களுக்கு மேல் சிக்கனமாக இருந்து சொத்துக்களை சேர்த்துக் கொண்டார்கள். இப்போது நடுத்தர வயதில் அனுபவிக்கிறார்கள். ஆனால், இந்தப் பெண்களுக்கு அடுத்தவர் வளர்ச்சியைக் கண் ணாலே உள்ளே அரிப்பெடுத்துக் கொள்கிறது போலும் என்று எண்ணிக் கொள்வான்.

''ஏண்டி! இருபதாயிரம் வாடகைங்கறீங்க... இருபதாயிரம் சம்பளம்கறிங்க... அப்ப ஏன்.. நியாயமா சம்பாதிச்சதா இருக்காதா!'' என்றாள் ஒருத்தி.

அந்தக் குரலுக்குச் சொந்தக்காரிதான் இடையிடையிலே நல்லதாக ஏதாவது சொல்லிக் கொண்டிருந்தாள். கொஞ்சம் மனசாட்சி உள்ளவள் போல இருக்கிறது. உடனே அவளுக்கு ஒரு திட்டு விழுந்தது.

''அடப்போடி! இவ ஒருத்தி.. மனசாட்சி மங்காத்தா... வசதியிருந்தா... கொஞ்சம்.. கொஞ்சமாத்தானே பணம் சேரணும். இவ திடீர்ன்னு இல்லே... எல்லாத்தையும் மாட்டிட்டு வர்றா... முத்துராமனுக்கும் கூட குறுகுறுப்பு தோன்றியது. அதற்குள் இன்னொருத்தி இன்னொரு கதையை ஆரம்பித்தாள்.

''ஏய்...! இன்னொரு விஷயம்... தெரியுமா? பங்கஜா மில் ரோட்ல. கற்பகம் இல்லே... அவ பொண்ணு மாலதி இருக்காளே... அவ யாரையோ லவ் பண்றா... தெரியுமா?''

''ம்...! பையன் யாராம்?''

''பையன் நம்மாளு இல்லே! ஆனா, பார்க்கறதுக்கு சினிமாக்காரன் மாதிரி இருக்கானாம்.''

''ஆமா! இவளும்தான் சினிமாக்காரி மாதிரி இருக்கா!''

முத்துராமன் சிரித்துக் கொண்டு இடத்தை வி நகர்ந்து விட்டான்.

வீட்டில் அம்மா கொஞ்சம் கெடுபிடி. அம்மா விட்டு விட்டுத் தனியாகவும் போக முடியாது. அத தான் இப்படி வெளியே வரும்போது கல்யாணி முத்துராமன் சுதந்திரமாக விட்டு விட்டான்.

ஏதோ கதை பேசுகிறாள். பேசிக் கொண்டு சந்தோ மாக இருக்கட்டும் என்று விட்டு விடுவான். வெ வீட்டுக் கமலா இப்போதெல்லாம் விசேஷங்களி கொஞ்சம் அதிகமாகத்தான் நகைகள் போட்டுக் கொண் வருகிறாள்.

அவனுக்குள்ளும் சுவாரசியம் கிளம்பியது. விசா தான். கமலாவின் கணவன் சொன்னான் ஏதோ இன்சூரன்ஸ் பாலிசி முடிந்து ஒன்றரை லட்சம் ரூபா கிடைத்ததாம். மனைவிக்கு நகைகள் வாங்கிக் கொடு தானாம்.

அன்றிரவு!

''ஏய்! கல்யாணி அந்தக் கமலாவோட ஹஸ்பெண்டை பார்த்தேன். ஏதோ இன்சூரன்ஸ் பாலிசி முடிஞ்சு... பண வந்ததாம். அதுலதான் நகை வாங்கிக் கொடுத்திருக்கான் நீங்க பாட்டுக்கு வாய் புளிச்சுதோ... மாங்கா புளிச் தோன்னு பேசிகிட்டுத் திரியாதீங்க...'' என்றான்.

''ம்...! அவங்க எல்லாம் புதுசு புதுசா வாங்கித் தர றாங்க.. ஆனா.. இங்கே! இருக்கறதையும் பாங்க அடமானம் வச்சாச்சு!'' என்று நொடித்தாள்.

''கல்யாணி! ரெண்டு மாசத்துல நான் நகையெல்லாம் எடுத்துத் தர்றேன். ஆனா, ஒண்ணு ஞாபகம் வச்சுக்க



க்கு என்ன கிடைச்சிருக்கோ அதை வச்சுகிட்டு றைவடையணும். அடுத்தவங்களைக் கம்பேர் பண்ணி டு மனசு கஷ்டப்படக் கூடாது'' என்றான்.

''எல்லாம்... பேசறதுக்கு... நல்லா... இருக்கு.''

''அப்படியில்லடி... கமலாவும் உன்னை மாதிரித்தான் மாமியார்கிட்டே கஷ்டப்பட்டுச்சு. ஆனா, பொறுமையா இருந்துச்சு. கடைசியில மாமியார் அந்த வீட்டை அவர் ளுக்கு எழுதி வச்சாங்க... தெரியுமா!''

பேசிக் கொண்டு திரும்பிப் பார்த்தான்.

கல்யாணி உறங்கிப் போயிருந்தாள்.

முத்துராமனுக்குப் பாவமாக இருந்தது. ''நாள் முழுதும் உழைக்கிறாள். அம்மா வேறு படுத்துகிறாள்'' சிந்தனையி ஆழ்ந்தான்.

இந்த மாதிரி வம்பு பேசுகிற பெண்களுக்கு மனதில் ஏதோ குறையிருக்க வேண்டும்.

வசதியிருக்கிற பெண்கள் நடுத்தரக் குடும்பங்களின் வயிற்றை எரிப்பதற்காக விதவிதமாக உடுத்திக் கொண்டு வருகிறார்களோ!

எல்லாருக்கும் மற்றவர்களைக் காட்டிலும் தாங்கள் உசத்தி என்று சொல்லிக் கொள்வதிலே திருப்தி.

மகளையாவது நன்றாகப் படிக்க வைக்க வேண்டும். அறிவார்ந்த பெண்ணாக வளர்க்க வேண்டும். ஊர்வம்பு பொறாமை, இவைகளுக்கு அப்பாற்பட்டவளாக வளர்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

அடுத்த மாதத்திலேயே வங்கியில் அடகு வைத்திருந்த மனைவியின் நகைகளை மீட்டுக் கொண்டு வந்து

கொடுத்தான். ஆனால், அடுத்த கல்யாணத்தில் அ ளுடைய ஒப்பீடு இன்னும் பெரிய பணக்கார வீடுகளோ இருந்ததால்,

''சை! இவளைத் திருத்தவே முடியாது'' என்று விடு விட்டான்.

ஒருவேளை! தனக்கு வேண்டிய அளவு எது கிடைப்பதில்லை என்பதால் வேறுவிதமாக ஆரம்பி விட்டாளோ சேச்சே! இன்னும் நடுத்தரக் குடும்ப பெண்களுக்கெல்லாம் அந்த மாதிரித் துணிவு வருவதில்லை!

காத்திருக்கிற அடுத்த வெடிகுண்டு பற்றி அறியாம நள்ளிரவு நேரத்தில் உறங்கினான்.



## 19

சிறிய விளையாட்டு மைதானம் ஒரு பக்கம் மல செடிகள் நிறைந்த கார்டன்.

ராகுலையும் ரத்தியையும் உடனழைத்துக் கொண் மாதவனும், மல்லிகாவும் அங்கே வந்திருந்தார்கள்.

குழந்தைகள் குதூகலமாக விளையாடிக் கொண்டிரு தார்கள்.

''சித்தப்பா, சித்தி நல்லாக் கதை சொல்றாங்க'' அந் ஸ்லீப்பிங் பியூட்டி... ஸ்னோ வைட் கதையெல்லாம் ரொம்ப அழகா இருக்கு'' என்றான் ராகுல்.



''உங்க சித்தி அழகாக் கதை சொல்றாளா? ஆச்சரியமா இருக்கே! நல்லாக் கதை கேக்கத்தானே செய்வா?'' என்றான் மாதவன் நக்கலான குரலில்.

ராகுல் புரியாமல் பார்த்தான்.

''இல்லடா! யாராவது கதை பின்னறவங்க வந்து கதை சொன்னா காதைத் தீட்டிட்டுக் கேக்கத்தான் அவளுக்குத் தெரியுமே... தவிர கதை சொல்வாள்னு எனக்குத் தெரி யாதே'' என்றான் மறுபடியும்.

மல்லிகா உதட்டைக் கடித்துக் கொண்டு அமர்ந்து கொண்டாளே தவிர பதில் சொல்லவில்லை.

அழுத்தமான மாதவனின் பார்வை அவள் மேல் படிந்து நீண்ட போது மட்டும் உள்ளுக்குள்ளே ஏதோ செய்கிறாற் போல் இருந்தது.

கண்களில் கண்ணீர் முட்டியது. மாதவன் விட வில்லை. ''என்னடா... சித்திகிட்டே இருந்து பதிலை ஏணோம்'' என்று மேலும் சீண்டினான்.

மல்லிகா முறைத்தாள். பிறகு சொன்னாள்.

''இது எவ்வளவோ பரவாயில்லை. கதை கேக்கப் பிடிச்சாக் கேக்கறேன். இல்லேன்னா கதை சொல்றேன். எனக்கு எது திருப்தியோ அதைச் செய்யறேன். ஒவ் வொருத்தர் மாதிரி யார் யாரையோ திருப்திப் படுத்தறதுக் காக எதையும் செய்யறது இல்லையில்ல.''

குழந்தைகளுக்குப் புரியவில்லை. தொடர்ந்து இதைக் கேட்பதில் விருப்பமும் இல்லை.

''பாலைக் குடு சித்தி!'' என்று பிடுங்கிக் கொண் டார்கள். ஓடினார்கள்.

சிமெண்ட் பெஞ்சில் சற்று இடைவெளி விட்டு அ... கொண்டிருந்தார்கள். அவன் சிமெண்ட் பெஞ்சின் ... கோடியில் அமர்ந்து கொண்டிருந்தவன் தனது இ... கரத்தை சிமெண்டு பெஞ்சின் சாய்மானப் பலகை... மேல் விளிம்பில் வைத்துக் கொண்டிருந்தான்.

கொஞ்சம் கையை நகர்த்தினால் அவள் தோ... பிடித்து விட முடியும். பிடித்து விடுவானோ என்ற ... அவளுக்குள்ளும் இருந்தாற்போல்தான் இருந்தது.

அவள் சொன்ன பதிலை அவன் மிகவும் ரசித்த ம... இருந்தது. "அப்படிப் போடு!" என்று சிரித்தான்.

கடுமையான பதில் ஏதாவது வரும் என்று எதிர்பா... அவளுக்கு இப்படிப்பட்ட பிரதிபலிப்பு ஆச்சரியத... ஏற்படுத்தியது.

ரத்தி அதற்குள்ளாக கீழே விழப் போனாள். மல்... தன்னையும் மறந்து ஓடிப் போய்க் குழந்தை... தூக்கினாள். இருந்த போதும் காலில் சிராய்ப்புக் க... ஏற்பட்டு விட்டது.

எரிச்சல் தாங்காமல் குழந்தை அலறினாள். மல்லி... தனது கைப்பையில் இருந்து பான்ட் எயிட் ஒன்று எடு... குழந்தையின் காயத்துக்கு ஒட்டிவிட்டாள்.

மாதவன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

"தயாராத்தான் வந்திருக்கே... போலிருக்கு!" என்றா...

"ஆமா! பழக்கம்... எங்க அண்ணன் குழந்தை... வெளியே கூட்டிட்டுப் போகும்போது எல்லாம் எடு... கிட்டுப் போவேன்" என்றாள்.

குழந்தையைத் தட்டிக் கொடுத்தாள். அதற்குள் ராகு... ஓடி வந்து "அழாதடி...! தங்கம்.. இல்ல... சின்னப் பாப்...



...ல்ல.. அழாதே" என்று கட்டிப் பிடித்துக் கொள்ளவும் ...ல்லிகாவும், மாதவனும் சிரித்து விட்டார்கள்.

"சரி.. அழாதே!" என்று ரத்தியை எடுத்து மடியில் ...மர்த்திக் கொண்டான் மாதவன்.

"பால் சாப்பிடறியா?" என்று கேட்டு கூடையில் ...ருந்த ஃபிளாஸ்கில் இருந்து பாலை கப் ஒன்றில் ...ற்றிக் கொடுத்தாள்.

ரத்தியின் கவனம் மாறியது. சித்தி நீட்டிய இரண்டு ...ஸ்கட்டுகளை எடுத்து சாப்பிட்டுவிட்டு பாலைக் ...டித்தாள் ரத்தி.

மல்லிகா ராகுலுக்கும் ஒரு கப்பில் ஊற்றிக் கொடுக்க ...வனும் குடித்தான்.

இரண்டு குழந்தைகளும் மேலுதட்டிலும் கீழுதட் ...டிலும் கறை போல பால் அப்பியிருக்க சிரித்ததைப் ...ார்த்து சிரித்த வண்ணம் அவள் துவாலையில் துடைத்து ...விட்டாள்.

குழந்தைகள் விளையாட ஓடி விட்டார்கள்.

"ஏன்.. மல்லி! எனக்குக் கிடையாதா?" என்றான்.

மல்லிகா மவுனமாக அவனுக்கும் ஒரு கப்பில் ...ஊற்றிக் கொடுத்தாள்.

வாங்கிக் கொண்டான்.

"நீயும் சாப்பிடு!" என்றான்.

அவளும் தனக்கும் எடுத்துக் கொண்டாள். குடித்து முடித்தவுடன் மேலுதட்டையும், கீழுதட்டையும் தடவிக் கொண்டு சிரித்தான்.

''ஏன்.. மல்லி! எனக்கு ஹெல்ப் கிடையாதா
என்றான் கிண்டல் போல்.

மல்லிகா இறுக்கமான மௌனமே சாதித்தாள். ''கே[illegible]
றேன்... இல்ல!'' என்றான் மாதவன்.

''நீங்க என்ன குழந்தையாக்கும்...!'' என்றாள் குறுகு[illegible]
பாக. அவன் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் குழந்[illegible]
கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்க[illegible]
ராகுல் அவ்வப்போது ரத்தியைக் கவனித்துக் கொள்வதை
பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரம்தான் அது நிகழ்ந்தது!

ரத்தியை இன்னொரு பையன் கீழே தள்ளிவி[illegible]
விட்டான்.

ராகுல் கோபத்துடன் அந்தப் பையனின் சட்டை[illegible]
பிடித்துக் கொண்டு சண்டைக்குப் போய்விட்டான்.

மல்லிகாதான் போய் சமாதானப் படுத்தி வில[illegible]
விட்டு விட்டு வந்தாள்.

மாதவன் அமைதியாகப் பார்த்துக் கொண்டு அம[illegible]
திருந்தான்.

மல்லிகா திரும்பி வந்து அமர்ந்தவள் இயல்பாக
திரும்பி

''என்ன ராகுலுக்கு இப்படிக் கோபம் வருது!'' என்றாள்

''குடும்பச் சொத்து.. பரம்பரைப் பழக்கம்'' என்றான்
மாதவன்.

அவன் ஏதோ சொல்ல விழைவதை உணர்ந்தவளா[illegible]
அவன் முகத்தைப் பார்த்தாள் மல்லிகா.



''ஆமா.. மல்லி! மனோ அண்ணன் கூட இப்படித்
[illegible]ன். என்னை ரொம்ப நல்லாப் பாத்துகிட்டாங்க. பிளஸ்
[illegible]வில நல்ல மார்க் எடுத்தேன். கம்ப்யூட்டர் என்ஜீனியர்
[illegible]கணும்னு ஆசைப்பட்டேன. மெரிட்ல கோயமுத்தூர்
[illegible]லேஜ்ல சீட் கிடைச்சுது. ஃப்ரீ சீட்தான். காபிடேஷன்
[illegible]பீஸ் இல்லே! ஆனா மினிமம் செலவுக்காவது பணம்
[illegible]வணும் இல்லே... அண்ணனுக்கு அப்ப மொத்தமே
[illegible]வாயிரமோ, நாலாயிரமோதான் சம்பளம். குடும்பச்
[illegible]செலவுக்கே அது சரியாப் போயிடும்.''

சற்று நிறுத்தி விட்டு அவள் முகத்தைப் பார்த்தான்.
அவள் ஆர்வமாகக் கேட்பதைப் பார்த்து விட்டுத் தொடர்ந்
தான்.

''என்னடா தம்பி செய்யறதுன்னான்! நான் சொன்னேன்
வீட்டை வித்திடுன்னு. அதுக்கு ஒத்துக்கலே. நான்
சொன்னேன் அண்ணா கடன் பண்ணிக்க வேண்டாம்.
வித்துடு அப்புறம் வாங்கிக்கலாம்னு...''

...............!

''நெருங்கின சொந்தக்காரங்க... குழந்தையில்லாத
வங்க... அவங்ககிட்டே கண்டிஷன் போட்டு வித்தோம்.
அஞ்சாறு வருஷத்துக்குப் பிறகு எங்களுக்கே தரணும்.
அன்னைக்கு என்ன விலையோ அதைக் கொடுத்துரு
வோம்னு... அப்ப எங்க அண்ணன் ஒரு வார்த்தை
சொன்னான்.'' டேய்! மாதவா! வித்தது என் போர்ஷன்னு
வச்சுக்கோ. இப்பக் கைவசம் இருக்கறது உன் போர்ஷன்னு.''

''அதேன் அப்படி?'' என்று கேட்டேன்.

''இல்லடா... என் சொத்தை வித்து என்னைப் படிக்க
வைக்கறதென்ன பெரிய விஷயமான்னு நீ நினைக்கக்

கூடாதில்ல. என் கடமையை நான் சரியாச் ... தோம்ங்கற திருப்தி எனக்கு வேணுமில்ல அப்படீன் ...

மல்லிகாவின் முகத்தில் நெகிழ்ச்சி தெரிந்த ... பார்த்து அவன் முகமும் மலர்ந்தது.

''எனக்கு பிளேஸ்மென்ட் கிடைக்கற வரை ... அவன் கல்யாணத்துக்கு சம்மதிக்கலே. அப்புறம் ... ஒத்துகிட்டான். அண்ணி ஒரு சாதாரணக் குடும்பத்தி ... இருந்து வந்தவங்க... நல்ல வசதியான வீட்ல இருந் ... லாம் வரன் வந்தது வேண்டாம்மா! நமக்கும் ... இருந்தாத்தான் நம்மளைப் புரிஞ்சுக்குவாங்க... ... ஒரேடியா.. மறுத்துட்டாரு'' என்றவன் கசப்பாகச் சிரித்த ...

''ஆனா.. சுபத்ரா அண்ணி எங்களை எப்படி ... பிரிக்கக் கூடாதுன்னு முடிவு பண்ணிட்டாங்க போ ... என்றான். அதற்கும் மல்லிகா எதுவும் பேசவில்லை ...

''வேலைக்குப் போனதுல இருந்து இந்த ஏழெ ... வருஷத்துல எனக்கே கல்யாணமாகிட்டாலும் ... அண்ணனுக்கு வாழ்க்கைல எந்தக் கஷ்டமும் வந்து ... கூடாதுங்கற எண்ணத்துலதான் நான் இன்வெ ... செஞ்சேன். அந்த எண்ணத்துலதான் அண்ணி ... நிறைய நகை வாங்கிக் குடுத்தேன். அது மட்டுமில்ல ... ராகுலுக்கும், ரத்திக்கும் வேணுங்கற அளவுக்கு ஃபிக ... டெபாஸிட் கூட செஞ்சுட்டேன். ஆனா, அண்ணி அ ... குள்ளே...'' என்று இழுத்து நிறுத்தினான்.

''ப்ளீஸ்...! மறந்துடுங்க!'' என்றாள் மல்லிகா.

''எப்படி மறக்கறது? மனோகரனுக்காக எல்லாத்தை ... மறந்தாற் போல நடிக்க வேண்டியிருக்கு. அண்ணியோ ... பைத்தியக்காரத் தனத்தை மன்னிக்கவும் முடியல ...



... பிக்கவும் முடியல. அண்ணன் மெல்லவும் முடியாம ... ங்கவும் முடியாம தவிச்சுகிட்டிருக்கான். எல்லாருக் ... ஒரு எண்ணம், நமக்குக் குழந்தை பிறந்துருச்சுன்னா... ... ஒத்துமையாயிட்டோம்னு நம்பிக்கை வந்துருமாம். ... துக்காக.. மனசுல ஏற்பட்ட காயம்.. அது மறைந்துடுமா...?''

... மெதுவாகக் குரலில் கோபம் ஏறுவதைக் கவனித்த ... லிகா முகம் வாடினாள்.

... சிக்கலான நிலைமைக்கு அவள் என்ன விளக்கம் ... ல்ல முடியும். சுற்றிலும் இருப்பவர்களிடம் கோபத்தைக் ... ட முடியாமல்தான் தன்னிடம் காட்டுகிறானோ ... தற்காக! தான்தான் வடிகாலா? என்று எண்ணிக் ... ண்டாள்.

... சட்டென்று எழுந்தான் மாதவன்.

... குழந்தைகளோடு போய் விளையாட ஆரம்பித்தான். ... வள் அமைதியாக அமர்ந்து கொண்டு பார்க்க ஆரம்பித் ... ள்.

... இந்தப் பேச்சு தொடர்ந்து ஏதாவது சண்டை ஏற்பட் ... ந்தால் கூட நல்லது போலத் தோன்றியது.

... கலகத்தின் முடிவில் நன்மை பிறக்கும் என்பார்கள். ... னால் இங்கே நிலைமை மேலும் சிக்கலாகிக் கொண்டே ... கிறதே!

... சற்றுக் கழித்து வியர்வை பூத்த முகத்துடன் அவனும் ... ழந்தைகளும் சிரித்துக் கொண்டு வந்தார்கள்.

''டேய்! போதும்டா! கொஞ்ச நேரம் உட்காருங்க! ... வேடிக்கை பார்க்கலாம்'' என்று குழந்தைகளை அருகில் ... அமர்த்திக் கொண்டான்.

அப்போதுதான் அது நிகழ்ந்தது.

ராகுலும், ரத்தியும் தாங்கள் கொண்டு வந்த பெரிய பிளாஸ்டிக் பந்தைத் தங்கள் காலடியில் வை கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

சற்றுத் தள்ளி அதே போல இன்னொரு பந்து இரு

ஓடி வந்த ஒரு குழந்தை ராகுலின் காலருகில் இ பாலை எடுக்க முனைந்தது.

"டேய்! இது என் பந்துடா!" என்றான் ராகுல்.

"பாரு! நாங்க ஆர்ன்னு எழுதியிருக்கோம்" என்

அந்தப் பையன் அதைப் பார்த்து விட்டு சற்றுத் த கிடந்த பந்தை எடுத்துக் கொண்டு போனான்.

மல்லிகா கணவனின் முகத்தின் மேல் பார்வை படரவிட்டுக் கொண்டே அந்தக் கேள்வியைக் கேட்

"ஏன்.. ராகுல்! ரெண்டு பந்தும் ஒரே மாதிரித் இருக்கு. இந்த பந்தை எடுத்தவுடனே மட்டும் உ ஏன் கோபம் வந்துச்சு!"

"என்ன சித்தி... இப்படிக் கேக்கறே! அது யாரே பாலோ.. தெரியலை... ஆனா, இது நம்ம பந்து இல் என்றான் ஆக்ரோஷமாக.

மல்லிகா ஒரு விதமான இதழ்ச்சுழிப்புடன் சொன் "அது அப்படித்தான்! யாரோட சொத்தையோ யா எடுத்துகிட்டுப் போனா நாம கவலைப்பட மாட்டே ஆனா, நம்ம சொத்தை வேற யாரோ பயன்படுத்த கன்னா கோபம் வரத்தான் செய்யும்."

இப்போது கிண்டலாகப் பார்ப்பது அவன் முறை யிற்று.



"ம்.. அப்படியா?" என்றான் பார்வையிலேயே.

அவள் அதைச் சட்டை செய்யாதவள் போல குழந்தை ளைக் கிளப்பினாள்.

அன்றிரவு!

படுக்கையில் படுத்துக் கொண்டு புரண்டு சிரிக்கிற வனைப் பார்த்து முறைத்தாள்.

"ஆனாலும்.. நீயே உன்னை இவ்வளவு சீப்பாய் ணியிருக்க வேண்டாம். நான் உன்னை வைரக்கல் திரி மனசுல வச்சிருந்தேன். ஆனா, நீ என்னை ாஸ்டிக் பந்துக்கு சமம்னுட்டே..." என்றான்.

குலுங்கிச் சிரித்தான்.

அவள் சளைக்கவில்லை.

"தும்பை விட்டுட்டு வாலைப் பிடிக்கக் கூடாது. அது றும் உதாரணம்தான். விஷயம்தான் முக்கியம்" றாள்.

"என்னமோப்பா... அது என் சிற்றறிவுக்கு எட்ட மாட் ங்குது" என்றவன் எழுந்து அமர்ந்து ஒரு தலை ணையை தட்டி.

"இந்தா.. படு!" என்று அவள் பக்கம் நோக்கி வீசினான்.

மல்லிகா இன்றைக்கு ஏனோ கொஞ்சம் சந்தோஷமாக ார்ந்தாள்.

இரண்டு பேரும் ஏறுக்கு மாறாக சுவற்றைப் பார்த்துக் ண்டு இருப்பதைக் காட்டிலும் இப்படி சண்டை ட்டுக் கொள்வதே தேவலை போல் தோன்றியது.

அதுவும் மாறிப் போகும் என்று அப்போது அவளுக்குத் ரியவில்லை.

* * *

பத்து நாட்களாகத் தொடர்ந்த டார்ச்சரில் முத்துரா களைத்துப் போனான் என்றுதான் சொல்ல வேண்டும்

திடீர் திடீரென்று போன் வரும்.

"என்னங்க.. சார்! இன்றைக்குக் காலையில பத்த மணிக்கு வைஃப் போயாச்சு தெரியுமா?" என்று.

மற்றொரு நாள்!

"இப்ப என்ன மணி தெரியுமா? முத்து. உங்க டம்மா திருவுலா கிளம்பியாச்சு..." என்று போன் வரு

திடீர் திடீரென்று வீட்டுக்குப் போய்ப் பார்ப்பான்

மனைவி இருக்க மாட்டாள்!

ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு இடத்துக்குப் போனே என்று சொல்வாள்.

சலித்துப் போனான்!

இன்றைக்கு ஒரு முடிவு கட்டி விட வேண்டும் என முடிவில் இருந்தான்.

இன்றைக்கு முடிவாகக் கேட்டு விட வேண்டு அதற்கு முன்பாக அதே இடம்தானா இன்றைக்கும் என உறுதி செய்து கொள்ள வேண்டும்.

போனான்!

அலுவலகத்துக்கு விடுமுறை சொல்லி விட்டு போனான்.

மனைவி வெளியில் வரும்வரை பார்த்துக் கொண்டி தான்.



இடைவெளி விட்டு ஆண்களும், பெண்களும் அந்த வீட்டை விட்டு வெளியில வந்து கொண்டிருந்தார்கள். நேராக வீட்டுக்குள் போய் விசாரிக்கலாமா என்று பார்த் தான். இன்னொரு மனது சொன்னது.

'சேச்சே! என்ன இருந்தாலும் என் மனைவியைப் போய் வேவு பார்ப்பது போல் விசாரிக்கலாமா?அது நல்ல நல்ல' என்று முடிவு கட்டிக் கொண்டான்.

காத்திருந்தான்.

வந்தாள். ஆனால் அவன் ஒதுங்கிக் கொண்டான். மறைவாக நின்று கொண்டான்.

இன்றைக்கு என்ன சொல்லப் போகிறாள் என்று பார்க்கலாம் என்று கறுவிக் கொண்டே இருந்தான்.

இரவு உணவு முடிச்சவுடன் தனிமை கிடைத்தவுடன் கேட்டான்.

"இன்னைக்கு எங்க போயிட்டு வந்ததா சொல்லப் போறே?" என்றான் கடுப்பான குரலில்.

"என்ன சொல்றீங்க?"

"போதும் கல்யாணி நாடகம். தினமும் எங்கயோ போயிட்டு வர்றயே. அந்த இடத்துக்கே வந்து நானும் பத்து நாளா பாத்துகிட்டுத்தான் இருக்கேன். இப்பவாவது உண்மையைச் சொல்லு. யாரைப் பாத்துட்டு வர்றே?" என்றான்.

கல்யாணி திகைத்து போய் பார்த்தாள்.

"முழுசா விவரம் தெரியாம என்ன வேண்ணாப் பேசிடறதா?" என்று கேட்டாள்.

"இத பார்றா! யாரு எதைப் பேசறதுன்னே இல்லாம போச்சு. இத்தன நாளா இதைத்தானே நீ செஞ்... டிருந்தே!"

கல்யாணி முகம் வெளிறிப் போய் நின்றாள்.



## 20

"இத்தனை நாள் உழைச்ச எனக்குக் கிடைச்ச பட்... இதுதானா?" என்று தேம்பி அழுகிற கல்யாணியைச் ... றும் சலனமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தா... முத்துராமன்.

எத்தனை பேர் வீட்டில் இது மாதிரிக் குழப்பத்தை ஏற்படுத்தினாளோ? அதெல்லாம் இப்போது தங்க... குடும்பத்தையே தாக்குகிறதோ!"

பத்து நாட்கள்!

பத்து நாட்களாக நரக வேதனை அனுபவிக்கிறோமே இப்படி எத்தனை வீட்டில் எத்தனை பேர் தூக்கமில்லாமல் குழப்பமான இரவுகளைக் கழித்தார்களோ? கூட்டமா... உட்கார்ந்து நேரம் கிடைக்கிற போது அம்மா சொன்னது போல் ஈரைப் பேனாக்கி பேனைப் பெருமாளாக்... கிடைக்கிற சின்ன விஷயங்களை ஊதிப் பெரிதாக்கி சுக... காண்கிற இந்த மாதிரிப் பெண்களால் எத்தனை



...டுகளில் கலகம் நடக்கிறதோ? என்று எண்ணிக் கொண்...வன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

ஒரு வகையில் பார்த்தால் தானுமே இதற்குப் பொறுப்...ளி. ஏதோ சுவாரசியத்துக்காகப் பேசுகிறாள் என்று ...ண்டு கொள்ளாமல் விடப்போய்த்தானே இன்னைக்கு ...ந்த அளவுக்கு வந்து நிற்கிறது?

நாலு பேர் நம்முடைய குடும்பத்தைப் பார்த்து சிரிக்கிற ...ளவுக்கு நிலைமை ஆகாமல் இருந்தால் சரி!

மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்டு விட்டுக் கேட்டான். "பின்னே? தினமும் ஒரு பொய் சொன்னா எப்படி நம்...புது? நானும் பத்து நாளாப் பன்னிப் பன்னிக் கேட்க...றேன். நீயும் நாளைக்கொரு பொய்யாய் பின்னிப் ...பின்னித்தானே சொல்றே!"

அவள் பேந்தப் பேந்த விழித்தாள்.

"அட ஆண்டவா! நான் வேறு ஒரு காரணத்துக்காக அப்படிச் சொன்னேன்."

"அப்படி என்ன அற்புதமான காரணம். அதையும்தான் சொல்லேன் பார்ப்போம்."

"நான்.. சஸ்பென்ஸா வச்சு.. அற்புதமா.. உங்ககிட்டே சர்ப்ரைஸாச் சொல்லணும்னு நினைச்சேன்."

"என்னத்தை சஸ்பென்ஸ்? என்ன சர்ப்ரைஸ்! இப்ப...வது ஒப்பனாச் சொல்லித் தொலையேன்" என்று ...ினான் முத்துராமன்.

நடுங்கிப் போய் விட்டாள் கல்யாணி. சொன்னாள். ...வன் கேட்ட விவரங்களைச் சொன்னாள்.

* * *

''டீ... கல்யாணி வர்றா! பேச்சை மாத்துங் இல்லாட்டி காது மூக்கு கம்மல் வளையல் எல்லாம் மா பெருசா கதை பண்ணிடுவா!'' என்று அந்தப் பெ முணுமுணுத்தது கல்யாணியின் காதில் விழுந்தது.

''உனக்குத் தெரியாதா? இவளாலே வடக்குத் தெ விலே ஒரு மாமியாரும் மருமகளும் குடுமிபிடிச் சண்டை போட்டாச்சு. அப்புறம் அந்தப் பொண்ணோட வூ பெண்ட் உட்கார்ந்து பஞ்சாயத்து பண்றச்சேதான், இந் கல்யாணி ரெண்டு பக்கமும் தட்டி விட்டு நாரதர் வே செய்துருக்கான்னு தெரிஞ்சுது.''

''செய்வா. அவளுக்கு வேலையே இதுதான்'' இந் பேச்சு கல்யாணியின் காதில் விழுந்ததும் கல்யாணியி முகம் வாடிப் போனது.

எட்டிப் பார்த்தாள்!

அங்கே அமர்ந்திருந்தவர்கள் எல்லாரும் அவளுக வேண்டியவர்கள் என்று இதுவரை அவள் நம் கொண்டிருந்தவர்கள்தான்!

அவள் சுவாரசியமாகப் பேசும்போது கூட அமர்ந் ஆமாம் போட்டவர்கள்தான். அது மட்டுமல்ல அங்கங் விஷயத்தைத் தொட்டுக் கொடுத்தவர்களும்தா இப்போது அவளைக் குற்றம் சாட்டுகிறார்கள்.

மல்லிகாவின் கல்யாணம் நின்று போய்ப் பிறகு நட தற்கு அவள்தான் ஒரு வகையில் காரணம் என்று செய் அதற்குள் பரவலாகப் பரவியிருந்தது. என்ன விஷய பேசப்பட்டது என்பதைப் பற்றி மல்லிகாவின் குடும் தினரோ, மாதவன் குடும்பத்தினரோ, தேவியின் குடு பத்தினரோ வெளியே விடாததால் அடிப்படை விஷய



தெரியவில்லை என்றாலும் காரணம் இவள் என்பது எல்லாருக்கும் புரிந்திருந்தது.

சில நேரங்களில் அக்கம் பக்கத்தில் நடைபெறுகிற சின்னச் சின்ன சண்டைகளுக்கு அவளே காரணம் என்ற பேச்சும் அடிபட்டது.

இப்போதெல்லாம் அடிக்கடி அந்த மாதிரி விமர்சனங் கள் காதில் விழவும் கல்யாணி சற்றே ஆடித்தான் போனாள்.

சுவாரசியத்திற்காக அமர்ந்து கதை கேட்பவர்களும் கூடப் பிரச்சினை என்று வரும்போது மறைமுகமாக அவளைச் சுட்டிக் காட்டி விடுகிறார்கள் என்பது புரிந்தது.

உச்சகட்டமாக அந்த நிகழ்ச்சி நடந்தது. அடுத்த தெருவிலே ஒரு இளம்பெண் ஒரு இளைஞனுடன் அடிக்கடி பைக்கில் வந்து இறங்கினதை வைத்து ஒரு கதை பண்ணி விட்டாள் கல்யாணி.

ஒரு நாள்!

திடீரென்று அந்த பைக்குக்காரப் பையனும், அந்தப் பெண்ணும் அவள் வீட்டுக்கு வந்தார்கள்.

அந்த ஆண் சொன்னான்.

''மேடம்! நீங்க பாட்டுக்கு ராணிக்கும் எனக்கும் என்ன உறவுன்னு தெரியாமயே கதை கிளப்பி விட்டுட்டீங்க... அவ ஆபீஸ்லயும் கிசு கிசு பேச்சு... என்ன ஆச்சு.. தெரியுமா? நேத்துத் தூக்க மாத்திரை சாப்பிடற அளவுக் குப் போயிட்டா... நல்லவேளை.. சித்தி.. அதாவது ராணியோட அம்மா.. சந்தேகப்பட்டு எனக்கு போன் பண்ணினாங்க...'' என்றான்.

கல்யாணி மிரண்டு போனாள்.

''அடக்கடவுளே! அண்ணனா? பாக்கறதுக்கு யங்கா இருக்காரேன்னு...'' என்று அவள் நினைக்கும்போதே அவன் குறுக்கிட்டான்.

''மேடம்! எனக்கு முப்பத்தஞ்சு வயசு. ரெண்டு குழந்தைங்க இருக்கு. இத்தனை நாள் சிங்கப்பூர்ல இருந்தோம். இப்பத்தான் இங்க வந்திருக்கோம். என்னோட கடைசிச் சித்தியோட பொண்ணு. டீ ஷர்ட் போட்டவனெல்லாம் பாய்ஃபிரண்டு ஆயிடுவானா? பைக்ல கூட போனா வேற மாதிரி உறவுதானா?''

''ஓ... சாரி! சாரி'' என்று பதில் சொல்ல முடியாமல் தவித்துப் போனாள் கல்யாணி.

''நதிமூலம், ரிஷிமூலம் மாதிரி உங்களைக் கண்டு பிடிச்சு வந்திருக்கோம். எதுக்காகங்கறீங்களா? வார்ன் பண்ணிட்டு போகத்தான். என் வைஃப் வர்றேன்னா, நான் வர்றேங்க.. அந்தம்மாவை உண்டு இல்லைன்னு பண்றேங்க. அப்படீன்னா. நான்தான்.. வேண்டாம்டி. நானே அந்தம்மாவுக்குப் புரியற மாதிரி சொல்லிட்டு வரேன்னு சொல்லிட்டு வந்தேன்.''

கல்யாணிக்கும் கண்ணில் நீர் மல்கியது.

''மேடம்! புரிஞ்சுக்குங்க... நீங்க ஏதோ கெட்டிக்காரத்தனமா செய்யறதா நினைச்சுக்காதீங்க... ஏரியா பூராவும் உங்களுக்கு நியூஸ் பேப்பர்ன்னு பேரு வச்சிருக்காங்க... எல்லாரும் உங்களை வெறுக்கறாங்க...'' என்றான்.

நகரும்போது அந்த ராணி சொன்னாள். ''யார் வீட்லயாவது சோத்துக்கில்லேன்னா... நீங்க கொடுக்கறீங்களா?



அப்படியிருக்கும்போது மத்தவங்க லைஃபைப் பத்தி விமர்சிக்கிறதுக்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கு?''

எதுவும் பேச வழியில்லாமல் வாயடைத்துப் போய் நின்றாள் கல்யாணி.

கணவனிடமும் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. திருடனுக்குத் தேள் கொட்டினாற்போல் உள்ளேயே வைத்துக் கொண்டு நடமாடிக் கொண்டிருந்தாள் அடுத்த அதிர்ச்சி வரும்வரை.

புயலாய் வந்தாள் சுபத்ரா!

''லேசா என் மனசுல இருந்த பொறாமைய ஊதிப் பத்த வச்சு.. மண்டையைக் குழப்பி. அந்த சூட்ல போய் நான் என்னென்னத்தையோ உளறி இப்ப மல்லிகா மாதவன் ரெண்டு பேரோட லைஃபுமே குழப்பத்தில் இருக்கு.. தெரியுமா?''

கல்யாணி சாமர்த்தியமாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு.

''சரி.. நான் குழப்பி விட்டா உனக்கு புத்தி எங்க போச்சு?'' என்று கேட்டாள்.

''அதென்னமோ.. நிஜம்தான்...! ஆனா இப்படிக் கேட்டுட்டதாலே மட்டும் நீ ரொம்பப் புத்திசாலி ஆயிட்டேன்னு நினைச்சுக்காதே! இனிமேலாவது இந்த மாதிரிக் குட்டையைக் குழப்பி மீன் பிடிக்கிற வேலையை விட்டுடு, என்னைக்கிருந்தாலும் நிலைமை ஒரே மாதிரி இருக்காது. யாராவது முரட்டுப் பார்ட்டி கையிலே சிக்கினா பொடிப் பொடியாப் பண்ணிடுவாங்கன்னு சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்'' என்று கிளம்பினாள்.

எல்லாமாகச் சேர்ந்து கல்யாணியின் வயிற்றைக் கல
விட்டது.

வெகுவாக யோசித்து அந்த முடிவு எடுத்தாள். ஆனா
அவளது கெட்ட நேரம் அதை ரகசியமாக நடத்தி
கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

அதுவே எல்லாக் குழப்பங்களுக்கும் காரணமாகி
போய் கணவனே சந்தேகிக்கும் வரை வளர்ந்து விட்
என்று புரிந்தது.

* * *

''மல்லி! அவசரமா ஆபீஸ் விஷயமா ரெண்டு மூ
நாள் வெளியூர் போக வேண்டியிருக்கு. நீ சேஃபா
இருப்பியா. அண்ணனும், அண்ணியும் குழந்தைகளோ
வந்து தங்கறேன்னு சொல்லியிருக்காங்க'' என்ற போ
மல்லிகாவுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை

''அஃபிஷியலா போகணும்னா போய்த்தானே ஆ
ணும்!'' என்று பதில் சொன்னாள்.

''சிவா வர்றான். ஒரு டீமாப் போறோம்!'' என்றான்.

''சரி!'' என்றாள். கூடவே ''டேக் கேர்'' என்று சொல
வேண்டும் போல இருந்தது. ஆனால் தயக்கத்தில் விட்
விட்டாள்.

வேலையெல்லாம் முடித்ததற்குப் பிறகு தேவியிட
பேசி நாளாகி விட்டதே என்று அழைத்தாள்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தாள்.

''மல்லி! சாப்பிடவே பிடிக்க மாட்டேங்குதுடி. ஆ
மாங்கா மாதிரி புளிப்பா சாப்பிட மட்டும் பிடிக்கு



என்று தேவி வெட்கத்துடன் விவரிப்பதைக் கேட்டு
மல்லிகாவுக்கும் நெகிழ்ச்சியாக இருந்தது. ஆனால்,
அவள் அடுத்து சொன்ன விஷயம் மல்லிகாவுக்குள்
கனலை மூட்டியது.

''மல்லி! இன்னைக்கு அவரு இங்க வந்தாரு. ரெண்டு
நாள் என்னோட இருக்கேன்னு சொல்லியிருக்காரு...
உன்னைப் பாக்காம இருக்க முடியல தேவி!ன்னு ஒரே
வழிசல்தான்...'' என்றாள்.

''அப்ப... அது ஏதோ... ப்ராஜக்ட்னு...'' என்று கேட்க
நினைத்தவள் அடக்கிக் கொண்டாள்.

இப்போது அவளுக்கு சர்வ நிச்சயமாகத் தெரிந்து
விட்டது. ஷைலஜாவும், மாதவனும்தான் எங்கோ
போயிருக்கிறார்கள் என்று.

சலிப்பாகி விட்டது.

ஷைலஜா அன்றைக்கே எச்சரிக்கை விடுத்தது நினை
வுக்கு வந்தது.

சொத்தைக் காப்பாத்திக்கலேன்னா... நான் கைப்பத்
திக்குவேங்கற மாதிரிதானே ஏதோ சொன்னாள்.

முழுமையாகத் தெரியத்தானே போகுது. அன்றைக்கு
வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டவள்.

மனோகரனும், குழந்தைகளும், சுபத்ராவும் வந்து
தங்கியதால் ''வேலை'' என்ற போர்வையில் தன்னை
மறக்க முயன்றாள்.

காலையில்!

தினேஷ் வந்தான்!

புறப்படும் நேரம் மல்லி! "கொஞ்சம் கீழே வாயே... நான் உன்கிட்டே பேசணும்" என்றான்.

போனாள்.

"ஏன் மல்லி! தெரிஞ்சு பேசாம இருக்கியா? இல்லே... தெரியாமப் பேசாம இருக்கியா?" என்றான் கொஞ்... கடுமையான குரலில்.

"புரியலே!" என்றாள்.

"என்னம்மா... புரியலே! மாதவனும், ஷைலஜா... எல்லாரையும் கழட்டி விட்டுட்டுத் தனியா வெளி... போயிருக்காங்க... தெரியுமா?"

மல்லிகா தினேஷை வெறித்துப் பார்த்தாள்.

"தினேஷ் அண்ணா! மாதவனும் சரி... ஷைலஜா... சரி... அப்படியெல்லாம் சீப்பா நடந்துக்கறவங்க... இல்லே!"

தினேஷ் செய்வதறியாது தவிப்பவன் போ... கைகளைப் பிசைந்து கொண்டான்.

"மல்லிகா! விஷயம் புரியாமப் பேசறே. மாதவன் ... மேல ரொம்பக் கோபத்துல இருந்தான். உன்னை ப... வாங்கறதுக்காகத்தான் கல்யாணத்துக்கு ஒத்துகிட்டான்... இந்த ஷைலஜாவுக்கு முதல்ல இருந்தே அவன் மே... ஒரு கண்ணு. இப்ப உன்கிட்டயும் நல்லாப் பேசிகிட்டு... அவன்கிட்டயும் நல்லாப் பேசிக்கிட்டு அவனை... பயன்படுத்திக்கறா..." என்றான்.

மல்லிகா உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றாள்.

தினேஷ் மறுபடியும் கையாலாகத்தனத்துடன் ... பார்வை பார்த்தான்.

...மல்லிகா கம்பீரமாக அவனைப் பார்த்தாள். "நடக்கட்... ...ம் எதுவரை போகுதோ போகட்டும்... ரெண்டு பேரும் ...ழந்தைங்க இல்லே! ஒருவேளை என்னைக் காயப் ...டுத்தறதுக்காக அவர் இப்படியெல்லாம் நடந்துக்கறதா ...ருந்தா... அவர்கிட்டே சொல்லுங்க.. அவருக்குன்னு ...ரு தகுதியிருக்கு. என்னைக் காயப்படுத்தறதா நினைச்சு ...ட்டு தன்னைத் தரம் தாழ்த்திக்க வேண்டாம்னு சொல் ...லுங்க..." என்றாள்.

அவள் திரும்பிப் போவதை வியப்புடன் பார்த்தான் ...னேஷ்.

மறக்காமல் அவள் சொன்னதை அப்புறமே மாதவ...டம் ரிலே செய்தான். அதைக் கேட்ட மாதவன்,

"உன்னை யார்றா இதையெல்லாம் போய் அவகிட்டே ...சால்லச் சொன்னது" என்று சீறியதைக் கேட்டு அலட்...க் கொள்ளாமல் பதில் சொல்லி விட்டு சிரித்துக் ...காண்டே போனை வைத்தான்.

* * *

மல்லிகா இரவெல்லாம் உறங்கவில்லை!

தவறுகள் யாருடைய வாழ்விலும் நிகழலாம். ஆனா...தைத் திருத்திக் கொள்வதுதானே மனிதப் பண்பு. ...ப்படி எண்ணித்தானே மறுபடியும் இந்தக் கல்யாணத்...க்கு நாம் ஒத்துக் கொண்டோம். ஆனால், கல்யாணமும் ...ய்து கொண்டு அதற்குப் பின்னர் அவளை வாதிப்பது ...ந்த விதத்தில் நியாயம்? அதிலும் எவ்வளவு திறமையாக ...ாட்டுகிறார்.

நேரடியாக எந்தக் கொடுமையும் செய்யவில் ஒருவேளை இது மட்டும் ஏற்பாடு செய்த திருமண இருந்திருந்தால், அவன் கிறக்கப் பார்வையும், குறு புன்னகையும், தாபப் பார்வையும் அவள் ஏற்கன அறியாதவளாய் இருந்திருந்தால் அவளுக்கு வி யாசமே புரிந்திருக்கப் போவதில்லை.

எத்தனை பேர் சுற்றி நின்றிருந்தாலும் அவள் அரு நின்றபடி மெல்லிய குரலில் அவள் காதுக்கு மட் கேட்கும்படியாக சிரிப்பானே அந்தச் சிரிப்பிலேயே அ உள்ளமும், உடலும் சிலிர்க்கச் செய்து விடுவானே!

இப்போது அந்த மாதிரி உணர்வுகள் எதையும் கா விடக்கூடாது என்பதிலே எவ்வளவு கவனமாக இ கிறான்?

தன்னிரக்கம் மீதூர அன்றிரவெல்லாம் கண் சிவக்க தனிமையில் அழுது தீர்த்தாள்.

அப்போது இன்னும் காத்திருக்கிற வேதனைகள் அ ளுக்கு புரியவில்லை.



## 21

எல்லாரும் தன்னிடத்தில் நேரில் பேசும்பே அன்பாகப் பேசினாலும் முதுகுக்குப் பின்னாலே தன்ன



றி நல்லப்பிராயம் வைத்திருக்கவில்லை என்பது பாணிக்கு புரிந்தது.

சுவாரசியத்துக்காகத் தன் வாயைக் கிளறி விஷயம் கரிப்பவர்கள். எல்லாரும் அடிமனத்தில் மனதளவில் ந்து போனாள்.

அப்போதுதான் பத்திரிகையில் அந்த செய்தியைப் த்தாள். போன வாரம் சென்றிருந்த கல்யாண வீட்டில் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

முடிவெடுத்தாள்!

கணவனிடமும், மாமியாரிடமும் சொல்லலாமா என்று சித்தாள். பிறகு வேறுவிதமாக முடிவெடுத்தாள்.

மாமியாரம்மா எதையாவது சொல்லி காரியத்தைக் கடுத்து விடுவார்.

வேண்டாம். எல்லாம் முடிந்ததற்குப் பிறகு சொல்லிக் காள்ளலாம் என்று முடிவு செய்து கொண்டாள். ஆனால், சன்ற பத்து நாட்களாகவே கணவன் "எங்க போறே?" ன்று கேட்கும் போது அதன் தீவிரம் அவளுக்குப் ரியவில்லை.

போன வாரத்தில் ஒரு நாள் காலையில் அவள் இல்லாத போது வீட்டுக்கு வந்து விசாரித்து விட்டுப் போனதாக மியாரம்மா சொன்னார்.

அப்போதும் அவள் பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை. அதற்குப் பிறகும் அவன் இரண்டு மூன்று முறை விசாரித்து போதாவது அவள் உண்மையைச் சால்லியிருக்கலாம்.

சொல்லவில்லை!

எல்லாமாகச் சேர்ந்து இப்படித் தனக்கே எதி கிளம்பும் என்று நினைக்கவில்லை.

"என் மேல உங்களுக்கு நம்பிக்கையில்லாமப் போச் என்ற அவள் அழுகையை முத்துராமன் இரக்கமில் வனாய்ப் பார்த்தான்.

"இத பார்றி! தினம் ரெண்டு மணி நேரம் வெளி போறே. ஒரு குறிப்பிட்ட இடத்துக்குப் போறே! நா தினப்படி அந்த இடத்துக்கு வந்து பாத்துட்டுத் வர்றேன். ஆனா, நான் கேட்டா மட்டும்.. ஒவ்வொ நாளுக்கு ஒவ்வொரு பொய்க் காரணம் சொல்ற! எது போறே! யாரைப் பாக்கப் போறேன்னு சொல்லு!" எ அவன் முடிக்கு முன்னே அவள் தன் இரு காதுகளை தன் கைகளால் பொத்திக் கொண்டாள்.

"ஐயோ! அபாண்டமாப் பேசாதீங்க!"

"அதெல்லாம்.. உன் வழக்கம்! பிட் போடறது. ஒ வச்சுப் பேசறது... அதெல்லாம்... உனக்குதான் கை கலை" என்று உறுமினான்.

தலையை பிடித்துக் கொண்டு சேரில் சாய்ந்த "எவனெவனோ... போன் பண்றான். ஆம்பளை பேச பொம்பளை பேசறாப்ல. உன் பெண்டாட்டி எங்க போறா உன்னால கண்டு பிடிக்க முடியலே. நீயெல்லாம் குடா மீசை வச்சிருக்கறேன்னு கேட்கறான். நீ யார் யா டுக்கோ... வச்ச தீயெல்லாம் ஒண்ணு சேர்ந்து குடும்ப வாழ்க்கைக்கே வேட்டு வச்சிருக்கும் இருக்கு" என்றான்.

எப்போதும் அளவாகவும், மென்மையாகவும் பேச கணவன் பொங்கிப் பொருமுவதைப் பார்த்து வி வாயடைத்துப் போய் நின்றாள் கல்யாணி.



ஓரிரு நிமிடங்கள்தான்!

சட்டென்று உள்ளே போனாள்! தனது அறையிலிருந்த தையெதையோ அள்ளிக் கொண்டு வந்து கணவன் ன்னாலே போட்டாள்.

முத்துராமன் சற்றே வெறித்துப் பார்த்தான்! மெல்ல கம் மலர்ந்தது.

பெயின்டிங் வொர்க் செய்யப்பட்ட சேலைகள் வயர் டைகள்!

பதிக் செய்யப்பட்டிருந்த எம்பிராய்டரி சேலைகள் று அறை முழுவதும் இறைந்து கிடந்தது.

முத்துராமனின் இறுக்கமான முகம் இளக்கம் டைந்தது.

தலையை தாங்கியபடி ஸோபாவில் அமர்ந்தான். ஆக னைவி கைவேலை கற்றுக் கொள்ளத்தான் சென் ருக்கிறாள். மனசுக்குள் எரிந்து கொண்டிருந்த சந்தேகம் றைந்தது.

"சொல்லித் தொலைச்சுட்டுப் போறதுக்கென்ன?" ன்றான் உறுமலாக.

"சொல்லிட்டுப் போலாம்னுதான் நினைச்சேன். ஆனா, ங்கம்மா எதையாவது சொல்லிக் கெடுத்துடுவா, அத ால கிளாஸ்க்குப் போறதுக்குன்னு எங்கப்பாகிட்டே ணம் வாங்கிப் போய் சேர்ந்தேன். அதுக்குள்ளே நீங்க ன்னென்ன பேசிட்டீங்க?" என்று கேவிக் கேவி அழு ள்.

அவனுக்குப் பாவமாகப் போய் விட்டது!

சோபாவில் அமர்ந்தான். "சரி.. வா! இப்படி உட்கார்... அழாதடி" என்று தோளோடு சேர்த்துக் கொண்டு ஆறுதல் சொன்னான்.

"என்ன திடீர்னு ஆர்ட் கிளாஸ்ல ஆர்வம்" என்றான்.

அப்போதுதான் சுபத்ரா வந்து திட்டி விட்டுப் போனதை யும், இரண்டு தெரு தள்ளி வந்து விட்டுப் போன சகோதரன் சகோதரியையும் பற்றிச் சொன்னாள்.

முத்துராமன் முகத்தில் கோபம் தெரிந்தது.

"கல்லு! நான் ரொம்ப நாளா சொல்லிகிட்டிருக்கேன், அடுத்தவங்க நியாயம் நமக்கு வேண்டாம்னு. ஒவ்வொரு வீட்லயும் எவ்வளவோ இருக்கும். யார் வீட்டுக்கும் நாம சோத்துக்குக் குடுக்கறோமா? அப்ப அவங்க கஷ்ட நஷ்டம் பத்திப் பேச நமக்கு என்ன உரிமையிருக்கு? இப்பப் பாரு... எவனெவனோ போன் பண்ணிக் கதைக்கிறப்போ... எனக்கு எவ்வளவு வேதனை இருந்திருக்கும். நான் சரியாத் தூங்கி பத்து நாளாச்சுடி" என்றான்.

வேதனையுடன் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான். "தப்புத்தான்!" என்றாள் கல்யாணி.

"ஆமா! தப்புத்தான்னு ஒரே வார்த்தையில முடிச்சுட்டே! ஆனா, எத்தனையோ பேர் லைஃபல விளையாடினதுக்கு ஆண்டவன் என்ன தண்டனை குடுக்கப் போறானோ தெரியலை!" என்றான் வேதனை யுடன்.

"குடுத்துட்டானே! இப்பவே குடுத்துட்டானே உங்க வாயால கேட்கக் கூடாததெல்லாம் கேட்க வச்சுட்டானே" என்று புலம்பினாள்.

பிறகு ஆவேசமாக அவன் முகம் பார்த்துச் சொன்னாள்.

"உங்களுக்குத் தெரியாது! கதை கேட்கும்போது மட்டும் சுவாரசியமா எல்லாரும் சுத்தி உட்கார்ந்து கதை கேப்பாங்க... எல்லாருக்கும் அங்க கொஞ்சம் இங்க கொஞ் சம்னு சேத்துகிட்டுப் பேசுவாங்க. ஆனா, கடைசியில பிரச்சினை வரும்போது மட்டும் என்னைக் கை காட் டுவாங்க!" என்றாள்.

"கதை ஆரம்பிக்கறது நீ தானே! அதுதான்" என்றான்.

நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு ஏதோ சொல்ல நினைத்து.

"பார்றி... கல்யாணி!" என ஆரம்பிக்கும்போது அவள் குறுக்கிட்டாள்.

"அதான்" இனிமேலாவது நம்ம வேலையைப் பார்த்துட்டு.. நிம்மதியா இருக்கலாம்னு முடிவு பண்ணிட் டேன். கிளாசுக்குப் போனேன். ஆனா, அதை வச்சு கிட்டு..."

"போகுது விடு. இப்பத்தான் குழப்பம் தீந்துச்சே! பார்றி.. கல்யாணி! இனிமே யாரைப் பத்தியும் வாய் புளிச்சுதோ.. மாங்காய் புளிச்சுதோன்னு பேசாதே... என்ன?" என்றான்.

"சரிங்க!" என்றாள்.

அதற்குப் பின்பு மறுபடியும் போன் கால் வரட்டும். அவர்களை ஒரு வாங்கு வாங்கி விடலாம் என்று ஆவ லாகக் காத்திருந்தான். ஆனால் போன் வரவில்லை.

அதற்கு மாறாக அன்று மாலை ஒரு ஆணும், பெண் ணும் வந்து அவர்கள் இருவரையும் பார்த்தார்கள்.

கல்யாணி அவர்கள் வருகைக்குப் பிறகு தெய்வ களின் படத்தின் முன்னால் நின்று ஒரு உறுதி எடுத்து கொண்டாள். இனிமேல் எக்காரணம் கொண்டும் வம்பு பேசுவதில்லை என்ற முடிவுதான் இது.

* * *

"இதுல பாரு! எவ்வளவு நெருக்கமா நிக்கறாங்க இந்த போட்டோவுல பாரு... எப்படி பல்லைக் காட்டி கிட்டிருக்காங்கன்னு..."

தினேஷ் ஒவ்வொரு போட்டோவாக எடுத்து மல்லிகா விடம் காட்டிக் கொண்டிருந்தான்.

மல்லிகாவின் முகம் வாடிப் போனது.

"ஏம்மா! நான் எத்தனை தரம் சொன்னேன். ஷைலஜா ஒரு டைப்பான ஆளு. அதுலயும் மாதவன் மேல ஒரு கண்ணு அப்படீன்னு..." என்று பொரிந்தான்.

"ஆமா! என்கிட்டயே சொன்னாப்ல. ஆனா, எனக்கென்னமோ... அவங்க கண்ணைப் பார்த்து அப்படியெல்லாம் தெரியலேன்னு எண்ணம்" என்றாள் தீர்மான குரலில்.

"ஐயோ! ஐயோ! நல்ல பொண்ணம்மா.. நீ! இப்பல்லாம் கிரிமினல்ங்க கூட முகத்தைப் பால் வடியற மாதிரி வச்சுக்கறாங்க..." என்று அங்கலாய்த்தான்.

மல்லிகா பெருமூச்சு விட்டாள்.

"அண்ணா! அவங்களையெல்லாம் சொல்லக் கூடாது எனக்குத் தலையெழுத்து சரியில்லை. நம்மளோட சொத்து மேல நமக்கு நம்பிக்கையிருக்கணும். அவருக்கு



ன் என்னைக்கிருந்தாலும் நான் அவரோட சொத்துத் ன்னு நம்பிக்கையிருக்கணும்..." என்றாள்.

"அம்மா! உங்க ரெண்டு பேருக்குமே ஈகோ...! தேவையில்லாத ஈகோ!"

"இப்ப என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?"

இறங்கிப் போம்மா! கொஞ்சம் விட்டுக் குடு."

"நான் விட்டுக் குடுக்கத்தான் தயாரா இருக்கேன். துக்குன்னு இன்சல்ட் பண்ணினா... எப்படிப் பொறுத் க்கறது?" என்றாள்.

"அப்புறம்... உன் இஷ்டம்..." என்று தோளைக் குலுக்கி விட்டுப் புறப்பட்டான் தினேஷ்.

உலகத்துச் சோகமெல்லாம் தன் மனத்தில் விழுந்தாற் போல் நடமாடிக் கொண்டிருந்தாள் மல்லிகா.

* * *

விசிலடித்தபடி ஆடிக் கொண்டு உள்ளே நுழைந்த தினேஷை முறைத்தான் மாதவன்.

மாதவன், சிவகுமார், ஷைலஜா, லில்லி என்று ஒரு கூட்டமே ஒரு "பக்" பிராப்ளத்துக்காக மண்டையை உடைத்துக் கொண்டிருந்தார்கள்.

தினேஷும் அந்த குருப்பில் இருந்தான். ஆனால் முற்பகலில் ஆளைக் காணோம்.

"எங்கடா... போயிட்டு.. வர்றே?" என்றான் மாதவன் கடுப்பாக.

"ம்...! எல்லாம் முக்கியமான வேலையாத்தான்" என்றான்.

கண்களில் குறும்பு கூத்தாடியது.

"டேய்! நீ இப்படியே ஒ.பி. அடிச்சுட்டிருந்தே.. நா சி.யி.ஒ.கிட்டே போட்டுக் குடுத்துடுவேன்'' என்றா மாதவன் கடுப்பாக.

''தங்கம்டி... ராஜா! நீ தங்க மகன்டா. கோல ஹார்ட்டட் ஃபெல்லோடா.. நீ அப்படியெல்லாம் செய் மாட்டேன்னு எனக்குத் தெரியும்டா...'' என்று இரண் கைகளாலும் மாதவனின் இரு தாடைகளையும் பிடித்து கொண்டு கொஞ்சவும் எல்லாரும் சிரித்தார்கள்.

அன்று மாலையில்!

''மல்லி! எப்படியிருக்கே!'' என்றான் போனில் மாதவ

அந்தப் பக்கம் அவள் குரல் கம்மினாற் போ இருந்தது.

''இருக்கேன்.''

மாதவனின் மனம் சற்றே நெகிழ்ந்தது. தேவைய லாமல் மனைவியை வறுத்தெடுக்கிறோமோ என்று தோ றியது போலும்.

''ஏண்டா! குரல் ஒரு மாதிரியிருக்கு!'' என்றான்.

''இல்லே! சளி பிடிச்ச மாதிரி இருக்கு!'' என்று மூக்கை உறிஞ்சினாற்போல் நடித்துக் கொண்டாள் மல்லிகா.

மாதவனின் குரல் குழைந்தது.

''போரடிக்குதாடா! வந்தர்றேன். இங்க ஒரு கன்ஸா வைரஸ் பிராப்ளம் ஆயிடுச்சு. இப்ப ஆல்மோ



சால்வ்ட்தான்... வந்தர்றேன்.. நாளைக்குள்ளே வந்தர் றேன்'' என்றான்.

''ம்...!'' என்றவள் மெதுவான குரலில்,

''தினேஷ் அண்ணா வந்திருந்தாங்க!'' என்றாள்.

இந்தப் பக்கம் மாதவன் ஒரு நிமிடம் திகைத்தாற்போல் இருந்தது.

''அவனா! அவன் இங்க எங்க டீம்ல இல்ல இருக்கான். அங்க எங்கே வந்தான்.''

''தெரியலே வந்தாரு.. அவசர அவசரமாக் கிளம்பிட் டாரு. உங்க டீம்னா..?''

''என்ன கேக்கறே? புரியலே!''

''இல்லே. உங்க டீம்னா ஷைலஜா இருக்காங்களா?'' அவள்தான் குரலே எழும்பாத ஒரு குரலில். அவன் முகத்தில் சிந்தனை படர்ந்தது.

''ஆமா! ஷைலஜா இருக்காப்ல... லில்லி... இருக் காப்ல.. சிவா.. இருக்காப்ல..'' என்றான்.

''சிவாண்ணாவா? சிவாண்ணா கோயமுத்தூர் வந் ததா..'' என்று சொல்ல ஆரம்பித்தவள் நிறுத்திக் கொண் டவள்.

அதற்குப் பதிலாக அவன் அந்தப்புறம் சிரித்தான்.

''அது.. நான் நேர்ல வந்து சொல்றேன்'' என்றான்.

செல்போனை ஆஃப் செய்வதற்கு முன்பாக ''மல்லி! டோன்ட் யு மிஸ் மீ!'' என்றான்.

''ம்..!'' என்றாள் மல்லிகா.

''தேங்க்ஸ்!'' என்றான். ஆஃப் செய்தான்.

மெல்லிய புன்னகையுடன் திரும்பிய மாதவன் அந்தக் காட்சியைக் கண்டான். சமீப காலமாக அந்தக் காட்சியை அடிக்கடி காண நேர்கிறது.

'தினேஷ் எதற்காகப் போய் மல்லிகாவைப் பார்த்து விட்டு வந்தான்? மல்லிகா வேறு ஷைலஜா உங்க கூடவா இருக்காங்கன்னு கேட்கறா.. இந்தப் பய ஏதோ விளையாடறான் போல இருக்கே' என்று யோசித்தபடி நின்றான்.

சமீப காலமாகவே அடிக்கடி ஷைலஜாவும், தினேஷும் குசுகுசுவென்று பேசிக் கொள்கிறார்கள். எங்கேயோ போய்விட்டு வருகிறார்கள்.

மாதவன் கேட்டால் எதையாவது சொல்லி மழுப்பி விடுகிறார்கள்.

இப்போது அவர்களை நோக்கிப் போனான். மிக மெதுவான குரலில் தினேஷும், ஷைலஜாவும் பேசிக் கொள்வதன் பிற்பகுதி காதில் விழுந்தது.

''நல்லாப் பத்த வச்சுட்டு வந்துருக்கேன்..'' என்று தினேஷ் சிரிக்க..

''எப்படியோ வெடிச்சா சரி! உள்ள வந்து அழுந்திகிட்டே இருந்தா டிப்ரஷன்லதான் முடியும்.. ஒரு சண்டையாவது வரட்டும்'' என்று ஷைலஜா முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.



மாதவன் வரவும் ''ஜிப்'' போட்டாற்போல வாயை மூடிக் கொண்டார்கள்.

''டேய்! நீ எங்கடா.. மல்லிகாவப் பாக்கப் போனே..'' என்று கேட்டான் மாதவன்.

''இல்லடா.. மேடி! என்னோட குழந்தைக்கு உடம்பு சரியில்ல.. பாக்கலாம்னு.. போனேன்.

அப்படியே மல்லிகா எப்படியிருக்கான்னு பாத்துட்டு வந்தேன்'' என்றான்.

மாதவன் சமாதானம் ஆகவில்லை. ஆனால் அதற்கு மேல் தினேஷிடம் இருந்து விஷயம் வாங்க முடியாது என்பதுவும் தெரியும்.

தினேஷ் மறுபடியும் கேட்டான்.

''டேய் மாதவா! நீ பயங்கரமான ஆள். சிவகுமார்ன்னா.. மட்டும்... ரெண்டு நாளே பர்மிஷன் குடுத்தே. எங்களுக்கு மட்டும் கேள்வி கேட்கறே.''

''டேய்! அவன் ஏங்கிப் போய்க் கிடந்தான். இப்பப் பாரு.. போய்ட்டு வந்தவுடனே.. ஆள் தெம்பா வேலை செய்யறாரு. நீயும் சொல்லிட்டுப் போக வேண்டியது தானே..!'' என்றான் மாதவன்.

''எல்லாரும் உன்னை மாதிரி இருக்க முடியுமா?'' என்றான் தினேஷ்.

''என்ன மாதிரின்னா..?''

''மனசுக்குள்ளே டன் கணக்கா.. ஏக்கம் வச்சுகிட்டு வெளியே இறுக்கமா நடமாடறதுக்கு.. நாங்க என்ன உங்களை மாதிரியா..'' என்று முணுமுணுத்தவன் நிற்காமல் நடந்தான். மாதவன் சற்றே திகைத்துத்தான் போனான்.



# 22

"நீங்க யார் சார்?" என்றான் முத்துராமன்.

"சார்! நானும். இவங்களும்தான் போன் பார்ட்டிங்க" என்றான் தினேஷ்.

"ஓ!" என்று முத்துராமன் முகம் இருண்டது.

"சார்! தப்பா நினைக்காதீங்க..! நாங்க இப்ப ஒண்ணும் உங்களை தொல்லை பண்றதுக்காக வர்லை. நாங்க ஏன் அப்படியெல்லாம் போன் பண்ண வேண்டி வந்துச்சுன்னு உங்களுக்கு சொல்றதுக்காகத்தான் வந்தோம்."

முத்துராமன் அமைதியாக அவர்களைப் பார்த்துக் கொண்டு அமர்ந்து கொண்டான்.

"உட்காருங்க!" என்று ஜாடை காட்டினான். எதிரே அமர்ந்தார்கள்.

"சார்! உங்க வைஃப்னால ஒரு கல்யாணமே நின்னு போச்சு. ஒருத்தர் தூக்க மாத்திரைகளை சாப்பிட்டு கிட்டத்தட்ட செத்துப் பொழைச்சாங்க. அது மட்டுமில்லை ஒரு குடும்பத்துல இன்னும் குழப்பமே தீரலை" என்றாள் ஷைலஜா.

முத்துராமன் முகம் மறுபடியும் இருண்டது.



தினேஷும், ஷைலஜாவும் கல்யாணி போட்ட வெடி எப்படி இரண்டு குடும்பங்களையும் கலக்கி விட்டது என்பதை விவரமாகச் சொன்னார்கள்.

நொந்து போனான் முத்துராமன்.

"இப்ப அவங்க எங்கே?" என்றான் தினேஷ்.

"கோவிலுக்குப் போயிருக்கா.. வந்துடுவா. தயவு செய்து நீங்க இருந்து அவகிட்டே எல்லா விளக்கமும் சொல்லுங்க. அப்பத்தான் விளையாட்டுப் போல இவங்களை மாதிரிப் பொம்பளைங்க கிளப்பி விடற வதந்தி எப்படி வாழ்க்கையையே புரட்டிப் போடுதுன்னு புரிஞ்சுக்குவாங்க" என்றான் ஆழ்ந்த வருத்தத்துடன்.

கல்யாணி வந்தாள்!

தினேஷும், ஷைலஜாவும் மாறி மாறிச் சொன்னதையெல்லாம் கேட்டாள். மனம் கலங்கி அழுதாள்.

"நான் மட்டுமா அன்னைக்கு பேசினேன்? என் கூட இன்னும் ரெண்டு மூணு பேரும்தான் பேசினாங்க. சும்மாவா ஒரு கொழுந்தன் இப்படிப் பத்துப் பவுன் காசுமாலை பத்தாயிரம் ரூபாய் புடவைன்னு வாங்கிக் கொடுப்பான்னு பேசினாங்க. அதைக் கேட்டுத்தான் எனக்கும் புத்தி கெட்டுப் போச்சு. சுபத்ராகிட்டே ஒரு எச்சரிக்கையாத்தான் சொன்னேன். ஆனா, அதை அவ போய் பொண்ணு வீட்ல உளறுவான்னு எனக்கென்ன தெரியும்?" என்றாள் கல்யாணி.

"பொய் சொல்லாதீங்க!" அது மட்டுமா சொன்னீங்க? எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்திருடி. இப்

படிக் கொழுந்தன் கிடைக்க மாட்டாருடி. உன் பெ ணுக்குக் கல்யாணத்துக்கு வேணும்கற பணம் தேத் கிட்டு அப்புறம் கல்யாணம் பண்ணினாப் போ அதுக்காக நீ எதையும் சொன்னாலும் தப்பில்லே நீங்க சுபத்ராகிட்டே சொல்லலை'' என்று கேட் ஷைலஜா.

கல்யாணி மாட்டிக் கொண்டவள் போல் விழிப்ப பார்த்து முத்துராமன் படு கோபமாக எழுந்தான். ஓங்கி அறை விட்டான்.

''ஏண்டி! மனுஷன் மாய்ஞ்சு மாய்ஞ்சு உழை சம்பாதிச்சுக் கொண்டு வந்து போட்டா தின்னு தொ சுட்டு வீட்ல உக்கார முடியாதா? ஊர் வம்பு புறளி பே குடும்பங்களைக் கெடுத்துட்டுத் திரியறே'' என்ற மறுமுறையும் கை ஓங்கும்போது தினேஷ் எழு கையைப் பிடித்துக் கொண்டான்.

''சார்! நீங்க இந்த மாதிரி ரியாக்ட் பண்ணனுங் துக்காக நாங்க வர்லை. பாருங்க! இப்ப அவங்க ஆர் கிராஃப்ட்ஸ் கிளாஸுக்குத்தான் போனாங்க. ஆனா, நா அதை பில்டப் பண்ணின விதத்துல நீங்களே குழம் போயிட்டீங்க. எப்படி வேவு பாக்கற லெவலுக்கு போனீங்க. எப்படிப் பத்து நாளாத் தவிச்சுப் போனீ அப்படித்தானே பாதிக்கப்பட்ட ஒவ்வொருத்த வருத்தப்பட்டிருப்பாங்க. அதுக்குத்தான் அடுத்தவ களைப் பத்திப் பேசும்போது பாத்துப் பேசணும்கற என்றார்கள்.

முத்துராமன் மனைவியைப் பார்த்தான்.



"புரிஞ்சுது!'' என்றாள் தேம்பலுடன்.

முத்துராமன் தயக்கத்துடன் கேட்டான். ''சார்! அந்தக் டும்பத்துப் பிரச்சினையைத் தீர்க்கறதுல நாங்க ஏதாவது தவி செய்யணுமா?'' என்றான்.

"வேண்டாம்!'' என்றான் தினேஷ். ஒரு நிமிட மௌனத் துக்குப் பிறகு சொன்னான்.

"சார்! அதுல ஒரு சிக்கல் இருக்கு. அது ஹஸ்பெண்ட் அண்ட் வைஃப்போட அந்தரங்கப் பிரச்சினையாப் போச்சு. அதுல யாருமே நுழைய முடியாது. பிரச்சினையின் ஆரம்பம் உங்க வைஃப்தான். ஆனா அவங்க ரெண்டு பேருமே ஒருத்தர் மேலே ஒருத்தர் ரொம்பப் பிரியம் வச் சிருக்காங்க.. பூனைக்கு யார் மணி கட்டறதுங்கற மாதிரிப் போயிட்டிருக்கு. கடவுள்தான் ஏதாவது வழி காட்டணும்'' என்று எழுந்தான் தினேஷ்.

முத்துராமனும் எழுந்தான்.

"சார்! ரொம்ப மன்னிக்கணும்'' என்று கை கூப்பினான்.

''ம்..'' என்று பெருமூச்சு விட ஷைலஜா சொன்னாள் போனதை விடுங்க'' என்று.

இருவரும் விடைபெற்றுக் கொண்டார்கள்.

* * *

''மச்சான்!'' என்று ஆச்சரியமானான் விமல்ராஜ்.

ப்ராஜக்ட் வேலை என்று ஒரு குழுவாகக் கிளம்பி னாலும் சிவகுமாரின் முகம் வாடிக் கிடப்பதைப் பார்த்த மாதவனுக்கு ஒரே குறுகுறுப்பு.

''என்னடா.. பேய் அறைஞ்ச மாதிரியே நடமா கிட்டிருக்கே! அம்மிணி ஞாபகமா?'' என்றான்.

''ஆமா!'' என்றான் சற்றும் வெட்கமில்லாமல்.

அப்போதுதான் சிவகுமார் அந்த ஐடியாவைச் செ னான். ''டேய் மாதவா! ஒரே நாள் டைம் குடு இன்னைக்கு நைட் போய் அவளைப் பாத்துட்டு நாளை ஈவ்னிக்குள்ளே வந்தர்றேன்'' என்றான்.

மாதவன் சிரித்து விட்டான்.

''எதுல போவே?''

''கார்ல போறேன்..''

............!

''டேய்! மாதவா.. நீ எதையாவது சி.யி.ஓ. கிட் சொல்லி சமாளிடா! வந்து வொர்க்ஸ் காம்பன்ஸேட் ப ணிடறேன்'' என்றான்.

''டேய்! விளையாட்டுப் புள்ளை மாதிரிப் பேசாதடா என்றான்.

''இல்லடா! பாத்துப் பத்து நாளாச்சுடா!'' என புலம்புவதைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தான் மாதவ

''சரி.. போய்த் தொலை! ஆனா, நாளைக்கி ஈவ்னி வந்தர்ணும். அதுவரைக்கும் நான் எப்படியாவது சமாளி கறேன்'' என்று அனுப்பியிருந்தான்.

சிவகுமாரின் குரல் கேட்டவுடனே தேவி உள்ளறை லிருந்து எழுந்து வந்தாள்.

''அத்தான்! இது என்ன திடீர்ன்னு!''



''ஆமா! ஆபீஸுக்குக் கட் அடிச்சுட்டேன். எங்க டீம் லாம் ஒரு ப்ராஜக்ட் வொர்க்குக்காக இரண்டு நாள் ற ஒரு ஊர்ல காம்ப். மாதவனைக் காக்கா பிடிச்சு துட்டேன்'' என்றான்.

அறைக்குள் புகுந்து கொண்டு மனைவியுடன் குசுகுசு ன்று பேசியபடி சிரிப்பும், கலகலப்புமாக பேசிக் ண்டிருந்துவிட்டு மறுநாள் காலையில்தான் கிளம் ான்.

அப்போதுதான் இடையில் தேவி அந்தக் கேள்வியைக் டாள்.

''என்னத்தான் மல்லிகாவுக்கும், அத்தானுக்கும் இன் பிராப்ளம் சரியாகலை மாதிரித் தெரியுது. உங் க்கு ஏதாவது தெரியுமா?'' என்றாள்.

''தெரியலை.. தேவி! மேடி இந்த விஷயம் மட்டும் கிட்டே பேச மாட்டேங்கறான். என்கிட்டே பேசினா. ஏதாவது உன்கிட்டே சொல்வேன். உங்கம்மாவுக்குப் ாய் அப்புறம் மல்லிகா அம்மாவுக்குப் போகுன்னு னக்கிறானோ.''

''இருக்கலாம்!'' என்ற தேவி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

''உனக்கு எதுவும் தெரியுமா?'' என்றான் சிவகுமார்.

''இல்லே! அத்தை எங்கம்மாகிட்டே ஏதோ சொல்லி த்தப்பட்டுகிட்டிருந்தாங்க. அதனால சந்தேகம்.''

''சரிடி என் தங்கம்! நீ கவலைப்பட்டா.. நம்ம ஜூனி கவலைப் படுவாரு. எப்படியும் அத்தை உங்கத்தை

எல்லாரும் ஊர்ல இருந்து வர்றதுக்குள்ள பிராப்ளம் சால் பண்ணப் பார்க்கறோம்'' என்றான்.

தேவி சற்றே நிம்மதியானாள்.

வரும் வழியில் சிவகுமாருக்கு சிந்தனையாகப் போ விட்டது.

பிரச்சினையையே மறைக்கிற. சொல்ல மறுக்கி நண்பனின் வாழ்க்கையில் எப்படித் தலையிடுவ எப்படி சரி செய்வது என்றே புரியவில்லை.

* * *

நேற்றிருந்த முக வாட்டம் இல்லாமல் இன்று க கலப்பாக நடமாடுகிற சிவகுமாரை ஓரக்கண்ணா அடிக்கடி பார்த்துக் கொண்டான் மாதவன்.

சிக்கல் இல்லாது வாழ்க்கை உணர்வுகளை எவ்வள இயல்பாக வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். தான் இப்படி இருக்க வேண்டும்? பிரச்சினை வந்தது. அது தீர்ந்து விட்டதே. இன்னமும் ஏன் அதைத் தூக் கொண்டே அலைகிறோம்.

தவறோ சரியோ அவள் மறுபடியும் திருமணத்து ஒத்துக் கொண்டாள். எல்லாம் சரியாகி விடும் எ நம்பிக்கையோடுதானே வந்திருக்கிறாள்.

அப்படி நடுங்கிப் போகிற அளவுக்கு அவளை காயப்படுத்துகிறோம். தனது ஒரு கடினமான பார்வை இறுக்கமான முகபாவத்தில் அவள் துவண்டு விடுகி

தான் செய்வது எந்த வகையில் நியாயம்?



தான் தங்கியிருந்த கெஸ்ட் ஹவுஸில் வெளியே வெளியில் எல்லாரும் சேர் போட்டு அமர்ந்து ண்டு சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

கலகலப்பாகச் சண்டை போட்டுக் கொண்டிருந் ர்கள். பிறகு பெண்கள் இருவரும் ''குட் நைட்'' சொல் ந் தங்கள் அறைக்குப் போய் விட்டார்கள்.

மாதவன் மெதுவாகச் சுழன்று கொண்டு நடந்து ண்டிருந்தான்.

சிவகுமார் இதுதான் நேரம் என்று நெருங்கி வந்தான்.

''என்னடா! வூட்டம்மிணி ஞாபகம் வந்துருச்சா'' றான்.

மாதவன் அவனைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''மல்லிகா உன் மேல உயிரையே வச்சிருக்குடா யாணத்துக்கு முன்னால தேவிகிட்டே உனக்கு என்ன டிக்கும்.. அது இதுன்னு.. எப்பப் பாரு.. உன்னைப் தின பேச்சுத்தான்..'' என்றான்.

மாதவன் ஆர்வமாகக் கேட்பது போல் முகத்தை வத்துக் கொண்டான்.

மறுபடியும் சுபத்ராவே போய் கல்யாணம் பேசியதும் ன்னாளாம்.

''தேவி! நான் மாதவனை ரொம்ப நோகடிச்சுட்டேன். த்தனைக்கும் பிராயச்சித்தமா அவரை வாழ்நாள் பூராவும் தோஷமா வச்சுக்கப் போறேன்னு சொல்லுமாம்.''

இப்படியே சிவகுமார் சற்று நேரம் பேசிக் கொண் ந்து விட்டுப் போனதும் மாதவன் தனது பாக்கெட்டி ந்து செல்போனை எடுத்தான்.

மனைவியை அழைத்தான்!

"சொல்லுங்க!" என்றாள் சுரத்தே இல்லாமல்.

"மல்லி! ஜஸ்ட் ஒன் நைட்.. நாளைக்கு வந்தர்றே[illegible]" என்றான்.

"இங்க வர்றதுன்னா.. உங்களுக்குக் கஷ்டமா இ[illegible]குமே?" என்றாள்.

"ஹேய்! என்ன ஒரு விதமாப் பேசறே" என்றான்.

"இல்லே! நல்ல கம்பெனியோட போயிருக்[illegible] டைம் பாக்காம என்ஜாய் பண்ணியிருப்பீங்க" என்[illegible]

"ஆமா! வி ஹேட் எ நைஸ் டைம்" என்றான்.

"பின்னே? எத்தனை பொய் சொல்லியிருக்கீங்க! அ[illegible]கெல்லாம் பலன் கிடைக்க வேண்டாமா?"

"வாட் டு யூ மீன்?"

"பின்னே? சிவகுமார் அண்ணா உங்க கூட [illegible] காருன்னு நீங்க சொல்றீங்க.. ஆனா, அவங்க வ[illegible] தேவி சொல்றா.. உங்களுக்கு ஷைலஜாவைப் [illegible] சிருந்தா.. அவங்களையே கல்யாணம் பண்ணியி[illegible] வேண்டியதுதானே? நின்ன கல்யாணத்தை ஒரேய[illegible] நிறுத்தியிருக்கலாம்.. இல்லே!" என்றாள்.

"மல்லி! திஸ் இஸ் தி லிமிட். இன்னைக்கு நான் [illegible] மூட்ல உன்கிட்டே பேசினேன். நாளையிலிருந்த[illegible] நாம ஒரு நல்ல அன்டர்ஸ்டாண்டிங்குக்கு வர்லா[illegible] இருந்தேன். ஆன்னா, நீ எப்பவும் ஒரே மாதிரித்தாங்[illegible] நிரூபிச்சுட்டே.. ஐ ஹேட் யூ.." என்றான்.



"நானும்தான்!" என்றாள் போனை ஆப் செய்தாள்.

கோபம் அடங்கிய மாதவன் தொடர்ந்து சந்தேகப்படுவதற்கான வாய்ப்பாகவே வருகிறதே என்று எண்ணினான்.

மறுபடியும் அழைத்தான். ஆனால் மல்லிகா செல்போனை ஆஃப் செய்திருந்தாள்.

அந்தப் பக்கம் நெஞ்சு வெடிக்க அழுது கொண்டிருப்பாள் என்று புரிந்தது.

ஆழ்ந்த வருத்தத்தில் தூக்கமின்றித் தவித்துப் போனான்.

* * *

இந்த இரண்டு தடவையாக நன்றாகப் பேசுகிறாரே என்று சந்தோஷமாயிருந்தாள்.

எப்போதோ படித்திருந்தாள்!

வெளியில் தவறு செய்கிற ஆண்கள் தங்கள் தவறுகளை மறைப்பதற்காக வீட்டில் மனைவியைத் தாங்குவார்கள் என்று. அந்த சைகாலஜிதான் தன் கணவனை கடந்த இரண்டு நாட்களாக இறங்கி வரச் செய்தது என்று தெளிவாகத் தோன்றியது. ஆனால் இப்படியே சாண் ஏறினால் முழம் சறுக்குகிற வாழ்க்கை எத்தனை நாளைக்கு?

வரட்டும்!

அவருடைய அம்மாவும் வரட்டும்! பேசி முடிவு செய்துவிட வேண்டும். இப்படியே விட்டால் சரி வராது. ஒன்று

ஒழுங்காகத் தன்னோடு வாழ்க்கை நடத்த வேண்டும் இல்லையென்றால் டிவோர்ஸ் என்று போய்விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அவள் உள்மனது கெக்கலித்தது!

என்னதான் ஏழாம் பொருத்தத்திலேயே இருந்தாலும் மாதவன் உள்ளூரில் இருக்கிறான், வீட்டில் இருக்கிறான் என்பதிலேயே தன் மனதுக்கு ஒரு நிறைவு கிடைக்குமே அதை விட்டு விட முடியுமா என்ன?

நின்று போன கல்யாணம் நடந்து விட்ட திருப்தியில் அம்மாவும், சகோதரனும் இருக்கிறார்கள். தான் போய் வீட்டில் நின்றால் அவர்கள் அவமானத்தில் புழுங்கி விடுவார்கள்.

பேசாமல் அவர் போக்குக்கு இணங்கி விட்டால்! அது எப்படி? தன்னை ஒரு தூசு போல நடத்துகிற கணவனுக்கு எப்படி இடம் கொடுப்பது?

எவ்வளவு அவமானப்படுத்தினாலும் பொறுத்துக் கொள்வதற்கு அவள் ஒன்றும் இலவசமாக வந்த பொருள் அல்ல. மனுஷி. சக மனுஷி. அவன் வாழ்க்கைத் துணைவி. அவர் அதை புரிந்து கொண்டேயாக வேண்டும்.

தான் அதனைப் புரிய வைக்கத்தான் வேண்டும். "ஆவது ஆகட்டும்" என்று இன்னொரு மனது திரும்பிக் கொண்டது.

அவளும் உறக்கமில்லாமல்தான் இரவைக் கழித்தாள்.





# 23

யோசனையிலேயே அமர்ந்து கொண்டிருந்தாள் ல்லிகா. அப்படி அவள் சிந்தனையைக் கிளறுவதற் கவே வந்து விட்டுப் போயிருந்தார்கள் இரண்டு பேர்.

முத்துராமனும், கல்யாணியும்.

"மல்லிகா.. மேடம்! தயவு செய்து புரிஞ்சுக்குங்க.. பசாம இருந்த சுபத்ரா மனசை குழப்பி விட்டதே நான் ன். நான் போட்டுக் குழப்பின குழப்பல்ல ஒருவேளை தவனுக்கு நம்ம மேல இன்ட்ரஸ்ட் இருக்குமோன்னு பத்ராவுக்கே தோணிப் போச்சு."

முத்துராமன் இடை புகுந்தான்.

"ஆமாங்க! டெமான்ஸ்ட்ரேஷன் இஃபெக்டுன்னு சொல்லுவாங்களே.. அது மாதிரி சினிமா தியேட்டரை ட்டு வெளியே வந்தவங்களைப் பாருங்க. என்னமோ தான் ன் ஹீரோ போலவும், ஹீரோயின் போலவும் நினைச் குவாங்க.. அது மாதிரி.. இவ போட்ட சாம்பிராணியில பத்ரா மேடம்.. அப்படியும் இருக்குமோன்னு நினைக்க ரம்பிச்சுட்டாங்க போல. சும்மா சொல்லக் கூடாதுங்க.. ள் வைஃப் இருக்காளே பேசணும்னு நினைச்சா பாய்யைக் கூட நிஜம்னு நம்ப வச்சுடுவா" என்றான் றே கசப்புணர்வோடு.

கல்யாணியும் முகம் சுண்டிப் போய் அமர்ந்து கொண்டிருந்தாள்.

மல்லிகா மெல்லிய குரலில் பேசினாள்.

''சார்! அந்தப் பிராப்ளம் முடிஞ்சு இது ரெண்டு மூணு லேடீஸ் சேர்ந்துகிட்டு வெட்டியா ஏற்படுத்தின குழப்பம்கிறது எனக்குப் புரிஞ்சு போச்சு. இப்ப எங்களுக்குள்ளே இருக்கிற பிரச்சினை வேற மாதிரின்னு நினைக்கறேன்''

முத்துராமன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''சரிங்க.. மேடம்! இருந்தாலும் எங்களால உங்க குடும்பத்துல் ஏற்பட்ட குழப்பத்துக்கு மன்னிப்புக் கேட்கலாம்னு வந்தோம்'' என்றாள் கல்யாணி.

''போனது போகட்டும்.. விடுங்க!'' என்றாள் மல்லிகா.

''மேடம்! தப்பா நினைக்கலேன்னா.. உங்க பிராப்ளம் என்னன்னு சொன்னீங்கன்னா..'' என்று முத்துராமன் இழுத்து நிறுத்த மறுபடியும் மல்லிகா பெருமூச்சு விட்டாள். பிறகு சொன்னாள்.

''எங்க ரெண்டு பேருக்குமே கோபம் என்னன்னா நமக்கு நெருங்கினவங்க. நாம உயிரா நினைக்கறவங்க எப்படி.. நம்மளை இப்படி நடத்தலாம்கறதுதான்'' என்றாள்.

உபசரித்து விடை கொடுத்து அனுப்பினாள்.

முத்துராமன் கனகாரியமாக மல்லிகா சொன்ன விஷயத்தை தினேஷுக்கும், ஷைலஜாவுக்கும் ரிப்போர்ட் செய்யத் தவறவில்லை.

* * *



''ஐயோ!'' என்று கிட்டத்தட்ட அலறி விட்டாள் மல்லிகா.

''ஆமாங்க! நல்ல பலமான அடி! ரோட்ல குறுக்கே வந்த பைக்குக்காரன் அடிச்சுட்டான். இவரு ஏதோ ஞாபகத்துல வந்திருக்காரு போல இருக்கு. இப்பத்தான் ஆபீஸ் குள்ள கொண்டு போறாங்க.. பக்கத்துலயே டாக்டர் ஒருத்தர் இருக்காரு. கூப்பிடப் போயிருக்காங்க'' என்று சொன்னதற்குப் பின் போனை வைத்து விட்டார்கள்.

மல்லிகா அடுப்பில் பாலை வைத்திருந்தாள். அதை அப்படியே ஆஃப் செய்தாள்.

அவசரமாக நைட்டியிலிருந்து புடவைக்கு மாறினாள். மடமடவென்று அறைக் கதவுகளையெல்லாம் பூட்டினாள். கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

வெளியே வந்து கதவைப் பூட்டினாள்.

தெருவுக்கு வந்தாள்!

காரை மனோகரன் எடுத்துக் கொண்டு போயிருந்தான்.

கலைந்த தலையும், கண்களில் கண்ணீருமாக அவள் நிற்பதைக் கண்ட எதிர்த்தாற் போலிருந்த அந்த சின்ன மளிகைக் கடைக்காரர் மாதவனை அறிந்தவர் என்பதால் இறங்கி வந்து,

''என்னம்மா?'' என்றார்.

''எனக்கு.. ஆட்டோ.. வேணும். அவசரமா அவரோட ஆபீசுக்குப் போகணும்'' என்றாள் படபடப்பாக.

ஏதோ அவசரம் என்று புரிந்து கொண்ட அவர் எதிரே இருந்த ஓர் ஆட்டோ ஸ்டாண்டில் இருந்த ஆட்டோக் காரரை,

''லோ! இல்லி.. பாரே'' என்ற வரவழைத்து ஏற்றி அனுப்பி வைத்தார்.

பத்து நிமிடப் பயணம் ஏதோ பாலைவனத்தைக் கடப்பது போல் பெரும் சுமையாக இருந்தது.

'பாவி.. நான்! எப்பப் பாரு மூளைக்கு வேலை கொடுக்கிற தொழில்ல இருக்காருன்னு கூட புரிஞ்சுக்காம அவரை சந்தோஷமா வச்சுக்காம.. அப்படித்தான் அவர் கோபமா நடந்துகிட்டா என்ன.. கொஞ்ச நாள் விட்டுக் குடுத்தா.. புரிஞ்சுக்க.. மாட்டாரா? பெரிய சுயமரியாதை இப்ப முதலுக்கே மோசம் வந்துச்சுன்னா.. யாருகிட்டே போய் உன் சுயமரியாதையைக் காட்டுவே...' என்று தன்னைத்தானே திட்டிக் கொண்டாள்.

வேண்டாத தெய்வத்தையெல்லாம் வேண்டிக் கொண்டாள்.

'எந்தக் குறைபாடும் இல்லாம.. காப்பாத்திக் குடு. அப்புறம்.. அவரை சந்தோஷமா வச்சுக்க என் தோலை செருப்பாக்கி உழைக்கிறேன்.'

அந்தப் பெரிய கட்டிடத்தின் முன்னால் இறங்கி ஆட்டோக்காரரைப் பார்க்க.

''அம்மா..! நீவு ஒகுறி. ஆ மேல பந்து பைசா ஈசுகோந் தீனு!'' என்று அனுப்பி வைத்தான். அவன் அலுவலகப் பெயர் சொல்லி விசாரித்தாள்.

இரண்டாவது மாடி என்றார்கள்!

லிஃப்டைப் பற்றிக் கவலைப்படாமல் படிகளில் ஏறினாள்.



அவள் தோற்றத்தையும் கண்ணீரும் கம்பலையுமாய் அவள் ஏறுவதைப் பார்த்த எதிரில் வந்த இளைஞர்கள் ஒதுங்கி வழி விட்டார்கள்.

வரவேற்பறையில் ஒரு இளைஞன்தான் இருந்தான்.

''நீவு யாருனே நோடு பேக்கு?'' என்றான்.

''நான்.. நான் மாதவனின்'' என்று அவள் தேம்புவதைப் பார்த்து அவன் சட்டென்று எழுந்து உள்ளே போனான்.

அது உள்ளே பெரிய அலுவலகம் போலும். அவன் தள்ளு கதவைத் திறந்து கொண்டு போய் இரண்டு நிமிடங்களுக்கு மேலானவுடன் அவளுக்குப் பொறுக்கவில்லை.

சட்டென்று எழுந்து தள்ளு கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

எட்டிய மட்டும் பார்வையைச் செலுத்தினாள்!

காபின்கள் மாதிரிச் சிற்றறைகளாகத் தடுத்திருந்தார்கள். அவரவர்கள் பாட்டுக்கு அவரவர்கள் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

எந்த சலசலப்பும் இருந்தாற்போல் தெரியவில்லை. அப்படி ஒரு விபத்து நடந்திருந்தால் ஒரு பரபரப்பு இருக்குமே.. அப்படி எதையும் காணவில்லை.

''யார் வந்தால் என்ன? போனால் என்ன? என்பது போல் அவரவர் தலையைக் குனிந்து கொண்டு கம்ப்யூட்டரோடு உறவாடிக் கொண்டிருந்தார்கள்.

மல்லிகாவுக்கு ஒரே குழப்பம்!

அந்தப் பெரிய ஹாலில் மறுகோடியில் இருந்து மாதவன் தனது அழுத்தமான நடையில் வந்து கொண்டிருந்தான்.

மாதவனின் பார்வை அவள் மீது லயித்திருந்தது. முகத்தில் ஏகப்பட்ட கேள்விகள்.

'இவள் எதற்கு இந்த நேரத்தில் வந்தாள்? அதுவும் பரபரப்பாய்!' என்று எண்ணிக் கொண்டான் போலும். அந்த எண்ணமெல்லாம் அவன் முகத்தில் வெளிப்படை யாகத் தெரிய பாதி தொலைவு கடந்து வந்து விட்டான்.

அது வரையிலும் காணாத காட்சியைக் கண்டு விட்டவள் போல் அவனைத் திகைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தவள் தன்னை மறந்து அவனை நோக்கி ஓடினாள்.

கண்களில் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருக்க இரு கைகளாலும் அவன் முகத்தைக் கைகளில் ஏந்தி சற்றே எம்பி நின்று இரு கன்னங்களிலும் மாறி மாறி இதழ் பதித்தாள்.

மாதவனுக்கும் இது ஒரு அதிரடித் தாக்குதலாக இருந்தது. மெல்ல அணைத்துக் கொண்டவன் அவள் தலையைக் கோதிக் கொடுத்தான்.

''ம்ல்லி! வாட்ஸ் திஸ்! என்ன ஆச்சு?'' என்றான்.

அதே நேரம் சுற்றுப்புறத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த மாற்றங்களை அவர்கள் அறியவில்லை.

எல்லாக் கேபின்களிலும் கம்ப்யூட்டர் முன்னால் அமர்ந்து ஆழ்ந்து போயிருந்தவர்கள் மெதுவாக எழுந்



...ர்கள். ஒருவரை ஒருவர் கேள்விக் குறியாகப் பார்த்துக் ...ாண்டனர் பின்னர் எல்லார் முகங்களிலும் புன்னகை ...லர்ந்தது.

அதே நேரம்!

உள்ளே கான்ஃபிரன்ஸ் ஹாலில் அமர்ந்து ஏதோ ...க்கியமான விவாதத்தில் இருந்த அலுவலர்களும் ...ழுந்து வந்தார்கள்.

அன்றைக்கு சி.யி.ஓ.வும் இருந்தார்!

அந்த அறையின் கதவில் சாய்ந்தாற்போல் நின்றபடி ...க்கிற காட்சியைப் பார்ப்பதை எல்லாரும் திரும்பிப் ...க்க ''உஷ்'' என்பது போல் சைகை காட்டி விட்டு ஒரு ...ும்புச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றார்.

இதை எதையும் கவனிக்கும் நிலையில் மல்லிகா ...க்கவில்லை.

''மாதவன்! உங்களுக்கு.. உங்களுக்கு.. அடி.. கிடி ...வும் இல்லையே..'' என்றாள் தேம்பலை அடக்கியபடி.

''இல்லையே!'' என்றான்.

லேசாக உடல் நடுங்கி நிற்கிற அவளைத் தட்டிக் ...டுத்து மார்பில் சாய்த்துக் கொண்டான்.

''பின்னே! உங்களுக்கு பைக்ல போயிட்டிருக்கையில் ...ல அடி.. நல்ல காயம்னு.. போன் வந்துச்சு..'' என்றாள் ...லாக.

''ரிலாக்ஸ்.. மல்லி.. ரிலாக்ஸ்.. அப்படியெல்லாம் ...வும் ஆகலே'' என்று சொன்னவன் சூழ்நிலை மனதில் ...ய சுற்று முற்றும் பார்த்தான்.

அந்தக் கணத்தில் ''ஹேய்'' என்று மொத்த ஆபீ குறும்பாகக் குரல் எழுப்ப இருவரும் திடுக்கிட்டு வில னார்கள்.

சி.யி.ஒ. சிரித்துக் கொண்டே உள்ளே போனார். மல் காவை வெட்கம் பிடுங்கித் தின்ன திணறிக் கொ நின்றாள்.

மாதவன் தனக்கு முன்னால் இருக்கிற கேபினி இருந்த சாஃப்ட்வேர் என்ஜீனியரிடம்,

''இல்லப்பா! எனக்கு ஆக்ஸிடென்ட்ன்னு யா போன் பண்ணியிருக்காங்க.. அதான் பதைச்சுப் போய் வந்திருக்காங்க'' என்று சொல்ல அந்த செய்தி கே கேபினாகப் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

''மல்லி! வா முன்னால் கெஸ்ட் ரூம்ல உட்கா பேசுவோம்'' என்று தோளில் கை போட்டு அணைத் கொண்டு போனான்.

கை அழுத்தமாகவே படிந்திருந்தது.

''அது சரி! அதுக்காக.. இப்படி கலைஞ்ச தலை கண்ணீருமாவா.. வருவாங்க?'' என்றான் கண்கள் குறும்பு மின்ன.

அறைக்குள் போனவுடன் அவள் மறுபடியும் நெரு நின்று கொண்டாள்.

''உங்களுக்கென்ன தெரியும்! எனக்கு உயிரே போ போல ஆயிடுச்சு..'' என்றாள் கோபம் போல.

''ஐ கேன் அன்டர்ஸ்டாண்ட்'' என்றான். புன்ன தான்.



''உட்கார்!'' என்று எதிரில் அமர்த்திக் கொண்டான்.

ஆழமாகப் பார்த்தான்.

விழுங்கி விடுகிறாற் போல் இருந்த அந்தப் பார்வை ல் சிக்குண்டு அவள் திணறிப் போனாள்.

''ஸோ! தி கேட் இஸ் அவுட் ஆஃப் தி பேக்..'' என்று ரித்தான்.

அந்த சிரிப்பில் இருந்த அழைப்பையும், பொருளை ம் கண்டு அவள் திணறிப் போய் முகம் சிவக்கையில் னேஷும், சிவகுமாரும், ஷைலஜாவும் மெல்ல எட்டிப் பார்த்தனர்.

* * *

மல்லிகாவுக்கு இருப்பே கொள்ளவில்லை.

மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தாள்.

ஷைலஜா இரு உள்ளங்கைகளையும் கன்னத்தில் தித்துக் கொண்டு மேஜை மேல் முழங்கைகளை ன்றிக் கொண்டு குறுஞ்சிரிப்புடன் மல்லிகாவின் ரபரப்பை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஷைலாக்கா..! எல்லாரும் சிரிச்சாங்களா? ரொம்பக் கேவலமா நினைச்சிருப்பாங்களோ?''

''ஏன்! ரொம்பக் கேவலமா நினைக்கிற அளவுக்கு நீ ன்ன தப்பு செஞ்சே? வீட்டுக்காரருக்கு அடிபட்டிருச் ன்னு நியூஸ் கேட்டு பரபரப்பா.. வந்தே! மனுஷனை முழுசாப் பாத்தவுடனே சந்தோஷத்தையெல்லாம் உன்னை றியாமல் வெளியே கொட்டினே! இது ஒரு தப்பா!''

"இல்ல அதுக்கில்லக்கா.. இருந்தாலும்..! அவரு வே
இப்ப வந்து என்ன சொல்லுவாரோ தெரியல."

"ஒண்ணும் சொல்ல மாட்டாரு! இன்ஃபாக்ட் எப்ப
வீட்டுக்கு வருவோம்னு துடிச்சுகிட்டிருப்பாரு. ஒரு சின்
வேலையிருக்கு. அதை முடிச்சுட்டு 'என் செல்லமே.. எ
தங்கமேன்னுட்டு ஓடி வந்துடுவாரு''' என்று கே
செய்து சிரித்தாள்.

"போங்கக்கா!" என்று சிணுங்கிக் கொண்டாள் மல்லி

அதே நேரம்!

மாதவன் அங்கே நண்பர்களுக்கு நடுவில் சிக்கி
கொண்டு விழித்துக் கொண்டிருந்தான்.

"அடா! அடா! அடா! என்னா.. ரொமான்ஸ்டா.. சினி
மாதிரி இருந்துதுடா.."

"ஏண்டா.. மச்சி! ஆபீஸ்லயே இந்த லெவலு
இருந்துதுன்னா.. வீட்ல எப்படி இருக்கும்?"

"சும்மாயிருங்கப்பா!" என்றான் மாதவன். ஆனா
உள்ளுக்குள்ளே யார் போன் செய்திருப்பார்கள் என
எண்ணம் ஓடிக் கொண்டேயிருந்தது.

சிவகுமாரும், தினேஷும் கொஞ்சம் கூடுதலாக
கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள்.

மீண்டும் அந்தக் காட்சி மாதவன் மனதில் ஓடியது!

எல்லாரும் மேடி! மேடி! என்று சிரிப்பதைக் கண
வுடன் இருவரும் வெட்கத்துடன் விலகிக் கொண்டார்



"ஹேய்! வா!" என்று முன்னறைக்கு அழைத்துச்
ன்றவுடன் சற்று ஆசுவாசப் படுத்தினான். தினேஷும்
ஷலஜாவும் எட்டிப் பார்ப்பதைக் கண்டவன் முகம்
வக்க,

"உள்ள வாங்கடா!" என்றான்.

ஷைலஜா நல்ல பிள்ளையாகப் போய் சூடான காபி
கொண்டு வந்து மல்லிகாவுக்குக் கொடுத்தாள். மல்லிகா
யக்காமல் வாங்கிக் கொண்டாள்.

"என்னத்துக்கு இப்படி பயந்து நடுங்கறே! ரிலாக்ஸ்"
ன்று மறுபடியும் தேற்றினான் மாதவன்.

"இல்லே! பயங்கரமான அடி! ரத்தம் ரொம்பப்
போயிருச்சுன்னு.." என்று சொன்னவள் நினைக்கவும்
பந்தாற் போல் கண்களை மூடிக் கொண்டாள்.

"சரி.. சரி.. விடு.. லெட்ஸ் ஃபர்கெட் இட்" என்றவன்.

"டேய்! நீ வேண்ணா சிஸ்டரைக் கூட்டிட்டுக் கிளம்
டா! நான் சொல்லிக்கறேன்" என்றான் தினேஷ்.

மாதவன் தயங்கினான்.

"இல்லடா! இன்னும் ஒரு டூ அவர்ஸ் வொர்க் இருக்கு.
முடிச்சர்றேன். பாதியில விட்டா.. பிராப்ளமாயிரும்"
என்றான்.

ஷைலஜாவைப் பார்த்தான்.

"ஷைலு! நீ கொண்டு போய் விட்டுட்டு கொஞ்சம்
நேரம் நான் வர வரைக்கும் இருக்கியா! இப்ப ரொம்ப
டென்ஷனலா இருக்கா" என்றான் தயக்கத்துடன்.

''வித் பிளஷர்'' என்று உற்சாகமாக ஷைலஜ எழுவதைக் கண்ட தினேஷ் முறைத்தான்.

''முக்கியமா வேலை இருக்கற நேரத்துல கிளம்பிடு வியே!'' என்றான்.

''சும்மா அலட்டிக்காதே மேன்! நீ சும்மா அலட்டி காதே! பிராப்ளம் சால்வ் பண்ணறதுக்குத்தான் நம ஜீனியஸ் இருக்காரே'' என்று மாதவனின் கன்னம் வழித்த திருஷ்டி கழிக்கிறாற் போல் நடித்துக் காட்டினாள்.

மல்லிகா கண்கள் அகல விரிய அதைப் பார்த்து கொண்டிருப்பதை கவனித்தான் போலும் மாதவன் அவன் கண்கள் அவள் மீது ஆழப் படிந்து மீண்டன.

மல்லிகா படபடப்புடன் கண்களைத் தாழ்த் கொண்டாள்.

தினேஷைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டிக் கொண் ஷைலஜா.

''சரி.. நாங்க கிளம்பறோம். இனிமே இங்க இருந்தா சரி வராது..'' என்றாள்.

அப்படி வந்தவர்கள்தான் இப்போது மாதவனின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அந் இடைப்பட்ட நேரத்துக்குள்ளாக பரபரப்பைத் தவிர்ப்ப காகவோ என்னவோ டிபன் செய்வதில் ஆழ்ந்தாள்.

ஒரு வழியாக மாதவன் வந்தான். தனியாக வில்லை. சிவகுமாரும், தினேஷும் உடன் வந்தார்கள்

வழியிலும், வீட்டுக்கு வந்ததற்குப் பிறகும் மாதவன் ''யாருடா.. அந்த மாதிரி போன் பண்ணியி பாங்க'' என்று கேட்டுக் கொண்டு வந்தான்.



''யாருக்குத் தெரியும்'' என்று சொல்லி வைத்தாற் பால் தோள் குலுக்கினார்கள் இருவரும்.

மல்லிகா செய்திருந்த டிபனையும் சாப்பிட்டு விட்டு று நேரம் ஆபீஸ் கலாட்டாக்களைப் பேசிச் சிரித்தபடி ருந்தவர்கள் புறப்பட்டார்கள்.

''சரிடா! நாங்க கிளம்பறோம்!'' என்று கிளம்பினார்கள்.

கதவை மூடுவதற்கு முன்பாக சிவகுமார் மட்டும் ள்ளே தலையை நீட்டி.

''டேய்! போன் பண்ணினது யாருன்னு கேட்டுகிட் ருந்தியே'' என்று சொன்னவன்.

''நாங்கதான் போன் செய்தோம்'' என்று அவர்கள் ழக்கமாகப் பேசிக் கொள்ளும் உதட்டசைவு முறையில் தரிவித்துவிட்டு தலையை லபக்கென்று இழுத்துக் காண்டான்.

சிரித்துக் கொண்டே கதவைத் தாழிட்ட மாதவன் வலுடன் மல்லிகாவைத் தேடினான்.

சமையலறையில் வெகு மும்முரமாக எதையோ டுக்குபவள் போல் பாவனை செய்து கொண்டிருந்த னைவியை நெருங்கினான்.

பின்னாலிருந்து கைகளால் வளைத்துக் கொண்டான். ட் வாஸ் எ கிரேட் ஷோ'' என்றான்.

பின்கழுத்தில் இதழ்கள் பதிய முணுமுணுத்தான். மல்லத் தன்புறம் திருப்பினான்.

மல்லிகா அவன் இழுப்புக்கு வளைந்து கொடுத்தாலும் வன் முகத்தில் தன் கண் பார்வை பதிய பார்வையை

விடுவித்துக் கொள்ள முடியாமல் பார்த்துக் கொண் தாள்.

''தட்ஸ் குட்!'' என்று மறுபடியும் அடிக்குர சிரித்தான்.



# 24

கதவைத் திறந்த தேவி ஆச்சரியத்தில் திகைத்தா

"அத்தான்! என்ன இது!" என்றாள்.

"ஃப்ளைட்ல வந்தேன்!" என்று சிரித்தான் சிவகும

விமல்ராஜும், அவன் மனைவியும் ஓரக் கண்ண பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

''மாப்பிளே! கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க! அப்புறம் வோம்'' என்று ஒதுங்கிக் கொண்டார்கள். தங்கள் அறைக் போன சிவகுமார் மனைவியின் தோள்களைப் பற்றி எதி நிறுத்திக் கொண்டான்.

லேசாக மேடிட்ட வயிறு. பூசினாற்போல உடம்பு முகத்தில் வீசிய ஒளி என்று மனைவியிடத்தில் தெரி தாய்மைப் பொலிவை ரசித்துக் கொண்டான்.

''ஏன்.. தேவி! அதென்ன.. வயித்துல பிள்ளை சுமக்கும்போது பெண்கள் முகத்தில் அப்படி ஒரு அழகு என்று அதிசயித்துக் கொண்டான்.



''அது.. ஒருவிதமான பெருமை. வெற்றிகரமான ம்பத்தியத்துக்கு ஒரு அடையாளமா உள்ளே குழந்தை ருக்குங்கற ஒரு சந்தோஷம்..'' என்றாள்.

லேசாக அணைத்துக் கொண்டான்.

''ஹேய்! இன்னும் ஒரு ரெண்டு மூணு மாசத்துக்கு ங்கயே இரு.. அப்புறம் ஏழாம் மாசம் இங்க வந்தரலாம்'' ன்றான்.

அவள் சிரித்தாள்.

''சிரிக்காதடி. அம்மா சொல்லி அனுப்பிச்சாங்க. ட்டிட்டு வந்துருடா.. நான் பாத்துக்கறேன்னு.. இந்த திரி ஒரு மினுமினுப்போட நீ நிக்கறதைப் பாத்ததுக்கப் றம்.. வீட்டுக்குப் போனா.. உன் நினைப்பாவே ருக்கு..''

"அப்புறம்.. நீங்க.. தொல்லை பண்ணுவீங்களே?"

''ஓஹோ! அது தொல்லையா? அந்தத் தொல்லை னாலதான்.. இப்ப இப்படிப் பெருமையா.. நடமாடறே!''

"ஓ.கே.! ஓ.கே.! இனிமையான தொல்லை போதுமா?" ன்றாள்.

''தேவி! நான் இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா ருக்கேன்.. ஏன்னு கேளு!''

''சரி.. ஏன்னு சொல்லுங்க!'' என்றாள்.

''தி கிரேட் மாதவனும், தி ஸ்வீட்டெஸ்ட் மல்லிகாவும் டச் அப் பண்ணிகிட்டாங்க.''

''ரியலி!'' என்று உண்மையாகவே உற்சாகமானாள் தவி.

''ஆமா! இன்னைக்கு என்ன நடந்துச்சு தெரியுமா நான், தினேஷ், ஷைலஜா எல்லாம் சேர்ந்து ஒரு தி கொளுத்திப் போட்டோம் பாரு. மல்லிகா பறந்தடி கிட்டு ஓடி வந்து ஆபீஸ்ல வச்சு ஒரே ரொமான்ஸ்தா போ'' என்று கலகலவென்று சிரித்தான்.

விரிவாகச் சொன்னான்.

கண்கள் மின்ன தன் தோழியின் இல்லற வாழ்க்கை பிரச்சினை தீர்ந்ததை ஆசையுடனும், சிரிப்புடனு கேட்டுக் கொண்டாள் தேவி.

அவளது மகிழ்ச்சியான முகத்தைப் பார்க்க அவனுக்கும் மனம் நிறைந்தது. காதல் பொங்கியது. கடைசியில் தே சொன்னாள்.

''பாவம்! மல்லிகாவும், மாதவன் அத்தானும் யாரோ செஞ்ச குழப்பத்துல சிக்கிட்டாங்க. எங்கே வாழ் கையைத் தொலைச்சுடுவாங்களோன்னு எனக்கு உள்ளு பயம்தான். ஆனா, நல்லவேளை தப்பிச்சாங்க'' என்றா

''நீ வேற! தப்பிக்கறதா.. சிக்கிட்டாங்க!''

..................!

''ஆமா! அன்புங்கற வலைக்குள்ளே சிக்கிட்டாங்க. இப்ப அநேகமா.. அங்கே.. ஒருத்தர் இன்னொருத்த கிட்டே சிக்குண்டு முழிச்சுகிட்டிருப்பாங்க'' என்று அட்டகாசமாகச் சிரித்தான் சிவகுமார்.

''ஐயோ.. போதுமே! இது நம்ம வீடில்லே.. அண்ண னும், அண்ணியும் இருக்காங்க'' என்று அடக்கினா தேவி.

* * *



''விடுங்க'' என்று வெட்கத்தில் விலகிப் பேசிற னைவியைப் பின் தொடர்ந்தான் மாதவன்.

உள்ளே போனவுடன் பீரோவைத் திறந்து எதையோ டுத்து வைத்தாள்.

மல்லிகா வியப்பாய் விழித்தாள்!

அவளது கல்யாணப் பட்டு. நகைகள்..

''மல்லி! நம்ம கல்யாணத்தப்ப.. நான் சரியான டில இருக்கலை. அப்ப மாதிரியே இப்ப இதெல்லாம் போட்டுட்டு அந்தப் புடவையைக் கட்டிட்டு வா..'' ன்றான்.

''இது என்ன ஆசை?'' என்பது போல் பார்த்தாள்.

''எல்லாம் நியாயமான ஆசைதான்'' என அவன் சிரிக்க வள் பணிந்தாள்.

அடுத்த அறையில் போய் அலங்கரித்துக் கொண்டு ந்தாள்.

அவள் உள்ளே நுழையும்போதே அவன் தனது ஜிட்டல் காமிராவில் பதிவு செய்து கொண்டான்.

தானும் உடன் நின்று பதிவு செய்து கொண்டான்.

''ஹேய்! தேவையில்லாம என்னை வருத்தி உன்னை ம் வருத்திகிட்டே..''

''ப்ளீஸ்! அதைப்பற்றி இப்பப் பேச வேண்டாமே!''

''ஆமா! இப்பப் பேச்சுக் கூடாதில்லே..!'' என்று ித்தவன் அவளை மேலே பேசவிடவில்லை. மறுநாள் லை!

''டேய்! இன்னைக்கு வீக் எண்ட் மட்டுமில்லாம மறுபடியும் நாலு நாளைக்கு லீவாம். நீ ஆபீஸ் பக்கமே வ வேண்டாம்னுட்டார் சி.யி.ஓ.'' என்று சிரித்தான் தினே

''ஓ!''

''ஆமா! அவனவன் பாட்டுக்கு ஆபீஸ்ல ரொமான்ஸ் பண்றாங்க. முடிச்சுட்டு.. வரச் சொல்லுங்கப்பா.. அப் படின்னாரு.''

''ஓ! கோபமா சொன்னாரா?''

''டேய்! சீரியஸ் மாமா! கோபமாவெல்லாம் ஒண்ணு சொல்லலே. சிரிக்கிறாரு'' என்றான்.

''ஓ!'' என்று மறுபடியும் முகம் சிவந்தான் மாதவன்.

''சரிடா..! போனை வைக்கிறேன்'' என்று தினே வைத்தான்.

அருகில் நின்ற மல்லிகா கேள்விக் குறியாய் அவன் முகம் பார்த்தாள்.

''தினேஷ் கலாட்டா செய்யறான். சி.யி.ஓ. நாலு நாளைக்கு லீவு குடுத்திருக்காராம்'' என்றான் முகம் சிவக்க

மல்லிகாவுக்குள் சற்றே குழப்பம் ஏற்பட்டது.

''பின்னே.. தினேஷ் அண்ணா.. ஏன்?'' என்றவள் 'இனிமேல்.. அந்தப் பேச்சு எதுக்கு?' என்று எண்ணியவள் போல் நிறுத்தினாள்.

மாதவன் அருகில் இழுத்து அமர்த்திக் கொண்டான்.

''ஏதோ.. சொல்ல.. வந்தே? நிறுத்திட்டே!'' என் றான்.



''இல்லே! நீங்க ஆபீஸ் விஷயமா ரெண்டு மூணு நாள் பாயிருந்தீங்க.. இல்லே! அப்ப.. தினேஷ் அண்ணா ங்க வந்திருந்தாரு. கொஞ்சம் போட்டோஸ் கொண்டு ந்து காமிச்சாரு..'' என்றாள்.

''ம்..!''

''அதுல.. அதுல..!'' என்று நிறுத்தினாள்.

''போட்டோஸ்.. வச்சிருக்கியா?'' என்றான்.

''ம்..!'' என்று எடுத்து வந்து காட்டினாள். அதில் எல்லா பாட்டோக்களிலும் ஷைலஜாவும், மாதவனும் மட்டும் இருந்தார்கள்.

வாய்க்குள் முணுமுணுப்பாகத் திட்டிக் கொண்டான். திருடன்! வேணும்னே.. செஞ்சிருக்கான்..'' என்றான். னது காமிராவை எடுத்து வந்து அதில் இருந்த போட் டாக்களைக் காட்டினான்.

மாதவனும், ஷைலஜாவும் இருந்த அதே போட் டாக்கள் இருந்தன. ஆனால், இருவருக்கும் இரண்டு றத்திலும் வேறு ஆட்களும் இருந்தார்கள்.

சில போட்டோக்களில் தினேஷும், சிவகுமாரும் கூட இருந்தார்கள்.

மல்லிகா விழித்தாள்.

''தினேஷ் அண்ணா.. எதுக்கு இப்படி செஞ்சாரு'' ன்றாள்.

மாதவனுக்குப் புரிந்தது.

''அது வேற ஒண்ணுமில்லே. மல்லி! உனக்குப் பாறாமையைக் கிளப்பி விடறாங்களாம். அப்பத்தான்

எங்கே என்னை இழந்துடுவியோன்ற நினைப்புல படிஞ்சு வருவியாம்'' என்றான்.

பாதி பொய்க்கோபமும், பாதி உண்மையுமாக மல்லிகா சொன்னாள்.

''படிஞ்சு வர்றதா? அடிவயித்தையே கலக்கிட்டாங்க'' என்றாள் கலவரமான குரலில்.

''ஆமா! சில சமயங்கள்ல நண்பர்கள் நமக்கு நல்லது செய்யறதா நினைச்சுகிட்டு வம்பு பண்ணி வச்சர்றாங்க'' என்று சிரித்தான் மாதவன்.

''ஆனாலும்.. விவரமில்லாம நான் செஞ்சது தப்புத தான். தீர விசாரிக்காம கல்யாணத்தை நிறுத்தியிருக்கக் கூடாது இல்லே!'' என்றாள்.

மாதவன் மல்லிகாவின் முகம் நோக்கிக் குனிந்தான்.

''மல்லி! இப்ப நாம சந்தோஷமான மூட்ல இருக்கோம் எல்லா விஷயங்களையும் கண்டிப்பாய் பேசித் தெளிவு பண்ணிக்கலாம். ஆனா, இப்ப.. இல்லே! நாம எங்காவது வெளியூர் போலாமா?'' என்றான்.

''சரி!'' என்றான்.

''எங்கே போகலாம்?''

''நீங்களே முடிவு செய்ங்க..''

''மல்லி! மைசூருக்குப் பக்கத்தில் காவிரி ஆறு ஓடற ஏரியாவிலே என் ஃபிரண்டுக்கு தோட்டம் இருக்கு. அங்க போய்த் தங்குவோம். நேரம் கிடைக்கறப்ப பக்கத்துல இருக்கிற இடங்களுக்குப் போய்ப் பார்க்கலாம். இப்



எட்டு மணிக்கு அம்மா பேசறேன்னு சொல்லியிருக் காங்க..'' என்றான்.

சரியாக எட்டு மணிக்கு அம்மா போன் செய்தார்கள்.

''அம்மா'' என்றான் மகன் மகிழ்ச்சியாக.

மகனின் குரலில் தெரிந்த மாற்றம் அம்மாவுக்குள்ளும் மகிழ்ச்சி அலைகளை ஏற்படுத்தியது போலும்.

''என்னடா.. தம்பி! ரொம்ப சந்தோஷமா இருக்கே'' என்றார்.

''அது அது ஒண்ணுமில்லம்மா! ஆபீஸ்ல ஒரு நாலு நாள் லீவு குடுத்தாங்க.. அதான் நானும் மல்லிகாவும் ஒரு டிரிப் போயிட்டு வர்லாம்னு இருக்கோம்..'' என்றான்.

''எல்லாம் சரியாயிட்டுதா?'' என்று கேட்க நினைத்த அம்மா தனது மகன் எந்தப் பிரச்சினையையும் நேரடியாக இதுவரை பேசவில்லை என்பதை உணர்ந்தவராக ''சரிப்பா போயிட்டு வாங்க'' லீவு கிடைக்கும்போது போனாத் தானே உண்டு..''

''அம்மா.. மல்லிகிட்டே பேச்றியா?'' என்று அவள் கையில் நீட்டினான்.

''அத்தே!'' என்றாள் வெட்கத்துடன்.

''என்னம்மா.. வெளியூர் கூட்டிட்டுப் போறானாம். போயிட்டு.. வா..! அது மட்டுமில்ல.. சும்மா முடிஞ்சு போன விஷயங்களைப் பற்றிப் பேசிகிட்டிருக்காம.. இனி வரப் போற காலத்தை எப்படி சந்தோஷமாக் கழிக்க றதுன்னு.. யோசி..!'' என்றார்.

அதே நேரம்!

மாதவன் மெல்ல அவளைப் பின்னாலிருந்து கட்டி கொண்டு கழுத்தில் முகம் பதித்ததும் அவள் நெளிந் படி,

''சரிங்கத்தே!'' என்றாள்.

"போனை அவன்கிட்ட குடு..'' என்றார்.

அவன் வாங்கிக் கொண்டான். ஆனால் அவளைத் தன் கைப்பிடியிலிருந்து விலக்கிக் கொள்ளவில்லை.

''சொல்லும்மா!'' என்றான்.

''சரிடா! அவளை நல்லாப் பாத்துக்க.. சும்மா மிரு டாதே! என்ன? நேரமிருக்கும்போது கூப்பிடு'' என்றார்.

ஆஃப் செய்தான்!

''என்ன.. நீங்க! நான் ஏதாவது குரல் குடுத்திரு தேன்னா.. அத்தை அந்தப்புறம் என்ன நினைப்பாங்க..'' என்றாள் கோபமாக.

''என்ன நினைப்பாங்க. நிஜம்மாவே பிரியமா இரு காங்க அப்படீன்னு நினைச்சுக்குவாங்க..'' என்றான்.

முகத்தை இழைத்தபடியே பேசினான். திடீரென் சிரித்தான்.

''மல்லி! நீ ஆபீஸ்ல செஞ்ச கலாட்டாவிலே சிவ குமாருக்கு தேவி ஞாபகம் வந்துருச்சாம். ஐயா.. நேத்த சாயங்காலம் ஃபிளைட்ல போயிருக்காரு. அம்மிணியை பாத்துட்டு வர. இன்னைக்கு சாயங்கலாம் வருவாரு'' என்றான்.



இருவரும் சிரித்தார்கள்.

''மல்லி! இன்னைக்கு நீ சமைக்க வேண்டாம். காலைல பன் மட்டும் போதும். மத்தியானம் அண்ணன் வீட் க்கும் இந்தக் கடங்காரப் பசங்களுக்கும் எல்லாத்துக்கும் ரு காலா லஞ்ச் நல்ல ஹோட்டல்ல குடுத்தர்லாம். அப்புறம் பிற்பகல் கிளம்பறோம். ஓ.கே.வா?''

''ஐயோ! சமையல் வேலை இருந்தாத்தான்... நல்லது ங்ககிட்ட இருந்து தப்பிக்க முடியும் இல்லாட்டா...''

''இனிமே... எப்பவும் நீ என்கிட்டே இருந்து தப்பிக் வே முடியாது. அது மட்டுமில்ல... இத்தனை நாள் ன்கிட்டே இருந்து தப்பிச்சதுக்கும் சேத்து நீ காம்பன் ஸட் செய்ய வேண்டியிருக்கும்... புரியுதா?''

மல்லிகா சிணுங்குவாள் என்று அவன் நினைத்ததற்கு றாக அவள் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு.

''ம்... சரிங்க!'' என்றாள்.

மாதவன் மனம் நிறைந்த மகிழ்ச்சியிலும் குறும்புட ம் மறுபடியும் சிரித்தான்.

சீண்டிக் கொண்டேயிருந்தான்.

''என்ன இப்படி கலாட்டா செய்யறீங்க?'' காலைல பன் வேண்டாமா?'' என்று அவள் கோபிக்க.

''வேண்டாம்! இல்லேன்னா சிம்பிளா செய்'' என்று டனிருந்து உதவிகள் செய்தான்.

அவர்கள் சமையல் முடிப்பதற்கும் ''சித்தப்பா! த்தி...!'' என்று கூவியபடி ராகுலும், ரத்தியும் உள்ளே வும் சரியாக இருந்தது.

''சித்தப்பா! ஃபிரண்ட்ஸ் எல்லாம் ஒரு வாட்டி பஸ்ஸே போனாங்க. பஸ் பிரேக் டவுன் ஆயிடுச்சு... எல்லாரு பஸ்ஸைப் பின்னாலே தள்ளினாங்க'' பஸ் ஓடலே! ஏ சொல்லு!'' என்று கேட்டான் ராகுல்.

''மல்லி! ஆரம்பிச்சுட்டான்!'' என்று முணுமுணுத்த மாதவன்.

''தெரியலை! நீயே சொல்லு!'' என்றான் சற்றே கடு பாக.

''ஏன்னா! பின்.. பின் இல்லே... இந்த சேஃப்டி பின் அதால தள்ளினா... போகுமா? அதுதான் போகலை என்றான்.

''ஐயோ! இவன் தொல்லை தாங்கலை!'' என்று சுபத்ரா அடிக்க வர.

''பாவம். குழந்தைதானே!'' என்று மல்லிகா தடுக்க.

''அம்மாடி! குழந்தையா? பச்சைப் பாப்பாவுக்கும் நாலு கழுதை வயசு முடிஞ்சுருச்சு...'' என்று மேலு சுபத்ரா சொல்ல.

''ஒரு கழுதைக்கு எத்தனை வயசு?'' அதைச் சொல் மறுபடியும் கேட்ட மகனிடம் சுபத்ரா மல்லுக்கட மல்லிகா மறுபடியும் சமையலறையில் பாத்திரத் ஒழுங்கு படுத்த எழுந்து போனாள்.

மாதவன் நைஸாக நழுவிக் கொண்டு சமை லறைக்குப் போனான்.

''ஹேய்! பாத்தியா! இதுக்குத்தான் எங்கயா போலாம்னு சொன்னேன். இங்க பிரைவஸி கிடைக்க



சையா வர்ற குழந்தைங்களை நாம ஒண்ணும் சொல் வும் முடியாது'' என்றவன் நேற்றுப் போலவே இன்றும் ன்னாலிருந்து தழுவிக் கொண்டான்.

அதே சமயம்!

''ஏண்டா... மாதவா!'' என்று கேட்டுக் கொண்டே மனோ ன் ஹாலின் உள்ளே நுழைவது தெரிந்தும் கைப்பிடியை றுக்கினான்.

''பெரியத்தான்! பெரியத்தான்'' என்று அவள் பரபரக்க வன் விடாமல் கழுத்தில் இதழ் பதிக்க உள்ளே நுழைந்த னோகரன் ஒரு நிமிடம் திகைத்துப் போனான்.

வலது ஆட்காட்டி விரலால் நடு மண்டையை றிந்து கொண்டவன் ஒருவித சிரிப்புடன் வந்தபடியே ய் விட்டான்.

அவள் திமிறிக் கொள்ள மெல்ல விடுவித்தான்.

''என்னங்க நீங்க! கொஞ்சமாவது அறிவிருக்கா? ரியத்தான் வர்றது தெரிஞ்சும்...'' என்று பேசியவளை லே பேச விடாமல் தடுத்தான்.

''தெரியும்! நாம போய் நேரடியா அண்ணன் கிட்டே க்கம் செரல்லிகிட்டிருக்க முடியாது. ஆனா, இப்பப் து தெரிஞ்சுருப்பாரு இல்லே. இனி நிம்மதியா.. ப்பாரு. ஏன்னா, இந்தப் பிரச்சினையில உயிருக்கு லா வளர்த்த தம்பி, விவரமில்லாத வைஃப்னு ண்டு பேருக்கும் நடுவில சிக்கிகிட்டு மனசுக்குள்ள கிப் போனவரு அவருதான். இனி ஃப்ரீயாயிருவாரு'' றான் கண்ணம் இழைத்தபடி.

''ஓ!'' இப்படி ஒரு விஷயம் இருக்கோ!'' என்றவ மெல்லிய குரலில் கலீரென்று சிரித்தாள்.

''நல்லாத்தான் ஒரு சாக்கு கிடைச்சது உங்களுக்கு இல்லே!''

''எதுக்கு...!''

''நாள் முழுக்க அவங்க கண்ணுக்கு முன்னால இழைஞ்சுகிட்டே இருக்கறதுக்கு'' என்றாள் மல்லிகா

''ஹேய்! யு ஆர் கிவிங் மி ஐடியாஸ்'' என்று சிரித்தாள் ஆனால் உண்மையிலேயே தங்களின் நெருக்கம் பார் மனோகரன் முகம் மலர்ந்து கிடப்பதை உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் ரசித்துக் கொண்டான் மாதவன்.



## 25

**மா**தவன் தன்னைப் பார்க்காத நேரத்தில் எல்ல மல்லிகாவின் பார்வை அவனை விழுங்கிக் கொண்ட

''எப்படிப்பட்ட புதையலைத் தவற விட இருந்தோ கொஞ்சம் ஏமாந்திருந்தால்.... வாழ்க்கை பூரா இருவருக்கும் வெறுமையாயிருக்கும். அதோடு தீமைக்கு வெற்றியும் அல்லவா கிடைத்திருக்கும்.



எதேச்சையாகத் திரும்பிய மாதவன் மனைவியின் ர்வை பார்த்து மயங்கிப் போனான்.

''ஹேய்! அதென்ன.. ஆள் பாக்காத போது மட்டும் இப்படிப் பாக்கறே!'' என்றான்.

அவள் முகம் சிவந்து கிடக்கச் சொன்னாள்.

''பின்னே! நீங்க பாக்கற ஒரு மாதிரியான பார்வைக்கு திர்ப்பார்வை பார்க்க என்னால முடியுமா?''

அவன் சோபாவில் சாய்ந்து அமர்ந்து கொள்ள அவள் அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டு தனது பரிசை ழங்கினாள்.

''மல்லி!'' என்று அவன் உருகிக் கரைந்தான்.

''ஆமா! உங்களை சந்தோஷப்படுத்தறதுதான் என் ாழ்நாள் லட்சியம்'' என்றாள் உள்ளார்ந்த உணர்வு நிறைந்த குரலில்.

மாதவன் அவள் எதிர்பாராத நேரத்தில் சட்டென்று க்கி சோபாவில் அருகில் அமர்த்திக் கொண்டான்.

''எதனால இப்படி ஒரு முடிவு!'' என்றான்.

''இல்லே! யாரோ ஒரு மூணாம் மனுஷி, கல்யாணத் க்கு வந்தவங்க கிளப்பி விட்ட வதந்தியை நம்பி ங்களை மட்டமா நினைச்சேன்.. பாருங்க!'' அதனால.

மல்லிகா வெகு நாகரீகமாகத் தன் அண்ணியைப் றிய பேச்சைத் தவிர்ப்பதை உணர்ந்து கொண்டான்.

அவனே சொன்னான்.

''மல்லி! தர்ம சங்கடம் அதில்லே! எங்க அண்ண அதை நம்பித் தன்னைத் தானே குழப்பிகிட்டு.. எ லாரையும் குழப்பி.. சே...'' என்றான்.

''பரவாயில்லை! மறந்தர்லாம்...'' என்று தேற்றின மல்லிகா.

அவன் ஆழ்ந்த வேதனைப் பெருமூச்சு ஒன்ன வெளியிட்டான்.

''மல்லி! சொல்றது சுலபம்! புரிஞ்சோ, புரியாமலே அண்ணி வச்ச குற்றச்சாட்டு பயங்கரமான குற்றச்சாட்டு என்றான்.

மல்லிகாவும் பெருமூச்சு விட்டாள்.

''ஆமா! ஆனா, நீங்கதான் அவங்களை பாதபூஜை செஞ்சு... தாரை வார்க்கறதுக்கு அவங்களையே நிக் வச்சு... உங்க மனசுல என்ன இருக்குன்னு நிருபிச்சு டீங்களே!''

மாதவன் மல்லிகாவின் முகத்தை ஆழ்ந்து பார்த்தபடி சொன்னான்.

''மல்லி! இன்னொரு ஆங்கிள்ல யோசிச்சுப் பாரு எங்க அண்ணன் மட்டும் கொஞ்சம் சந்தேகப் பேர்வழி இருந்திருந்தா... நிலைமை என்ன ஆகியிருக்கும்.''

''எல்லாம் அந்தப் பழிகாரி கல்யாணியால் வந் வினை'' என்றவள் தொடர்ந்து,

''லேசா.. என்னமோ.. சுவாரசியத்துக்காகப் பேச மாதிரி.. பில்டப்.. பண்ணி அந்தம்மா.. எத்தனை பேரோ ழ்க்கையைக் கெடுத்துச்சோ..? அந்தம்மாவுக்கு யாரு தி வர வைக்கறது?'' என்றாள் வருத்தத்துடன்.

''ஓ! உனக்குத் தெரியாதில்லே! அந்தம்மாவுக்கு புத்தி ரவைக்கறதுக்கும்.. ஆட்கள் இந்த உலகத்துல இருக் ங்க..!'' என்று கலகலவென்று சிரித்தான் மாதவன்.

''ரியலி! யாரு!'' என்றாள் மல்லிகா ஆர்வமுடன்.

அவள் ஆர்வம் பார்த்து அவனுக்குள் சிரிப்பு.

''ஒ.கே.! அது ரொம்ப சுவாரசியமான கதை. ஆனா, தை உனக்குச் சொல்லணும்னா.. நான் கேட்கறது க்குக் கிடைக்கணும்..''

அவள் கொஞ்சம் முறுக்கிக் கொண்டாள். ஆனால், ட்டது கிடைத்தது.

''ஹேய்! இப்பத்தான்.. என்னைச் சந்தோஷப்படுத் துதான் வாழ்க்கை லட்சியம்ன்னு சொன்னே?''

''ஆமா!''

''அப்புறம்.. இப்படி முறுக்கிக்கறே!''

''ஐயோ..! மேடி.. இப்படி முறுக்கிகிட்டதற்கப்புறம் டைச்சாத்தான்.. சந்தோஷம்.. நீங்க கேட்டவுடனே.. டைச்சா உங்களுக்கு சந்தோஷமே இருக்காது.. ரியுமா?''

''ஆஹா? பயங்கரமான பில்டப்பா இருக்கே!'' இதெல் ம்.. எப்படி உனக்குத் தெரிஞ்சுது..!''

''எல்லாம் அனுபவப் பட்ட அக்காக்கள் சொல்லிக் டுத்ததுதான். சரி.. சரி.. பேச்சை மாத்தாம நான் கேட்ட தையைச் சொல்லுங்க..''

சொன்னான்..

எப்படி தினேஷும், ஷைலஜாவும் கல்யாணியி கணவன் முத்துராமனிடம் போனில் மாற்றி மாற்றி பேசிக் கதை செய்தார்கள் என்பதையும், மற்றவர்கள் நோக்கி எய்த அம்பு தன் மீதே திரும்பியபோது கல்யாண எப்படி வேதனைப்பட நேர்ந்தது என்பதையும் சுவாரசி மாகச் சொன்னான்.

இடையிடையில் விளையாடிக் கொண்டான். அவளு சரிக்குச் சரியாக விளையாடினாள்.

"கல்யாணியும், அவள் ஹஸ்பெண்டும் வந் என்னைப் பார்த்தாங்க.." என்று இருவருமே சொல்லி கொண்டார்கள். அவன் மார்பில் சாய்ந்து கொண மல்லிகா சொன்னாள்.

"அத்தான்! எல்லா மனுஷங்களுக்கும் மத்தவ களோட அந்தரங்கத்தைத் தெரிஞ்சுக்கறதுல ஆர்வ இருக்கு. அதனாலதான் கிசுகிசுவெல்லாம் ஜெயிக்கு பெண்களுக்கு அந்த ஆர்வம் கொஞ்சம் அதிகமா இருக்கு."

"மனித இயற்கைதான். அதிலயும் மத்தவங்களை காட்டிலும் தான் ஏதோ விதத்தில உயர்வுன்னு நிரூபிக் அர்த்தம் மனுஷனுக்குள்ளே இருக்கு."

"அது சரிங்க! ஆனா.. பெண்கள்ல படிச்சவங்கக இந்த மாதிரி ஊர் வம்புல மாட்டிக்கறதைப் பாத்தி கேன்.. சுவாரசியமா ஊர் வம்பு பேசறதையும் பாத்தி கேன்."



"அது அப்படித்தான். திறமையில்லாதவங்க.. திறமை ள்ளவங்களை எதிர்கொள்ள முடியாதபோது.. அவங் ளைப் பத்தி எதையாவது சொல்லித் தங்களைத் திருப்திப் டுத்திக்கறாங்க.." பேச்சுக்கு நடுவே மல்லிகாவின் முகம் ாடியது.

"என்ன மல்லி!" என்றான்.

"இல்லே! யாரோ கொளுத்திப் போட்ட திரிக்கு நாம லியாக இருந்தோமே. நீங்க.. நீங்க.. ஃபர்ஸ்ட் நைட் ன்னைக்கு.. முகம் இறுகிப் போய் வந்து நின்னீங்களே! ன்னால.. மறக்கவே முடியாது!"

அவன் ஆவேசமாக அணைத்துக் கொண்டான். அவள் தேறுவதற்கான அனைத்து முயற்சியையும் செய்தான். ஆனாலும் அவள் கண்களில் கண்ணீர் முட்டியது.

"மல்லி! உண்மையைச் சொல்லட்டா! அது நான் பாட்டுகிட்ட கவசம். என் மேலயே கோபம். முதல்ல பசி கல்யாணம் நின்னப்ப உன் மேல எனக்குச் சரியான காபம். ஆனா..! ரெண்டாம் தடவையா பேச்சு வார்த்தை டந்தப்ப.. என்னோட சுயமரியாதை அந்தக் கல்யாணத் க்கு பயங்கரமான எதிர்ப்பு தெரிவிச்சது. அவ பாட் க்குக் கல்யாணத்தை நிறுத்தச் சொல்வா! அப்புறம் டத்திக்கலாம்பா! அவ இஷ்டத்துக்கு நாம வளைஞ்சு டுக்கணுமான்னு. ஆனா, இரண்டாம் முறையா நடந்த பச்சு வார்த்தைக்கு என்னால தடை சொல்ல முடியலே! ன்னா, என்னையே என்னால ஜெயிக்க முடியலே! உன் மல வச்ச காதல்தான் ஜெயிச்சுது. அதனால என் மேலயே னக்குக் கோபம்."

...........!!

''அதனாலதான்.. நான் மறுபடியும் உன்கிட்ட பேசவ
இல்லே! போன் பண்ணவும் இல்லே!''

''ஓ!''

''ஒரு பக்கம், மனசு அந்த நாளை எதிர்பார்த்
கிட்டிருந்தது. ஆனா, இன்னொரு பக்கம்.. நமக்கு
தனிமை கிடைச்சவுடனே.. நம்மளை யாரு நம்பலே
னாலும் பரவால்லே! மல்லி நம்பியிருக்கணும்னு ஒ
கோபம்! இத்தனைக்கப்புறமும் அவளைக் கண்டவுட
உருகறியேன்னு என் மேலயே கோபம்.''

அவள் பெருமூச்சு விட்டாள்.

''புரியுதுங்க..'' என்றாள்.

''எங்கே! புரிஞ்ச மாதிரித் தெரியலியே!'' என்றான்.

அவள் விழித்தாள்.

''புரிஞ்சதுன்னா.. அதை வேற மாதிரி நிரூபிக்
ணும்மா'' என்றான். அடிக்குரலில் சிரித்தான்.

''ஆமா! ரெண்டு நாளா வேற என்ன செஞ்சுக்கி
டிருந்தேனாம்.''

''மல்லி! நமக்காக ஷைலஜா, தினேஷ், சிவகும
எல்லாரும் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்காங்க.''

''ஆமா!'' என்ற மல்லிகா குபுகுபுவென்று சிரித்தாள்.

''அதிலயும்.. உங்க ஷைலஜா இருக்காங்களே! ரொம
மோசமான ஆளு. மல்லி! ஜாக்கிரதை நீ கொஞ்ச



மாந்தீன்னா.. நான் மேடியைக் கொத்திட்டுப் போயிரு
வேன்னு மிரட்டினாங்க'' என்றாள்.

மாதவன் முகம் சிவந்தது. ''சே! அவ சும்மா அப்படிப்
பசுவா! உனக்குப் பொறாமை கிளப்பறதுக்காக அப்படிப்
பேசியிருப்பா! மேடி! பாரு..! உன் ஆளு.. கதறிக்கிட்டு
என்னைத் தேடி வர்ற மாதிரி செய்யறேன்.. பாருன்னு
சொல்லிகிட்டிருந்தா.. நிஜம்மாவே செஞ்சுட்டா!'' என்று
சிரித்தான்.

''ஐயோ! அதை மட்டும் ஞாபகப் படுத்தாதீங்க.. வீட்ல
இருந்து ஆட்டோ பிடிச்சு உங்க ஆபீசுக்கு வந்து
உங்களைப் பார்க்கறதுக்குள்ள.. குத்துயிரும், குலையு
யிருமா ஆகிப் போனேன். ஐயோ! யாருக்குமே அந்த
மாதிரி வேதனை வரக் கூடாது'' என்றாள்.

''ஈ.ஸி! மை.. டியர்! ரிலாக்ஸ்!'' என்று விதவிதமாகத்
தேற்றினான். இப்போதும் கூட அவள் உடல் நடுங்கியது.

''மேடி! நீயும் சரி.. மல்லியும் சரி.. இயற்கைக்கு எதிராக
போராட்டம் நடத்தறீங்க! கஷ்டப்பட்டு உங்களை
மாத்திக்கறீங்க..! ஏதோ ஒரு கூச்சம் உங்க ரெண்டு
பேருக்கும் நடுவில ஒரு மாயத்திரையா இருக்கு. அது
தானா உடையணும்.. இல்ல நீங்களா.. உடைக்கணும்னு
சொல்லுவா. சரி..! நாம கொஞ்சம் இயற்கையா இருக்க
ணும்னு.. நினைப்பேன். ஆனா.. அப்ப என்னவோ.. பயந்து
நடுங்கி நீ பின் வாங்கும்போது.. என்னையே சாட்டையில
அடிக்கணும்னு இருக்கும். அதனாலதான் கட்டுப்பாடா
இருந்தேன். ஆனா.. உன் விருப்பமில்லாம.. தொட்டது
தப்புத்தான்'' என்றான்.

அவள் புன்னகைத்தாள். ''வேண்டாம்.. விடுங்க..'' என்றாள்.

அப்போது அவள் காதருகில் கன்னம் இழைந்தபடி சொன்னான்..

''மல்லி! ஒரு விஷயம் சொன்னா.. அதிர்ச்சியாயிடுவே! அன்னைக்கு.. நீயாத்தான் என்கிட்டே... நெருங்கி..''

அவள் திகைத்தாள்!

''ஆமா..! மல்லி! நான் உன்னைக் கட்டாயப்படுத்தலே ரொம்ப இயற்கையா.. என்னோட பழைய.. மல்லிக உனக்குள்ளே இருந்த அந்த மல்லியா.. வெளிய வந் தருணம்ன்னு நினைச்சேன்.''

அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது.

''ஓ! அப்படியா!'' என்று தன் விரல்களால் அவன் வாயைப் பொத்தினாள்.

''சரி.. பிரச்சினை முடிஞ்சுடும்னு.. நினைச்சேன் ஆனா, மறுபடியும்.. வேதாளம் முருங்கை மரத்தில் ஏறினாப்ல..'' எனவும் அவள் குறுக்கிட்டாள்.

''என்னது! வேதாளமா?'' என முறைத்தாள்.

''ஆமா! அழகான வேதாளம். அந்த சமயத்துல நீயாத தான் அணுகினேன்னு. சொன்னா.. உன்னால ஜீரணிச் சிருக்க முடியாது.. சரி.. இந்தக் கோப நாடகமே கொஞ் நாள் நடக்கட்டும்னு முடிவெடுத்தேன்.''

''ம்..!'' என்றாள்.

''அதுக்குள்ளே.. அம்மா.. கொஞ்சம் விஷயம் தெரிஞ் மாதிரிக் காட்டிக்கவும்.. எனக்குக் கவலையாய் போச்சு



தைக் காட்டிலும்.. முதல்.. முதலா.. உன்னோட ராட்டத்தை ஆரம்பிச்சு நான் இனிமே வேலைக்காரி ன்னு.. சொன்னியே.. உள்ளுக்குள்ளே எவ்வளவு வதனைப்பட்டேன் தெரியுமா?''

''நான் சொன்னது பொய்!'' என்றாள்.

''வ்வாட்!''

''ஆமா! நான் புராணக்கதை படிச்சிருக்கேன். வைகுண் த்துல ரெண்டு பக்கமும் காவலர்கள் இருப்பாங்க. ல்லே! அவங்க.. ஒரு சமயம் விஷ்ணுவும், லட்சுமி தவியும் தனியா இருக்கற சமயத்துல..!'' என்றபோது வன் குறுக்கிட்டான்.

''பாத்தியா! கடவுள்களுக்கும் தனிமை தேவை ருக்கு'' என்றான்.

அவள் சிரித்தவள், அவன் தலையைக் கலைத்து ட்டாள்.

''விஷயத்தைக் கேளுங்க!'' என்றாள்.

''சொல்லு!'' என்றபடி இழைந்தான்.

''ரெண்டு பேரும் தனியா இருக்கும்போது ஒரு னிவர் வந்தாரு. காவலர்கள் அவர்களை உள்ளே விடத் யங்கறாங்க.. அப்ப.. முனிவர் கோபம் வந்து அவர்களைச் பிச்சாரு. அப்ப, விஷ்ணுவைப் பிரிஞ்சிருக்க முடியா ன்னு அவங்க கதற அப்ப விஷ்ணு கேட்டாராம். ல்லவங்களா பிறந்து ஏழு பிறவி கழிஞ்சு என்கிட்டே ந்து சேர்றீங்களா? இல்லே.. கெட்ட அரக்கர்களாய் பிறந்த ணு பிறவியிலே வந்து என்கிட்ட சேர்றீங்களா? அப்ப

டீன்னு.. அப்ப., அவங்க சொன்னாங்களாம்.. உலக எங்களைத் துரத்தினாலும் சரி கெட்டவர்களாப் பொறந் மூன்று பிறவியில உங்ககிட்டே வந்தர்றோம். அ மாதிரி.. சை..! என்ன இது..'' என்று அவள் நெளிய அவ சிரித்தான்.

"நீ பாட்டுக்குக் கதை சொல்லு!'' என்றான்.

''அது மாதிரி! உரிமையா உங்களுக்கு சேவகம் செய் முடியாது.. அதனால.. வேலைக்காரியாவாவது..'' எனு போது அவன் உணர்ச்சி மயமானான். அவன் அந்த அன் வெளிப்பாட்டில் சற்றே திக்கு முக்காடிப் போனான்.

''மல்லி! நான் உனக்குச் சேவகன்.. நீ எனக்குச் சேவகி ரெண்டு பேருமா.. சேர்ந்து நம்ம குழந்தைங்களுக் சேவகர்கள். சரியா! நீ ஒரு கதை சொன்னயே.. அது மாதி நானும் சொல்றேன். ஒருத்தர் இன்னொருத்தர்கிட்டே கேட்டாராம். உங்க வீடு எப்படி மதுரையா? சிதம்ப மான்னு. அதுக்கு அவரு சொன்னாராம் ரெண்டுமே இல்லே.. திருச்செங்கோடுன்னு..'' அவள் சிரித்தா அன்புடன் கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள்.

''மல்லி! முதல்ல உன் மேல கோபம்.. யார் வேண்ண என்னை சந்தேகப் படலாம்.. ஆனா.. என்.. மல்லி.. எ மேல எப்படி சந்தேகப்படலாம்னு.''

''அது மாதிரித்தான்.. நானும் யோசிச்சேன். உலகத்து யார் வேண்ணாலும் தப்பு செய்யலாம். ஆனா, எ மாதவன் எப்படி தப்பு செய்யலாம்னு.''

''ஓ.கே.. ஓ.கே.!'' இனி எதற்குப் பேச்சு..''ன்னு அவ மேலும் இறுக்கிக் கொள்ள உலகம் மறந்தார்கள்.

* * *



''டேய்.. ஸ்வீட்டு கேட்டது நானு..! சாப்பிடறது யா?'' என்று தினேஷ் கத்த சிவகுமார் அலட்டிக் காள்ளாமல் சொன்னான்.

''நான் இப்ப ரெட்டைச் சந்தோஷத்தில் இருக்கேன். ன்று.. நான் அப்பாவாகப் போறேன்..'' என்றவுடன் ஷலஜா குறுக்கிட்டாள்.

''ஹலோ! சிவா.. அதுக்கு நீ ஸ்வீட் வாங்கிக் குடுத்துக் காண்டாடணும். ஓஸியில சாப்பிடக் கூடாது..''

''நீ.. உன் வேலையப் பாரு! தினேஷ். ரெண்டாவது வீட் எதுக்குன்னு கேளு..! என் அன்புக்குரிய சகோதரர் ருவாளர் மாதவனும். திருமிகு மல்லிகாவும் தேனிலவு காண்டாடப் போகிறார்கள்'' என்றான்.

மேலும் சொன்னான்.

''டேய்! தினேஷ்! ஆனாலும்.. பாவம் மல்லிகா ராம்பப் பதறிப் போச்சு.. தட் வாஸ் டூ மச்..''

''போடா! டூ மச்சாவது.. த்ரீ மச்சாவது.. இல்லேன்னா. ன்னைப் பாரு., என் முகத்தைப் பாருன்னு இன்னும் ளுக்கொரு மூலையில இருந்திருப்பாங்க. கலகம். றந்தாத்தான் நியாயம் பிறக்கும்'' என்றான் தினேஷ்.

இன்றைக்கு ஏனோ ஷைலஜா கொஞ்சம் அமைதியா ருந்தாள்.

''என்ன.. ஷைலு.. அமைதியா இருக்கே!'' என்றான் தவன்.

''சந்தோஷம்! ஒரு வாழ்க்கை சரியான சந்தோஷம். னக்கும் கூட இப்ப மேரேஜ் மேல நம்பிக்கை வருது.

நமக்காக, நம் நட்புக்காக ஒரு போராட்டம் நட குதுங்கறதும் அதுல தோத்துப் போய் ஜெயிக்கறது எவ்வளவு சந்தோஷம்.

''ஐயோ! தத்துவம் நம்பர் ஏழாயிரத்துப் பதினொன்று!'' என்றான் சிவகுமார்.

மாதவனும், மல்லிகாவும் ஒருவரையொருவர் பார்த்து கொண்டார்கள்.

நட்பின் இன்னொரு பரிமாணம் புரிந்தது மல்லிகவுக்கு. இப்போது அதெல்லாம் நினைவுக்கு வர மல்லி புன்னகைத்தாள்.

''நல்ல நண்பர்கள் அமையறது வாழ்க்கையில ஒ முக்கியமான குடுப்பினை இல்லே!'' என்றாள்.

''மல்லி! அது கொடுப்பினை மட்டுமல்ல.. வர பெரிய வரம்'' என்ற மாதவன் மேலும் நெருங்கி அமர்ந் கொண்டான்.

வயல்களுக்கு நடுவே கிடைத்த ஒரு மரநிழலில் ஒ சிறிய தட்டையான பாறையின் மேல் அமர்ந்து கொ டிருந்தார்கள்.

இளம் மாலைப் பொழுது!

சுற்றுப் புறச் சூழல் பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்த

''மல்லி! ஃபிஸிகல் அட்ராக்ஷன்கறது ஒரு குறி பிட்ட காலம் வரைதான். ஆனா, ஒரு வாழ்க்கைக் கா கறது ரொம்ப நீளமானது. அது சத்தோடும், சுன யோடவும் இருக்கணும்னா கண்டிப்பா.. அன்பு இ னும் மல்லி! இப்ப எனக்குப் புரிகிறது. நீ என்கிட்ட காபிச்சுகிட்டதும் நான் உன்கிட்டே இறுக்கமா நடந்து ட்டதும் அன்போட வேறு வேறு பரிமாணங்கள்தான். னா, ஒவ்வொரு தடவையும் நீ நடுங்கிட்டு நகரும் பாது எனக்கு என் மேலயே கோபம் வரும்.''

அவள் அவனை ஓரக்கண்ணால் பார்த்தாள். பின் லையைக் குனிந்து கொண்டாள்.

''அது.. ஒரு வகையில தந்திரம்.. என் மனம் செய்த ந்திரம் தெரியுமா? எங்கே உங்க கை பட்டா.. எனக் ள்ளே இருக்கற உங்க. மல்லிகா வெளிய வந்துருவா ாங்கற.. பயம்'' என்றான்.

''ஆஹா! பொன் மின்னல் வரிகள்.. மை டியர்!'' என்று ித்துக் கொண்டான். அருகில் இழுத்துக் கொண்டான்.

''மல்லி! பல தடவை கவனிச்சிருக்கேன். மேடம்! ங்க பார்க்காதப்ப பார்க்கறது. பாத்தா தலையைக் னிஞ்சுக்கறதுன்னு..! திருவள்ளுவர் கூட சொல்லியிருக் ரு.

'யான் நோக்குங்கால் நிலம்நோக்கும் நோக்காக்கால்

நிலம்நோக்கி மெல்ல நகும்'

அவள் சிரித்தாள்!

''ஓஹோ! அவரு இதெல்லாம் வேற சொல்லியிருக் ரா'' என்றாள்.

''சொல்லியிருக்காரு.. நிறைய சொல்லியிருக்காரு. மத்துப்பால்னு ஒரு கதையே சொல்லியிருக்காரு.

படிக்கலாம்.. எல்லாத்தையும் படிக்கலாம். அதுக்கு மு
னாடி ஒரு விஷயம் புரிஞ்சுக்கணும்."

என்ன அது என்பது போல் பார்த்தாள்.

மாதவன் ஆழ்ந்த குரலில் சொன்னான்.

"மல்லி! என் வாழ்க்கையில் இந்தப் பிறவிக்கு நீதான் நீ மட்டும்தான்!" என்று.

அன்பில் தோய்ந்த அந்தக் குரல் அலையலையா தேனாக அவள் காதுகளுக்குள் பாய அந்தி மாலை பொழுதில் உலகம் மறந்து அவளும் அன்பில் கரைந்தா

சொல்கிறார்கள்!

அன்பு மட்டும்தான் மனித வாழ்க்கைக்கு அர்த்தமா இருக்கும்.. அனுபவமில்லாமலா சொல்லியிருப்பார்கள்

அன்புப் பரிமாற்றம் அப்படி நிகழ்கையில் இடையி தடை சொல்ல நாம் யார்? எந்த ஆயுதம் அன்புக் முன்னாலே நிற்க முடியும்?

